
துருவன் வரலாறும் உலகங்களின் படைப்பும்

பகுதி - 2



துருவன்வரலாறும் உலகங்களின் படைப்பும்

மூலம்

செவ்வைச் சூடுவாரால்
ஓலைச்சுவடியில் எழுதப்பட்ட
ஸ்ரீமத் பாகவதத்தை நூல்வடிவில்
வழங்கியவர்

டாக்டர் உ.வே. சாமிநாதய்யர்

தெளிவுரை

டாக்டர் மதி. சீனிவாசன்
பேராசிரியர் (ஓய்வு) வைணவக்கல்லூரி
சென்னை.

வெளியீடு

ஸ்ரீவராகி பிரிண்டர்ஸ்
144, ஆழ்வார்ப்பேட்டை தெரு,
சென்னை – 600 018.

நூல் விவர அட்டவணை

நூல்	:	துருவன் வரலாறும் உலகங்களின் படைப்பும்
பொருள்	:	சமயம்
மூலப்பாடல் ஆசிரியர்	:	செவ்வைச் சூடுவார்
உரையாசிரியர்	:	டாக்டர் மதி. சீனிவாசன்
பதிப்பாண்டு	:	2000
உரிமை	:	பதிப்பகத்தாருக்கு
பதிப்பாளர்	:	ஸ்ரீவராகி பிரிண்டர்ஸ்
விலை	:	
மொழி		தமிழ்
நூலின் அளவு	:	கிரவுன்
அச்சு எழுத்து	:	11.5
மொத்த பக்கங்கள்	:	(5+315) 320 (20 பாரம்)
கணிப்பொறி அச்சு	:	ஈசுவர் லேசர்
அச்சிட்டோர்	:	மீர்ரா பிரிண்டர்ஸ்

நூல் கிடைக்குமிடம் :

ஸ்ரீவராகி பிரிண்டர்ஸ்

144, ஆழ்வார்ப்பேட்டை தெரு,
ஆழ்வார்ப்பேட்டை, சென்னை – 18.
தொலைபேசி எண் : 4335524.

61/5

அணிந்துரை

அன்பர் பாலன் அவர்கள் தமிழ் உலகுக்கும் குறிப்பாக ஆன்மீக உலகுக்கும் நூல் வெளியீட்டுத் துறையில் பயனுடைய தொண்டு புரிந்து வருகின்றார். மிகப்பாடுபட்டும் பெருந்தொகை செலவு செய்தும் இந்த நூலினை வெளிக்கொண்டு வருகின்றார்.

ஏற்கனவே நாலாயிர திவ்ய பிரபந்தம் அனைத்திற்கும் பெரியவாச்சான் பிள்ளையின் உரையைத் தழுவிய எளிய உரை நூலினைப் பேராசிரியர் திரு. மதி சீனிவாசனைக் கொண்டு எழுதச் சொல்லி வெளியிட்டுள்ளார்.

இம்முறையும் ஸ்ரீமத் பாகவதத்திற்குப் பேராசிரியர் திரு. மதி சீனிவாசனைக் கொண்டு எளிய தமிழ் உரையுடன் இந்த நூலினை வெளியிடுகின்றார்கள். உரை சுருக்கமாகவும் அதே நேரத்தில் தெளிவாகவும் எழுதியுள்ளது இந்த நூலுக்கு மேலும் அழகூட்டுகின்றது.

டாக்டர் உ.வே.சா. ஐயர் மூலப்பாடல்களைப் பதிப்பிக்கும் சமயம் உடனிருந்து பணியாற்றிய திரு. எச். வைத்தியநாத ஐயர் இந்தப் பதிப்பில் பாடல்களை சீர்பிரித்துக் கொடுத்துள்ளது அருமையாக அமைந்துள்ளது.

வரலாறு மற்றும் அவதாரங்களைப் பற்றி விரிவாக அறிந்து கொள்ள ஆவல் உடையோர் இந்த நூலால் பயன் பெறுவர்.

திரு பாலன் அவர்களின் பணி வெல்க! அவர் மேலும் மேலும் இது போன்ற நூற்களை வெளியிட வாழ்த்துகின்றேன்.

அன்புடன்

கிருஷ்ணசாமி ரெட்டியார்.
உயர்நீதி மன்ற நீதிபதி (ஓய்வு)

அண்ணாநகர்,
சென்னை.

நான்காம் கந்தம்

ஸ்ரீ

துருவன் வரலாறும் உலகங்களின் படைப்பும்

நான்காம் கந்தம்

நான்காம் கந்தம்

1. மரீசி முதலியோர் படைப்பு

கருத்தமன் மகிழ்வின் ஈன்ற கருங்குழ லியரை வேட்டோர்
திருத்தகு மரபு முன்னம் செப்பிய ருசியென் பான் தன்
அருத்திசெய் மரபும் தக்கன் அணிதிகழ் மரபும் செப்புஎன்று
உரைத்தலும் விதுரற்கு அன்போடு உரைத்தனன் மயித்தி ரேயன். 702

கலைமதி இரிய வெல்வெண் கதிர்வளை ஏந்தி அம்பொன்
கலையணி மாயன் உந்திக் கமலநாண் மலரில் தோன்றும்
கலைமகள் கொழுநன் நல்கும் காட்சிசால் மரீசி வேட்ட
கலை எனும் மடந்தை ஈன்றாள் காசிபன் தன்னை மன்னோ. 703

பொன்அணி குழையாள் மீட்டும் பூரண வானை ஈன்றாள்
அன்னவன் விரசன் என்னும் அருந்தவன் தனையும் கங்கை
என்னுநல் நதியே யாகஇயைகுவன் இனிதின் என்று
பன்னுவிச் சுவகை ஆன பைந்தொடி தனையும் பெற்றான். 704

அத்திரி ஆகம் தோய்ந்த அருள்அந சூயை என்பாள்
தத்துஒளி திளைக்கும் திங்கள் தகைகொள் தத்தாத்தி ரேயன்
தொத்துறு கனலின் சீற்றம் துறுதுரு வாசன் என்னும்
மெய்த்தவர்க் கருஉ யிர்த்தாள் விரைமலர் பொழிந்தார் விண்ணோர். 705

விடுசுடர் எறிக்கும் திங்கள் விரைமலர் விரிஞ் சன்ஆகும்
படிசொல்தத் தாத்தி ரேயன் பாற்கடல் சேர்ப்பன் ஆமால்
சுடர்விடு பருதி அன்ன தூய்த்துரு வாசன் என்போன்
மடல்அவிழ் கடுக்கை வேய்ந்த மணிமிடற்று ஈசன் ஆம்ஆல். 706

என்னலும் உலகுக்கு எல்லாம் இறையவர் ஆகி நின்ற
முன்னவர் இவற்கு வந்து முளைத்தவாறு என்கொல் ஈது
பன்னிடல் வேண்டும் என்ன பாடல்சால் விதுரன் கேட்ப
நன்னர்நெஞ்சு உவக்கு மாறு நவிலுமால் மயித்தி ரேயன். 707

நான்காம் கந்தம்

1.மரீசி முதலியோர் படைப்பு

விதுரன் மைத்திரேயரை நோக்கி, "கருத்தமன் மகிழ்ந்து பெற்ற கருங்கூந்தலுடைய பெண்களை மணந்தவர் வம்சம் பற்றிக் கூறுக. மேலும் ருசி, தக்கன் ஆகியோர் வம்சங்கள் பற்றியும் உரைத்திடுக" என்று கேட்டான். அன்புடன் மைத்திரேயன் இவ் விவரங்கள் பற்றிக் கூறினான். 702

சந்திர கலையையும் விட வெண்மையான சங்கையும் பீதாம்பரத்தையும் அணிந்த மாயனான திருமாலின் கொப்பூழ்த் தாமரையில் பிரமதேவன் தோன்றினான். சரஸ்வதியின் கணவனான அந்த நான்முகன் மரீசி என்னும் முனிவரைப் படைத்தான். அந்த மரீசிக்கும் 'கலை' என்னும் பெண்ணுக்கும் காசியபன் பிறந்தான். 703

பொன் தோடு அணிந்த 'கலை' பெற்ற இன்னொரு புதல்வன் பூர்ணவான் ஆவான். பூர்ணவானின் மகன் விரசன்; மகள் விச்வகை ஆவாள். இப்பெண் கங்கை நதியாக மாறினாள். 704

அத்திரி மாமுனியை மணந்த அனசூயை, ஒளி மிகுந்த சந்திரனையும் துர்வாசனையும் தத்தாதிரேயனையும் இவளே பெற்றாள். தேவர்கள் மகிழ்ந்து பூக்களைச் சொரிந்தனர். 705

சுடர் மிகுந்து ஒளிவிடும் சந்திரன் பிரமதேவனின் அம்சம் ஆவான். பூவுலகத்தோர் போற்றும் தத்தாதிரேயன் பாற்கடலில் பள்ளி கொண்ட திருமாலின் மறு வடிவம் ஆவான். சூரிய ஒளி மிகுந்த துர்வாசன் கொத்துக் கொன்றை சூடிய நீலகண்டன் ஆன சிவனின் இன்னொரு உருவம் ஆவான். 706

மேற்கண்டவாறு மைத்திரேயன் கூறியதைக் கேட்ட விதுரன் "இம்மூவரும் உலகில் தெய்வங்களாக வந்தது எவ்வாறு?" என்று வினவினான். மனம் உவக்குமாறு மைத்திரேயன் இதற்குப் பதில் உரைத்தான். 707

மேவரு மக்கள் பேறு வேண்டி ஓர் குன்று நண்ணி
ஆவயின் மலரோன் போற்றி அத்திரி தவஞ்செய் தான்ஆல்
பூவொடு புணரி வெள்ளிப் பொருப்பெனு மிடங்கள் நீங்கி
மூவரும் தோன்றி னார்அம் முழுத்தவன் முன்னர் மாதோ. 708

பரவிஅம் முனிவன் தாழ்ந்து பங்கயத்து ஒருவன் தன்னை
கருதிநல் தவம்செய் தேன்நீர் கண்ணுறல் எவன்கொல் என்ன
அருமறைக் கிழவ நீநின் அகத்திடை நினைக்க லுற்ற
ஒருவனே யாங்கள் வேறு என்று உள்ளல் என்று உரைத்தார் அன்னோர். 709

இத்திறம் இயம்பி ஆங்கண் நின்னுழை உதித்தும் என்றார்
அத்திறம் உரைத்த லானே அத்திரி தனக்கு வந்து
முத்தொழில் இயற்று கிற்கும் மூவரும் உதித்தார் என்னா
மெய்த்தவ மயித்தி ரேயன் மீளவும் விரிக்கல் உற்றான். 710

அல்லியம் கமலம் பூத்த ஆயிதழ்க் குவளை போலும்
சில்லரி பரந்த உண்கண் சிரத்தைசீர் அங்கி ராவை
புல்லினள் உசத்தி யன்சீர் பொருந்திய வியாழம் தம்மோடு
அல்லுறழ் குழலி ராகை யாதியாம் நால்வர்ப் பெற்றாள். 711

புலத்தியன் பொன்தார் மார்பு புணர்அவி புக்கு என்னும்
அலத்தகம் அணியும் அம்செஞ் சீறடி அன்னம் அன்னாள்
குலத்தமிழ் பயந்து தென்றல் கொழுந்து உலாம் தண்ணம் சாரல்
மலைத்தலை அமர்ந்த வண்ணல் மாதவன் தன்னை யீன்றாள். 712

பின்னும்ஓர் பிறப்பின் அந்தப் பெரும்புகழ்ப் புலத்தி யன்சீர்
மன்னுவிச் சிரவா என்னும் மாதவன் தன்னை யீன்றான்
அன்னவன் அளகை வேந்தை அளித்தனன் அளித்த பின்னர்
இந்நிலம் வெருளப் பெற்றான் இராவணன் முதலியோரை. 713

புலகனை மணந்த நீலப் புயல்புரை கரிய கூந்தல்
கலவமா மயில்அம் சாயல் கதிர்முலைக் கதி என்று ஓதும்
திலகவாள் நுனுதலாள் கன்ம சிரேட்டனை ஆதி யாக
உலகறி சிறப்பு வாய்ந்த மூவரை உயிர்த்தாள் மன்னோ. 714

முன்பொரு கால் அத்திரி, மக்கள் செல்வம் விரும்பி, மலைப்பகுதிக்குச் சென்று, பிரமதேவனைக் குறித்துத் தவம் செய்தான். அதன் பயனாக, மும்மூர்த்திகளும் தங்கள் இருப்பிடங்களான தாமரை, பாற்கடல், கைலாயம் ஆகியவற்றை விடுத்து, அத்திரியின் முன்னே பிள்ளைகளாய் வந்தனர். 708

தோன்றிய அம்மூவரை நோக்கி அத்திரிமுனிவன் "நான் தாமரையி ல் உள்ள பிரமனை எண்ணித் தவம் செய்தேன். ஆயின் நீங்கள் மூவரும் என் கண்முன்னே வந்தது ஏனோ!" என்று கேட்டான். அதற்கு அவர்கள், "வேதம் வல்ல முனிவனே! நீ மனத்தில் தியானித்த ஒரு பிரம்மமே நாங்கள் மூவரும். வேறு வகையாய் எண்ணாதே" என்று கூறினர். 709

இவ்வாறு மைத்திரேயன், அத்திரிக்கு மும்மூர்த்திகளும் பிள்ளைகளாய் வந்த வரலாற்றை விவரித்தார். "மூன்று தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றுக்காகவே மூவராய் உள்ளனர்" என்றார். 710

அல்லிக் கமலத்துடன் பூத்த குவளை மலர் போன்ற செவ்வரி படர்ந்த கண்களுடைய 'சிரத்தை' என்பவள் அங்கீரன் முனிவரை மணந்தாள். மேன்மை உடைய வியாழனையும், இருண்ட கூந்தல் பெற்ற இராகை ,சினீவாசீ, குஹூ, அனுமதி என்னும் நான்கு பெண்களையும் பெற்றாள். 711

அவிர்ப்புகு என்னும் மற்றொரு பெண், செம்பஞ்சுக் குழம்பு தடவிய பாதங்களைப் பெற்றவளாய், அன்ன நடை கொண்டவள் ஆவாள். இந்நங்கை, புலத்திய முனிவரின் அகன்ற மார்பைத் தழுவி மணந்து, அகத்தியரைப் பெற்றாள். இந்த அகத்தியரே தென்றல் வீசும் பொதிகை மலையைச் சார்ந்தவர் ஆவார். 712

இன்னொரு பிறவியில் புலஸ்தியர், விச்ரவசுவைத் தன் மகனாகப் பெற்றார். விச்ரவசுவின் புதல்வனே அளகாபுரி மன்னன் ஆன குபேரன் ஆவான். அவன் தம்பியே உலகமே பயந்த இராவணன் ஆவான். 713

'கதி' என்னும் மற்றொரு பெண் நீலமேகம் போன்ற கூந்தல் உடையவளாய், மயிலின் சாயல் நடையும், உயர்ந்த முலைகளும் பெற்றவள். இந்நங்கை, 'புலகன் என்னும் முனிவரைத் திருமணம் செய்து கொண்டு கர்மசிரேட்டன், வரியான், ஸஹிஷ்ணு ஆகிய மூவரைப் பெற்றாள். 714

முருகுவாய் மடுத்து வண்டு மூசுபூந் தாமம் வேய்ந்து
பிருகுமா முனிவன் வேட்ட பிறைநுதல் கியாதி என்பாள்
இருவிசும்பு ஏத்து தாதா இன்அருள் விதாதா என்னும்
அருமறை யவரொடு அம்பொன் தாமரை அணங்கை ஈன்றாள். 715

முனிவுஇகு பிருகுமா முனிஅ ளித்துஅருள்
தனயர்கள் எனும்இரு தவத்தி னோர்கள்தாம்
வினைஅற விளங்குபொன் மேரு ஈன்றருள்
வனிதையர் இருவரை மணம்செய் தார்அரோ. 716

மாதராள் யாதியை மகிழ்பு வேட்டஅவ்
வோது தாதாஇனிதுஉயிர்த்த மைந்தனாம்
வேதம்நால் உண ர்மிருகண்டு மெய்த்தவன்
காதல்ஆர் மகவுமார்க்கண்டன் என்பவே. 717

அறைந்திடு புகழ்விதாதா அணைந்தசீர்
நிறைந்தபே ரழகினாள் நியதிக்கு அன்பொடு
பிறந்தனன் பிராணன் அப் பிராணன் பெற்றனன்
சிறந்தநல் தவமறைச் சிரசுஎன் போனையே. 718

உறுபுகழ்க் கிருதுவை மணந்த ஒண்தொடி
நறுநுதல் கிரியைநல் வயிற்றின் நண்ணினார்
அறுபதி னாயிர அரும்த வத்தினர்
மறுஅறு சிறப்புடை வால கில்லியர். 719

வரம்புஇலா மாதவ வசிட்டன் வேட்டருள்
அருந்ததி என்னும்அவ் அணங்கு பெற்றனள்
திருந்துஎழில் சித்திர கேது ஆதியாம்
இரும்தவ முனிவர் ஓர் எழுவர் தம்மையே. 720

அதர்வணன் வரைமருள் அகலம் புல்லிய
ததைமலர்க் கருங்குழல் சாந்தி ஈன்றனள்
முதுமறை முழுதுஉணர் ததீசி யேமுதல்
புதல்வர் ஓர் மூவரைப் புவிவ ழுத்தவே. 721

வண்டு அமர்ந்து ரீங்காரம் செய்யும் அழகிய மாலை அணிந்த 'பிருகு' என்னும் முனிவரை, பிறைச்சந்திரப் புருவம் உடைய 'கியாதி' என்பவள் கலியாணம் செய்து கொண்டாள். இவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் தாதா, விதாதா என்பவர்கள். திருமகளே இவர்களுக்குப் பெண்ணாகப் பிறந்தாள். 715

பிருகு முனிவரின் புதல்வர்களான தாதா, விதாதா இருவரும் மிகுந்த தவம் செய்தனர். தீவினை இல்லாத 'மேரு' என்பவளின் பெண்களான யாதி, நியதி ஆகிய இருவரையும் தாதாவும் விதாதாவும் மணம் செய்து கொண்டனர். 716

யாதி என்பவளுக்கும் 'தாதா' முனிவருக்கும் பிறந்த புதல்வனே நான்கு வேதங்களையும் பயின்ற மிருகண்டு முனிவர் ஆவார். இம்மிருகண்டு முனிவர் மகனே மார்க்கண்டேயன் ஆவான். 717

புகழுடைய 'விதாதா' முனிவருக்கும் நிறைந்த அழகு பெற்ற 'நியதி' மடந்தைக்கும் பிறந்த பிள்ளை பிராணன் என்பவன் ஆவான். அந்தப் பிராணனுக்கு 'வேதசிரஸ்' மகன் ஆவான். 718

புகழ் மிகுந்த 'கிருது' என்பவரை மணந்த நங்கையான 'கிரியை'யினது வயிற்றில், தவம் மிகுந்த வாலகில்லியர் அறுபதினாயிரத்தினர் பிறந்தனர். 719

எல்லையற்ற தவம் இயற்றிய வசிட்ட முனிவர் விருப்பமுடன் திருமணம் செய்து கொண்ட பெண் அருந்ததி என்பவள் ஆவாள். இவர்கள் இருவருக்கும் சித்திர கேது முதலான ஏழு பிள்ளைகள் பிறந்தனர். 720

மலை போன்று அகன்ற மார்பும் நெருங்கிய பூக்கள் சூடிய கூந்தலும் கொண்ட 'சாந்தி' என்பவளை அதர்வண முனிவர் மணந்தார். இவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் வேதம் வல்ல ததீசி முதலிய மூவர் ஆவார். 721

ஆதியின் மனுவினின் தோன்றி ஆய்மறை
ஒதிய ருசியினை மணந்த வொண்தொடி
மேதகு வேள்விஅம் புருடன் தன்னொடு
பேதைதக் கிணை எனும் அணங்கை பெற்றனள். 722

நேரிழை மகள்கொடை நேர்ந்த நாளினில்
ஏர்எழில் மகன்பெறின் எனக்கு நல்க என
ஓர்உரை நடத்தலின் உதித்த மைந்தனை
கூர்அயில் வேல்மனுக் கொடுசென் றான்அரோ. 723

நக்கபூந்தாமரை நங்கை ஆகிய
தக்கிணை வலம்புரித் தடக்கை மாயனாம்
மிக்கஅவ் வேள்விஅம் புருட னை தழீஇ
மக்கள்பன் னிருவரை வயிறு வாய்த்தனள். 724

தோடுஅவிழ் பசுந்தொடைத் தோடன் ஆதியாம்
பாடல்சால் அன்னவர் பரவை வெண்திரை
ஊடுஎழு கதிரவர் ஒப்பத் தோன்றினார்
மோடுகொள் காந்திமூ வுலகு மொய்ப்பவே. 725

அன்னபன் னிருவரும் ஆதி யாம்மனு
மன்னவன் காலம்வா னவர்கள் ஆயினார்
சொன்னஅக் காலம்அம் மனுவின் தோன்றினார்
பன்னகம் சுமந்தபூ பால ராயினார். 726

தழைபுகழ் புனைமனு வேந்துஇத் தாரணி
விழைவொடு காக்கும் நாள் விளங்கு மாதவர்
எழுவர்என்று இசைக்குறு முனிவர் யார்எனின்
மொழிதரு மரீசியே முதலி னோர்களே. 727

கருதும்அந் நாள்அரி கலையின் தோற்றமாம்
பொருஅரு வேள்விஅம் புருடன் அன்னவன்
சுரபதி யாகவும் துன்னி னான்இந்த
உரைபெறும் அறுவகை யோரும் மாயனே. 728

சுவாயம்பு மனுவின் இன்னொரு பெண் ஆன ஆஹூதி என்பவள் 'ருசி' முனிவனைத் திருமணம் செய்து கொண்டாள். இவர்களுக்குப் பிறந்த புதல்வன் யக்ஞ புருஷன் ஆவான். தக்கிணை என்னும் பெண்ணும் பிறந்தாள். 722

சுவாயம்பு மனு தன் மகள் ஆஹூதியை 'ருசி' முனிவருக்குத் திருமணம் செய்வித்த பொழுது, "இவளுக்குப் புத்திரன் பிறந்தால், என்னிடம் தந்து விட வேண்டும்" என்று கேட்டிருந்தார். அதன் படியே, அவர் யக்ஞ புருஷனைத் தன்னுடன் கொண்டு சென்றார். 723

மலர்ந்த தாமரையில் வாழும் திருமகள் அம்சமான 'தக்கிணை' சக்கரக் கையன் ஆன மாயன் திருமாலை மணந்து பன்னிரண்டு குழந்தைகள் பெற்றாள். 724

இதழுடன் பூ மாலை அணிந்த தோக்ஷன் முதலானவர்கள், தக்கிணையின் புத்திரர்கள் ஆவர். கடல் அலைகள் மீது தோன்றும் சூரியனை ஒத்த இப் புதல்வர்களின் ஒளி மூவுலகிலும் பரவிற்று. 725

இப்படித் தோன்றிய பன்னிருவரும் சுவாயம்பு மனுவின் காலத்தில் தேவர்கள் ஆனார்கள். பின்பு அம்மனுவுக்கு பிரிய விரதன், உத்தானபாதன் என்னும் இரு புதல்வர்கள் பிறந்தனர். இவர்கள் மண்ணுலகத்து அரசர்கள் ஆனார்கள். 726

புகழ் மிகுந்த சுவாயம்பு மனு இவ்வுலகைக் காத்து ஆண்ட காலத்தில் வாழ்ந்த முனிவர்கள் மரீசி முதலிய ஏழு பேர்கள் ஆவர். இவர்களையே ஸப்தரிஷிகள் என்கிறோம். 727

மனுவின் காலமான சுவாயம்புவ மன்வந்தரத்தில், திருமாலின் அம்சமாய் உதித்த யக்ஞபுருஷன், தேவர்களுக்கு அதிபதி ஆனான். சுவாயம்பு மனு முதலான ஆறு பேர்களும் திருமாலின் அம்சங்களே ஆவார். 728

தக்கன் மேவிய பசூதிசெந் தாமரை முகத்து
செக்கர் வான்எழு திங்கள்அம் சிறுநுதல் தெள்நீர்
மொக்குள் போல்எழு முகிழ்முலை முத்தவெண் மூரல்
மக்கள் ஓர்பதி னறுவரைப் பெற்றனள் மாதோ. 729

அன்பி னால்பதின் மூவரை அறத்தினுக்கு அளித்தான்
இன்பு றதழல் கடவுளுக்கு ஒருத்தியை ஈந்தான்
தென்பு லத்தவர்க்கு ஒருத்தியை வழங்கினன் சிறந்த
கொன்பி றங்குபூங் கொன்றையாற்கு ஒருத்தியைக் கொடுத்தான். 730

உரைத்த நல்அறக் கடவுள்சேர் ஒள்ளிழை யவரில்
சிரத்தை ஈன்றனள் சுதனைவெற்பு இணைஎனத் திரண்டு
பொருத்த வெம்முலை மயித்திரி பசாதனை பெற்றாள்
அரத்த வேல்விழித் தயைவிளங்கு அபயனை உயிர்த்தாள். 731

சாந்தி தந்தனள் சுகனைஅம் தளிர்புரை மேனி
ஏந்து வெம்முலைத் துட்டிசந் தோடனை ஈன்றாள்
வாய்ந்த நல்எழில் புட்டிபெற் றனள்மயன் தன்னை
பூந்து ணர்க்குழல் கிரியையோ கத்தினைப் பூத்தாள். 732

பித்தி கைக்குழல் உன்னதி தருப்பனைப் பெற்றாள்
புத்தி பொங்குஎழில் அருத்தனைப் பயந்தனள் பொன் ஏர்
உத்தி தோய்முலை மேதை ஓர் மிருதியை உயிர்த்தாள்
தத்தை மென்மொழித் திதிக்கைநல் கேமனைத் தந்தாள். 733

இருள்க னிந்துவார்ந்து ஒழுகுபூங் குழல்இரீ என்பாள்
பெருநி லம்புகழ் குழைவொடு கல்வியைப் பெற்றாள்
முருகு விம்மிய முளரிவான் முகத்து எழில் மூர்த்தி
நரனொடு ஓங்குநா ராயணன் தனை உயிர்த் தனளால். 734

இரண்டு மாதவத் தோர்களும் இயைந்து வந்து உதிப்ப
வெருண்டு தீயன விடைகொள விளங்கிய திசைகள்
சுருண்டு நெய்த்தபூங் கருங்குழல் தோகைய ரோடும்
திரண்டு வான்மிசைத் தேமலர் பொழிந்தனர் தேவர். 735

தக்ஷப் பிரஜாபதியைத் திருமணம் செய்து கொண்ட, மனுவின் புதல்வியான பிரசூதி பதினாறு பெண்களைப் பெற்றாள். இக் குழந்தைகள் தாமரை போன்ற முகங்களையும் சந்திரனை ஒத்த புருவங்களையும் தண்ணீர்க் குமிழி போன்ற முலை நுனிகளையும் முத்துப் போன்ற ஒளிப் பற்களையும் பெற்ற அழகுடையவர்கள் ஆவர். 729

பிதாவான தக்கன், தன்னுடைய பதின்மூன்று பெண்களைத் தரும தேவதைக்குத் திருமணம் செய்வித்தான். ஒரு பெண்ணை மகிழ்ச்சியுடன் அக்னி தேவனுக்கு மணம் முடித்தான். இன்னொரு பெண்ணை தென்திசை வாழும் பிதுர்களுக்குக் கொடுத்தான். மற்றொரு மகளைக் கொன்றைம்பூச் சூடிய சிவனுக்குத் திருமணம் செய்வித்தான். 730

தக்கனுடைய பதின்மூன்று பெண்களில் ஒருத்தியான 'சிரத்தை' என்பவள் கணவனான தரும தேவன் வழியாய்ச் 'சுதன்' என்னும் மகனைப் பெற்றாள். மலை எனத் திரண்ட மார்புகளுடைய 'மயித்திரி' என்பவள் பிரசாதன் என்னும் புதல்வனைப் பெற்றாள். சிவந்த வேலாயுதம் போன்ற கண் பெற்ற 'தயை' என்பவள் அபயனைப் பிள்ளையாகப் பெற்றாள். 731

'சாந்தி' என்னும் பெண் சுகனைப் பெற்றாள். தளிர் போலும் மேனியும் உயர்ந்த முலையும் உடைய 'துஷ்டி' என்பவள் சந்தோடனைப் பெற்றாள். அழகான 'புஷ்டி' என்பவள் மயனைப் பெற்றாள். பூமாலை சூடிய 'கிரியை' என்பவள் யோகத்தைப் பெற்றாள். 732

பிச்சி மலர் சூடிய 'உன்னதி' என்பவள் தருப்பனைப் பெற்றாள். 'புத்தி' என்பவள் அருத்தனைப் பெற்றாள். பொன் போல் தேமல் மார்புடைய 'மேதை' என்பவள் ஸ்மிருதியைப் பெற்றாள். கிளி போலும் பேச்சுடைய 'திதிக்கை' என்பவள் க்ஷேமனைப் பெற்றாள். 733

இருண்ட கூந்தலுடைய 'இரீசி' (ஹ்ரீ) என்பவள் கல்வியின் உருவான பிரஸ்ரயனைப் பெற்றாள். அழகுடன் கூடிய தாமரை போன்ற முகமுடைய 'மூர்த்தி' என்பவள் நரனுடன் நாராயணனையும் பெற்றாள். 734

நர, நாராயணர்களான இருவரும் தோன்றியதால் எல்லாத் திசைகளிலும் தீமைகள் பயந்து ஓடின. கேடுகள் நீங்கியதால், சுருண்ட கருங்கூந்தலுடைய தேவ மாதர்களும், தேவர்களும் ஆகாயத்தில் திரண்டு நின்று, பூ மழை பொழிந்தனர். 735

நவையில் நல்தவம் புரிதரு நரன்எனும் நாமன்
புவிவ ழுத்துசீர் அருச்சுன ன்எனப்புகுந்து உதித்தான்
எவரும் போற்றும்நா ராயணன் எனும் பெயர் உறுவோன்
கவின்வி ளங்கிய கண்ணன்என் றுதித்தனன் மாதோ. 736

மேவும் ஆரழல் விபுதன்வேட் டனன்சுவா காபேர்த்
தேவி; ஆங்குஅவள் அகட்டினில் திகழொளி சிறந்த
பாவ கன்பவ மானன்ஒண் சுசியென பகரும்
மூவர் தோன்றினர் மூவகை உலகமும் களிப்ப 737

சீலம் உற்றஅம் மூவரும் திகழும்ஒவ் வொருவர்
வேலை சுற்றுபார் விசும்பிடம் விளங்கமூ வைந்தாம்
கோல முற்றமாண் குழவிபெற் றனர் எனக் கூற
சாலும் நாற்பதோடு ஐந்தெனும் தனயரைத் தந்தார். 738

வானம் போற்றுதென் புலத்தவர் அமிழ்துஎன மாந்தும்
தூநி லாமதி வாண்முகச் சுதையெனும் பிணாஅவ்
வேனில் அம்குயில் மென்மொழி மேனைவை தரிணி
ஆன நல்எழில் அரிவையர் இருவரை அளித்தாள். 739

2. தக்கன் வேள்வியழித்தல்

ஒளிகால் பசும்பொன் முடித் தக்கன் உயிர்த்த அம்மென்
தளிர்போலும் மேனிச் சதிதேவி மணம்பு ணர்ந்த
முளைநாள் மதியம் மிலைசெஞ்சடை முக்க ணான்மேல்
விளையாத சீற்றம் விளைவித்து வெறுத்தல் செய்தான். 740

எனலோடும் முக்கண் இறைமேன்முறை தீர்ந்து தக்கன்
முனிவாயது என்னை முனிவேந்த மொழிந்திடு என்ன
மனமாசு இகந்து மறைதேர்ந்த மயித்தி ரேயன்
வினைவேர் கடிந்த விதுரற்கு விளம்பல் உற்றான். 741

பைந்தாது சிந்தி பனிநுண்துளித் தேறல் வாக்கும்
மந்தார நீழல் உறைவானவர் வந்து சேர
செந்தா மரைக்கண் திருமாலை வழுத்தி ஞாலம்
தந்தார் குழுமி தனிவேள்வி இயற்றி னாரால். 742

குற்றமற்ற தவம் புரிந்த 'நரன்' என்னும் பெயருடையவனே உலகம் போற்றும் அர்ச்சுனனாகப் பிறந்தான். எல்லோராலும் துதிக்கப்படும் நாராயணன் அழகுடன் விளங்கிய கண்ணனாக அவதரித்தான். 736

நெருப்புக்கு அதி தேவதையான அக்னிதேவன் 'சுவாஹா' என்னும் பெயருடைய தேவியைத் திருமணம் செய்து கொண்டான். இவ்விருவருக்கும் மூவ்வுலகமும் மகிழ பாவகன், பவமானன், சுசி என்னும் மூவரும் பிறந்தனர். (சுவாஹாவின் வயிற்றில் இவர்கள் பிறந்தனர்). 737

நற்குணம் மிகுந்த அம் மூவருள், ஒவ்வொருவரும் பதினைந்து குழந்தைகள் பெற்றனர். இந்த நாற்பந்தைந்து புதல்வர்களால், கடல் சூழ்ந்த இவ்வுலகம் பெருமை பெற்று விளங்கிற்று. 738

தேவலோகம் புகழும் தென்திசைப் பிதுர்கள், அமுது போலும் நிலவைப் பொழியும் சந்திர முகத்தை உடைய 'ஸ்வதா' தேவியை மணந்தார்கள். இந்த 'ஸ்வதா' என்னும் பெண், மேனை, வைதரிணி ஆகிய இரு பெண்களைப் பெற்றாள். 739

2. தக்கன் வேள்வியழித்தல்

"பொன் முடி பெற்ற தக்கன் தளிர் மேனி உடைய தன் மகள் சதிதேவியை மணந்த சிவன் மீது கோபம் கொண்டான். பிறைச் சந்திரனைச் செஞ்சடையில் சூடிய மூன்று கண்களைக் கொண்ட சிவன் மேல் காரணமின்றி கோபமும் வெறுப்பும் கொண்டான்". 740

மேற்கண்டவாறு மைத்திரேயன் தக்கனைப் பற்றிக் கூறியதும் விதுரன், "முனிகள் தலைவனே! இவ்வாறு தக்கன் சினம் கொள்ள யாது காரணம்?" என்று கேட்டான். வினைகளுக்கு அப்பாற்பட்ட விதுரனிடம் மைத்திரேயன் தக்கன் வரலாற்றை விரித்துரைக்கலானான். 741

உலகத்தைப் படைக்கும் ஒன்பது பிரம்மாக்கள் ஒன்று கூடி, செந்தாமரைக் கண்கள் உடைய திருமாலைத் தொழுது வேள்வி செய்யலானார். அதற்குத் தேவர்கள் வந்து கூடினார்கள். மகரந்தத்துடன் தேனைச் சொட்டும் பூக்கள் மலர்ந்த மந்தார மரநிழலில் தேவர்கள் தங்குவர். 742

புரிகின்ற வேள்விக்கு உயிர்யாவையும் பூத்த தக்கன்
வருகின்ற காலை மலர் வீட்டுறை வள்ளல் அன்றி
விரிகின்ற ஒள்வாள் வயிரப்படை வேந்த னோடும்
எரிகின்ற செம்பொன் முடிவானவர் கண்டு எழுந்தார். 743

துளங்கும் சுடர்கால் சுடுபொன் எனத் தோடு அவிழ்ந்து
விளங்கும் கடுக்கை விரைநாண்மலர்க் கொத்து எறிந்து
வளங்கொண்ட கங்கைப் புறத்து அன்னம் மணந்தது ஒப்ப
இளந்திங்கள் ஏயும் சடைஅண்ணல் எழுந்தி லான்ஆல். 744

குருக்கும் பிறைக்கீற்று அயல் சேரும்வெங் கோள்அராவின்
விரிக்குங் கடுக்கை முகிழ்மென்தொடை வேய்ந்த நம்பன்
இருக்கும் செயல்கண்டு இமைதீய எரிந்து அழன்று
கருக்கும் கனல்கண் மலரோன்மகன் காய்ந்து நின்றான். 745

மறைகொண்ட நாவின் மறையோரொடு வான நீங்குற்று
இறைகொண்ட உம்ப ரெழக்கண்டும் எழுந்தி லான்ஆல்
சிறைவண்டு வீழ்கூந் தல்என் சில்மொழி மாதை வேட்ட
நறைகொண்ட தாரான் செயல் நன்றுநன்று என்ன நக்கான். 746

இருகூறு செய்த மதிவாள் நுதல் ஏழை வாழ
ஒருகூறு நல்கும் உரவோனை உருத்து நோக்கி
முருகுஊறு பைந்தார் இமையோர்கள் முகக்கும் வேள்வி
தருகூ றுஉனக் கு ஒன்று இலதாக எனச்ச பித்தான். 747

எரிமொய்த்த செங்கண் மறையோன் உரை கேட்டுஎ ழுந்து
மருமொய்த்த பைந்தார் விறல்நந்தி மடங்கல் வெந்தீ
உருமொத்து அழன்று மறையந்தணர் ஓம வேள்வி
புரிவித்து இரந்து புகல்ஞானம் ஒழிக என்றான். 748

குழைக்கும் கடுக்கைத் துணர்ச்செஞ்சடைக் கூத்தன் அன்பு
பழுக்கின்ற பாசு பதர்யாவரும் பண்டை வேள்வி
ஒழுக்கம் தவிர்ந்து மறைதீர்க என ஓங்கு சீற்றம்
தழைக்கும் பிருகு முனிஆங்குச் சபித்தல் செய்தான். 749

சத்திர யாகம் எனப்படும் அவ்வேள்வியில் கலந்து கொள்ள, முதன்மையான தக்ஷப்பிரஜாபதி அங்கு வந்தார். தாமரையில் தங்கும் பிரமனைத் தவிர்த்து, எல்லாத் தேவர்களும் கூர்மையான வஜ்ஜிராயுதம் தாங்கிய இந்திரனும் எழுந்து நின்று தக்ஷனுக்கு மரியாதை செய்தனர். 743

ஆனால் சிவனோ எழுந்திருந்து தக்கனுக்கு மரியாதை செய்ய வில்லை. ஒளிவீசும் தங்கம் போன்ற கொன்றைப் பூவையும், பிறைச் சந்திரனையும் சூடிக் கொண்டு தன் ஜடாபாரத்திலே கங்கையைத் தாங்கியவன் அச்சிவன் ஆவான். 744

சூடிய பிறைச் சந்திரனுக்கு ஏற்பப் பாம்பையும், அதைப் போன்ற கொன்றை மாலையையும் அணிந்த சிவன் எழுந்திருக்காததைத் தக்கன் பார்த்தான். பிரமதேவன் பிள்ளையாகிய அத் தக்கன், தன் கண்கள் நெருப்புமிழக் கொடுமையுடன் பார்த்துச் சினந்தான். 745

"வேதம் ஓதும் நா பெற்ற தேவர்கள் தங்கள் உலகிலிருந்து இங்கு வந்து என்னைக் கண்டதும் எழுந்து நின்றனர். இதைக் கண்டும் கூட, வண்டு அமரும் கூந்தலுடைய என் மகள் சசிதேவியை மணந்த சிவன் எழுந்து நிற்கவில்லையே! அவன் செயல் நன்று" என்று கூறித் தக்கன் சிரித்தான். 746

சந்திரனின் இரு பகுதிகளோ எனத் தோன்றும் புருவங்களைப் பெற்ற உமையைச் சிவன் தன் உடலின் ஒரு பகுதியாகக் கொண்டவன். அச்சிவனை நோக்கித் தக்கன் "தேவர்கள் விரும்பும் இந்த யாகத்தில், உனக்கு அவிர்ப் பாகம் கிடையாது ஒழிக;" என்று சாபம் இட்டான். 747

நெருப்புச் சூழ்ந்தது போன்ற சிவந்த கண்களுடைய பிரம புத்திரன் தக்கன் இவ்வாறு சபித்ததும், தவனமாலை சூடிய நந்தி தேவர் சினந்து சிங்கம் போலக் கர்ஜித்தார். "வேதம் ஓதும் அந்தணர்கள் வேள்வி முடிந்தாலும், அதன் பின் அஞ்ஞானம் அடைந்து எங்கும் திரிந்து பிச்சை எடுப்பாராக" என்று சபித்தார். 748

இந்தச் சாபத்தைக் கேட்ட பிருகு முனிவர் "கொன்றைப் பூச் சூடிய சிவபிரானின் அன்பர்களான பாசுபதர்கள் எல்லோரும் வேள்வி ஒழுக்கத்தை விட்டவர்களாய் வேதத்தை மறந்து போக" என்று சாபமிட்டார். 749

இத்தன்மை எய்த அழல்வேள்வி இழைத்த காலை
முத்துஎன்ற மூரல் கொடிபங்கு உறை முக்க ணானும்
வித்தின்றி யாவும் விளைத்தோனும்அவ் வேந்தும் ஏக
தத்தம் பதியின் அடைந்தார்தலை வந்த வானோர். 750

உலக முண்டவன் உந்தியம் தாமரை
மலரில் மேய மறைமுத லாயவன்
தலைவன் ஆகிய தக்கனுக்கு ஆய்கதிர்
நிலவு காலும் நெடுமுடி சூட்டினான். 751

பழுத்த நான்மறைப் பண்ணவர் தம்மொடு
தழைத்த சீற்றம் தலைக்கொண்டு தக்கன் விண்
கிழித்த திங்கள்அம் கீற்றுஅணி நம்பனை
அழைத்தல் இன்றி அருமகம் ஆற்றும்ஆல். 752

ஒற்றை ஆழியம் செல்வரும் ஒண்நிலாக்
கற்றை காலும் கடவுளும் கற்பகப்
பொற்ற மாலைப் புரந்தரன் ஆதியா
சொற்ற எண்மரும் தொக்கனர் என்பவே. 753

முறையில் வேள்வி முடிவு பெறாது என
அறிவின்நாடிய ஆய்மலர் அண்ணலும்
மறைமு டித்தலை நின்ற மணிநிறத்து
இறையும் அல்லதை யாவர்அங் குஉற்றிலார்? 754

ஆற்றும் வேள்விக்கு அரம்பையர் மின்என
தோற்றி விண்ணிடைத் துன்னினர் சேறல்கண்டு
ஏற்றி னான்அடி ஏத்தினள் கிள்ளையின்
சாற்று தீம்சொல் சதிநின்று இறைஞ்சினாள். 755

மாறுஇல் எந்தை மகம்புரி வான்அதற்கு
ஈறுஇல் வானிடை யாவரும் ஏகுவார்
சேறும் நாமும் எனவிளை தெள்ளமுது
ஊறு மந்தண் கிளவி உரைசெய்தாள். 756

இவ்வாறு வேள்வியில் குறுக்கிடு வந்ததும் முத்துப் பல் பெற்ற உமையைத் தன் பாகமாகக் கொண்ட சிவன் தன் கைலாயம் சென்றான். படைப்புத் தெய்வமான பிரமன், இந்திரன் அங்கு வந்த தேவர்கள் யாவரும் தத்தம் உலகங்களுக்குத் திரும்பினார்கள். 750

பின்பு, உலகங்களை வயிற்றில் கொண்ட திருமால் கொப்பூழில் உதித்த பிரமதேவன் தக்கனை மற்றையப் பிரமர்களுக்குத் தலைவனாக்கி நிலாவொளி வீசும் முடி சூட்டினான். 751

அதன் பின் , ஓங்கிய கோபமே இயல்பான தக்கன், நான்கு வேதங்களிலும் முற்றும் கற்றறிந்த அந்தணர்களுடன், மறுபடியும் வேள்வி செய்யத் தொடங்கினான். இந்த யாகத்துக்குச் சந்திரனைத் தலையில் சூடிய சிவனை அவன் அழைக்கவில்லை. 752

ஒற்றைச் சக்கரத் தேரில் செல்லும் சூரியர் பன்னிருவர், நிலாக் கற்றை ஒளி வீசும் தெய்வமான சந்திரன், அழகான மாலை அணிந்த இந்திரன், அட்டதிக்குப் பாலகர்கள் ஆகியோர், தக்கனின் இவ் வேள்விக்கு வந்தனர். 753

முறையில்லாத இவ் வேள்வி நிறைவுடன் முடியாது என்பதைப் பிரமன் தன் ஞான மேம்பாட்டால் அறிந்ததால், அதற்கு வரவில்லை. வேதங்களுக்குத் தலைவனான நீலமணி நிறத் திருமாலும் வரவில்லை. இவ்விருவரைத் தவிர மற்றெல்லோரும் வந்தனர். 754

மின்னல் ஒளி போல் ஆகாயத்தில் ஒன்று சேர்ந்த தேவ மாதர்கள் தக்கன் செய்யும் வேள்வியிற் கலந்து கொள்ளச் சென்றனர். இதனைக் கண்ட கிளி போல் பேச்சுடைய சதிதேவி, காளை வாகனப் பெருமான் சிவனிடம் கீழ்க்கண்டவாறு வேண்டினாள். 755

“மாறுபாடில்லாத என் தந்தை தக்கன் செய்யும் வேள்வியில் எல்லாத் தேவர்களும் கலந்து கொள்கின்றனர். நாமும் அங்கு போவோம்” என்று அமுதினும் இனிய பேச்சுடைய சதிதேவி கூறினாள். 756

கொந்து வார்குழல் கூறுதல் கேட்டலும்
அந்த ணாளன் அமரர் அவையின்கண்
தந்தை யாகிய தக்கன் சினந்து உரை
நிந்தை ஆர நிகழ்த்தினன் அன்றுஅரோ. 757

அருப்பு வெம்முலை நங்கை அழைக்கிலன்
செருக்கி னால்அவண் செல்லினும் எள்ளும்ஆல்
விருப்பம் இன்னது விட்டிடல் வேண்டும்என்று
உரைத்த னன்புரம் ஒள்அழல் ஊட்டினான். 758

அழைத்தி லன்அவன் ஆயினும் மன்னையும்
தழைத்த காதல் துணைவியர் தாமும் ஓர்
உழைச்செ றிந்தனர் காண்பல்ஆங்கு உற்றுஎன
மழைக் கருங்கண் மலர்சிவந் தாளரோ. 759

போகல் என்னினும் பொன்றும் மற்று அவ்வழி
ஏகு மேனும் இறந்து படும் எனா
நாகம் சூடிய நம்பன் இருத்தலும்
தோகை பல்கணம் சூழ எழுந்தனள். 760

கிள்ளை கொண்டும்வெண் கேழ்கிளர் அன்னமென்
பிள்ளை கொண்டும் சிலர்பின் பெயர்ந்தனர்.
வள்ளை கொண்டுஇள மான்மருள் நோக்குஎலாம்
கொள்ளை கொண்ட குவளைஅம் கண்ணினார். 761

ஒலிக்க வெண்சங் குஉரும் எனப் பல்லியம்
கலிக்க அண்ட கடாகம் உடைபட
சிலைக்க அந்தர துந்துபி சென்றனள்
மலைக்கும் வென்றி மழவிடை ஊர்ந்து அரோ . 762

எழுந்து ஓர் பால்நிலவு ஓங்க எறிந்து இருள்
விழுங்கு கற்றை வெயில்ஒரு பால்எழ
முழங்கு தெண்கடல் ஆர்ப்பின் முதுமறை
தழங்கு வேள்வியின் சாலைசென்று எய்தினாள். 763

பூங்கொத்துக் கூந்தலுடைய சதிதேவி இவ்வாறு கூறலும் சிவபிரான், "தேவசபையில் உன் தந்தையான தக்கன், என்னைச் சினந்து நிந்தித்தானே!" என்று கூறி நடந்ததை நினைவூட்டினான். 757

திரிபுரத்தைத் தீயால் அழித்த அப்பிரான் சதியை நோக்கி மேலும் கூறுவான். "தாமரை அரும்பு போலும் மார்புடைய பெண்ணே! தக்கன் தன் கர்வத்தால், நம்மை யாகத்துக்கு அழைக்கவில்லை. நாம் சென்றால் அவன் நம்மை இகழ்வான். ஆகவே அங்கு செல்லும் விருப்பத்தை நீ விட்டுவிடு". 758

இதனைக் கேட்ட சதிதேவி, பூப்போன்ற தன் மேகநிறக் கண் சிவந்தாள். "என் தந்தை அழைக்காவிட்டாலும், நான் அங்குச் செல்வேன். அங்குச் சென்றால், என் தாயையும், உடன் பிறந்த சகோதரிகளையும் காண்பேன்" என்றாள். 759

அங்குச் செல்லாதே என்று மேலும் வலியுறுத்தினால் சதி இறப்பாள் என்றெண்ணிய, நாகம் சூடிய சிவன் பேசாதிருந்தான். அவள் தன் தோழியர் சூழ, வேள்வியிற் கலந்து கொள்ளப் புறப்பட்டாள். 760

வள்ளைக் கொடி போன்ற காதுகளும் மான் பார்வையைக் கொள்ளை கொண்ட குவளைப் பூப் போன்ற கண்களும் உடைய பெண்கள் சதி தேவியுடன் பின் சென்றனர். கிளிகளையும் அன்னங்களையும் எடுத்துச் சென்றனர். 761

மலை போன்ற இளைய காளை மீது ஊர்ந்து சதிதேவி சென்ற பொழுது வெண் சங்குகள் ஒலித்தன. பற்பல வாத்தியங்கள் இடியைப் போல முழங்கவும் அண்டச் சுவரே அலைந்தது. வானில் துந்துபி வாத்திய ஒலி பரவிற்று. 762

சதிதேவி, தக்கன் யாகசாலையை அடைந்தாள். அங்கு கடல் ஓசை போல் வேதஒலி எங்கும் கேட்டது. முத்தாபரண அலங்காரம் நிலாவைப் போலவும் மாணிக்க அணிகள் வெயில் போலவும் ஒளி வீசின. 763

மாக்கண் வெம்முலை மாதினைக் காணநெஞ்சு
ஏக்கற்று ஏக்கற்று இருந்த துணைவியர்
நோக்கி நோக்கித் தம் நோக்கம் களிகொள
மீக்கொள் காதலின் மேவினர் புல்லினார். 764

மன்னும் இன் நகை மாதர்அம் பாவையர்
பொன்அம் தாமரைப் போது உறை செய்யவாய்
கன்னி அன்னக் கணம்எனச் சூழ்தர
அன்னை பால்சென்று அகம்குளிர்ந் தாள்அரோ. 765

கூற்றை வென்ற குரைகழல் தாளினான்
கூற்றை மாற்றி குலமறைக் கூற்றினால்
ஆற்று கின்ற அருமகம் காண்டலும்
ஆற்று கிற்றிலள் அங்குஅழன் றாள்அரோ. 766

வீடு நான்முகன் வெண்தலை மாலைமின்
ஓட மின்னி உலறிய செஞ்சடை
சூடி வெய்ய சுடலைப் பரப்பில் நின்று
ஆடு தேவை அறிகிலை போலுமால். 767

பொன்னின் தோன்றுஇறை பூங்கழல் போற்றிலை
நின்னின் தோன்று உடல் தேர்கலன் யான்எனா
தன்னின் தோன்றும் தழல்கொடு மெய்சுடா
மின்னின் தோன்றினள் வெற்பகத்து என்பவே. 768

கண்டு கண்அழல் கால கணம் எழுந்து
தண்ட கோடி அழிகுறும் நாள் என
கொண்ட சூலம் திரித்துஅடு கூற்றுஎன
மண்டு வெஞ்சமம் ஆட வளைத்தவே. 769

வேத வேள்வியின் வெம்பு பிருகு என்று
ஓதும் அந்தணன் ஓமம் ஒன்று ஆற்றலும்
காத நான்கு கனலும் கனல்விழிப்
பூதம் ஒன்று பொடித்து அமர் செய்தது ஆல். 770

கரிய கண்களும் திரண்ட முலைகளும் கொண்ட சதிதேவியை எதிர்பார்த்துக் காண நின்ற அவள் சகோதரிகள், மிகவும் மகிழ்ந்தனர். சதியைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து அவர்கள் அன்புடன் தழுவிக் கொண்டனர். 764

மின்னல் சிரிப்பும் அன்பும் கொண்ட தோழிப் பெண்கள், தாமரையில் வாழும் அன்னக் கூட்டங்கள் போல் சதிதேவியைச் சூழ்ந்தவராய், அவள் தன் தாய் பிரசூதியிடம் சென்று மனம் மகிழ்ந்தாள். 765

சதிதேவி தன் தந்தை தக்கன் செய்யும் வேள்வியில், சிவனுக்கு அவிர்ப்பாகம் கொடுக்காததைக் கண்டு பொறுக்க மாட்டாதவள் ஆனாள். யமனை உதைத்த பாதங்கள் பெற்று சிவனுக்கு, வேத வாசகங்களால் செய்யப்படும் யாகத்தில் அவிர்ப் பாகப் பங்கைக் கொடுக்காததைப் பார்த்தாள். 766

சதி தேவி தன் தந்தை தக்கனை நோக்கி, " என் கணவன் சிவனின் பெருமையை நீ அறியாயோ? நான்முகன் கபாலத்தையே மாலையில் கோத்துச் சூடிய என் கணவன் ஒளி வீசும் சடை முடி உடையவன். சுடலையான மயானத்தில் நடனம் ஆடும் அந்தத் தெய்வத்தை அறிய வில்லையா?" என்று கேட்டாள். 767

"பொன்னைப் போன்ற நிறமுடைய சிவபிரானின் திருவடிகளில் பணியாத உன்னால் ஏற்பட்ட என் உடம்பை நான் விரும்பேன். இதோ, அதை என் யோகாக்கினியால் சுட்டுக் கொள்கிறேன்" என்று கூறிச் சதிதேவி தன்னை எரித்துக் கொண்டாள். இமயமலை மின்னல் போல் ஆகி விட்டாள். 768

இதனைக் கண்ட பூத கணங்கள், கோடி அண்டங்களும் அழியும் நாள் வந்து விட்டது எனக் கண்கள் நெருப்புச் சிந்தத் தத்தம் சூலங்களைச் சுழற்றிப் போர் செய்ய வளைத்தனர். 769

இதனைப் பார்த்துச் சினந்த பிருகு, பூதகணங்களுக்கு எதிராக வேறு ஒரு யாகம் செய்து, 'ரிபு' என்னும் பூதத்தை வரச் செய்தார். நான்கு காததூரம் நெருப்புக் கக்கும் அப்பூதம் சிவகணங்களுடன் போர் செய்தது. 770

புகையும் வெம்படைப் பூதத்தி னால்கணம்
இகல்அ ழிந்திடல் காண்டலும் ஏகினான்
மகதி யாழ்முனி கூறினன் வாள்மதி
முகிழ் அணிந்த முதல்வற்கு முற்றுமே. 771

வடித்த யாழ்முனி வழங்கும் உரை வந்து செவிவாய்
நடத்த லோடும்நகை நாள்நிலவு வந்து சுடர
தடித்து நேரும் ஒரு செஞ்சடைபி டுங்கி நிலம்மேல்
அடித்த னன்கடல் அளித்தவிடம் உண்ட அமலன். 772

மணித யங்குமுடி வான்முகடு முட்ட வரைநேர்
திணிபு யம்திசைகள் எட்டையும் நெருக்க எழுதீ
அணிநி றம்கிளரும் வீரன்அவண் நின்று முளையா
பணிஎன் என்றுபவன் வார்கழல்ப ணிந்த னனர்ஓ. 773

மிக்க வேள்வியை அழித்துநெடு வேள்வி புரிய
தொக்க வானவர் தொலைந்து இரிய மோதி நெறிதீர்
தக்கன் வந்தலை தடிந்திடுதி என்று உரை செய்தான்
செக்கர் வானொடு சிவந்துபொரு செஞ்ச டையினான். 774

ஒன்றொடு ஒன்று பல அண்டமும் உடைத்தி டுவதற்கு
அன்று வாள்அவுணர் வேர்தெற வும்அன்று இறைவநீ
சென்று தக்கனது சென்னிதுணி என்று உரை செய்தாய்
நன்று நன்று எனது வீரம் என நக்க னன்அரோ. 775

வெடிக்கும் நகை ஆர்ப்பினை வெரீஇ இறுதி நாள்நின்று
இடிக்கும்இடி என்று எரிம ணிக்குலம் இமைக்கும்
முடித்தலை பரப்பு முழங்குகடல் வேலிப்
படிப்பொறை சுமக்கும்அர வும்பதைப தைப்ப. 776

உரைக்கும்நெய் மணந்துநிணம் உண்டுஒளிரும் ஒள்வாள்
விரிக்கும்அழ லும்கடைவி ழிக்கனலும் ஒன்றாய்
குரைக்கும் நெடு வாரிதி குடித்து உலகம் ஏழும்
எரிக்கும்வட வைக்கனல் எரிந்திட எரிப்ப. 777

கொடிய ஆயுதம் தாங்கிய 'ரிபு' என்னும் பூதத்தால் சிவகணங்கள் அழிவதைக் கண்ட நாரதர் சந்திரனைச் சூடிய சிவபெருமானிடம் சென்று செய்தி கூறினார். 771

'மகதி' என்னும் வீணை ஏந்திய நாரதர் கூறியதைச் சிவன் கேட்டார். பாற்கடல் நஞ்சுண்ட குற்றமற்ற அப்பெருமான், ஒளி விடும் சந்திரன் அமர்ந்த தன் சடையிலிருந்து ஒன்றைப் பிடுங்கித் தரையில் அடித்தார். 772

அவ்வாறு சிவன் தன் சடைமுடி ஒன்றை நிலத்தில் அடித்ததும், அங்கு வீரபத்திரன் தோன்றினார். மணி விளங்கும் அவர் முடி வானைத் தொட்டது ; திரண்ட தோள்கள் எட்டுத் திசைகளையும் தொட்டன. தீ நிறம் உடைய அவர் சிவனைப் பணிந்து நின்றார். 773

செவ்வானம் போலப் பரந்த சடைமுடி கொண்ட சிவன், அவ்வீரபத்திரனை நோக்கிக் கூறினார். "நீ, வரம்பு கடந்து செய்த தக்கன் யாகத்தை அழித்திடுவாய். தேவர்கள் பயந்து ஓடும்படி செய். ஒழுங்கை விட்ட அந்தத் தக்கன் தலையை வெட்டி விடு". 774

இதனைக் கேட்ட வீரபத்திரன், "இறைவனே! நீ ஆணை இட்ட தொழில் என் ஆற்றலுக்கு மிகவும் சாதாரணமே ஒன்றோடு ஒன்றான பல அண்டங்களை உடைப்பதும், வாள் ஏந்திய தேவர்களை வேருடன் அழிப்பதும், தக்கன் தலையை வெட்டுவதும் எனக்கு எளிதே ! நன்று! நன்று!" என்று கூறிச் சிரித்தான். 775

வீரபத்திரனின் அதிரடிச் சிரிப்பொலி கேட்ட, ஆதிசேடன் உலகின் கடைசி நாள் வந்து விட்டதோ எனப் பயந்தான். கடல் சூழ்ந்த உலகைச் சுமையைத் தாங்கும் அவன், தன் தலையிலுள்ள மணிக் கூட்டங்கள் ஒளி விடும்படி, பயத்தால் நடுங்கினான் . 776

வீரபத்திரனின் கடைக்கண்களிலிருந்து பரந்த நெருப்பு நெய் பூசப்பட்டு நிணம் உடைய வாளின் ஒளி போல் திகழ்ந்தது. கடலைக் குடித்து உலகங்கள் ஏழினையும் எரித்திடும் வடவாக்கினி போலவும் இருந்தது. 777

மீஉயர் பொலங்குடுமி மேருவை வெருட்டும்
ஆயிரம் மணிப்புயமும் அம்சுடர் எறிப்ப
மாயும்மலர்அண்ணல் தலை மாலைகள் வயங்க
காயும்அழல் நச்சரவ கங்கணம் இரைப்ப. 778

நெய்ம்முகம் அணிந்தவயின் நேமிகதை வெந்தீத்
தும்முமழு வாள்இலகு தோமரம் உலக்கை
கைம்மலர் தொறும்கனல மண்முழவு கார்போல்
விம்மஅதிர் தெண்கடலின் வெள்வளை முழங்க 779

முக்கண்அடல் வீரன்வெம் முனைத்திறம் விரும்பி
தக்கன்உறை கின்ற ஒரு சாலை எவண் என்ன
கக்கஅழல் கண்கடை கனன்று இதழ் துடிப்ப
நக்கபிறை வாள்எயிறு அதுக்கினன் நடந்தான். 780

வாளிபொழி வெஞ்சிலை வணக்கும்அடல் நந்தி
ஆளிபுரை சண்டன்மணி மான்அழல் கருங்கண்
காளியொடு எழுந்தனர் கணங்கள்பல சென்ற
தூளிபட லம்பருதி சூழ்வெளி புதைப்ப. 781

மும்மைஉல கம்தரும் முதல் கடவுள் செங்கண்
செம்மஎழு தூளிகள் திசைமுகம் மறைப்ப
அம்மஇஃது என் கொல்என வாரும்அவி விட்டு
கொம்மென எழுந்தனர் குலைந்துநெடு வானோர். 782

பொன்விளையும் மேனிமயில் பொன்றலின் வெகுண்டு
கொன்விளை எயிற்றபல கூளிபுடை சூழ
மின்விளையும் வாள்உருவி வீரன்வரும் அந்தோ
என்விளையு மோஎன இயம்பினர் இரிந்தார். 783

அலைக்கடல் கலக்கஎழும் ஆலம்என வெம்பி
சிலைக்கடை குழைத்துவிழி செங்கனல் கொழிப்ப
கொலைத்தொழில் குறித்துஎழு கொடிப்படையின் முன்னம்
தலைப்படு சினத்து அலகை சாலையின் இறுத்த. 784

பிரம்ம கபால மாலை சூடி, விஷப்பாம்பைக் கங்கணமாக கட்டிக் கொண்டு வந்த வீரபத்திரனின் தோற்றம், மேலுயர்ந்த மேருமலையின் உச்சியையும் அச்சுறுத்தும். ஆயினும் தோள்களுடைய ஆதிசேடன் அஞ்சிக் கண்களிலிருந்து நெருப்பை வீசுவான். 778

அவன் தாங்கிய வேலும் கதையும் நெய் பூசப்பட்டன. மழுவும் வாளும் தீயைத் தும்மின. பூப்போன்ற அவன் கைகளில் ஏந்திய தோமரமும் உலக்கையும் நெருப்புப் போல் ஒளி விட்டன. மார்ச்சனை அமைந்த மத்தளம் மேகம் என ஒலித்தது. கடல் போலச் சங்குகள் முழங்கின. 779

வீரபத்திரன் போர் செய்ய விரும்பித் தக்கனுடைய யாக சாலை எங்கே என்று கேட்டவாறு, கண்களில் தீ பறக்க வாய் உதடுகள் துடித்தபடி, வாள் போன்ற பற்களை நெறித்தவாறு நடந்து வந்தான். 780

வில்லில் அம்புகளை ஏற்றி விடுவதில் மிகுந்த வலிமை பெற்ற நந்தி உடன் வந்தான். யாளி போன்ற சண்டேசுரனும் கூட வந்தான். நெருப்புக்கண் பெற்ற காளி தேவியும் வந்தாள். பூதகணங்கள் பலவும் சூழ்ந்து வர, வீரபத்திரன் கூட்டத்தால், சூரிய வெளி எங்கும் தூசிப் படலம் ஆயிற்று. 781

வீரபத்திரனின் படை எடுப்பால் எழுந்த தூசிகள் திசைமுகங்களை மறைத்தன. மூவுலகங்களையும் படைத்த பிரமனின் சிவந்த கண்களையும் மறைத்தன. "அம்மா! இது என்ன?" என்று பயந்த தேவர்கள், அவிஉணவு இட்டு யாகம் செய்வதை விட்டு, எழுந்து ஓடினார்கள். 782

தங்க மேனி கொண்ட சதிதேவி எரிந்து அழிந்ததைப் பொறுக்காத கூளிப் பேய்கள், அச்சுறுத்தும் பற்கள் தெரிய, வீரபத்திரனைச் சூழ்ந்து வந்தன. அவன் மின்னல் ஒளி வீசும் வாளை உருவியவாறு வந்ததைக் கண்ட தேவர்கள் என்ன நடக்குமோ என்று கூறியபடி ஓடினார்கள். 783

ஆலகால விஷம் போல, வளைத்த விற்களிலிருந்து தீ கொப்புளித்தது. கொலையையே தொழிலாகக் கொண்ட வீரபத்திரனின் படைகளுக்கு முன்னே, யாக சாலையில் பேய்கள் சினத்துடன் தங்கின. 784

இறுத்தன மகத்தறி எடுத்து அவியை வாயில்
நிறைத்தன மடுத்தன நெருப்புஇலகு சாலை
மறத்தினில் அறத்துறை வழுக்கும் மறை யோனை
கறுத்தஅழல் கண்கடை சிவந்தன கணங்கள். 785

வெடித்தது உயர் அண்டம் என விண்ணவரை வாரி
அடித்தன உதைத்தன அரைத்தன வெருட்டி
பிடித்தன சுழற்றின பிசைந்தன பிழிந்த
கடைக்கனலில் இட்டன களற்றின கனன்ற. 786

விண்ணிடை எறிந்தசில விண்ணவரை வாரி
மண்ணிடை எறிந்தசில மால்வரை முகட்டும்
தண்அலை அகட்டினும் எறிந்தசில சால
கண்ணிடை கடைக்கனல் கதழ்ந்து ஒழுகு பூதம். 787

அந்தரம் அறுத்து ஒளிர் அருக்கனும் ஒளிப்ப
சிந்துமதம் அற்றன திசைக்கரிகள் ஓட
மந்தரம் முதல் குடுமி மால்வரை குலுங்க
வெம்திறல் பழுத்தசின வீரனும் அடைந்தான். 788

வென்றிகெழு வீரன்நெடு வேள்விமறை வல்லோர்
வன்தகர் படுத்த திறம் மானஉயர் தக்கற்கு
ஒன்றுதலை அங்கைமலர் கொண்டுதிரு காஅத்
தென்தலை அழல்திரள் மடுத்துநனி தீர்ந்தான். 789

உலகு அளந்துஎழுந் துஉயர்ந்ததோள் ஒருகுழை ஒருவன்
கலிங்க மன்னவன் கதிர்கெழு பல்உகுத் தென்ன
இலங்கு வேள்வியில் இளநகை முகிழ்த்தசெங் கதிரின்
அலங்கு பல்லினை உகுத்தனன் அலங்கல்வேல் சண்டன். 790

பிருகு மாதவன் முகத்தெழு மயிரெலாம் பிறங்கு
வரையின் வீங்குதிண் தோள்மணி மான்பறித் தனன்ஆல்
அரிய வேள்வியில் சபித்திஎன் றவன்முகம் பார்த்த
பருதி கண்களைப் பிடுங்கினன் பருதிவேல் நந்தி. 791

பூதகணங்கள் யாக சாலைத் தூண்களை உடைத்து நொறுக்கின. அவி உணவை எடுத்து வாயில் நிறைத்துக் கொண்டன. பாவத்தால் தரும நெறியில் வழுக்கி விழுந்த தக்கனைக் கோபித்தன. அந்தப் பூதகணங்களின் கண்கள் நெருப்பை வீசிச் சிவந்தன. 785

உயர்ந்த அண்டம் வெடித்தது போல, அப்பூதங்கள் தேவர்களை வாரி எடுத்து, அடித்து, உதைத்தன. வெருட்டிப் பேசின; பிடித்துச் சுழற்றிப் பிசைந்தன. ஊழித் தீ போல கண்கள் வெருண்டு, அவை தேவர்கள் உடம்புகளைப் பிழிந்தன. 786

சில பூதங்கள் தேவர்களை வானத்தில் எறிந்தன; மற்றும் சில, அவரை மண்ணில் வீசின. மலை உச்சிகளிலும் கடல் நடுவிலும் அவர்களை வீசித் தாக்கின. அவற்றின் கண்களிலிருந்து தீ வெளி வந்தது. 787

வான் வழி செல்லும் சூரியனும் ஒளிந்து கொண்டான். திசை யானைகள் மதம் அற்றனவாய் ஓடின. உயர்ந்த சிகரங்கள் உள்ள மந்தர மலை குலுங்கிற்று. வீரபத்திரன் செய்த போரின் வன்மை மேலும் மேலும் முற்றியது. 788

யாகம் செய்த வேதவாணர் ஆட்டைக் கொன்றது போல, வெற்றியுடைய வீரபத்திரன் தன் மலர்க் கரங்களால், தக்கனின் தலையைத் திருகி எடுத்துக் கொன்றான். பிறகு அத்தலையை அவன் தக்ஷிணாக்கினியில் வீசி எறிந்தான். 789

உலகையே அளக்கும்படி உயர்ந்த தோள் பெற்ற பலராமன் கலிங்க மன்னனுடைய பல்லை உடைத்தது போல, வேல் ஏந்திய சண்டீசன், வேள்வியில் எழுந்த பூஷா என்னும் சூரியன் பற்களை உடைத்தான். 790

மலை போன்று உயர்ந்த தோள்களை உடைய மணி மான் என்னும் பூத கணம் தவத்தில் உயர்ந்த பிருகுமுனியின் முகத்தில் வளர்ந்த மலர்களைப் பறித்தான். சாபமிட்ட அவர் முகத்தைப் பார்த்த பகன் என்னும் சூரியன் கண்களை வேல் ஏந்திய நந்தி தேவர் பிடுங்கினார். 791

ஆற்றும் வெம்சமம் வேட்டுவாய் அழன்று போர் வீரன்
சீற்ற வாள்உமிழ் தீப்பட நிறமெலாம் தீந்த
கூற்றம் தன்னொடு கொலைத்தொழில் காட்டிலது ஓடி
காற்றி னுக்குஇறை காட்டினன் தன்னுடைக் கடுப்பு. 792

சினக்க டும்திறல் வீரன் தன் செய்ய கண் கடைகால்
அனற்கு வெம்பினன் அதிர்கடல் படர்ந்தனன் வருணன்
கனைக்கும் வண்டுஇமிர் கற்பகக் காட்டகம் கலந்தான்
பனைத்த டக்கைவெம் பகட்டுஅயி ராபதப் பாகன். 793

இரிந்து வானவர் யாவரும் எறுழ்வலி அழிந்து
விரிந்த தாமரை மீமிசை இருந்தவன் உலகம்
பொருந்தி உற்றது புகறலும் அவர் முகம் நோக்கி
தெரிந்த நான்மறைத் திசைமுகன் செப்பல்உற் றனன்ஆல்.
794

வலிகெழும் ஒருவ னோடு மறலுதல் மாட்சித்து அன்றுஆல்
கொலைகெழு சூலத்து அண்ணல் கூறுஅவன் கொடுத்தி லானேல்
அலர்பசுந் தாரீர் நீவிர் அவியுண இருந்தது என்னே
நிலவணி சடையோன் பொன்தாள் நிழல்இனி அடைமின் சென்றே.
795

என்றுசெங் கமலத்து அண்ணல் இந்திரன் ஆதி யாய
மன்றல்அம் பாரி சாத மாமலர்த் தெரியல் விண்ணோர்
துன்றினர் மருங்கு சூழ சுடர்விடு பசும்பொன் கோட்டு
கொன்றையம் தெரியல் ஈசன் குளிர்வரை எய்தி னார்ஆல். 796

நாகமும் புவியும் போற்ற நவையின்றி விளங்கும் வெள்ளி
நாகம்ஒண் கடுக்கை திங்கள் நல்நதி தலையில் பெற்று
நாகமும் புலியும் சூழும் நலங்கொண்டு ஏர்உமையும் பையார்
நாகமும் ஏந்தி நின்ற நம்பனைப் போன்றது அன்றே. 797

போர்க் களத்தில் வீரபத்திரன் தன் வாள் வலிமையைக் காட்டிச் சீறி, எங்கும் தீயைப் பரவச் செய்தான். இதனைக் கண்டு அஞ்சிய யமன் தன் கொலைத் தொழிலைக் காட்டாமல் ஓடினான். வாயுதேவனும் பயந்து மிகவும் வேகத்துடன் ஓடினான். 792

நிறைந்த வலிமையுடன் கடைக் கண் நெருப்பைப் பரப்பிய வீரபத்திரனுக்குப் பயந்த வருண தேவன் எதிர்க்காமல் ஓடித் தன் இருப்பிடமான கடலுள் மறைந்தான். அகன்ற கரங்கள் கொண்ட இந்திரன், பயந்தவாறு அயிராவதத்தில் ஏறி, வண்டொலிக்கும் கற்பகச் சோலை சூழ்ந்த காட்டுள் ஒளிந்தான். 793

சின்னாபின்னமாகச் சிதறி ஓடிய தேவர்கள் யாவரும் தத்தம் வலிமைகள் இழந்தவராய்த் தாமரையில் இருக்கும் பிரமன் உலகம் சென்று சரணடைந்தனர். அவர்களை நோக்கிப் பிரம தேவன் பின்வருமாறு பேசலுற்றான். 794

"பூ மாலைகள் அணிந்தவர்களே! வலிமை மிகுந்த சிவனுடன் மாறுபட்டுப் போரிடுதல் மாட்சி உடையது அன்று. கொல்லும் சூலம் ஏந்திய சிவனுக்கு உரிய அவிர்ப் பாகத்தைத் தக்கன் கொடுக்காத பொழுது நீங்கள் அவிஉணவு பெறச் சென்று காத்து இருந்தீர்களே! இது முறையா? இனியாவது நிலாவைச் சடையில் சூடிய சிவன் திருவடி பணிந்து வணங்கச் செல்லுங்கள்." 795

இவ்வாறு நான்முகன் கூறவும் இந்திரனும் பாரிஜாத மலர் மாலைகள் சூடிய தேவர்களும் பிரமனுடன், கொன்றை மாலை அணிந்த சிவனின் குளிர்ந்த கைலாய மலையை அடைந்தார்கள். 796

தேவருலகம் பூவுலகும் போற்றும் படியான, குற்றமற்ற வெள்ளி மலையான கைலாயம் சிவபெருமானை ஒத்தது ஆகும். கொன்றை, சந்திரன், கங்கை மூன்றும் அம்மலையின் தலையிலும் உள்ளன. ஆதிசேடனும் வியாக்கிரபாதரும் அம்மலையை வலம் வருவர். படம் எடுக்கும் பாம்பும் அம்மலையில் உண்டு. ஆகவே அம் மலை சிவனைப் போன்றதாகும். 797

விமலம்உற் றுஒளிரும் ஓர்பால் விளங்குசெம் மணிவில் வீச
அமைவுறும் சிகரம் ஓர்பால் அணிமர கதத்து ஏர் பெற்றது
இமையவர் தொழுது வாழ்த்தும் இளநகைப் பவளச் செவ்வாய்
உமைஒரு பாகத் துஉற்ற ஒருவனை நிகர்த்தது அம்மா. 798

அவ்வரை மீது வேழம் அணிதிகழ் வான்செல் கோட்டு
மைவரை கால்கள் பெற்று வருவபோல் வரும்அங்கு ஓர்பால்
எவ்வம்இல் மகளிர் போல இலங்குறும் மயில்கள் ஓர்பால்
கொவ்வையம் கனிவா யார்போல் குயில்இருந்து இசைக்கும் ஓர்பால். 799

ஒள்ளிணர்க் கற்ப கங்கள் ஊழ்த்தபொன் போது போர்த்து
வெள்ளியங் கிரிசெம் பொன்னின் வெற்புஎன விளங்கும் ஓர்பால்
புள்ளினம் முரலும் சோலை இருள்படப் பொதுளி ஓங்க
எள்ளல்இல் மணிகள் அந்த இருள்ஒழித்து இலங்கும் ஓர் பால். 800

களியொடும் எங்கும் மேவி கலந்துஉறை அரம்பை மாதர்
ஒளிவளர் முகமும் கண்ணும் ஒண்துவர் வாயும் என்ன
நளினமும் குவளைக் காடும் நலங்கிளர் குமுதத் தோடும்
அளிஉளர் வாவி தோறும் அரும்பவிழ்ந்து இலங்கும் ஓர்பால். 801

அரும்புஇளம் திங்கள் சூடும் அண்ணல்செங் கமலக் கையில்
திருந்துஎழில் மடமான் பிள்ளை சேர்ந்துவீற் றிருத்தல் காணா
பொருந்துதும் நாமும் என்னா பொங்கிமேல் எழுதல் போல
கருங்கலை துள்ளும் அந்த கைலையம் சாரல் ஓர்பால். 802

விரிசினை ஆல நீழல் மெய்த்தவச் சனகன் ஆதி
அருமறைக் கிழவர் சூழ அமர்ந்தஆ னந்த ரூபத்து
ஒருமுத லவனைக் காணா உவந்தனர் அமரர் தாழ்ந்தார்
மரைமலர்ப் பொகுட்டு வாழும் மறையவன் வழுத்தி னான்ஆல். 803

அம்மலையின் ஒரு பகுதியில் மாணிக்கங்கள் ஒளி வீசத் தூய்மை விளங்கும். மற்றொரு சிகரப் பகுதியில் அழகிய மரகத மணிகள் அழகுடன் செறிந்துள்ளன. இவ்விரண்டு காரணத்தால், தேவர்கள் தொழுதுவாழ்த்தும், பவளச் செவ்வாய் பெற்ற உமாமகேசுவரனைக் கயிலை மலை ஒத்தது ஆகும். 798

வான் நோக்கி உயர்ந்ததும் மணிகள் நிறைந்ததுமான முகடுகள் உள்ள மலையே நகர்ந்து வருவது போல அக்கயிலை மலையில் யானைகள் நடந்து வரும். துன்பமே இல்லாத பெண்களைப் போல, ஒரு பக்கம் மயில்கள் ஆடி வரும். கொவ்வைப் பழம் போல் சிவந்த உதடுகள் பெற்ற பெண்களைப் போலக் குயில்கள் இனிய குரலில் கூவும். 799

கற்பகப் பூங்கொத்துக்கள் பொழிந்த மகரந்தப் பொடிகளால் மறைக்கப்பட்ட வெள்ளிக் கயிலையின் ஒரு பகுதி, தங்க மலையோ எனத் தோன்றும். மலையின் இன்னொரு பக்கத்தில், சோலைகளில் வண்டுகள் ரீங்காரம் செய்யும். மாசற்ற மணிகளின் கூட்டம், இருட்டை விரட்டி ஒளி வீசும். 800

களிப்புடன் அங்கும் இங்கும் கலந்து வாழும் தேவ மாதர்களின் முகங்கள் தாமரை போன்றன; கண்கள் குவளை போன்றன; வாய்களோ குமுதம் போன்றன. எனவே அம் மாதர்களின் கூட்டம் வண்டொலிக்கும் பொய்கைகள் போலவே விளங்கின. 801

பிறைச் சந்திரனைச் சூடிய சிவபிரானின் சிவந்த கையில் காட்சி தரும் மான் கன்றைக் கண்ட மலையில் உள்ள கரிய கலைமான்கள் தாமும் அங்கே சேர எழுவது போலத் துள்ளும். இவ்வாறு கைலாய மலையில் மான்கள் அங்கும் இங்கும் துள்ளி ஓடும். 802

இத்தகைய கயிலை மலையை அடைந்த தேவர்கள் சிவபிரானைத் தொழுது வணங்கினார்கள். விரிந்த கிளைகள் விளங்கிய ஆல மர நிழலில், உண்மைத் தவசிகளான சனகாதி முனிவர்கள் நால்வரும் சூழ, அமர்ந்த ஆனந்த வடிவமான தக்ஷிணாமூர்த்தியே, இச்சிவன் ஆவான். தேவர்கள் அவன் திருவடி பணிந்ததும் தாமரையில் வாழும் பிரமன் வாழ்த்திப் பேசினான். 803

வெண்திரை கடைய வந்து விளைந்தவெம் சீற்ற நஞ்சம்
உண்டுமுப் புரங்கள் வெந்தீ ஊட்டிமூ வுலகும் காத்தோய்
அண்டம் நீறுஆக்கி ஆடும் அமலநீ அருள்செய்க என்ன
புண்டரி கத்து வாழும் புராதனன் புகழ்ந்து சொல்வான். 804

மொழிந்தவாறு அமரர் வந்து முகந்தன யாவும் போக
ஒழிந்திடும் அவைமற் றுஉன்கூறு உவந்துஅருள் உய்க்க தக்கன்
கழிந்திடு தலையும் கண்ணும் இலங்குவாய் எயிறும் கையும்
வழங்குவாய் என்ன முக்கண் வானவன் வழங்க லுற்றான். 805

தகரின்வன் தலையே தக்கன் பெறும்தலை தடங்கண் அற்ற
பகன்ஒரு பருதிக் கண்ணால் பார்க்கபல் லுக்க வெய்யோன்
நுகரவேள் வியின்கண் மாவே நுங்குஅவி அங்கை அற்றோர்
திகழ்பரிப் பெயர்சேர் தேவர் செங்கையால் கொள்க என்றான்.
806

இறைவன்அவ் வாறு கூற இமையவர் குழாத்தொடு ஆதி
மறையவன் பரவி ஈசன் தன்னொடு மருவி வீந்த
செறிமயிர்த் தகரின் சென்னி சேர்த்திட லோடும் தக்கன்
உறுதுயில் நீத்த வன்போல் உய்ந்தனன் எழுந்தான் மன்னோ.
807

எழுந்துதன் மாதை உள்ளி இருகண்நீர் மார்பின் ஊடு
விழுந்துஉறக் கொன்றை வேணி விமலனை ஏத்தி வாழ்த்தி
தொழும்தகை வேள்வி செய்வான் துளவுஅணிந்து இலகு பைங்கார்க்
கொழுந்தினை மறையால் கூறிக் குறித்தனன் மனத்தின் மாதோ.
808

"உலகங்களை அழிக்கும் காலத்தில் எல்லா வற்றையும் சாம்பல் ஆக்கும் பெருமானே! வெள்ளிய பாற் கடலைக் கடைந்த காலத்தில், அங்கே புறப்பட்ட கொடிய நஞ்சை உண்டு யாவரையும் காத்தாய். பிறகு முப்புரங்களை எரித்து உலகங்களைக் காப்பாற்றினாய். குற்றமற்ற பிரானே! இப்பொழுது நீ எங்களுக்கு அருள் செய்ய வேண்டும்" என்று தாமரையில் வாழும் முதல்வனான பிரமன் புகழ்ந்து வேண்டினான். 804

பிரமன் சிவனிடம் மேலும் கூறியதாவது :- "தேவர்கள் ஏற்றுக் கொண்டது போக மீதியுள்ளவை எல்லாம் நினது அவிர்ப் பாகமே. ஆதலால் அவற்றை நீ பெற்றுக் கொண்டு தக்கனுக்குத் தலை அளித்து உயிர்ப்பிக்க வேண்டும். பகன் என்னும் சூரியனுக்குக் கண்ணையும் 'பூஷாவுக்குப் பல்லையும்' அக்னிக்குக் கையையும் வழங்குக". 805

இதனைக் கேட்ட சிவனும் இசைந்தான். "ஆட்டின் தலையைத் தக்கன் இனிப்பெறுவானாக. பகன் இன்னொரு சூரியன் கண்ணால் பார்ப்பானாக. பல்லை இழந்த பூஷா இனிமேல் வேள்வியில் இடப்படும் மாவையே உண்பானாக. கைகளை இழந்த தேவர்கள் அசுவினி தேவர்கள் கைகளால் அவிருணவைப் பெறுவாராக" என்று சிவன் அருளினான். 806

சிவன் இவ்வாறு கூறியதும் தேவர்கள் கூட்டத்துடன் பிரம தேவன் அவனைப் பணிந்து துதித்தான். யாகத்தில் பலியிடப்பட்டு இறந்த ஆட்டின் தலை, தக்கன் உடலில் பொருந்திற்று. தூக்கத்திலிருந்துஎழுந்தவன் போல் தக்கனும் உயிர் பெற்று எழுந்தான். 807

எழுந்த தக்கன் கொன்றை மாலை சூடிய சிவனை வணங்கித் துதித்தான்; மறைந்த தன் பெண் தாக்ஷாயனியை எண்ணி வருந்தினான். நின்ற வேள்வியை மறுபடியும் தொடர விரும்பிய தக்ஷன் திருத்துழாய் மாலை சூடிய திருமாலைத் தியானித்தான். 808

இழைக்குமவ் வேள்வி வாயின் இரும்பனைத் தடக்கை யானை
அழைக்கவந்து அன்று காத்த அருமறை முதலா நின்ற
குழைத்தபைந் துளவ ஞானக் கொழுஞ்சுடர் வந்து தோன்ற
வழுத்தினர் ஈசன் தக்கன் மலரவன் வணங்கி னார்ஆல். 809

இந்திரன் முதல வானோர் இருந்தவர் யோகர் சித்தர்
மந்திர மறைக ளாதி மருவினர் உறைவோர் யாரும்
சுந்தர மாயன் பாதம் துதித்தனர் வணங்கிச் சூழ
கொந்துஅழல் வேள்வி தக்கன் குறைவுஅற ஆற்றி னான்ஆல்.
810

மேனையை மணந்த தெய்வ வெற்பினுக் குஉதித்து மாழை
மானின்மென் னோக்கம் கொண்டு மடமயில் சாயல் வெளவும்
தேன்அவாம் மழலை யாளைத் திருமணம் புரிந்தான் சென்று
கான்உலாம் கைதை வேலிக் கைலைஅம் பொருப்பன் மன்னோ.
811

காந்தள் மெல் முகிழின் அன்ன கதிர்மணிக் கடகச் செங்கை
ஏந்திழை இன்பம் விண்ணோர் ஆண்டுஇரு நூறு காறும்
மாந்தினன் கலுழி நஞ்சம் மடைதிறந்து ஒழுகும் பேழ்வாய்
பாந்தளு மதியும் சூடும் பவளவார் சடையான் மாதோ. 812

விரிபுனல் கங்கை கொண்கன் வீரியம் ஆற்ற லாற்றாது
உருகெழு தோற்றம் மேய ஒள்ளழல் கடவுள் ஓங்கு
சரவணத் துஉய்த்தான் ஆக சரவணத் துஉதித்தல் செய்தான்
முருகுஅவிழ் கமலச் செவ்வாய் முகிழ்நகை முருகன் மாதோ.
813

ஆவயின் ஆரல் மீனோர் அறுவர் வந்து அன்பு முற்றி
தீவிய முலைப்பால் ஊட்ட திருமுகம் ஆறு கொண்டு
மேவிய மடவார் கொம்மை வெம்முலை ஒருங்கு மாந்தி
மூவிரு முகன் என்று எல்லா உலகமும் மொழிய நின்றான். 814

திரண்டு நீண்ட துதிக்கை உடைய கஜேந்திரன் அழைத்த பொழுது, வந்து தோன்றிய, வேத முதல்வன் திருமால், வேள்வி செய்யத் தொடங்கு முன்னரே அங்குக் காட்சி அளித்தான். தளிருடன் கூடிய திருத்துழாய் மாலை அணிந்த ஞானச் சுடரான அப்பெருமானை, சிவனும் தக்கனும் பிரமனும் தொழுது நின்றனர். 809

இந்திரன் முதலான தேவர்கள், யோகிகள், சித்தர்கள், வேத மந்திரங்களை ஓதும் அந்தணர்கள் எல்லோரும் அழகு விளங்கக் காட்சி தந்த 'மாயவன் ஆன', திருமால் பாதங்களில் விழுந்து வணங்கித் துதித்தனர். தக்கனும் பொங்கி எழும் நெருப்பில் யாகத்தைத் தொடர்ந்து குறைவின்றி நடத்தி முடித்தான். 810

தெய்வ மலையான இமயத்துக்கு உரிய இம்வான் மணந்த 'மனைக்குப் பார்வதி மகளாய்ப் பிறந்தாள். மான் பார்வையும்' மயிலின் சாயலையும் கொண்ட இனிய பேச்சுடைய அப் பார்வதியை மணம் வீசும் தாழைப் பூவேலி நிறைந்த கயிலை அதிபதி சிவன் திருமணம் செய்து கொண்டான். 811

மடை திறந்தாற் போல் நஞ்சை உமிழும் அகன்ற வாயுடைய பாம்பையும், சந்திரனையும் சூடியுள்ளவன் சிவபிரான் ஆவான். பவளத்தை ஒத்த சடை பெற்ற இச் சிவன் பார்வதியுடன் இல்லற இன்பத்தில் ஈடுபட்டான். கார்த்திகைப்பூ அரும்பைப் போன்ற சிவந்த கைகள் பெற்ற பார்வதியுடன் தேவ மானத்தாலே இருநூறு ஆண்டுகள் இன்ப வாழ்வில் திளைத்தான். 812

பரந்த நீர்ப் பரப்புடைய கங்கையையும் தன் மனைவியாகப் பெற்றவன் சிவபெருமான் ஆவான். இப்பெருமானின் வீரியத்தைத் தாங்கலாற்றாத நெருப்புக் கடவுளான அக்னி, அதனைச் சரவணப் பொய்கையில் விட்டான். அங்கு அப்பொழுது அழகு நிறைந்த தாமரை வாயுடன் முருகப் பெருமான் தோன்றினான். 813

அப்பொழுது கார்த்திகைப் பெண்கள் ஆறு பேரும் வந்து குழந்தையான முருகனுக்குப் பால் ஊட்டினார்கள்.உடனே முருகப் பிரானும் ஆறுமுகங்கள் கொண்டு அவ்வாறு பெண்களிடம் முலைப் பால் அருந்தினான். ஆதலால் தான் அன்று முதல் அப்பெருமானை ஆறுமுகன் என்னும் திருநாமத்தால் உலகத்தோர் அழைக்கின்றனர். 814

கோடுயர் அருவிக் குன்றம் கொன்றஅக் குருதி வேலான்
ஆடகப் பசும்பொன் குன்றம் ஆம்என பணைத்து வீங்கும்
பீடுசால் குவவுத் திண்டோள் பெருவிறல் அவுணர்த் தேய்த்து
பாடல்சால் அமரர் சேனா பதி என விளங்கி னானால். 815

வேதியன் முதுகில் வந்து விளங்கிய பாவன் பொய்யாம்
பேதையை மகிழ்ந்து புல்லிப் பெற்றனன் இடம்பம் மாயை
மாதிர நிருதி தன்பால் மகவுஎன அடைந்து இரண்டும்
ஓதுலோ பத்தி னோடு நிந்தையை உயிர்த்தது அன்றே. 816

மாறுஇலா லோபம் வந்து மருவுநிந் தனையைப் புல்ல
கூறிய கோபத் தோடு கொலைத்தொழில் உதித்தது அம்மா
ஈறுஇல்வெம் கோபம் அந்த இருங்கொலைத் தொழிலைச் சேர
வீறுஇல்தீ மொழியி னோடு வெம்கலி பிறந்தது அன்றே. 817

உரைத்தவெம் கலிதான் பொல்லா உரைஎனும் மாதைச் சேர
மிருத்துவும் பயமும் தோன்றி விளங்கின மிருத்து மாதை
கருத்துற நடுக்கு கின்ற கடும்பயம் மகிழ்ந்து புல்ல
வருத்தும்யா தனைக ளோடு வந்தது நிரயம் மாதோ. 818

வெய்யது ஓர் தோற்றம் கூறின் விரியும்ஆல் விதுர இன்னும்
மையல்அம் களிநல் யானை மனுவினுக் குஉதித்த மைந்தன்
செய்யகோல் வேந்தன் என்ன செப்பும்உத் தான பாதன்
பொய்அறு மரபு சொல்வல் எனமுனி புகறல் உற்றான். 819

இலங்குவாள் அரசர் ஏறே! இக்கதை சொல்வோர் கேட்போர்
துலங்குவர் நலம்பெற்று என்ன சுகமுனி உரைத்தான் என்று
மலம்கெடத் தவஞ்செய்து ஓங்கு மறைமுனிக் குழாத்துக்கு ஐந்துஆம்
புலன்களும் ஒறுத்த சூதன் புகர்தப உணர்த்தி னான்ஆல். 820

உயர்ந்த அருவிகள் விழும் கிரௌஞ்ச மலை வடிவில் நின்ற சூரபத்மனை முருகப் பெருமான் அழித்தான். மற்றும் பசும் பொற்குன்றுகள் போன்ற அகன்ற தோள்களுடன் வலிமை பெற்ற பல அசுரர்களையும் கொன்றான். இவ்வாறு தேவர்களைக் காத்த காரணத்தால் முருகன் தேவ சேனாபதி ஆக விளங்கினான். 815

பிரமதேவன் முதுகிலிருந்து உலகில் பாவன் பிறந்தது. இந்தப் பாவன் என்பவன் பொய் என்னும் பெண்ணை மணந்தான். இடம்பம், மாயை என்னும் இரு குழந்தைகள் பிறந்தன. அவ்விருவரும் திசைத் தலைவனான நிருதியிடம் வளர்ந்தனர். பிறகு அவர்க்குப் பிறந்த குழந்தைகளே உலோபமும், நிந்தையும் ஆவார்கள். 816

மாறுபாடு இல்லாத உலோபத்திற்கும் கொடிய நிந்தனைக்கும் கோபமும் கொலையும் பிறந்தன. முடிவற்ற அக்கோபத்திற்கும் கொலைக்கும் தீய சொற்களும், கொடிய கலியும் பிறந்தன. 817

மேற் கூறப்பட்ட கலிக்கும் தீய சொல்லுக்கும் மரணமும் பயமும் உதித்தன. மரணத்துடன் பயம் சேர்ந்து தழுவியதும் யமன் உண்டாக்கும் நரகமும் நரக வேதனையும் உண்டாயின. 818

மேற் கண்டவாறு மைத்திரேயன் கூறினான். "இன்னும் தோற்றம் பற்றிக் கூறினால் மேலே விரியும்" என்றான். இதனைக் கேட்ட விதுரன் "முனிவரே! மதம் ஒழுகும் பெரிய யானை உடைய மனுவேந்தனுக்கு மைந்தனாகப் பிறந்த செங்கோல் அரசன் உத்தான பாதன் வரலாற்றையும் மரபையும் பற்றிக் கூறுவாயாக" என்று கேட்டான். 819

மைத்திரேயன் விதுரனுக்கு உரைத்த வற்றைத் தொகுத்துக் கூறிய சுக முனிவர் பரீட்சித்திடம், "இக் கதை சொல்பவரும் கேட்பவரும் எல்லா நலங்களும் பெறுவர்" என்றார். ஐம்புலன்களையும் வென்ற சூதமா முனிவர், நைமிசாரணிய முனிவர்களிடம் சுகர் பரீட்சித்துக்குக் கூறிய வரலாற்றை எடுத்துரைத்தார். 820

3. துருவன் பதம் பெறுதல்

முத்து ஆர மார்பன் முடிமன்னவர் வந்து இறைஞ்ச
பைத்து ஆடு அரவம் சுமைகூர்கடல் பார்ப ரித்தான்
கொத்து ஆர்அலங்கல் குளிர்வெண் குடைக் கோதை வெள்வேல்
உத்தான பாதன் என ஓதும் உலம்கொள் தோளான். 821

வெடிக்கும் புதுநாள் மலர் வேய்ந்து அகில் விம்மி வேலை
குடிக்கும் கமம்சூல் குலமாமுகில் வென்ற கூந்தல்
தொடிக்கைச் சுநீதி சுடர்பொன்குழை மேல் அடர்க்கும்
வடிக்கண் சுருதி எனும் மங்கையர் தோள்ம ணந்தான். 822

வரைஉற்ற சாயல் மயில்அன்ன சுநீதி என்னும்
தெரிவைக் குஉதித்தான் துருவன்செரு வென்ற செவ்வேல்
அரசற்கு அமுதாய் அலர்தாமரை அன்னம் ஒத்த
சுருதிக்கு மன்றல் தொடைஉத்தமன் தோன்றி னான்ஆல். 823

மத்தமாக் களிற்று மன்னன் மாமணித் தவிசின் மீது
கத்திகைக் கருமென் கூந்தல் கன்னியர் கவரி வீச
தித்தியா நின்ற தெய்வத் தெள்ளமுது அனைய தீம்சொல்
உத்தமன் குறங்கின் வைக உவந்துவீற் றிருந்தான் அன்றே. 824

வண்டுஉளர் தெரியல் வேந்தன் மாமணிக் குறங்கின் ஏறி
ஒண்தொடி உடுத்த செங்கை உத்தமன் உறைந்த செவ்வி
கண்டனன் துருவன் தானும் ஏறுவான் கருதி நண்ண
தொண்டையம் கனிவாய் வேல்கண் சுருதிஆங்கு இயம்பு வாள்ஆல்.
825

கோல்தொடிப் புதல்வ நீ எம் கோஇளங் குமரன் அன்று
மாற்றவள் வயிற்றின் வந்தாய் வரத்தின் என் வயிற்றின் வந்து
தோற்றுதல் புரிநோன் புஇல்லாய் சொரிமதக் களிறு சாய்க்கும்
ஏற்றுஇளம் சிங்கம் அன்னான் குறங்கின் என் ஏறு மாறே. 826

3. துருவன் பதம் பெறுதல்

உத்தானபாதன் என்னும் பேரரசன் கல்லை ஒத்த தோள்கள் உடையவன்; மலர் மாலையும் முத்தாரங்களும் மார்பில் அணிந்தவன். முடி சூடிய மன்னர்கள் அடி பணிய, கடல் சூழ்ந்ததும் ஆதி சேடனால் தாங்கப் படுவதும் ஆகிய நிலவுலகை அவன் ஆண்டு வந்தான். 821

இவ்வரசன் சுநீதி, சுருதி என்னும் இரு மங்கையர்களை மணந்தான். சுநீதி, மலர்ந்த பூக்களைச் சூடிய கூந்தல் பெற்றவள். அகில் புகை ஊட்டப்பட்ட அவள் கூந்தல் நீருண்ட மேகம் போன்றது. பொன் தோடுகள் அணிந்த காதுகள் வரை நீண்ட கண்களைப் பெற்றவள் சுருதி ஆவாள். 822

மலையில் நடைபழகும் மயிலின் சாயல் உடைய சுநீதிக்குப் பிறந்த மகன் துருவன் ஆவான். தாமரையில் அமரும் அன்னத்தை ஒத்த சுருதிக்குப் பிறந்த மகன் உத்தமன் ஆவான். பகைவரை வென்ற வேலாயுதம் கொண்ட உத்தானபாதனுக்குச் சுருதி அமுதம் போல் வேண்டியவள் ஆவாள். 823

மதயானை போன்ற வலிமை உடைய அவ்வரசன், மணி பதித்த தன் அரியாசனத்தில் அமர்ந்திருந்தான். மாலை சூடிய கூந்தலுடைய தாதிப் பெண்கள் அகவரி வீசினர். அமுதம் போல் இனிய மழலை பேசும் மகனான உத்தமன் அவ்வரசன் மடி மீது ஏறி அமர்ந்தான். 824

வண்டு தவழும் மாலை சூடிய மன்னன் மடியில், கைகளில் வளையல் அணிந்த உத்தமன் அமர்ந்திருந்ததைத் துருவன் பார்த்தான். தானும் தந்தை மடியில் அமர எண்ணிய அவன், அவரை அணுகினான். அப்பொழுது அங்கிருந்த கோவைப் பழ உதடுகள் உடைய சுருதி கீழ்க்கண்டவாறு பேசினாள். 825

"வளைகள் அணிந்த துருவனே! நீ என் சக்களத்தியின் வயிற்றில் அல்லவா பிறந்தவன்! என் வயிற்றில் தோன்றுவதற்கான தவம் இல்லாதவனே! மதயானையை வீழ்த்தும் சிங்கம் போன்ற மன்னன் மடியில், உன்னால் எவ்விதம் ஏறி உட்கார முடியும்? போ! 826

காதல உலகம் எல்லாம் கவிக்கும்வெண் கவிகைச் செங்கோல்
கோதைவேல் தடக்கை வேந்தன் குறங்கில் நீ ஏற வேண்டின்
தாதுஅலர் கமலச் செல்வி தலைவனை நோக்கி நின்று
மாதவம் புரிந்து வந்துஎன் வயிற்றிடைப் பிறத்தி என்றாள். 827

இழைபுரை மருங்குல் தேய்க்கும் இளமுலை மடந்தை மாற்றம்
அழல்விடம் உகுத்தால் என்ன அஞ்செவி நுழைத லோடும்
விழிமலர் சிவப்ப நெஞ்சின் வெகுளிவந்து அரும்ப மைந்தன்
மழைமதக் களிற்று மன்னன் வாள்முகம் நோக்கல் உற்றான்.
828

செம்சிலைத் தடக்கை வேந்தன் திருமுகத்து அருளும் காணான்
அகம்செவி வெதும்ப நங்கை அறைந்தசொற்கு ஆற்றான் ஆகி
கஞ்சநாண் மலரை வெல்செங் கண்இணை மாரி கால
மஞ்சன்ஆங்கு அன்னை பால்போய் மணிஇதழ் துடிப்ப நின்றான்.
829

தன்இளம் குழவி செங்கண் தாமரை தழைத்த முத்தம்
பொன்அணிந்து இலங்கு மார்பில் பொழிதர நிற்றல் நோக்கி
என்உயிர் என்கண் ஏந்தால்! என்னைநீ அழுங்கல் என்னா
மின்னுயிர்த்து ஒளிரும் பைம்பூண் மெல்லியல் வினவி னாள்ஆல்.
830

பட்டமை கண்டோர் கூற பசும்சிறைக் கிள்ளை அன்னாள்
விட்டு எரி கின்ற காட்டு வெம்கனல் படர்ந்து முற்றி
சுட்டவெப் புஉண்ட பொன்அம் துணர்க்கொடி போல வாடி
நெட்டுயிர்ப்பு எறிந்து செங்கண் நித்திலம் சிந்தி நின்றாள்.
831

குதலைதெள் அமுதின் தேனின் கொண்டமெல் பவளச் செவ்வாய்
மதலைநல் வினையி லேன்புல் வயிற்றகம் பொருந்தி வந்தாய்
விதலைஉற் றுஇரங்கல் வேண்டா விளைந்ததன் அளியில்
காக்கும் முதலைவாய் உம்பல் காத்த முழுமுதற் கடவுள் மாதோ.
832

சுநீதி புதல்வனே! கொற்றக் குடைக் கீழ் செங்கோலுடன் வேல் ஏந்தி வீற்றிருக்கும் மன்னன் மடியில் நீ அமர வேண்டுமானால், பூமகள் கணவன் திருமாலை நோக்கித் தவம் செய்து, அப்பயனால் என் வயிற்றில் பிறக்கும் பேறு பெற்று வா". 827

நூலிழை ஒத்த இடையுடைய சுருதியின் பேச்சு, எரியும் விஷம் போன்று துருவன் காதில் பட்டது. பூப் போன்ற கண்கள் சிவக்கவும் நெஞ்சில் கோபத்துடன் அவன் மதயானை ஒத்த அரசன் கண்களை நோக்கினான். 828

கையில் வில் ஏந்திய அரசன் முகத்தில், துருவன் அருளைக் காணவில்லை. சுருதி கூறிய கடுஞ்சொல்லைப் பொறுக்க முடியாதவனாய், தன் அன்னை சுநீதியிடம் சென்றான். தாமரைப் பூவைப் போன்ற கண்களிலிருந்து மழை பொழிந்தாற் போல் கண்ணீர் விட்டபடி நின்றான். 829

தன் புதல்வன் துருவனின் செந்தாமரைக் கண்களிலிருந்து முத்துப் போல் நீர்த் தாரை, மார்பில் விழுவதைத் தாய் சுநீதி பார்த்தாள். "என்னுயிர் போன்ற புதல்வனே! ஏன் நீ அழுகிறாய்?" என்று மின்னல் போன்ற பொன்னாபரணம் அணிந்த கேட்டாள் சுநீதி. 830

நடந்ததைப் பார்த்தவர்கள் சுநீதியிடம் விவரம் கூறினார்கள். பச்சைக் கிளி போன்ற சுநீதி, எரிகின்ற காட்டுத் தீயில் அகப்பட்டுப் பொசுக்கப்பட்ட பூங்கொடி போல வாடினாள். நீண்ட பெருமூச்சு விட்டுக் கண்ணீர் முத்துக்களை நிலத்தில் சிந்தினாள். 831

"தேனையும் அமுதையும் போன்ற மழலை பேசும் பவள வாயுடைய குழந்தையே! நல்வினை இல்லாத என் வயிற்றில் நீ வந்து பிறந்தாய். அதற்காக நடுக்கம் உற்று வருந்த வேண்டாம். முதலை வாயிலிருந்து யானையைக் காத்த திருமால் தன் அருளால் நம்மைக் காப்பான்" என்று சுநீதி துருவனிடம் கூறினாள். 832

ஐதுஎழில்அமுதின் சாயல் ஆயிழை உரைத்த வாறே
மைதப மனத்தின் ஓர்ந்து வழுத்தினர் விழைந்த நல்கும்
நெய்தவழ் நேமி யானை நினைத்தனை தவம்நின்று ஆற்றி
எய்தஅரும் பதமே மைந்த எய்துதி கலங்கல் என்றாள். 833

பனிமலர் அண்ணல் ஓங்கு பதத்தினை அடைந்த வாறும்
மனுமிகச் சிறந்த வாறும் மாயனைக் கருதி அன்றே
தனையநீ கங்கை பூத்த தாமரைத் தாளி னானை
நினையின் என் எய்தாது என்னா நெஞ்சகம் தெருட்டி னாள்ஆல்.
834

கிளிக்குலம் கடந்து தேனில் கிளைத்ததீங் குதலை அன்னை
தெளிக்கஅம் மைந்தன் நெஞ்சு தெள்ளிதின் றெளிந்தான் ஆகி
நளிச்சினைக் குரவம் கோங்கு நாகமும் அகரும் ஓங்கி
கனிச்சுரும்பு இமிர்பூங் கானம் கலந்தனன் தவம்செய் கிற்பான்.
835

டம்பொழி வென்றி வேல்கண் விளங்கிழை மடந்தை மாற்றம்
கிடந்துஉளம் கனற்ற அம்பொன் கிண்கிணி கவைஇய தாளான்
நடந்தனன் சென்ற காலை நாரதன் வந்து நண்ணி
தடங்கையம் கமலம் மைந்தன் தலைமிசைச் சார்த்திச் சாற்றும்.
836

பருவம் ஐந்து இறந்தது இல்லை பாலன் நீ தவம் எவ் வாறு
புரிதிமா தவத்தோர் இன்னம் புலப்படக் காண மாட்டா
கரியவன் தன்னை யாங்குக் காணுதி? கதழும் சீற்றத்
திருகுமா வழங்கு கானம் செல்வது செவ்வித்து அன்றால். 837

அழகிய அமுதின் சாயலை உடைய சுநீதி மேலும் கூறுவாள். "புதல்வனே! நீ கலங்காதே! நெய் பூசப்பட்ட சக்கரம் ஏந்திய திருமாலை நினைத்து நீ, தவம் செய். குற்றமற்ற நெஞ்சுடன் அவனைத் துதிப்பவர்களுக்கு, விரும்பியவற்றை அவன் தருவான். நீயும் அடைதற்கரிய பதவியினைத் தவத்தால் அடைவாய். 833

மாயனான திருமாலைத் துதித்துத் தவம் செய்ததால், தாமரையில் உதித்த பிரம தேவன் பதவி பெற்றான். சுவாயம்பு மனுவும், அவ்வாறே சிறப்புப் பெற்றான். புதல்வனே! நீயும் கங்கை பிறந்த திருமாலின் தாமரைப் பாதங்களைத் தியானித்துத் தவம் செய்தால், என்ன தான் பெற முடியாது?" என்று சுநீதி துருவனிடம் அறிவுரை கூறினாள். 834

கிளிகளை விடவும் தேனினும் இனிய பேச்சுடைய அன்னையின் அறிவுரையால் புதல்வன் துருவன் தெளிவு பெற்றான். ஆதலால் அவன், குரா, நாகம், அகில் மரங்கள் வளர்ந்த வண்டுகள் ஒலிக்கும் காட்டை அடைந்து தவம் செய்ய விழைந்தான். 835

கிண்கிணித் தண்டை அணிந்த பாதங்கள் உடைய துருவன் உள்ளத்தை, வேல் கண் பெற்ற சுருதியின் கொடிய பேச்சு சுட்டது. அந்த வருத்தத்துடன் அவன் காடு நோக்கி நடந்தான். அப்பொழுது அவ்வழி வந்த நாரத முனிவன், தாமரைக் கரங்கள் உடைய சிறுவன் துருவனின் தலையில் கை வைத்து ஆசி வழங்கிக் கூறியதாவது. 836

"பாலனே! உன் குழந்தைப் பருவம் தவம் புரிய ஏற்றதல்ல. பொங்கும் கோபத்துடன் புலிகள் முதலிய மிருகங்கள் ஓடும் காட்டில் நீ எவ்வாறு தவம் செய்வாய்? தவத்தில் சிறந்த முனிவர்களாலும் காண முடியாத கரிய திருமாலை நீ எங்ஙனம் காண முடியும் ?" 837

தாழ்பவர் தம்மைக் காணின் தலைநிவந்து இருத்தல் வேண்டும்
ஊழ்வினை விளைவின் செல்வம் உயர்குநர் தம்மைக் காணின்
வாழ்கலம் யாமும் என்னா வலித்தல்ஓர் மாட்சித்து அன்றுஆல்
ஏழுயர் களிநல் யானை இன்னிளம் கன்று போல்வாய். 838

எனப் பல முனைவன் கூற இளநிலாக் கற்றை தூற்றும்
பனிப்பிறைக் கொழுந்து போலும் பச்சிளம் குழவி கேட்டு
வினைக்குறும்பு எறிந்தோய் நின்சொல் விழுமிதே எனினும் இன்று என்
மனக்குஇனி தாயிற்றுஇல்லை மற்றுஎவன் செய்யு மாறே. 839

சேயுயர் பதத்தின் ஏற வேட்டனன் அதற்குஎன் செய்கோ
தூயமா தவத்தோய் என்று தொழுதலும் மகிழ்ந்து புல்லி
தாய்எடுத் துஉரைத்த வாறே தவத்தினை நிரப்புக என்னா
வாய்மலர் மலர்ந்து நல்யாழ் வடித்தவன் வழங்கல் உற்றான்.

840

மாறுஇலா மதுரை ஓர்சார் மதுவனம் ஒன்றுஉண்டு ஆங்கு
தேறுநீர் யமுனை யாடி தெண்திரைக் கங்கை வெள்ளம்
ஊறுதாள் பரமன் தன்னை உணர்ந்தனை தவம்செய்க என்னா
ஆறுஇரண்டு எழுத்து மைந்தன் அஞ்செவி நிரப்பி னான்ஆல்.

841

சிந்துரத் திலகம் தைஇய திருநுதல் மலராள் கொண்கன்
மந்திரம் கேட்ட மைந்தன் மனமிகத் தெருண்டான் ஆகி
அம்தளிர் அனைய அம்சீர் அடிஇணை சிவப்ப ஏகி
பைந்தளிர் குழைத்த வெம்கான் பைப்பயப் படர்ந்து சார்ந்தான்.

842

"பெற்றதை எண்ணித் மிக உயர்ந்த யானைக் குட்டி போன்ற துருவனே! செல்வத்தால் தாழ்ந்தவர்களைக் காணும் பொழுது நாம் நம் பாக்கியம் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். ஊழ்வினைப் பயனால் செல்வத்தால் உயர்ந்தவரைக் கண்டால், நாம் இனி வாழ மாட்டோம் என்று குறைப்பட்டுக் கொள்தல், பெருமை அற்றது." 838

மேற்கண்டவாறு நாரதர் அறிவுரை கூறினார். இளம் பிறைச் சந்திரன் வெளிவிடும் பனிப் பிறைக் கொழுந்து போன்ற துருவனாகிய குழந்தை இதனைக் கேட்டான். "வினைப் பயன்களை வென்ற சான்றோர் ஆகிய உமது அறிவுரை சிறந்ததே என்றாலும், என் மனத்துக்கு இனியதாக இல்லை. நான் என்ன செய்வேன்?" என்றான். 839

துருவன் நாரதரிடம், "தூயதவம் மிகுந்தவரே! மிக உயர்ந்த பதவியைப் பெற நான் விரும்புகிறேன்" என்று கூறித் தொழுதான். மகிழ்ச்சி உற்ற நாரதர் அவனை எடுத்துத் தழுவி "உன் தாய் கூறியபடியே தவம் செய்து நிறைவேற்று " என்றார். யாழ் மீட்டுவதில் சிறந்த நாரதர் மேலும் கூறலானார். 840

"குறைவில்லாத வட மதுரைப் பக்கத்தில் மதுவனம் ஒன்று உள்ளது. நீ அங்குச் சென்று யமுனையில் நீராடித் தவம் செய்வாயாக. தெளிந்த கங்கை வெள்ளம் புறப்பட்ட இடமாகிய திருமால் பாதங்களைத் தியானித்துத் தவம் செய்" என்று கூறிய நாரதர், துருவன் செவிகளில் பன்னிரண்டு எழுத்து மந்திரமாகிய 'ஓம் நமோ பகவதே வாஸு பாய தேவாய' என்பதனை ஓதினார். 841

நெற்றியில் சிந்தூரப் பொட்டும் அழகிய திருமுகமும் உடைய திருமகளின் நாயகன் ஆகிய திருமால் நாமத்தைக் கேட்ட துருவன் தெளிவு பெற்றான். தளிர் போன்ற, தன் சிவந்த திருவடிகள் சிவப்ப, அவன் பசுந்தளிர்கள் செழித்த காடு நோக்கிப் பைய பைய நடந்தான். 842

தீத்திரள் வளைஇய கானம் சேட்டுஇளம் குழவி செல்ல
பார்த்தனன் இருந்தேன் என்ன பாவம் என்று உருகி ஞாலம்
காத்தல்செய் கவிகை மன்னன் கவன்றனன் இருந்தான் தன்பால்
ஆர்த்தஇன் நரம்பின் நல்யாழ் அருந்தவன் அணுகி னான்ஆல். 843

கவலல்நின் புதல்வன் கண்டேன் காவல கண்ணன் காக்கும்
தவம்இனிது இழைத்து மைந்தன் தலைப்படும் வரம்பெற்று என்னா
செவிகவர் மகதி நல்யாழ் செல்வன்ஆங்கு அகன்றான் செல்வத்து
உவகைஉற் றிலன்ஆல் சேயை உணர்ந்துவேந் துஉள்ளம் மாழ்கும். 844

ஏர்விளை யாடு தோளின் எழுதுதீங் கரும்பும் அம்பொன்
வார்விளை யாடு கொம்மை வருமுலைச் சாந்தும் போக்கி
நீர்விளை யாடும் மாதர் நிலாச்சொரி தூசு கொண்ட
கார்விளை யாடு காவில் கலந்தனன் துருவன் சென்றே. 845

விண்உலாம் பருதி ஈன்ற விரிதிரை நதிநீ ராடி
மண்எலாம் அளந்த பொற்றா மரைமலர் அன்ன பொன்தாள்
கண்ணனை கண்ணுள் வைத்து களியளி சிலம்ப விள்ளும்
தண்நனை கமழ்பூங் காவில் தவம்செய தொடங்கி னான்ஆல். 846

ஒருமதி மூன்று வைகல் ஒழிந்துதீங் கனிநு கர்ந்தான்
ஒருமதி யாறு வைகல் ஒழிந்துவீழ் சருகு தின்றான்
ஒருமதி வைகல் ஒன்பான் ஒழிந்துதண் துறைநீர் உண்டான்
ஒருமதி வைகல் ஈராறு ஒழிந்துகால் பருகி னான்ஆல். 847

உலகை ஆளும் மன்னன் ஆன உத்தானபாதன், "ஐயோ! என் குமாரன் ஆகிய சின்னஞ் சிறுவன் நெருப்புச் சூழும் கொடிய காட்டில் தவம் செய்யச் செல்வதைப் பார்த்தபடி இருக்கிறேனே!" என்று கவலை அடைந்தான். நரம்பு யாழில் இனிய இசை மீட்டும் நாரதர் அவ்வரசனிடம் சென்றான். 843

மகதி என்னும் யாழைத் தாங்கிய நாரதன் உத்தான பாதனிடம் "அரசே! நீ கவலைப்படாதே! உன் புதல்வன் தவம் செய்து முடிப்பான். கண்ணப் பெருமான் அவனைக் காப்பாற்றுவான். உன் மகன் வரம் பெற்று வருவான்" என்றார். இதனைக் கேட்டும் அரசன் மகிழ்ச்சி பெறாமல், மகனை எண்ணி வருந்தினான். 844

இடைப்பெண்கள், அழகிய தோள்களில் மன்மதனின் கரும்பு வில்லைப் படமாக எழுதிக் கொள்வர். அந்த வண்ணக் குழம்பும், அவர்கள் மார்புச் சந்தனமும் கலந்து சொரியும் நிலவொளி போன்ற தூசியைக் கண்ணன் ஏற்று மகிழ்வான். இத்தகைய மேக நிறக் கண்ணனும் இடைப் பெண்களும் நீராடி மகிழும் யமுனைத் துறைச் சோலையைத் துருவன் அடைந்தான். 845

அங்குச் சென்ற துருவன், விவசுவான் என்னும் சூரியனின் பெண்ணாகிய யமுனை நதியில் நீராடினான். உலகளந்த திருமாலின் திருவடித் தாமரைகளைக் கண்களில் பொதிந்து கொண்டு குளிர்ந்த அரும்புகள் பூத்து மணக்கும் கோவையில் தியானித்துத் தவம் செய்ய லானான். 846

துருவன், முதல் மாதத்தில் மூன்று நாள்களுக்கு ஒரு முறை பழங்களை மட்டும் உண்டான். இரண்டாவது மாதத்தில் ஆறு நாள்களுக்கு ஒரு முறை சருகுகளையே உணவாகக் கொண்டான். மூன்றாவது மாதத்தில் ஒன்பது நாள்களுக்கு ஒரு முறை குளிர்ந்த நீரை மட்டும் பருகினான். நான்காவது மாதத்திலோ பன்னிரண்டு நாள்களுக்கு ஒரு முறை காற்றை மட்டுமே உட்கொண்டு தவம் செய்தான். 847

திங்கள்நான்கு இவ்வாறு ஏக திங்களில் திகழா நின்ற
அம்கலுழ் முகத்தான் ஒன்றும் அருந்தலன் ஐந்தாம் திங்கள்
பொங்கும் மூச்சு அடக்கி மென்பூப் பொருவுதாள் விரல்ஒன்று
ஊன்றி கங்கைசூழ் கழற்பெம் மானைகருதினன் தவம்பு ரிந்தான்.

848

திருவயிற் றுஉலகு எலாம் ஆழ் செல்வன்நெஞ் சுஉறலால் மைந்தன்
ஒருவிரல் ஊன்றி நின்றான் ஆயினும் உரவுத் தெள்நீர்
இருநிலம் பொறுக்கல் ஆற்றாது எறிகதிர் முத்தம் சிந்து
பொருதிரைப் புனலில் பட்ட புணைஎன அலைந்தன்று அம்மா.

849

ஊழிவெம் பருதி உட்க ஒளிசெய்செங் கதிர்கால் ஒற்றை
ஆழிஅம் தடக்கை அம்மான் அகம்மிசை அமர்ந்த ஆற்றால்
தாழ்இரும் தடக்கை நம்பி தவக்கனல் தவாது பொங்கி
ஏழ்இரும் பரவை வேலி இருநிலம் கனன்ற தாம்ஆல். 850

ஆவயின் துருவன் தன்மூச்சு அடக்கிய திறத்தி னால்எத்
தேவரும் உயிர்க்கல் ஆற்றார் தெருமந்தார் தெருண்டு மொய்த்து
காவல காத்தி என்று கண்ணனை அடைந்து கூற
பூவுறை விரிஞ்சன் தன்னை பூத்தவன் புகலல் உற்றான். 851

விட்டிலன் துருவன் மூச்சு விழுத்தவம் புரித லானே
முட்டிய துஉமக்கும் ஆங்கே மூச்சுநாம் காத்தும் என்னா
மட்டுஅறு வேத மேனி வரிச்சிறைப் புள்ளின் மேல்திக்கு
எட்டும்நல் லுருவக் காந்தி எறிதர ஏகி னான்ஆல். 852

நெடியவன் முன்னம் வந்து நிற்பது நிகழ்த்தல் ஆகா
ஒடிவஅறு தவத்தின் மைந்தன் காண்கலன் ஆக உள்ளம்
சுடர்தன துஉருவு தண்அம் துளவினான் கரத்த லோடும்
கடிகமழ் கமலம் அன்ன கண்மலர் விழித்தான் மன்னோ. 853

மேற் கண்டவாறு நான்கு மாதங்கள் துருவன் தவம் செய்தான். ஐந்தாவது மாதத்தில், அவன், தன் மூச்சை அடக்கித் தன் பாதத்தின் ஒரு விரல் மட்டுமே ஊன்றிப் பெருந்தவம் செய்தான். சந்திரனை ஒத்த முகம் உடைய துருவன், கங்கையைப் பாதத்தில் கொண்ட திருமாலைத் தியானித்தான். 848

ஒரு விரலை ஊன்றி நின்று தவம் செய்த துருவன் நெஞ்சில், உலகங்களை வயிற்றில் அடக்கிய திருமால் குடி கொண்டான். அதனால் பூமித் தாய் கலங்கினாள். முத்துக் கொழிக்கும் கடலின் நடுவில் அகப்பட்ட தெப்பம் போலப், பூமி அலைந்தது. 849

ஊழிக்கனல் வீசும் சூரியனும் வெட்கும் படியான ஒளி உடைய சக்கரத்தை ஏந்திய திருமால் துருவனின் நெஞ்சில் அமர்ந்தான். நம்பியான துருவன் செய்த தவத்தின் வெம்மையைப் பொறுக்க முடியாது. கடல் சூழ்ந்த உலகம் முழுவதும் வெதும்பியது. 850

அவ்விடத்தில், துருவன் மூச்சடக்கியதால் தேவர்கள் யாவரும் மூச்சுத் திணறினார்கள். சுழன்று மயங்கிய அவர்கள் திருமாலிடம் சென்று, "இறைவனே! எங்களைக் காப்பாற்று!" என வேண்டினார்கள். தாமரையில் தங்கும் பிரமனைப் பெற்ற திருமால் பின்வருமாறு கூறினார். 851

"தேவர்களே! துருவன் மூச்சடக்கித் தவம் செய்ததால், உம் மூச்சுக் காற்றும் முட்டியது. நாம் உம்மைக் காப்பாற்றுகிறோம்" என்று திருமால் அருளினார். வேதத்தையே உடலாகப் பெற்ற கருடன் மீது ஏறிய திருமால், துருவனுக்கு அருள் செய்ய விரைந்தார். 852

நெடியவன் ஆன திருமால் துருவன் முன் வந்து நின்றார். தவத்தில் ஆழ்ந்திருந்த துருவன் தன் கண்களால் காணாதிருந்தான். ஆதலால் திருமால் அவன் நெஞ்சில் நின்ற தன் உருவத்தை மறைத்தார். துருவன், உடனே தன் தாமரைக் கண்களைத் திறந்தான். 853

மண்டலம் நிறைந்த திங்கள் வதனமும் கமலக் கண்ணும்
குண்டலம் சுடரும் காதும் குறுநகைப் பவள வாயும்
தண்துழாய் அலங்கல் மார்பும் தடக்கை ஓர் நான்கு மாக
கண்டனன் மறையும் காணா கரியவன் உருவம் அம்மா. 854

பருகுவான் போல நோக்கும் பங்கயக் கண்எம் மானை
இருகையால் புல்லு வான்போல் எய்திடும் இறைஞ்சா நிற்கும்
உருகுநெஞ் சுஉவக்கும் கண்ணீர் உகுக்கும் உள்அழுங்கும் துள்ளும்
முருகு அனா உவகை வேலை மூழ்கினன் துளைவான் மன்னோ.

855

அவிர்மணிச் சுடிகை நெற்றி அண்ணல்வாள் அரவம் ஏந்தும்
குவலயம் போற்றும் வேந்துக் குழவிதன் மணிக்க போலம்
பவளவாய்ப் பச்சை மேகம் பங்கயச் செங்கை தாங்கும்
தவளவெண் சங்கி னாலே தகைபெற தடவந் தானே. 856

பொழிகதிர் மதியை வென்ற புரிவளை கொண்டு பொங்கி
தழையுநல் எழிற்க போலம் தைவரு திறத்தி னாலே
மழலைவாய்ச் சிறுவன் வாக்கு மலிந்துஎழ மகிழ்ச்சி கூர்ந்து
பழமறை பழிச்ச மாட்டாப் பரமனைப் பரவல் உற்றான். 857

தாமரைப் பொகுட்டு வாழும் தழைசிறை அன்னம்
அன்னதாமரைத் தலைவி கொண்க! தரைமகள் கொழுந! உந்தித்
தாமரை பெற்று எடுத்த தனிமுதல் நினது செங்கண்
தாமரை அருள்பெற்று அன்றோ தந்தனன் உலகம் தானே.

858

வட்ட வடிவமைந்த முழுச் சந்திரனைப் போன்ற முகமும், தாமரைக் கண்களும், குண்டலங்கள் ஒளி வீசும் செவிகளும், புன்முறுவல் தவழும் பவள வாயும், திருத்துழாய் மாலை விளங்கும் மார்பும் அகன்ற திருக்கரங்களும், நான்கு தோள்களும் உடைய திருமாலைத் துருவன் தன் கண்முன்னே கண்டான். வேதங்களாலும் காண இயலாத அரிய திருமேனிப் பெருமானை அச்சிறுவன் தரிசித்தான். 854

முருகனைப் போன்ற இளமை உடைய துருவன், திருமாலைப் பார்த்ததும் மகிழ்ச்சியில் திளைத்தான். தாமரைக் கண்ணனான திருமாலைப் பருகுவது போலத் தரிசித்தான். இரு கைகளால் பெருமானைத் தழுவ விழைந்தான். கீழே விழுந்து வணங்கியவாறு நெஞ்சம் உருகிக் கண்ணீர் விட்டுத் துள்ளினான். 855

பவள வாயும் மேக நிற மேனியும் கொண்ட திருமால் தன் தாமரைக் கையில் தாங்கிய பாஞ்ச சன்னியச் சங்கினால் துருவனின் மணி போன்ற கன்னத்தைத் தடவினான். மணிகள் விளங்கும் நெற்றி உடைய ஆதி சேடனால் தாங்கப்படும் பூமியை ஆட்சி செய்யும் அரசன் மகனல்லவோ துருவன்.! 856

சந்திரன் ஒளியையும் வெல்லும் வெண்மையான சங்கினால் துருவனின் அழகான கன்னம் தடவப் பெற்றது. அப்பேரருளால், மழலை பேசும் சிறுவனான துருவன், நாவன்மை பெற்றான். அம்மகிழ்ச்சியில், வேதத்தாலும் புகழ்ந்து முடியப் பெறாத பரம் பொருளை அவன் போற்றித் துதித்தான். 857

துருவன் செய்த துதி:

"தாமரைத் தண்டில் தாங்கும் அன்னம் போன்ற தாமரைச் செல்வியின் நாயகனே! பூமாதேவியின் கணவனே! உனது கொப்பூழ்த் தாமரையில் பிரமதேவனைப் படைத்தாய். உன் சிவந்த தாமரைக் கண்கள் பெற்ற அருளால் அன்றோ, அப்பிரமன் உலகங்களைப் படைத்தான்".! 858

தண்துழாய் மாலை மார்ப! தாமரைக் காடு பூத்த
கொண்டலே! விளங்கு நீலக் குன்றமே! உனது பாத
புண்டரி கங்கள் அல்லால் போதுதூய் இறைஞ்சப் பெற்றார்க்கு
உண்டுகொல் உயர்வீட் டின்பம் உறாது? இது மெய்ம்மைத் தாமால்.
859

பொற்றபூந் தருவைக் கண்டும் பொற்பிலது ஒன்று வேட்டு
பெற்றதே போலும் அன்றே பெறல்அரு முத்தி நல்கும்
ஒற்றைஅம் திகிரிச் செங்கை ஒருமுதல் நின்னைக் காணுஉ
மற்றொரு பொருளை வேட்டு பெறுவது மதிக்கின் அம்மா.
860

வானே வளியே வயங்கு எரியே வனமே மண்ணே இவ்ஐந்தின்
ஊனே உயிரே உயிர்க்கு உயிரே உன்னும் உறுவர் உளத்து ஊறும்
தேனே நங்கள் பெருவாழ்வே சிவனே அயனே இருவருக்கும்
கோனே நின்னைக் குணம்இல்லேன் குறித்துஎன் சொல்லிப் பழிச்சுகோ.
861

மூவா முதலே! முத்தொழிலும் மூவ ராகி இனிது இயற்றும்
தேவா! தேவர் சிகாமணியே! சிந்தா மணியே! தெள்ளமுதே!
நாவால்நின்சீர் எங்ஙனம்யான் நவில்கோ என்ன நகைமுகிழ்த்து
பூவால் பொழில்பூத்து அருள் உந்திப்
பூவை வண்ணன் புகலுகிற்பான். 862

மின்னும் சுடர்கான்று அழல்குடுமி வெள்வேல் அரச குமர உணர்ந்து
இன்னும் பொலந்தார் முடியமரர் எய்தற்கு ஏக்கற்று இருப்பது உயர்
பொன்னங் கிரியின் உச்சிமிசை பொலிவது உலகின் மேலதுஎன்றும்
மன்னப் படுவது ஒரு பதம்யாம் தருதும் வாழி மற்று உனக்கே.
863

திருத்துழாய் மாலை அணிந்த மார்புடையவனே! பூத்த தாமரைக் காடு போன்றவனே! மேகநிறத் திருமாலே! நீல மலை ஒத்தவனே! உன் தாமரைத் திருவடிகளில் பூக்கள் இட்டுத் தொழுபவர்க்கன்றோ வீடாகிய பேரின்பம் கிடைக்கும் ? அல்லாதவர்க்கு அது இல்லை என்பது முற்றிலும் உண்மை ஆகும். 859

சக்கரப் படை ஏந்திய திருக்கை உடைய திருமாலே! தனி முதல் தன்மை உடைய இறைவனே! பெறுவதற்கரிய முக்தியை அருளும் பெருமானே! அம்முக்தியை விட்டு, வேறு பயன் அற்ற பொருளை வேண்டுவேனோ! பொலிவு பெற்ற கற்பக மரத்தைத் தரிசித்த பொழுது, அதை மறந்து, பயனற்றவற்றை விரும்பிக் கேட்கலாமோ? 860

வானம், காற்று, தீ, நீர், பூமி ஆகிய ஐந்திலும் உள்ளவனே! இவற்றால் உண்டான உடலிலும், அவ்வுடலின் உள்ளே உயிரிலும், கலந்து கடந்து நிற்பவனே! உன்னைத் தியானிக்கும் முனிவர் உள்ளங்களில் தேனாய் ஊறி நிற்பவனே! எங்கள் வாழ்வான பெருமானே! சிவனாகவும் பிரமனாகவும் இயங்கி, அவர்கள் இருவருக்கும் தலைவனாய் இயக்குபவனே! குணங்கள் இல்லா நான் உன்னை எப்படிப் புகழ்வேன்.? 861

மூப்பில்லாத முதல்வனே! படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களையும் மூன்று வடிவங்களில் இனிதே நடத்தும் தேவாதி தேவனே! சிந்தாமணியே! அமுதே! உன் பெருமைகளை அடியேன் நாவால் எவ்வாறு புகழ்ந்து முடிப்பேன்?" இவ்வாறு துருவன் திருமாலைத் துதித்தான். தன் கொப்பூழில் பூவை உண்டாக்கி அதன் மூலம் பிரமனைப் படைத்து உலகங்களைப் படைப்பித்த காயாம் பூ நிறமுடைய திருமால் பேசலுற்றார். 862

"நெருப்பு ஒளி வீசும் வேல் ஏந்தும் அரசனின் மகனே! பெறுவதற்கரிய பேரிடம் ஒன்றை உனக்கு நாம் தருவோம். நீ நெடுங்காலம் அங்கே நித்தியமாய் நிலை பெறுவாய். தேவர்களாய் முடிசூடி வாழ்வதிலும் மேலான அப்பதம், மேருமலை போல நிலை பெற்றிருப்பதாகும். உலகங்களுக்கெல்லாம் மேலான ஓரிடம் தருகிறோம். 863

கரடம் கவிழ்க்கும் கலுழிமதக் கடவுள் களிறும் ஒளிறுகதிர்
சொரியும் அருமா மணிச்சூட்டுத் துத்தி யரவும் சுமந்தநிலம்
இருபத் தாறா யிரம்பருவம் எழில்வெண் கவிகை தனிநிழற்றி
துருவப் பதம்நீ அடைதி என தொன்மை முதல்வன் அகன்றனனால்
864

நஞ்சு குமிழி எழுவேற்கண் நங்கை உரைத்த உரைகிடந்து
நெஞ்சு சுடநீள் பதம்வேட்டு நின்றே நெகிழ்ந்த தாமரைக்கண்
மஞ்சைக் கண்டும் கேட்டிலம்ஆல் முத்தி என்று மகிழ்கூரான்
துஞ்சல்இல்லாச் சுடர்மணிப்பூண் தொடிக்கைத் துருவன் நகர்சார்ந்தான்.
865

வந்தான் துருவன் எனலோடும் வாரா மகிழ்ச்சி வந்து எழத்தேன்
சிந்தா நின்ற மென்மழலைச் சிறுவன் வரவு சாற்றினர்க்கு
மந்தா கினிப்பொன் வரைதவழும் மாட்சி போல மருஉயிர்க்கும்
அம்தார் அகலம் துயல்வருபூண் ஆரம் கொடுத்தான் அரசு எழுந்தான்.
866

கதலி நிரைத்து முத்துஅணிந்து கனக மணித்தோ ரணம்புனைந்து
மதியம் தொடவான் எழுந்து உயர்ந்த மாடம் புதுக்கி மருகமழ்ந்து
புதுமட்டு ஒழுகும் கற்பகப்பூம் புனையல் வனைந்து புரந்தான் தன்
பதிஎன் றுஉணர நகர்துலக்கி பரவை எனயா வரும்தொடரர்.
867

வேந்தர் வணங்க முழவு அதிர வெண்சங்கு அலற உத்தமனும்
சேந்த மலர்த்தாள் தேவியரும் செம்பொன் சிவிகை மேல்எய்த
கூந்தல் பரித்தேர் கடிது ஓட்டி குழவி ஞாயி றுஒளி மழுங்க
காந்தி தழைத்து வருகின்ற காமர் புதல்வன் தனைக்கண்டான்.
868

மதநீர் வெள்ளம் பெருக்கும் எட்டு யானைகளாலும், மணிச்சூட்டையும் நெற்றியையும் உடைய ஆதிசேடனாலும் தாங்கப் பெறுவது இப்பூமி ஆகும். இத்தகைய நிலவுலகில் கொற்றக் குடை உடைய அரசனாக இருப்பத்தாறாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து ஆட்சி செய்து முடிவில், நான் அருளிய பதத்தைத் துருவ நட்சத்திரமாக நீ அடைவாய்" இவ்வாறு அருள் செய்து, திருமால் மறைந்தார். 864

"வேல் போன்ற கண்களுடைய சுருசியாகிய சிற்றன்னை கூறிய நஞ்சு போன்ற சொற்கள் நெஞ்சைச் சுட்டன என்று பதவிக்காகத் தவம் செய்தேன். மேக நிறத் திருமால் கண்முன்னே வந்து நின்றும் முக்தியைக் கேட்காமல் நின்றேனே!" என்று மனம் வருந்திய துருவன் நகர் நோக்கிச் சென்றான். 865

'மழலை பேசும் சிறுவன் துருவன் வந்தான்' என்று பணியாளர் அரசன் உத்தானபாதனிடம் தெரிவித்தனர். இதனைக் கேட்டு மகிழ்ந்த அவன் அவர்களுக்கு முத்து மாலையைக் கொடுத்தான். மேருமலையைத் தழுவி ஓடும் மந்தாகினி நதியால், அம்முத்து மாலை, துருவனின் மார்பாகிய மலையை அணி செய்யத் தக்கதாம். 866

துருவனை வரவேற்க நகர் எங்கும் அலங்காரங்கள் செய்யப் பெற்றன. கொடிகள், முத்து மாலைகள் ஆகியவற்றால் தோரணம் செய்யப்பட்டன. சந்திரனைத் தொடும் படி உயரமாக மாடங்கள் புதுப்பிக்கப்பட்டன. இந்திரனின் அமராவதி நகர் போல, அந்நகரம் புதிய அழகுடன் விளங்கியது. கடல் போலப் பரிவாரங்கள் சூழ அரசன் துருவனை வரவேற்க எழுந்தான். 867

சிற்றரசர்கள் வணங்கினர்; மத்தளங்கள் முழங்கின; சங்கொலி எங்கும் கேட்டது. தம்பி உத்தமனும் தாய்மார்களும் தத்தம் பல்லக்குகளில் வரவேற்க வந்தனர். பிடரி மயிருடைய குதிரைகளால் இழுக்கப்பட்ட தேரில், பாலசூரியனின் ஒளியும் மழுங்கும்படியாக அழகிய துருவன் வருவதை அரசன் உத்தானபாதன் கண்டான். 868

உருகு காதல்உளம் தளிர்ப்ப உவகை பெருகுற்று அலை எறிய
இருகை கூப்பி தொழுது இறைஞ்சும் இளவாள் முறுவல் காதலனை
பருகு வான்போல் நோக்கி ஒளி பரப்பு தொடித்தா மரைக்கரத்தால்
முருகு கமழ முகந்து உச்சி மோந்தான் விழிநீ ராட்டினான். 869

கள்ளக் கருங்கண் சுருதியைச்செங் கையால் துருவன் தொழுது இறைஞ்ச
பள்ளத்து ஒழுகு தண்புனல் போல் பழுக்கும் அன்பு தலைமணப்ப
உள்ளத்து உவகை கூர்ந்தனள் அவ் ஒழுகு கொடிநுண் இடைமாது
வள்ளல் கமலை கொண்கன்அருள் வாய்த்தால் ஆரே உவவாதார்.
870

இலைப்பூங் கண்ணி எழில் துருவன் ஈன்ற அன்னை செங்கமல
மலர்த்தாள் பின்னர் தொழுதுஇறைஞ்ச வாரி அணைத்து குறங்குஇருத்தி
கலைப்பால் மதிவாள் முகம்மலர்ந்தாள் கலுழ்ந்தது உவகைத் தடம் கண்ணீர்
முலைப்பால் ஊறி வழிந்தது இள முல்லை முகைவாள் நகையாட்கே.
871

காலக் கதிர்வேல் உத்தமன் பொன் கடகக் கையால் தழீஇ கொள்ள
நீலக் களிற்று நிலவேந்தர் நின்று பணிய வளைமுழங்க
கோலக் கடிமா நகர்உவப்ப கூந்தல் பிடிமேல் இனிதுஏகி
மாலைக் குழவி மதிபோல மன்ன குமரன் வந்தனன்ஆல். 872

காளைப் பருவம் கனிந்திடலும் கதிர்வேல் தடக்கை துருவனுக்கு
வாளக் கிரிசூழ் உலகுஏழும் மதிவெண் கவிகை தனிநிழற்றி
ஆளக் கதிர்மா முடிசூட்டி அல்கான் அடைந்து தவம்புரிந்தான்
பாளைக் கமுகுஅம் படப்பைசெறி பழனத் திருநா டுஉடையோனே.
873

ஏழ்இ ரும்பொழில் வாழும் இலங்குவேல்
பாழி மன்னர் பணிந்து திறையிட
சூழி யானை துருவன் விரிதிரை
ஆழி சூழ்நிலம் ஆழிஒன் றுஉய்த்தனன். 874

அன்பொழுகும் உள்ளத்துடன் உவகை பெருகச் சிறுவன் துருவன் தன் இருக்கரங்களைக் கூப்பியபடி வந்து, தந்தையை வணங்கினான். தன் புதல்வனைக் கண்ட தந்தை உத்தானபாதன் அன்பு மீதூரப் பருகுவது போலப் பார்த்து, அவனைத் தழுவியவாறு, மணம் வீசும் புதல்வனின் தலை உச்சியை முகந்தான்; கண்ணீர் விட்டு மனம் உருகினான். 869

வஞ்சனை செய்த கருத்த கண்களுடைய சுருதியைத் துருவன் தொழுது வணங்கினான். பள்ளத்தை நோக்கி ஓடும் தண்ணீர் போலத் தன் அன்பை அவன் அவளிடம் பொழிந்தான். திருமகள் நாயகன் திருமால் அருளால், அச்சிற்றன்னையும் மனம் மாறி, மகிழ்ந்தாள். துருவனை அவளும் அன்புடன் வரவேற்றாள். 870

பிறகு, பச்சிலைகளுடன் கூடிய பூ மாலை அணிந்த துருவன், தன் தாயான சுநீதியின் தாமரைப் பாதங்களில் விழுந்து வணங்கினான். அவள் அவனை வாரி எடுத்து அணைத்துத் தன் மடியில் அமர்த்திக் கொண்டாள். முகம் மலர்ந்த அந்தத் தாய் மகிழ்ச்சியுடன் கண்ணீர் விடவும், அன்பு மிகுதியால் அவளிடமிருந்து திருமுலைப்பால் ஊறி வழிந்தது. 871

வேலாயுதம் ஏந்திய உத்தமன் துருவனைத் தழுவிக் கொண்டான். கரிய யானைப் படைகள் உடைய சிற்றரசர் வணங்கினார்கள். சங்கு முழங்கிற்று. அலங்காரம் செய்யப்பட்ட நகரில் வாழ்ந்த அனைவரும் மகிழ்ந்தனர். யானை மீதேறிப் பவனி வந்த சிறுவன் துருவன் மாலைக் காலப் பிறைச் சந்திரனைப் போல விளங்கினான். 872

ஆண்டுகள் செல்லவும், துருவன் பதினாறு வயதுகள் நிரம்பப் பெற்றான். உத்தானபாதன் அவனுக்கு வெண்கொற்றக் குடைக் கீழே, முடிசூட்டி மகிழ்ந்தான். வேல் ஆயுதம் தாங்கிய துருவன் அரசன் ஆக முடிசூட்டப் பெற்றபின், தந்தை காட்டை அடைந்து தவம் செய்தான். தோட்டங்கள், வயல்கள் ஆகியன நிறைந்த அந்நாட்டைத் துருவன் ஆட்சி செய்தான். 873

ஏழுதீவுகளிலும் ஆட்சி செய்யும் வேலாயுதம் உடைய சிற்றரசர்கள் வந்து துருவன் ஆகிய சக்கரவர்த்தியை வணங்கினார்கள். அவர்கள் தத்தம் கப்பங்களை அளித்துப் பணிந்தனர். துருவன் எல்லோருக்கும் மேலாகத் தனிப் பேரரசனாக விளங்கினான். 874

தேம லர்க்கணை சிந்து வரிச்சிலைக்
காமன் அன்னஅக் காளை முதலையின்
நாமம் மேய விதிதரு நல்எழில்
பூமி என்னும் ஓர் பூவையை வேட்டனன். 875

அன்ன மெல்நடை அம்நுண் மருங்குலாள்
பொன்னம் குன்றுஉறழ் பூண்முலை புல்லிய
மன்னன் கற்பன் வயங்கிய வற்சரன்
என்னும் மைந்தர் இருவரை ஈன்றனன். 876

எறிவ ளிக்குஇறை ஈன்ற இளை எனும்
நறும லர்க்குழல் நங்கை மணம் புணர்ந்து
உறுவ ளப்புஉடை உற்கலன் என்னும் ஓர்
சிறுவன் பெற்றனன் தேம்கமழ் தாரினான். 877

ஒடை யானை உத்தமன், ஆடல் வாள் அரக்கனால்
வீடி னான்வி ரிந்தபூங், காடுஅ கம்க லந்து அரோ. 878

வேட்டம் ஆட ஏகிவெங், காட்டு இறத்தல் காண ஓர்
நாட்ட மாய்ந டந்துதாய், ஊட்டு அழற்கு உலந்தனள் . 879

நிருத ரால்நி லாச்செய்பூண், உருவ மார்பின் உத்தமன்
இருவி சும்பின் ஏறவேல் துருவன் அன்று சூழ்ந்தனன். 880

தார்அரக்கர் தம்மையான், வேர் அறுத்து மீள்வன் என்று
ஆறார்அமர்க்கு எழுந்தனன், தூரி யம்து வைப்பவே. 881

ஏழ் உயர்ந்த ஈர்ங்கவுள், வேழம் வெற்பின் ஈண்டின
பாழி உற்ற பச்சைமா, ஆழி ஒத்து அடைந்தவே. 882

போர்வ யப்பு லிக்குழாம், பாரின் மேல்ப ரந்துஎன
வீரர் மொய்ப்ப வெய்யபொன், தேர் இவர்ந்து சென்றனன். 883

தேன் சிந்தும் மலரை அம்பாகப் பெற்ற மன்மதனைப் போல் விளங்கிய துருவன் அழகிய பெண்ணான 'பூமி' என்பவளைத் திருமணம் செய்து கொண்டான். முதலையின் பெயர் கொண்ட 'சிம்சுமாரன்' என்னும் பிரமனின் மகளே இவள் ஆவாள். 'பிரமி' என்னும் பெயர் உடையவள். 875

அழகிய இடையையும் மேருமலை போல் மார்புகளையும் பெற்ற அன்ன நடை உடைய மனைவியுடன் துருவன் இல்லறம் செய்தான். அவர்களுக்கு இரு புதல்வர்கள் பிறந்தனர். அவர்களே, கற்பனும் வற்சரனும் ஆவார்கள். 876

தேன் துளிர்க்கும் மாலை அணிந்த துருவன், பின்னர் வாயுதேவனின் மகளான 'இளை' என்பவளையும் திருமணம் செய்து கொண்டான். அவளுக்குப் பிறந்த அழகான புதல்வனே 'உற்கலன்' ஆவான். 877

நெற்றிப் பட்டம் உடைய யானை மீதேறி வேட்டைக்காகக் காட்டிற்குச் சென்ற பொழுது, உத்தமன், பலம் மிகுந்த அரக்கன் ஒருவனால் தாக்கப்பட்டு இறந்தான். 878

காட்டில் தன் மகன் வேட்டை ஆடும் பொழுது இறந்தான் என்பதைத் தாய் சுருதி கேள்விப் பட்டாள். அவன் உடம்பைக் காண அங்கு விரைந்து சென்ற அவள், துயரம் தாங்காமல், நெருப்பு மூட்டி அதில் விழுந்து உயிர் மாய்த்துக் கொண்டாள். 879

நிலாவைப் போல் ஒளி வீசும் அணிகலன் அணிந்த உத்தமன் அரக்கனால் அழிந்ததைக் கேட்ட துருவன், மிகுந்த சினம் கொண்டான். அதனால் அவன் அரக்கரைத் தாக்கக் காடு சென்றான். 880

"அரக்கர்களை வேருடன் அழிப்பேன்" என்று சூளுரை செய்த துருவன் போர் செய்திடப் புறப்பட்டான். யுத்தத்துக்கான பேரிகைகள் முழங்கின. 881

ஏழு முழம் உயரமானதும், திரண்ட கன்னங்கள் பெற்றதும், மலை போன்றதும் ஆன யானைப் படைகள் திரண்டன. பச்சைக் குதிரைப் படைகள் கடல் அலைகள் போல அணி வகுத்தன. 882

புலிகளின் கூட்டத்தை ஒத்த வீரர்களின் படை வகுப்பு பூமி எங்கும் பரந்தது. இவ்வாறு படைகள் அணி வகுக்கத் துருவன் பொன்மயமான தேரில் ஏறிப் போருக்குச் சென்றான். 883

எழில்கு பேரன் இல் நகர்க்கு, உழைப்ப டர்ந்து உருத்திடா
முழக்கி னான்மு ரண்கொள்போர், தழைக்க நின்று சங்கமே. 884

வில் எடுத்த வீங்குதோள், கல்எ னக்க வின்பெற
செல்என திரண்டனர், வல்அரக்கர் வந்து அரோ. 885

பாறு உலாவு பல்படை, வேறு வேறு வீசி வந்து
ஏறி னாரை எய்துபோர், நூறி நூழில் ஆட்டினான். 886

வாரி வந்து அலைத்திட, சோரி விண்சொ ரிந்திட
போரி னில்பு ணர்ந்தனர், நேர்இலாநி சாசரர். 887

மாய வல்அ ரக்கர்தம், மாயம் மல்கி டாதுபோய்
மாய மன்னர் மன்னவன், மாயன் வாளி சிந்தினான். 888

கிரியோடு எதிர்ந்த கரிமத் தகங்கள்
கிழிய பிளக்கும் இகல்வாள்
அரிஏறு போல இருகண் சிவப்ப
அடல்கொண்ட சாபம் வளையா
விரிதார் அரக்கர் நுதல்கீற வெய்ய
விசிகம் தெரிந்து சொரியும்
மருமானை நம்பி! பொரல் என்று கொற்ற
மனுவந்து நின்று புகல்வான். 889

சிலர்காலம் என்பர் சிலர்கன்மம் என்பர்
சிலர்ஈசன் என்பர் சிலர்தாம்
நிலையாத கானல் உறுநீரது என்ன
நிகழ்மாயை என்பர் மதுவார்
மலர்வாளி கொண்ட மதன்ஆகு ம்என்பர்
வாற்சாய னாதி சிலர்தாம்
நலனோடு தீய பலன்ஆம் அவற்றை
நனிகொண்டு வந்து விடலே. 890

விளையாதது ஒன்றும் விளையாது வந்த வினைஊழின் வந்த விளைவே
உளைமா நடத்து திறல்உத் தமன் தன் உயிர் ஓர்அரக்கன் உணநீ
வளைஆழி வேலி வலயத்து அரக்கர் உயிர்யாவும் வெளவல் அறனே
அளிகோடி பாடு தொடைமார்ப என்ன அமர்விட்டு நின்று தொழுதான். 891

அழகும் செல்வமும் நிறைந்த நகரை விட்டுப் படையுடன் அகன்ற துருவன் சினத்துடன் போர்ச் சங்கை முழக்கினான். 884

கல்லைப் போல் உயர்ந்து திரண்ட தோள்களுடைய அரக்கர்களே, விற்களை ஏந்தியவர்களாய், மேகக் கூட்டங்கள் போல், ஒன்று சேர்ந்து எதிர்க்க வந்தனர். 885

அவ்வரக்கர் படை மீது சாடிய துருவன், கடும் போர் செய்தான். வெவ்வேறு ஆயுதங்களை அவர்கள் மீது வீசிய அவன், அவர்களைக் கொன்று குவித்தான். பருந்துகள் போல அவன் படைகள் பரந்து தாக்கின. 886

எங்கும் இரத்த வெள்ளம் சூழ்ந்தது. மீண்டும் அரக்கர்கள் கடல் போல் மண்டி வந்து போரில் கலந்தனர். 887

அரக்கர்களின் மாயச் செயல் தலை எடுக்கவும், மன்னர்களுக்கெல்லாம் மன்னன் ஆன துருவன், அவர்களைக் கொல்வதற்காக, மாயவன் ஆன திருமாலின் நாராயண அத்திரத்தை விடுத்தான். 888

மலையுடன் போரிடும் வலிமை பெற்ற யானைகளின் மத்தகங்களைப் பிளக்கும் சிங்கம் போலத் துருவன் வீரத்துடன் தன் வில்லை வளைத்துப் போரிட்டான். அவன் விடுத்த அம்புகள் அரக்கர்களின் நெற்றிகளைப் பிளந்தன. இவ்வாறு போரிடும் தன் வழித் தோன்றலான துருவனைக் காண, சுவாயம்புமனு அங்கே வந்து தோன்றினான். "நம்பி துருவ! போரை நிறுத்து !" என்றான். 889

சுவாயம்பு மனு துருவனிடம் மேலும் பேசலுற்றான். "நன்மைகள் தீமைகள் உண்டாவதற்குக் காரணம் காலமே என்று சிலர் கூறுவார்கள். வேறு சிலர் இறைவனாலேயே அவை உண்டாகின்றன என்பார்கள். கானல் நீர் போலும் மாயை என்பர் சிலர். வாத்சாயனக் கொள்கையினர் மன்மதனாலேயே இளவ என்பர். 890

முன் வினைக் காரணத்தாலேயே எல்லா விளைவுகளும் உண்டாகின்றன. பிடறி மயிருடைய குதிரை ஏறிக் காடு சென்ற உத்தமன் அரக்கன் ஒருவனால் கொல்லப்பட்டதற்காக மற்றைய எல்லா அரக்கர்களையும் கொல்தல் தர்மம் ஆகுமா? வண்டு ஒலிக்கும் மலர் மாலை சூடிய துருவனே இதை எண்ணிப் பார்" இவ்வாறு கூறிய சுவாயம்பு மனுவைத் துருவன் தொழுது நின்றான். 891

மன்னற்கு மன்னன் எதிர்சென்று இறைஞ்ச
மனுவிட்டு அகன்ற பொழுதே
மின்னின் திகழ்ந்து சுடர்கால்வி மான
மிசையேகு பேரன் அணுகா
கொன்உற்ற கொற்ற வடிவேல் அரக்கர்
கொலைசெய்தது இல்லை அதுதான்
முன்உற்று நின்ற வினையாகும் அண்ணல்!
முனியற்க என்று மொழிவான். 892

விழைவுற்று நின்ற வரம்யாவ தேனும்
விரிதாம மார்ப! தருகேன்
மொழிகிற்றி என்ன முருகுஉற்று அலர்ந்த
முளரிக் கரங்கள் குவியா
அழல்உற்ற ஆழி திகழ்செங்கை அண்ணல்
அருள்அல்லது என்கொல் பெறுமாறு
எழில்பெற்ற செல்வ எனஅன்னது ஆக
எனஏகி னான்உள் மகிழ்வான். 893

முருகவிழ் கோதை மாதர்
முலைஉழ நெகிழ்ந்த பைந்தார்த்
துருவன் மீண்டு ஆழி யானை
தொழுதுபல் வேள்வி முற்றி
பருவம்ஓர் இருபத் தாறா
யிரம்எழிற் பருதி அன்ன
ஒருதனித் திகிரி எல்லா
உலகமும் உருட்டி னான்ஆல். 894

வாங்கிய விரிவில் செங்கை
மைந்தனை அவனி காப்ப
தேம்கமழ் தெரியல் மாலை
செழுங்கதிர் மௌலி சூட்டி
வீங்குநீர் விசாலை எய்தி
விழுத்தவம் புரிதல் செய்தான்
ஓங்கலால் மாரி காத்த
ஒருவனை உளத்தின் வைத்தே. 895

மனுவும் அவ்விடம் விட்டு அகன்றான். மின்னல் ஒளி வீசும் விமானம் ஏறி வந்த குபேரன் அங்கே தோன்றித் துருவனிடம் பேசினான். "அரசனே! வடிவேல் ஏந்திய அரக்கர்களால் உத்தமன் இறக்கவில்லை. அவன் இறப்புக்குக் காரணம் அவன் முன்வினைப் பயனே ஆகும். அதற்காக நீ சினம் கொள்வது தகாது" என்றான். 892

மேலும் குபேரன் துருவனிடம் “மாலை மார்பனே! நீ கேட்கும் வரத்தை நான் இப்பொழுதே தருகிறேன். கேட்பாயாக" என்றான். தன்னுடைய தாமரைக் கரங்களைக் கூப்பியபடி துருவன் “தீ உமிழும் சக்கரம் ஏந்திய திருமால் அருளை அன்றி நான் வேறு எந்த வரமும் வேண்டேன். அதற்கு வரம் தருக" என்றான். குபேரனும் மனம் மகிழ்ந்து அதற்கான வரம் கொடுத்து விடை பெற்றுச் சென்றான். 893

துருவன் காட்டினின்று நகர் மீண்டான். மலர் மாலை மார்புடைய அவன் மனைவியருடன் இல்லற இன்பம் நுகர்ந்தான். சக்கரக் கையனான திருமாலை என்றும் வழிபட்டான். பல்வகை வேள்விகள் செய்து நாட்டை ஆண்டான். ஒப்பற்ற சூரியன் போலே அவன் இருபத்தாறாயிரம் ஆண்டுகள் ஆட்சி செய்தான். 894

பின்னர் துருவன், வில்லேந்திய தன் புதல்வனுக்கு முடிசூட்டினான். நாட்டின் ஆட்சியை அவனிடம் ஒப்பித்துவிட்டுத் துருவன் தவம் செய்யப் பதரிகாசிரமம் சென்றான். கோவர்த்தன மலையைக் குடையாகத் தூக்கி மழையிலிருந்து இடைக் குலத்தைக் காத்த கண்ணனனைத் தியானம் செய்தவாறு தவம் செய்தான். 895

உருள்உறு பசும்பொன் திண்தேர்
ஊர்ந்துஎழு கதிர்கள் எல்லாம்
வெருளவிட் டுஒளிசெய் ஒண்கேழ்
விழுமணி கிடந்த மார்பன்
அருள்பெறு சுநந்த நந்தர்
அவ்வழிக் குறுகி னார்ஆல்
இருள்அயில் திங்கள் போல
இமைக்கும் ஓர் விமானம் கொண்டே. 896

ஒருதனித் திகிரி மாயன்
உயர்பதம் அடையல் வேண்டும்
வருகநீ வருக என்று
வழுத்தினர் கூற லோடும்
எரிகதிர்ப் பசும்பொன் போல
எவ்வெலாத் திசையுங் காந்தி
விரியும்ஓர் உருவு கொண்டு
விமானமீது இவர்ந்தான் மன்னோ. 897

மன்னன் ஆங்குஈன்ற தாயை
மனத்தினில் நினைப்ப மன்னன்
உன்னியது உணரா அன்னோர்
ஒருமுதல் அன்பர் உய்க்க
பொன்நெடு விமானம் ஊர்ந்து
போகுஉயர் விசும்பின் மேல்உன்
அன்னையும் சேறல் காண்டி
அரசஎன்று இயம்பி னார்ஆல். 898

புயல்கிழித்து எழும் மந் தாரப்
பூந்துணர் முருகு வீசும்
வியல்இரு விசும்பு விட்டு
வெய்யவன் பதத்தை நீங்கி
உயர்மதி மண்டி லத்தை
உவப்புறக் கண்டு விண்ணோர்
வயின்வயின் அலர்தூய் வாழ்த்த
வான்பதம் குறுகி னானால். 899

ஒற்றைச் சக்கரத் தேரில் பவனி வரும் சூரியன் ஒளியும் மங்கும்படியான பிரகாசமுடைய கௌத்துப மாலை அணிந்தவர் திருமால் ஆவார். அப்பெருமான் அருள் கிட்டும் காலம் ஆதலால், சுநந்தர், நந்தர் ஆகிய இரு நித்திய சூரிகளும் துருவனை அழைத்துச் செல்ல விமானத்தில் வந்திறங்கினர். 896

அவர்கள் துருவனை அணுகி "சக்கரக் கையன் திருமால் அருளால் உயர் பதம் அடையும் காலம் வந்து விட்டது. துருவனே! நீ எங்களுடன் வருவாயாக" என்று கூறி அழைத்தனர். தங்கமயமாய்த் திசை எல்லாம் ஒளி பரப்பும் அந்தப் பொன் விமானத்தில், ஒளி வடிவாகத் துருவன் ஏறி அமர்ந்தான். 897

அப்பொழுது துருவன் தன் தாய் சுநீதியை நினைத்தான். அதனை உணர்ந்த திருமால் தூதர்கள் துருவனிடம் "உன் அன்னை சுநீதியும் பொன் மய விமானத்தில் ஊர்ந்து செல்வதைப் பார்" என்று கூறி அவளும் செல்வதைக் காட்டினர். 898

விமானத்தில் சென்ற துருவன், காற்றின் ஊடே மந்தார மலர்களின் மணம் வீசும் ஆகாயத்தைத் தாண்டி, சூரிய மண்டலம் வழியாகச் சந்திர மண்டலம் சென்றான். பின்னர், அங்கிருந்து புறப்பட்டுத் திருமாலின் வைகுந்தத்தை அடைந்தான். இதனைக் கண்ட தேவர்கள் அவ்வவ் விடந்தோறும் பூக்களைத் தூவி வரவேற்றனர். 899

உகாதுஒரு ஞான்றும் விண்ணத்து
ஓங்கிய பதங்கள் தம்மை
நகாஒளி கிளைத்து நின்ற
நனந்தலை உலகுக்கு எல்லாம்
சிகாமணி என்னச் சேணில்
சேய்உயர் பதத்தில் சென்று
புகாவிளங் கினன்அவ் வேந்தன்
புகழ்எவர் புகலற் பாலார். 900

துளிமதுக் கமழ்பூங் கண்ணித்
துருவன்வான் நிலவு தூற்றும்
ஒளிமுடி கவித்த மைந்தன்
உற்கலன் ஆழி யான்மேல்
விளைவுறும் மனனாய் எல்லாம்
வெறுத்தனன் ஆக அன்னோன்
இளவல்வற் சரன்தான் காத்தான்
ஏழிரு பொழிலும் மாதோ. 901

ஒழிவிலா ஊழி ஊழி
உலைவிலா பதஞ்சென் றுஉற்ற
அழிவில்சீர்த் துருவன் காதை
அஞ்செவி நிரப்பப் பெற்றோர்
விழுநிதிக் குப்பை எய்தி
வெண்நகைக் கனிவாய் மைந்தர்
மழலைஅம் தேறல் மாந்தி
மகிழ்ந்துவீடு எய்து வார்ஆல். 902

தீதற நோற்று நின்ற
செஞ்சிலை விதுர என்ன
மாதவன் மைத்தி ரேயன்
வழங்கிய வாறு தண்அம்
தாதலர் கமலச் செங்கண்
சதுமறை வியாதன் மைந்தன்
மேதகு விண்டு ராதன்
வியப்புற இயம்பி னான்ஆல். 903

வானில் ஓங்கிய பதங்களில், கீழே விழாத நிலையான ஓர் இருப்பிடத்தைத் துருவன் பெற்றான். உலகங்கள் யாவும் அவன் பதத்தை எண்ணி மகிழ்ந்து 'சிகாமணி' எனப் பாராட்டியது. உயர்ந்த பெரிய வானில் துருவ நட்சத்திரமாக விளங்கும் இவனைப் போல் வேறு எவர் தாம் புகழுடையார்? 900

மணம் வீசும் மாலை அணிந்த துருவன் தன் மைந்தன் உற்கலனுக்கு, முன்பே முடிசூட்டி இருந்தான் அன்றோ! அந்த உற்கலன், தன் தந்தை போலவே திருமாலிடம் பக்தி கொண்டவன். ஆதலால், அரசாட்சியை வெறுத்தான். அதன் விளைவாய், அவன் தம்பி வற்சரன் அரசைப் பெற்று ஆண்டு வந்தான். 901

முடிவில்லாத புகழுடன், நித்தியமான வைகுந்தப் பதவி அடைந்த துருவனின் சரித்திரத்தைச் செவி நிறையக் கேட்போர், செல்வ வளத்தைப் பெறுவார்கள். மேலும், வெண்மையான பற்களை உடைய குழந்தைகளின் மழலைப் பேச்சைக் கேட்டு மகிழும் பேறு பெறுவார்கள். பின்னர் அவர்கள் வீடு பேற்றையும் அடைவார்கள். 902

தவம் மிகுந்த மைத்திரேயன், தீமையில்லாதபடி தவம் செய்த வில் விதுரனிடம் துருவன் கதையினை மேற்கண்டவாறு விவரித்தார். தாமரைக் கண்களுடைய வியாச முனிவரின் மைந்தரான சுகமுனிவர் அக் கதையினை, மேன்மை பொருந்திய பரீட்சித்திடம் விளக்கிக் கூறினார். 903

4. பிருது மன்னன் கதை

மதும ணக்கும் மலர்த்துள வோன்எனும்
அதிர்க டல்புவி ஆண்ட பிருதுமன்
கதைஉ னக்குஇவண் கட்டுரைப் பேன்எனா
விதுர னுக்கு முனிவன் விளம்புவான். 904

துகள்இ லாத துருவன் அளித்திடும்
மகவு வற்சரன் மார்பகம் புல்லிய
திகழும் நல்எழில் சேட்டை எனும்திரு
இகல் இலாஇரு மூவரை ஈன்றனள். 905

மருவு வற்சரன் மைந்தர் அறுவருள்
பொருஇ லாதபுட் பாருணன் என்பவன்
பிரபை தோடை எனப் பெயர் பெற்றிடும்
இருவர் காதல் இளநலம் மாந்தினான். 906

விரைசெய் தாரணி மென்குழல் மேல்நறை
பெருகு காதல் பிரபை அளித்தனள்
கருது காலை கவின்செயும் உச்சியோடு
உரைசெய் மாலையின் பேர்உறு வோரையே. 907

நேச மார்பிர தோடன் நிசிமணம்
வீசு தாம வியுட்டி யெனப்புவி
பேசு பேர்ஒரு மூவரைப் பெற்றனள்
தூசுஉலாம் இடை யாள்எனும் தோடையே. 908

இகல்வி யுட்டியென் பான்வட சொல்லினுள்
சகல காந்திக் குஉறும்பெயர் சார்ந்திடும்
மகவை ஈன்றனன் மற்றவன் மைந்தனாம்
புகலும் வேல்கைப் புகழ்மனு வேந்தனே. 909

மனுஎ னும்பெயர் பெற்றவன் மைந்தராம்
புனித மார்புரு குச்சர் முதலினோர்
அனைய பன்னிரு வோரில் அரசனாம்
முனிவி லான்அருள் முற்றிய வுன்முகன். 910

4. பிருது மன்னன் கதை

மைத்திரேய முனிவர் விதுரனிடம் "தேன் சிந்தும் மலர் மாலை அணிந்தவனும் கடல் சூழும் உலகை ஆண்டவனும் ஆன பிருது மன்னனின் கதையை உனக்குக் கூறுகிறேன்." என்றார். 904

குற்றமில்லாத துருவனின் புதல்வன் ஆன வற்சரன், அழகு மிகுந்த பெண்ணான சேஷ்டை என்பவளைத் திருமணம் செய்து கொண்டான். இவர்கள் மாறுபாடில்லாத ஆறு பிள்ளைகளைப் பெற்றனர். 905

வற்சரனின் ஆறு புதல்வர்களில், ஒப்பற்ற புஷ்பாருணன் என்பவன், பிரபை, தோடை எனப்படும் இரு பெண்களை மணந்தான். அவர்களுடன் இன்புற்று வாழ்ந்தான். 906

மணம் வீசும் மலர் மாலை சூடிய கூந்தலுடைய பிரபை என்பவள் காலை, உச்சிப் பொழுது, மாலை என்னும் பெயர்களுடைய மூவரைப் பெற்றாள். 907

நுட்பமான இடை பெற்ற தோடை என்னும் புஷ்பாருணன் மனைவி, மூன்று மக்களைப் பெற்றாள். அவர்கள், பிரதோஷன், நிசி, வியுஷ்டி என்னும் பெயர்களை உடையவர்கள். 908

வியுஷ்டி என்பவன் 'சர்வதேஜஸ்' என்னும் புதல்வனைப் பெற்றான். 'எல்லா இடங்களிலும் ஒளி வீசுபவன்' என்பதே இவன் பெயர் குறிக்கும். இந்த சர்வதேஜஸ்ஸுக்கு 'மனு' என்பவன் பிறந்தான். மனு பிற்காலத்தில் வேல் ஏந்தி ஆண்ட புகழ் மிகுந்த மன்னன் ஆவான். 909

பெயர் பெற்ற மனு வேந்தனின் மைந்தர்கள், புனிதமான புரு, குச்சர் முதலிய பன்னிரண்டு பேர்கள் ஆவார்கள். அவர்களில் ஒருவனே, கோபம் இல்லாத அருள் கூடிய, 'உன்முகன்' என்பவன் ஆவான். 910

வாழி உன்முகன் மாதவத் தால்பெறும்
ஆழி மைந்தர் அறுவர்அம் மைந்தரின்
ஆழி சூழும் அகல்நிலம் ஏழினும்
ஆழி ஒன்று செலுத்தினன் அங்கனே. 911

வந்த ஆதி மனுமுத லாகஈர்
ஐந்துஎன்று ஓது தலைமுறை யான்அங்கன்
விந்தை சேர்புயன் வேட்டனன் வாள்முகம்
இந்து நேரும் சுநீதையை என்பவே. 912

கொங்கு தேர்ந்துஅளி கூட்டுணும் நாண்மலர்த்
தொங்கல் மாலைத் துருவன் வழிவரும்
திங்கள் வெண்குடை யான்செய்ய கோலினான்
அங்கன் என்பவன் ஆற்றினன் வேள்வியே. 913

ஆற்றும் வேள்விச் சொரிஅவி அங்கையால்
ஏற்றி லார்வந்து இமையவர் என்றலும்
மாற்ற ரும்திறல் மன்னவன் காரணம்
சாற்று வீர்என அந்தணர் சாற்றுவார். 914

பிள்ளை யில்லவர் பெய்அவி வானவர்
கொள்ள லார்பைங் குழவி பிறந்திட
உள்ள வாறுஇனிது ஓமம் புரிகஎன
புள்ளு யர்த்தவன் போற்றிப் புரிந்தனன். 915

மின்இ லங்கு தொடியன்வெண் தூசினன்
பொன்னம் தாரினன் பொற்கலம் மீதுபால்
அன்னம் ஏந்தி ஒருவன் அழலிடை
துன்னு சோதி துவன்றுஉறத் தோன்றினான். 916

பரவை வெண்திரைப் பட்ட அமுதினை
புரையு மன்னது பொற்றொடித் தேவிபால்
அரசு நல்க அருந்தினள் சூல்கொளா
விரைசெய் பூங்குழல் வேனனை ஈன்றனள். 917

மிகுந்த தவ வலிமையால், இந்த 'உன்முகன்' என்பவன் ஆறு புதல்வர்களைப் பெற்றான். ஆணைச் சக்கரம் பெற்ற இந்த ஆறு புதல்வர்களில் ஒருவன் ஆன 'அங்கன்' ஏழு கடல்கள் சூழ்ந்த இவ்வுலகை ஆண்டான். 911

சுவாயம்பு எனும் ஆதி மனுவின் தலைமுறையில் பத்தாவதாக வந்தவன் இந்த 'அங்கன்' என்பவன் ஆவான். இவன், சந்திரனை ஒத்த முகம் கொண்ட சுநீதை என்னும் நங்கையை மணம் செய்து கொண்டான். 912

தேன் சிந்தும் மலர் மாலை அணிந்த துருவன் வம்சத்தில் வந்த இந்த 'அங்கன்' சந்திரவட்டக் கொற்றக் குடைக் கீழ் ஆட்சி செய்தான். மேலும் இவன் வேள்வி செய்யத் தொடங்கினான். 913

வேள்வியில் இவன் சொரிந்த அவி உணவைத் தேவர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. இதன் காரணம் யாதென, மன்னன் அங்கன் அந்தணர்களிடம் கேட்டான். அதற்கு அவர்கள் உரைத்த பதில் வருமாறு. 914

"குழந்தைகள் பெறாதவர் நடத்தும் வேள்வியில், சொரியப்படும் அவிஉணவைத் தேவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆதலால் அரசே! நீ, அதற்கேற்றபடி புதல்வனைப் பெற, ஓமம் செய்வாய்" என்றார்கள். அதன்படி, அங்கனும் கருடக் கொடி உடைய திருமாலைத் தியானித்து ஓமம் செய்தான். 915

அங்கன் செய்த ஓமகுண்டத்திலிருந்து, தேவன் ஒருவன் தோன்றினான். மின்னல் போல் ஒளி விடும் வளை அணிந்தவனும், அழகிய மாலை தரித்தவனும் ஆகிய அவன், தன் கையில் பால் சோறு ஏந்தித் தோன்றினான். அந்தப் பால் சோற்றை அங்கன் பெற்றான். 916

பாற்கடல் கடையப்பட்ட பொழுது தோன்றிய அமுதம் போன்ற அப்பால் சோற்றை, அங்கன் தன் மனைவி இடத்தே கொடுத்தான். அவளும் அதைப் பெற்று அருந்தினாள். பூச்சூடிய கூந்தலுடைய அவள், அதன் விளைவாய்க் கருப்பம் உற்றாள். அதனால் பிறந்த புதல்வனே 'வேனன்' என்பவன் ஆவான். 917

காதல் மைந்தன் வளர்ந்து கலைபல
ஓத ஓத உணர்வு குறைந்தனன்
வேத நீதி ஒழுக்கம் விடுத்தனன்
ஆதி ஆய அறம்பிழைத் தான்அரோ. 918

அன்னை கூற்றின் மடமகள் ஆதலால்
இன்ன தன்மையன் ஆயினன் ஏழ்புவி
துன்னு கீர்த்தித் துருவன் எனப்படும்
மன்னர் மன்னன் மரபினில் தோன்றினான். 919

மழக ளிற்று மருவலர் போர்கடந்து
அழலும் வேற்படை அங்கன் அறநெறி
ஒழுகு சேயை உயிர்த்திலம் என்றுஇரும்
பொழில் இரங்க புகுந்தனன் கானகம். 920

வரிச்சு ரும்பு வழிமது மாந்தவாய்
விரிக்கும் பூந்தொடை வேந்தர் திறையிட
குரைக்கும் வேலைமண் கொண்டு கொழுநிதிச்
செருக்கு மிக்கனன் செஞ்சிலை வேனனே. 921

உறைந்து தேவர் அவிஉண நான்மறை
அறம்தெ ரிந்தவர் ஆற்றும்நல் வேள்வியை
துறந்து போம்என சொல்முரசு எற்றியே
மறம் தவாதவன் மாற்றுவித் தான்அரோ. 922

வீங்கு மாதவர் வேள்விசெய் தால்நனி
ஓங்கு வேந்தர் உயர்வர் திருஎன
ஆங்கு மேவிஅறிஞர் அறைதர
வாங்கு வார்சிலை மன்னவன் கூறுவான். 923

சீய மன்ன செழுநில வேந்துஅலால்
போய்ஓர் தெய்வம் உளதுஎனப் போற்றுவார்
தூய கேள்வர்ப் பிழைத்துஉறு சோரர்பால்
நேயம் வைத்த மகளிரை நேர்குவார். 924

வேனன் வளர்ந்து, கலைகள் பல பயின்று பெரியவன் ஆனான். ஆயினும், அவன், வேத நீதி ஒழுக்கம் இல்லாமல் தருமத்துக்கு எதிராகவே வாழ்க்கை நடத்தினான். 918

இதன் காரணம் யாதெனின், அவன் தாயார் யமனின் அம்சம் ஆனவள். ஏழுலகங்களிலும் புகழ் மிகுந்த துருவ சக்கரவர்த்தி வம்சத்தில், தீயவன் ஆன வேனனும் உதித்ததானே! 919

மதம் மிகுந்த யானைப் படையுடன் எதிரிகளைத் தாக்கி வென்ற வேல் படை உடைய அங்கன் தன் மகன் வேனனின் தீய ஒழுக்கத்தை எண்ணி வருந்தினான். 'இத்தகைய கெட்டவனைப் பெற்றேனே!' என்று வருந்திய அவன், தன் முதுமையில் தவம் செய்யக் காடு சென்றான். 920

கொடியவன் ஆன வேனன் அரசன் ஆனான். வண்டும் மதுவும் தங்கும் பூ மாலை அணிந்த சிற்றரசர்கள் வேனனுக்குக் கப்பம் கட்டினர். ஆதலால் வேனன் செல்வம் பெருகச் செருக்கு அடைந்தான். 921

பாவத்திலிருந்து நீங்காத அந்த வேனன், 'நான்கு வேதங்கள் ஓதும் அந்தணர்கள், தேவர்களுக்கு அவி உணவு இட்டுச் செய்யும் வேள்விகளை நடத்தக் கூடாது' என்று எங்கும் முரசு அறைவித்தான். 922

இதனைக் கேட்ட சான்றோர்கள் வேனனிடம் வந்து, "மன்னா! தவம் மிகுந்தோர், வேள்விகள் செய்தால், அரசர்கள் உயர்வு அடைவார்கள். அவர்கள் செல்வம் கூடும்" என்று அறிவுரை கூறினர். அதனைக் கேட்ட வேனன் அவர் உரையை மறுத்தான். 923

"சிங்கம் போன்ற நாட்டு மன்னனைத் தவிர்த்து வேறு பெரிய தெய்வம் உண்டு என்று கூறுவோர், கணவனுக்குத் துரோகம் செய்து விபசாரம் செய்யும் குலப் பெண்களை ஒத்தவர்கள் ஆவார்" என்று வேனன் கூறினான். 924

துன்னு வெண்நிலாத் தூற்று வலம்புரி
மன்னு செங்கை மணிநிற வண்ணன்யான்
என்னை யல்லது தெய்வம்இன் றேஎன
பன்னி என்னைப் பரவுமின் என்றனன். 925

ஆற்றல் மேய அமைச்சர் கழறிடும்
கூற்றைக் கொன்று கொடுநெறி மேல்படர்
வேல்திறல் படை வேனனை வேதியர்
சீற்றத் தீயின் செகுத்தனர் என்பவே. 926

விண்ண டைந்திடும் வேனன் உடம்பினை
எண்ணெய் பெய்த்தோர் தோணியில் இட்டனள்
கண்அ கல்புவி காக்குநர் யார்என
தண்அம் தாரவன் தாய்புரந் தாள்அரோ. 927

இலைஅ டுத்த இனமலர்ப் பூந்தொடை
மலைஅ டுத்ததோள் மன்னன் இறத்தலும்
அலைஅ டுத்த அகன்புவி எங்கணும்
தலைஎ டுத்த குறும்பு தலைத்தலை. 928

நிலங்க ரந்தது நீள்வளம் கள்ளர்தம்
குலம்ப ரந்தது கூட்டுண அவ்வழி
கலந்த வேதியர் தம்மின் கடைந்தனர்
உலந்த வேனன்உடலம் எடுத்துஅரோ. 929

நீல மேனியன் நீள்ஒளி வெம்சுடர்
போல்இ லங்குசெம் குஞ்சியன் பொங்குஅழல்
ஆலம் என்ன ஒருவன் அதிர்கழல்
காலின் வந்து பிறந்தனன் காண்தக. 930

அல்லினால் வகுத்துஎன ஆங்கு தோன்றிய
வில்உடைத் தடக்கையான் விளைப்பது என்கொலோ
சொல்லுமின் நீர்எனத் தொழுகு லத்தவர்
நில்என உரைத்தலின் நிடாதன் ஆயினான். 931

அவன் மேலும், 'நானே தெய்வம் ஆவேன். வெண்ணிலா போன்ற வலம்புரிச் சங்கைத் தன் செங்கையில் ஏந்திய திருமாலாகிய மணிநிறமுடைய தெய்வம் நானே ஆவேன். என்னைத் தவிர்த்து வேறு யாரையும் தெய்வமாக வழி படாதீர்!" என்று கூறினான். 925

இவ்வாறு தெய்வத்தை அவமதித்த வேனன், ஆற்றல் மிகுந்த அமைச்சர்கள் நல்லுரையை மறுத்ததைக் கண்ட அந்தணர்கள் சினம் கொண்டனர். தங்கள் சினத் தீயால், அவனைச் சபித்து அழித்தார்கள். 926

ஆகவே வேனன் இறந்தான். அவன் உடம்பு எண்ணெய்த் தோணியில் இடப்பட்டது. இதைக் கண்ட சுநீதைத் தாய், "இனி அரசாள யார் உள்ளார்?" என்று கவலை உற்றாள். 927

இலைகளும் பூக்களும் விவரத் தொடுக்கப்பட்ட மாலை சூடிய மன்னன் வேனன் இறந்த பின், கடல் சூழ்ந்த நாடு எங்கிலும், சிற்றரசர்கள் அங்கங்கே தலை எடுத்தனர். 928

நாட்டில் வளம் குறைந்தது; கள்ளர்கள் செல்வத்தைக் கொள்ளை அடித்துச் சென்றனர். இவ்வாறு நாடு கெட்டதைக் கண்ட அந்தணர்கள், இறந்த வேனன் உடம்பை எடுத்துக் கடைந்தனர். 929

அந்தணர்கள் வேனன் உடலின் துடைப்பாகத்தைக் கடைந்த பொழுது, அதிலிருந்து 'பாகுகன்' என்பவன் தோன்றினான். நீல உடலும், ஒளி மிகுந்த சிவந்த குடுமியும், ஆலகால நஞ்சு போன்ற தீக்கொழுந்துடன் அவன் தோன்றினான். 930

இரவு போன்ற நிறமுடைய அவன், வில்லேந்தி நின்றான். 'என்ன செய்ய வேண்டும்?' என அவன் அந்தணர்களைக் கேட்கவும், அவர்கள், அவனை 'நில்' என்றார்கள். ஆதலால் அவன் 'நிடாதன்' எனப் பட்டான். 931

வேட்டுவர் எனப் பெயர் மேவி விண்தொடு
கோட்டுமால் வரையினும் கொங்கு விம்முபூங்
காட்டினும் வாழ்பவர் காய்சி னத்தகூர்
வாள்திறல் அன்னவன் வழியில் தோன்றினார். 932

தேன்த தும்புசெந் தாமரை செற்றுஒளி
கான்ற திங்கள் வதனம் கவினமுன்
வான்த ழைத்திட வந்த அமுது எனத்
தோன்றி னாள்இடக் கையின் ஓர் தோகையே. 933

இருளை நுங்கும் எரிமணிப் பொன் தொடி
சொரியும் காந்தி துலங்கும் வலக்கையின்
பிருது என்னும் பெருநில மன்னவன்
உருவ ஞாயிறு போல உதித்தனன். 934

அலர்ப்பொலம் பொகுட்டின் வாழும் அந்தணன் ஆங்கு நண்ணி
விலக்கரும் களிநல் யானை வெந்திறல் விளங்கு வேனன்
வலக்கரம் கடைய வந்து தோன்றிய மன்னர் மன்னன்
இலக்கணக் கிடக்கை நோக்கி ஈங்கிவன் மாலே என்றான். 935

ஏந்துஎழில் வாய்ந்த வேனன் இடக்கரம் கடையத் தோன்றும்
மாந்தளிர் அனைய மேனி மழைமதர் நெடுங்கண் நங்கை
காந்தியும் கவினும் நோக்கி களியிளம் சுரும்பர் பாட
தேம் துளி பிலிற்றும் தண்பூந் திருமகள் இவளே என்றான். 936

பில்குதேன் கமழ்அலங்கல்
பிருதுஎன் றுஉரைக்கப் பெற்ற
கொல்களிற் றுஉழவ ற்குஅந்த
அருச்சியை குவளை தாழ
வில்உமிழ் கணையை வென்று
வேலினுக்கு ஓலை விட்ட
சில்லரித் தடங்க ணாளை
திருமணம் புணர்த்தி னான்ஆல். 937

இந்த நிடாதன் வழியிலேயே வேடர்கள் தோன்றினார்கள். பெரிய மலைப் பகுதிகளிலும் மணம் வீசும் மலர்கள் நிறைந்த காடுகளிலும் வாழ்ந்து வரும் இவர்கள் வேடர்கள் எனப்பட்டனர். 932

அந்தணர்கள் வேனன் உடம்பின் இடக்கையைக் கடைந்தனர். அதிலிருந்து 'அர்ச்சிஸ்' என்னும் பெண் உதித்தாள். தேன் ததும்பும் செந்தாமரை போன்றதும் சந்திரன் ஒளி பெற்றதும் ஆன அழகிய முகத்துடன் தோன்றிய இவள், இலக்குமியின் அம்சம் ஆவாள். 933

அந்தணர்கள், வேனனின் உடலின் வலது கையைக் கடைந்தனர். இருட்டை விழுங்கும்படியான, ஒளி வீசும் அந்த வலக் கையிலிருந்து 'பிருது' என்னும் அரசன் தோன்றினான். சூரியனைப் போல் ஒளியுடன் கூடிய இவன் பிற்காலத்தில் பேரரசனாகத் திகழ்ந்தான். 934

தாமரையில் வாழும் பிரமதேவன் அங்கு வந்தான். யானை போன்ற வலிமை பெற்ற வேனனின் வலது கரத்தைக் கடைந்ததால் தோன்றிய 'பிருது'வின் அங்க லட்சணங்களைக் கண்டு,'இவன் திருமாலின் அம்சம் ஆவான்' என்று பிரம தேவன் கூறினான். 935

அழகு பொருந்திய வேனனின் இடக்கையைக் கடைந்த பொழுது உதித்த நங்கை மாந்தளிர் போன்ற மேனி கொண்டாள். மேகம் போல் அழகிய கருங்கண்ணைப் பெற்ற அவள் ஒளியைக் கண்ட பிரமதேவன், 'இவள் தேன் துளிர்க்கும் தாமரையில் வாழும் திருமகளே' என்று கூறினான். 936

தேன் சொட்டும் மலர் மாலை அணிந்த 'பிருது' யானை மீதேறிப் பவனி வரவல்லவன். 'அர்ச்சி' என்னும் அந்த மங்கையோ குவளை போன்ற கண் பெற்றவள்; வில்லினின்று புறப்படும் அம்பு போன்ற கூர்மையும், வேலாயுதத்தின் சீர்மையும் உடைய கண்கள் அவை. இத்தகைய அழகிய அர்ச்சியைப் பிருது திருமணம் செய்து கொண்டான். 937

அரியணை வழங்கினன்அளகை காவலன்
திருமுடி நல்கினன் தேவர் கோமகன்
வருணன்வந்து அளித்தனன் வட்ட வெண்குடை
விரிநிலாக் கவரிகால் வேந்தன் வீசினான். 938

கலைமகள் திங்கள்அம் கலைஎ னகுலாய்
அலர்கதிர் விரிக்கும்முத் தாரம் ஈந்தனள்
பலர்புகழ் குழவியாம் பருதி போல்திகழ்
மலர்மகள் நிதித்திரு மணப்ப நல்கினாள். 939

பார்மகள் வழங்கினள் பசும்பொன் பாதுகை
வார்கடல் குளிறுவெள் வளைஅ ளித்ததுஆல்
கார்தவழ் குன்றொடு கல்லென் மாநதி
கூர்நிதிக் குப்பைகள் கொடுவந்து உற்றன. 940

கள்ளவிழ் மலரினான் கவயம் நல்கினான்
அள்ளிலைத் துளவினான்ஆழி நல்கினான்
வெள்ளிஅம் பொருப்புஉறை விமலன் ஈந்தனன்
தெள்ஒளி பொதுளிய செம்பொன் வாள்அரோ. 941

கலைமதி சதம்என கதிர்செய் கேடகம்
மலைமகள் உதவினண் மறலி நல்கினான்
உலைவுஅறு வெங்கதை உளுற்றும் மாதவர்
நிலைபெற வழங்கினர் நிகழ்த்து வாழ்த்துஅரோ. 942

வலம்படு சிலைஅழற்கு இறைவ ழங்கினன்
இலங்குசெங் கதிர்க்கணைஇரவி ஈந்தனன்
அலங்குளை வெண்பரி அளித்ததுஅம்புலி
பொலங்கொடித் தேர்மயன் புரிந்து நல்கினான். 943

மருவிரி மலரினான் அன்ன மாதவர்
விரைகமழ் பூம்புன லாட்டி வேந்தனை
அரியணைஇ ருத்தினர்அலங்கு செங்கதிர்
சொரிதரு மணிமுடி சூட்டினார்அரோ. 944

பிருதுவுக்கு அளகாபுரி மன்னன் குபேரன் சிம்மாசனம் அளித்தான். தேவர்கள் அரசன் இந்திரன் கிரீடத்தைத் தந்தான். வட்டமான கொற்றக் குடையை வருணன் வந்து கொடுத்தான். வாயு பகவான், கவரியை வீசி உபசாரம் செய்தான். 938

சந்திரன் ஒளி வீசும் நீண்ட முத்து மாலையைக் கலைமகள் பிருது மன்னனுக்குப் பரிசாக அளித்தாள். பலராலும் போற்றப்படும் இளஞ்சிவப்புச் சூரியனை ஒத்த ஒளியுடைய திருமகள், செல்வமாகிய நிதியை அளித்தாள். 939

பச்சைப் பொன்னால் ஆகிய பாதுகையைப் பிருது மன்னனுக்குப் பூமா தேவி அளித்தாள். சமுத்திர வேந்தன், ஒலி எழுப்பும் சங்குகளைக் கொடுத்தான். மேகம் போன்ற மலைகளும் ஒலி எழுப்பி ஓடும் நதிகளும் செல்வங்களைக் கொண்டு வந்து குவித்தன. 940

தேன் அவிழும் தாமரையில் வாழும் பிரமன் பிருதுவுக்கு உடற்கவசம் கொடுத்தான். திருத்துழாய் சூடிய திருமால், அவனுக்குச் சக்கரத்தை கொடுத்தான். சிவந்த வாளை, வெள்ளி மலையாகிய கையாலயத்தில் வாழும் சிவன் அளித்தான். 941

நூறு சந்திரர்களுக்கு ஒப்பான கேடயம் ஒன்றை மலைமகளான பார்வதி 'பிருது' வுக்குக் கொடுத்தாள். தாக்கும் வலிமை உடைய 'கதை' என்னும் ஆயுதத்தை யமன் அவனுக்கு அளித்தான். தவம் மிகுந்த சான்றோர் பிருது மன்னனை, 'என்றும் நிலையாக வாழ்க' என்று வாழ்த்தினார்கள். 942

வெற்றி தரும் வில்லை அக்னிதேவன் கொடுத்தான். சிவந்த அம்புக் கணைகளை சூரியன் தந்தான். உளை மயிற் பொருந்திய உயர்ந்த வெண்மையான குதிரைகளைச் சந்திரன் அளித்தான். கொடியுடன் கூடிய தேரினை மயன் கொடுத்தான். 943

மலரில் தங்கும் பிரமனை ஒத்த தவம் மிகுந்த முனிவர்கள் பிருது மன்னனை நீராட்டிச் சிம்மாசனத்தில் இருத்தினார்கள். ஒளி விடும் முத்துக்கள் பதித்த கிரீடத்தை அவன் தலையில் வைத்துச் சூட்டினார்கள். 944

அந்தர துந்துபி அதிர்ந்தது ஆய்பிழி
சிந்துபொன் திருமலர் தேவர் சிந்தினர்
வந்தனர் ஆடினர் வான மங்கையர்
பைந்தொடை யாழினோர் பாடல் மேயினார். 945

சந்திரன் உயிர்க்குஎலாம் தாபம் நீக்கலான்
இந்திரன் உலகுக்குஇனிது அளிக்க லான்என
சுந்தர அரசனை முனிவர் சொற்கொடு
வந்தியர் முதலினோர் வழுத்தல் மேயினார். 946

மாற்றலர்க்கு அணுகுறா மாட்சி யான்அனல்
கூற்றுவன் அறம்பிழைத் தோரைக் கோறலான்
ஏற்றுநல் தூதரான் எங்கும் நாடலால்
காற்றினுக்கு இறைஎனக் கருத லாகுமே. 947

அளவிடற்கு அரியநல் ஆற்றல் மேவலான்
வளமலி வாரிதி வருணன் ஈகையான்
ஒளிதரும் இருநிதிக் குஉறையுள் ஆகையான்
களிசெயும் அளகையர் காவ லாளனே. 948

அணிசரா சரம்சம னாகப் பார்த்தலான்
தணிவில்வெங் கதிர்க்குழாம் தழைக்கும் வேந்தன் நல்
உணர்வுஉறு நோன்மையின் உயிர் அளித்தலான்
மணிதிகழ் வாரிசூழ் வைய மங்கையே. 949

பார்மகள் பசுவெனக் கறந்து பல்வளம்
ஆர்தர வேள்விகள் ஆற்றி ஆண்டபின்
தேர்சன காதியர் செப்ப உள்தெளிந்து
தோர்பதம் பெறும்இவன் என்ன ஓதினார். 950

என்றுசொற் றனர்கள் தாம்இனிது உவப்புற
மன்றல்அம் பூந்தொடை மாசி லாதுகில்
குன்றுஎன வருநிதிக் குவைவ ழங்கினான்
வென்றிஅம் குடுமிவேல் வேந்தர் வேந்தனே. 951

பிருது மன்னனின் முடிசூட்டு விழாவில் வானில் துந்துபி வாத்தியம் முழங்கிற்று. தேவர்கள் பூக்களைச் சொரிந்தனர். தேவமாதர்கள் வந்து நடனம் ஆடினார்கள். யாழ் ஏந்திய கந்தருவர்கள் இசைத்தார்கள். 945

"பிறர் தாபங்களைப் போக்குவதால் பிருது மன்னன் சந்திரனை ஒத்தான். உலகைக் காப்பதால், அவன் இந்திரனை ஒத்தான்." என்று மிக நல்ல வசனங்களால், முனிவர்களும் வந்தியர்களும் வாழ்த்தினர். 946

பிருது பகைவரால் நெருங்க முடியாத வலிமை உடையவன். தர்மம் தவறியவரை அவன் தண்டித்தலால் அக்னியையும், யமனையும் ஒத்தான். அவன் தூதர்களை எங்கும் அனுப்பி வைத்ததால், வாயு தேவனைப் போலவும் விளங்கினான். 947

அளவில்லாத ஆற்றல் உடையவன். ஆதலால் பிருது மன்னன் கடலை ஒத்தான். தன் ஈகைக் குணத்தால் அவன் வருணனைப் போன்றிருந்தான். ஒளி மிகுந்த செல்வச் செழிப்புக்கு அவனே இருப்பிடமாக இருந்ததால், அளகாபுரிக் குபேரன் போல் விளங்கினான். 948

தன் நாட்டிலுள்ள குடிமக்களையும் உயிரினங்களையும் பிருது சமமாக எண்ணிக் காத்ததால், புகழுடைய இந்திரனை ஒத்தான். தன் பொறுமைக் குணத்தால் அவன் பூமா தேவியை ஒத்தான். 949

பசுவைப் போல் விளங்கும் பூமியைப் பல வளங்கள் சுரக்கும் படி காப்பாற்றினான். வேள்விகள் பலவும், பிருது செய்தான். சனகாதிய முனிவர்கள் வந்து "மன்ன! தத்துவத்தை உணர்ந்து, நீ தெளிவு பெறுவாயாக" என்று வாழ்த்திச் சென்றனர். 950

இவ்வாறு வாழ்த்திய முனிவர்களுக்கும் வந்தியர் முதலியோர்க்கும் பிருது மன்னன், மாலைகளையும் துகில்களையும் செல்வக் குவியல்களையும் வழங்கினான். வெற்றியுடன் கூடிக் கூரிய நுனி உடைய வேல் ஏந்திய பிருது சக்கரவர்த்தியாக விளங்கினான். 951

செறிந்தசெங் கதிரவன் திகைப்ப தெள்ளிதின்
மறிந்ததெள் திரைஇரு நிலம்வலம் கொளா
எறிந்தது குறும்புஇருள் ஏழி சைச்சுரும்பு
உறைந்தபூந் தாரினான் ஒற்றை ஆழியே. 952

வருந்தினம் பசிக்கனல் வருத்த பல்வளம்
கரந்தது நெடுநிலம் காத்தி நீஎன
பொருந்துபு மன்பதை புகலக் கேட்டலும்
விரிந்தபூந் தாரவன் வில்எ டுத்தனன். 953

திண்திறல் மன்னவன் சிலையெ டுத்தது
கண்டனள் நெஞ்சகம் கலங்கி ஆன்உருக்
கொண்டனள் ஓடினள் குரைக்கும் வெண்திரை
மண்திணி மாநில மடந்தை என்பவே. 954

கோடிய சிலையினன் கொற்ற அம்பினன்
ஆடுஎழு அனையதோள் அரசன் ஆண்டெழுந்து
ஓடிய திசைஎலாம் ஓடி ஒல்குபு
வாடினள் நின்றனள் வழுத்தி னாள்அரோ. 955

கல்லெனும் புயத்துஎனைக் காப்பத் தோன்றும்நீ
கொல்லின்யார் காக்குநர் கொற்ற மன்னவர்
மெல்லிய லார்பழி விரும்பி லார்என
மல்லலம் புவிமகள் வழங்கி னாள்அரோ. 956

ஆடவர் ஆயினும் அலியர் ஆயினும்
வாடிய நுண்ணிடை மகளிர் ஆயினும்
நீடுஉயிர்க்கு அருந்துயர் நினைக்கின் வீட்டுதல்
ஆடுடை அரசர்நல் அறமது ஆயினும். 957

என்னைநீ கொல்கலாது இனிதின் ஓம்புதி
மின்நகு பருதிவேல் வேந்தர் வேந்தநீ
சொன்னன மறாதுயான் சுரப்பல் என்றனள்
அன்னவன் அருள்சுரந்து அறைதல் மேயினான். 958

ஏழிசைகளையும் ஒலிக்கும் வண்டுகள் தங்கும் மலர் மாலை அணிந்த பிருது சக்கரவர்த்தி தன் ஆணைச் சக்கரத்தால் கடல் சூழ்ந்த நாட்டை ஆண்டு காப்பாற்றினான். தீய குறும்புகளாகிய தீமையைப் போக்குவதில், அவன் சூரியனை ஒத்து விளங்கினான். 952

இவ்வாறு ஆட்சி நடக்கும் காலத்தில், ஒரு சமயம் நாட்டில் பஞ்சம் நிலவிற்று. அப்பொழுது மக்கள் கூட்டம் அரசனை அணுகி "பசியாகிய நெருப்பால் நாங்கள் வருந்துகிறோம். எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று முறையிட்டது. உடனே அவன் தன் வில்லுடன் புறப்பட்டான். 953

அரசன் வில்லை எடுத்தது கண்ட பூமி தேவி, ஒரு பசுவின் வடிவத்தை எடுத்தபடி ஓடினாள். நெஞ்சம் கலங்கி ஓடிய அவளை அரசன் பின் தொடர்ந்தான். 954

வளைந்த வில்லுடனும் அம்புகளுடனும், தோள் வலிமை பெற்ற பிருது மன்னன், எல்லாத் திசைகளிலும் ஓடிப் பூமாதேவியைப் பின் தொடர்ந்தான். ஆற்றாத அவள் வாடிய படி நின்றாள். அரசனிடம் பின்வருமாறு பேசலுற்றாள். 955

"மலை போன்ற உன் தோள்களால் பூமியாகிய என்னைக் காப்பதற்கன்றோ நீ தோன்றியவன்! வெற்றியுடைய அரசர்களே கொல்லத் தொடங்கினால் வேறு யார் தான் காப்பாற்றுவார்? பெண்களின் பழிச்சொல்லுக்கு நீ ஆளாகலாமோ?" 956

"ஆடவரோ, அலிகளோ, நுண்ணிடைப் பெண்களோ யாவராயினும் துயரம் உண்டாக்கும் தீமைகள் செய்தால், அவர்களை அரசர்கள் கொன்று, தண்டிப்பது அறமே ஆகும் என்பதறிவேன். 957

ஆயினும் நான் அப்படிப்பட்டவள் அல்லள். எனவே நீ என்னைக் கொல்லாது காப்பாற்று. சக்கரவர்த்தியே! நீ என்னை விட்டால், நான் வளங்களைச் சுரந்து தருவேன். இதில் தவற மாட்டேன்" என்று பூமாதேவி கூறினாள். மன்னனும் அதை ஏற்றுப் பதில் கூறினான். 958

கொல்கலன்; அஞ்சலை கொடுக்கல் வேண்டும்ஆல்
பல்வளம் என்றுஇரும் பனைக்கை யானையான்
மெல்லெனக் கூறலும் வேலை சூழ்தரு
தொல்புகழ் நிலமகள் தொழுது சொல்லுவாள். 959

என்னைமுன் பாதலத்து ஏன மாகியே
துன்னிவந்து எடுத்துஅரும்துயரம் போக்கிய
கன்னிஅம் துளவுஅணி கண்ணன் ஆதிநீ
உன்அருட்கு எல்லையார் உரைக்க வல்லரே. 960

அறம் தழைந் திடஅருள் அரசு இலாமையால்
உறைந்தநல் வளன்எலாம் ஒளிப்ப நின்றனன்
கறந்துகொள் கன்றினால் என்று காதல்செய்
நிறைந்தபல் வளன்நில மங்கை நல்கினாள். 961

மனுஇளம் கன்றா மானவேல் பிருது
மன்னவன் கறந்தனன் பைங்கூழ்
முனிவரர் வியாழம் ஒருகுழக் கன்றா
முதுமறை கறந்தனர் அமரர்
பனிஇரு விசும்பு காப்பவன் கன்றா
பால்படக் கறந்தனர் சோமம்
கனகன்மா மதலை வளரிளம் கன்றா
களிநறா கறந்தனர் அவுணர். 962

தென்புலத் தவர்அங்கு ஔவியம் கறந்தார் செஞ்சுடர் அரியமா கன்றா
மின்பிறழ் மணிசேர் தக்ககன் கன்றா விடம்கறந் தனகொடும் பாந்தள்
இன்புற அரக்கர் இயக்கர்பேய் முதலோர் இலங்குகண் ணுதல்அரன் கன்றா
கொன்பெறு கபாலம் தனில்நனி கறந்தார் குருதியோடு அருந்தசை மாதோ.
963

கஞ்சநாண் மலர்க்கண் கபிலனே கன்றா கறந்தனர் சித்தர்தம் கலையாழ்
விஞ்சைகந் திருவர் கறந்தனர் எழில்சேர் விளங்குதம் காவலன் கன்றா
அஞ்சிறைப் பறவை கலுழன் ஓர் கன்றா வடர்சினைப் பழுமரம் கறந்த
மஞ்சுசூழ் இமய மால்வரை கன்றா மணிக்குலம் கறந்தன வரைகள்.
964

"பூமியே! நீ அஞ்சாதே! உன்னை நான் கொல்லேன். ஆனால் நீ எல்லாவளங்களையும் சுரந்து தர வேண்டும்" என்றான். அதனைக் கேட்ட நிலமகள் அவனைத் தொழுது, பின்வருமாறு கூறினாள். 959

"மன்னர்மன்ன! நீ, முன் ஒரு சமயம் வராக வடிவம் எடுத்து என்னைப் பாதாளத்திலிருந்து தூக்கிக் காப்பாற்றினாய் . என் துயரம் போக்கிய, திருத்துழாய் மார்பனான திருமாலின் அம்சமே நீ! உன் அருளின் எல்லையை யாரால் கூற இயலும்? 960

உலகில் தர்மம் அழிந்ததால், அருளுடன் ஆட்சி செய்வோர் இல்லாமற் போயினர். அதனால் தான் நான் இதுவரை வளங்களை ஒளித்து வைத்தேன். இனி அவற்றைத் தருவேன். கன்றினை ஊட்டி, என்னிடமிருந்து எல்லா வளங்களையும் நீ கறந்து கொள்" என்று பசுவின் வடிவான பூமாதேவி கூறினாள். 961

சுவாயம்பு மனுவைத் தன் கன்றாகக் கொண்ட பிருது மன்னன் செல்வத்தைக் கறந்தான். முனிவர்கள் பிரஹஸ்பதியைக் கன்றாகக் கொண்டு வேதத்தைக் கறந்தனர். தேவர்கள் வானுலகரசன் இந்திரனைக் கன்றாகக் கொண்டு அமுதத்தைக் கறந்தார்கள். இரணியன் புதல்வன் பிரஹ்லாதனையே கன்றாகக் கொண்டு அசுரர்கள் மதுவைக் கறந்தனர். 962

பிதிரர்களாகிய தென் திசையோர் அரிசிமாவைக் கன்றாகக் கொண்டு கவ்யம் என்னும் உணவைக் கறந்தார்கள். மணிகளுடைய உச்சியுடைய தக்ஷன் என்பவனைக் கன்றாகக் கொண்டு பாம்புகள் கறந்தன. இயக்கர், அரக்கர், பேய் முதலானோர் நெற்றிக் கண்ணுடைய சிவனையே கன்றாகக் கொண்டு, அவன் கபாலத்தில், இரத்தத்தையும், கொழுப்பையும் கறந்தனர். 963

சித்தர்கள், தாமரைக் கண்கள் பெற்ற கபில தேவரைக் கன்றாகக் கொண்டு கலைகளைக் கறந்தனர். வித்தியாதரர்கள் தம் அரசனான விச்வாவசுவையே கன்றாகக் கொண்டு யாழ்வித்தையைக் கறந்தனர். அழகிய இறக்கை பெற்ற கருடனையே கன்றாகக் கொண்டு ஆலமரம் கிளைகளைப் பெற்றன. மேகம் சூழ்ந்த மலைகள் இரத்தினத் தொகுதிகளைக் கறந்தன. 964

இத்திறம் உலகம் எல்லாம் ஏற்றன கறந்து கொள்ள
அத்தகு சிறப்பு வாய்ந்த ஆனுருக் கொண்டு நின்று
மொய்த்தவல் இருள்கால் சீக்கும் முழுமணிச் சுடிகை நெற்றி
பைத்தலைஅரவம் ஏந்து பார்வளம் சுரந்தது அன்றே. 965

நிவப்பொடு தாழ்வு இன்று ஆக நெடுநிலம் கவர்ந்து கொண்ட
குவட்டுஇரும் குன்று வல்வில் கோடியால் எறிந்து சாய்த்து
கவித்தனன் கவிகை ஒன்று களியிளம் சுரும்பர் பாய்ந்து
தெவிட்டநுண் தேறல் மாந்தி செறிநறுந் தெரியல் வேந்தே. 966

நாடுஎழில் புரங்கள் என்றும் நகரென்றும் அகரம் என்றும்
கேடகம் பாடி என்றும் கிளர்குடி சேரி என்றும்
நீடிய அரண்கள் என்றும் நிகழ்த்திடப் பட்ட இன்னும்
ஆடல்அம் சிலையான் இப்பார் அளித்தநாள் பெற்ற பேரே. 967

பிருதிவி எனும் பேர் பெற்று பெண்என விளங்க இப்பார்
ஒருகுடை நிழற்று செங்கோல் உறுபுகழ்ப் பிருது மன்னன்
வரைபுரை மார்பம் புல்லி வரிவிழி அருச்சி யென்பாள்
பொருஅரும் எழில்சேர் ஐந்து புதல்வரை உதவி னாள்ஆல். 968

விலங்கிவில் உமிழும் ஒண்கேழ்
விழுமணி வேலை வீச
நலம்கெழு நதிகள் எல்லாம்
நறுநெய்யும் பாலும் நல்க
மலர்ந்தபூந் தருக்கள் எல்லாம்
மதுமழை பொழியா நிற்ப
அலங்குஉளைப் புரவி வேள்வி
ஆற்றினன் அரசர் கோமான். 969

ஒன்றுஒழி நூறு வேள்வி
ஆற்றிமற் றொன்றும் ஆற்றா
நின்றுழிப் பொறுக்கல் ஆற்றான்
நிரையுளைப் புரவி வெளவி
மின்திகழ் சடிலம் தாழ்த்து
வெண்தலைக் கரத்தன் ஆகி
குன்றெறி வயிர ஒள்வாள்
கொற்றவன் போயி னான்ஆல். 970

மேற்கண்டவாறு உலகம் எங்கும் வளங்கள் நிறைந்தன. பசு வடிவத்தில் நின்ற பூமி இவ்வாறு எல்லாச் செல்வங்களையும் கறந்தது. இருளைப் போக்கும் ஒளி மணியைத் தன் உச்சியில் பெற்ற ஆதி சேடனால் தாங்கப்படும் பூமி இவ்வாறு சிறப்புற்றது. 965

வண்டுகள் தங்கும் தேன் துளிர்க்கும் மாலை அணிந்த வேந்தனான பிருது, நாட்டிலுள்ள மலைகளைத் திருத்தி நிலம் ஆக்கினான். உயர்ந்த சிகரங்கள் கொண்ட மலைகளை, வில்லேந்திய அம்புகளால் உடைத்துச் சாய்த்து நிலங்களாக மாற்றினான். 966

பிருது மன்னன் தன் நாடு அனைத்தையும் பல பகுதிகளாக்கி ஆண்டான். புரங்கள், நகரங்கள், அகரங்கள், பாடிகள், சேரிகள் என்று பல வகைப்பட்ட பகுதிகளை அவன் ஏற்படுத்தினான். அரண்கள் பல எடுத்தான். இவ்வாறு பல எடுத்தான். இவ்வாறு பல அமைப்புகளை உண்டாக்கி நாட்டை அவன் ஆண்டான். 967

இவ்வாறு பூவுலகம் பிருது மன்னனால் ஆண்டு காப்பாற்றப்பட்டதால் 'பிருதிவி' என்று பெயர் பெற்றது. செங்கோல் செலுத்தி ஆண்ட பிருது மன்னன், செவ்வரி படர்ந்த கண்களுடைய அர்ச்சிஸ்ஸுடன் இல்லறம் செய்தான். அவர்களுக்கு ஐந்து புதல்வர்கள் பிறந்தனர். 968

பிருதுவின் நாட்டில், ஒளி மிகுந்த ஏழுகடல்களும் மணிகளைக் கரைகளில் கொழித்து வளம் தந்தன. நன்மை மிகுந்த நதிகள் வற்றாமல் பாய்ந்து பயிர் வளம் செழித்ததால், பால் வளமும் நெல் வளமும் ஓங்கின. மரங்கள் தழைத்து, பூக்கள் தேனைச் சொரிந்தன. பிருது மன்னன் அசுவமேத யாகம் செய்தான். 969

பிருது மன்னன் தொண்ணூற்றொன்பது யாகங்கள் செய்து முடித்த பின் அசுவமேதத்துக்கான குதிரையை அவிழ்த்து விட்டான். இதைப் பொறுக்க முடியாத, இந்திரன் சடைமுடியும் கபாலமும் உடைய சிவன் வடிவில் மறைந்து வந்து, அக்குதிரையை இழுத்துச் சென்றான். மலையையே வஜ்ராயுதத்தால் வெட்டி வீழ்த்திய தேவர்கள் தலைவன் அன்றோ அவன்! 970

அரசுஇளம் குமரன் தன்னை அத்திரி ஆங்கு நோக்கி
புரவிநீ வல்லை மீட்பாய் போயதுஎன் றுஉரைத்தான் ஆக
வரிசிலைத் தடக்கை மைந்தன் வானவர்க்கு இறைவன் தன்னை
விரிசடை உடையான் என்று வெம்கணை தொடுக்கி லானே. 971

இந்திரன் ஆகும் இன்னோன்
ஈங்குஇவன் தன்னை ஏந்தால்
கொந்துஅழல் வாளி தூற்றி
கொல்லென முனிவன் கூற
மந்தரம் வெள்கு தோளான்
வரிசிலை குழைய வாங்க
அந்தரம் கரந்து நின்றான்
அமரர்கோன் புரவி விட்டே. 972

நொறில்வயப் புரவி மீட்டு
நுதியழல் வடிவேல் மன்னன்
சிறுவன்வந்து எய்த லோடும்
செழுந்தவக் கிழவர் நோக்கி
அறைகழல் அரவத் தானை
அரசிளம் கோமாற்கு ஓர்பேர்
விறல்விசி தாச்சு வன்தான்
இவன்என விளம்பி னாரால். 973

வல்லிருள் விளைத்து வல்லே வானவர்க்கு இறைவன் மீட்டும்
வில்உமிழ் கணையில் செல்லும் வெம்பரி கவர்ந்து போக
கொல்வல் ஈங்குஇவனை என்று குங்குமக் குவட்டின் வீங்கு
மல்அடு குவவுத் திண்தோள் மன்னவன் சீறி நின்றான். 974

சீறினன் எழுந்து வேந்தன் செஞ்சிலை தருக என்ன
வீறுசால் வேள்வி தன்னின் வெம்கொலை விளைத்தல் ஆகா
கோறும்நாம் இவனை இன்னே கொந்தழல் நெய்பெய்து என்ன
ஆறுஅறி முனிவர் கூற
அடைந்தனன் விரிஞ்சன் ஆங்கே. 975

அத்திரி முனிவர் பிருதுவின் மகனான விஜிதாச்வனை நோக்கி,"களவு போன அசுவமேத யாகக் குதிரையை நீ மீட்டு வா" என்று கூறினார். வில் ஏந்திய அப்புதல்வன், தேவேந்திரனைச் சடாபாரம் தரித்த சிவபெருமான் என எண்ணியதால், அம்பு எய்யாமல் நின்றான். 971

இதனைக் கண்ட அத்திரி முனிவன், "அரச புத்திரனே! இங்குக் குதிரையை இழுத்தவன் இந்திரன் ஆவான். அவன் மீது அம்பு எய்து கொல்வாய்" என்று கூறினான். மந்தரமலையும் வெட்கம் அடையும்படியான உயர்ந்த தோள்களுடைய இளவரசன் வில்லை வளைத்து அம்பு எய்யத் தொடங்கியதும், தேவர்கள் அரசன், இந்திரன், குதிரையை விட்டு விட்டு மறைந்தான். 972

இதன் பின்னர் அக் குதிரையைப் பற்றியபடி, வேல் ஏந்திய இளவரசன் யாகசாலை மீண்டான். அவனைக் கண்ட முனிவர், அவன் வெற்றியைப் பாராட்டி,'விஜிதாச்வன்' என்னும் பெயரை இட்டு ஆசி நல்கினார்...... 'விஜிதாச்வன்' என்பது குதிரையை வென்றவன் என்னும் பொருள் கொண்டதாகும்........ 973

தேவேந்திரன் மறுபடியும் வந்து, வில்லினின்று புறப்பட்ட அம்பு போலச் செல்லும் அசுவமேதக் குதிரையைக் கவர்ந்து சென்றான். இதனைக் கண்ட பிருது மன்னன் கோபம் அடைந்தான். குங்குமம் பூசப் பட்ட திரண்ட தோள்களை உடைய அவன் இந்திரனைக் கொல்வதற்கு எழுந்தான். 974

சீற்றத்துடன் எழுந்த பிருது மன்னன் 'வில்லைக் கொண்டு வருக' என்று ஆணை இட்டான். இதனைக் கேட்ட முனிவர், 'உயர்ந்த வேள்வி செய்யும் பொழுது கொலை செய்யக் கூடாது. நாமே ஓமகுண்டத்தில் நெய்பெய்து, அக்னிமூலம் மந்திர உபாசனையால் இந்திரனை அழிப்போம் என்று கூறினார். அப்பொழுது பிரமதேவன் அங்கே தோன்றினான். 975

மல்லல்அம் சிறப்பு வாய்ந்த
வானகம் புரக்கும் வேந்தன்
அல்லியம் கமலச் செங்கண்
ஆழியான் அல்ல னேகொல்
கொல்லுதல் அடுப்பது அன்றுஆல்
கொற்றவாள் அரச என்னா
சொல்லல்உற் றனன்ஆல் அம்பொன்
தோடவிழ் மலரி னானே. 976

மன்னநீ புரியும் வேள்வி
வருபயன் விழைந்தி லாயால்
துன்னரும் தனிவீட்டு இன்பம்
துய்ப்பதே விழைந்து நின்றாய்
இன்னது ஓர் வேள்வி ஒன்றும்
இயற்றுதல் ஒழிதி என்று
பொன்னுலகு அளிப்பான் தன்மேல்
பொருபகை போக்கி னானே. 977

விரைசெல இவுளி வேள்வி
வேட்டஅம் மன்னன் தன்பால்
மரகத வண்ணத்து அண்ணல்
வானவர்க்கு இறையோடு எய்தி
பொருதிறல் குலிச பாணி
புரிந்தது பொறுக்கல் வேண்டும்
அரசநீ வெகுளி உற்றால்
அருள்எவர் கண்ணது என்றான். 978

விழைவது தருதும் வேந்தே!
விளம்புதி என்ன வீழ்ந்து
தொழுதனன் வழுத்தி செய்ய
தோடவிழ் கமலம் பூத்த
மழைமுகில் வண்ண! முத்தி
வழங்குறும் நின்னைக் கண்டும்
அழிவதுஓர் பொருள்கொள் வார்கொல்
அறிவினர் என்று சொல்வான். 979

தாமரையில் தோன்றிய பிரமதேவன் பிருதுவையும் யாகம் செய்யும் முனிவர்களையும் நோக்கிப் பின்வருமாறு கூறினார். "வளம் நிறைந்த தேவருலகைக் காத்து ஆட்சி செய்யும் இந்திரன் தாமரைக் கண்களுடைய திருமாலின் அம்சம் அன்றோ! அவனைக் கொல்வது தகாது. வெற்றி வாளுடைய அரசே! இதைத் தவிர்ப்பாயாக. 976

மன்னனே! வேள்வியால் ஏற்படும் பயனை மட்டும் எண்ணியா நீ இந்த வேள்வி செய்கிறாய்? கிடைத்தற்கரிய வீடாகிய மோக்ஷ இன்பம் அடைய அன்றோ நீ இதனைச் செய்கிறாய்! ஆகவே பதவிப் பயன் கருதிச் செய்யும் வேள்வியை விடுத்துத் திருமால் பதம் அடையும் வழியைப் பின்பற்று" இவ்வாறு பிரமன் கூறியதைக் கேட்ட பிருது அரசன் இந்திரன் மீது தான் கொண்ட பகைமையை மறந்தான். 977

விரைந்து ஓடும் குதிரையை வைத்து அசுவமேத யாகம் செய்யும் பிருது மன்னனிடம் மரகத வண்ணத் திருமால், இந்திரனுடன் வந்து தோன்றினார். "அரசனே! நீ கோபம் கொண்டால் வேறு யார் தாம் அருளுடையவர் ஆவார்! வஜ்ராயுதம் ஏந்திய இந்திரன் செய்ததைப் பொறுத்திட வேண்டும்" என்று திருமால் மன்னனிடம் கூறினார். 978

"நீ வேண்டியதைக் கேள்; நான் தருகிறேன்" என்று திருமால் பிருது மன்னனிடம் கூறினார். அவன் உடனே பெருமான் திருவடிகளில் விழுந்து வணங்கினான். "தாமரை மலர்கள் பூத்தன போல் விளங்கும் திருக்கண்களும் மேகம் போன்ற திருமேனியும் உடைய எம்பெருமானே! உம்மையே நேரில் கண்டு சேவிக்கும் பாக்கியம் பெற்ற அடியேனுக்கு அழிகின்ற செல்வத்தை வரமாகக் கேட்பது அறிவுக்குப் பொருந்துமோ? உம்மை அன்றி வேறெதுவும் நான் வேண்டேன்" என்று பிருது கூறினான். 979

அள்ளிலைத் துளவப் பைந்தார் அமலநின் சரிதம் என்னும்
தெள்ளமுது இனிதின் மாந்தச் செவிபல வேண்டும் என்ன
புள்அவாம் புலவு வேலான் போற்றலும் பரமன் தானும்
வெள்ளிவெண் குடையான் அன்பு வியந்தனன் போயினான்ஆல்
980

திங்கள்அம் கவிகை வேந்தன்
செழுங்கதிர்ச் செல்வன் போல
அங்குஅதிர ஆழி ஒன்றே
ஆழிசூழம் உலகம் உய்த்து
கங்கைகா ளிந்தி என்ன
கரைபொரு நதியின் நாப்பண்
மங்குல்தோய் குடுமி மாட
மாநகர் வைகும் நாளில். 981

மாதவர் முனிவர் சித்தர்
வானவர் முதலோர் மொய்ப்ப
தாதுஅலர் தெரியல் மார்பன்
சத்திர வேள்வி ஆற்றி
மீதுஉறும் உடுவின்நாப்பண்
வெண்மதி எனவே நின்று
சோதிசேர் அவையுள் ளோரை
துதித்தனன் நோக்கிச் சொல்வான். 982

காவலர்க்கு அறஞ்செய் வோரை காத்தலும் மறஞ்செய் வோரை
பூவினில் கடிதல் தானும் பொருந்துதம் கருமம் என்பர்
தாஇலாக் கருமம் செய்தே இருமையும் தயங்கி னார்வெம்
கோவெனும் வேனன் அன்றி மனுமுதற் குலத்தி னாரே. 983

திருமகள் கொழுநன் செய்ய சேவடி வணங்கி நீரும்
மருவும் கருமம் செய்யின் வயங்குநால் பயனும் பெற்றே
இருமையும் விளங்கு வீரால் இப்புவி காவல் யானும்
ஒருவிடாது இன்பம் எய்தி உறுவன்மால் பதமும் மன்னோ. 984

அவன் மேலும் கூறுவான். "செறித்த திருத்துழாய் மாலை சூடியுள்ள எம் பெருமானே! உமது திவ்விய சரித்திர வைபவங்களை அடியேன் செவிமடுத்துக் குணானுபவம் பெறுவதே பாக்கியமாகும். அதற்கான காதுகள் பலவும் வேண்டும். வேறொன்றும் வேண்டாம்" என்று கூறினான். இவ்வாறு வேல் ஏந்திய மன்னன் கூறியதும் பரமன் அவன் பக்தியை வியந்து ஆசி செய்து அகன்றான். 980

சந்திர வட்டக் குடைக் கீழ் நின்று சூரியன் போல ஒளியுடன் நாட்டை ஆண்ட பிருது சக்கரவர்த்தி கங்கை, காளிந்தி நதிகளுக்கு நடுவே, பிரம்மாவர்த்த நகரை நிறுவினான். அங்கிருந்து கொண்டு கடல் சூழ்ந்த நாட்டை ஆண்டு காப்பாற்றினான். 981

தவசிகள், முனிவர்கள், சித்தர்கள், தேவர்கள் முதலியோர் புடைசூழப் பிருது மன்னன் சத்திர வேள்வியைச் செய்தான். வானில் மீன்கள் நடுவே சந்திரன் போல் விளங்கிய அவன், தன் அவையில் உள்ளோரிடம் பின்வருமாறு பேசினான். 982

"நாட்டில் அறம் செய்வோரைக் காப்பாற்றுவதும் பாவம் செய்வோரைத் தண்டிப்பதும் அரசர்களுக்குக் கடமை ஆகும். அத்தகைய தகுதியான கருமங்களை சுவாயம்பு மனுவின் குலத்தில் வந்த எம் அரசர்கள் செய்தனர். இம்மை மறுமைப் பயன்களை அடைந்தனர். கொடிய வேனன் ஒருவன் மட்டுமே இக்கடமை தவறினான். 983

திருமகள் கேள்வன் ஆன திருமால் திருவடிகளில் வணங்கி நீங்களும் உங்கள் கடமைகளை விடாமல் செய்து வந்தால், சிறப்புடைய நான்கு பயன்களான அறம் பொருள் இன்பம் வீடு பெறுவீர்கள். இதுவே இம்மைக்கும் மறுமைக்கும் பயன் அளிப்பதாகும். நானும் இவ்வுலகக் காவலை விடாமல் செய்து, திருமால் திருவடிகள் அடைவேன். 984

நிறைசுடர் இமையோர் தாமும்
நெஞ்சமுற்று இலங்கா நின்ற
அறைதழல் கடவுள் தன்னை
அன்பொடும் விளக்கும் வேதத்
துறையறி முனிவர்ப் போற்றின்
துளவினோன் மகிழும் என்றால்
மறையவர் பெருமை என்னால்
வழுத்துதற்கு எளிதன்று என்றான். 985

என்னலும் அவையோர் சொல்வார்
இரணியன் மகவி னாலே
துன்னிய சீரி னோடு
துலங்கினான் போல நின்னால்
நல்நெறி நீங்கு வேனன்
நவைஅற விளங்கி னான்ஆல்
இன்எழின் மகப்பெற் றோர்தாம்
இலங்குவர் எனும் சொல் மெய்த்தே. 986

தேன்இமிர் துளவோன் தாளில்
செறிந்திடும் அன்பை நீஇம்
மாநிலத்து அரசன் ஆகி
மருவிய திறத்தின் நாங்கள்
ஈனம்ஒன்று இன்றி இன்பம்
இருமையும் எய்தா நின்றேம்
கோன்இவண் நெடிது வாழ்தி
எனநனி கூறிப் போனார். 987

பெண்ணெனத் தனது தொல்லைப்
பெயரினால் விளங்கும் வண்ணம்
கண்அகல் ஞாலம் காக்கும்
காவலன் தன்பால் வந்து
நண்ணினர் சனகன் ஆதி
நல்தவக் கிழவர் நால்வர்
அண்ணல்நான் மறையே போல
அரும்பெறல் காட்சி மிக்கார். 988

வேதத்தை உணர்ந்து ஓதும் முனிவர்களை அன்புடன் போற்றித் துதித்தால், திருத்துழாய் சூடிய திருமால் மகிழ்வான். அக்னி தேவனையும், அவன் மூலமான வேள்வியையும் உணர்ந்தவர் இம்முனிவர்கள். இத்தகையோரைத் தேவர்களும் போற்றித் துதித்தால், திருமால் நெஞ்சு மகிழ்வான். ஆகவே அம்மறையோர் பெருமை சொல்வதற்கு எளிதோ?" 985

மேற்கண்டவாறு பிருதுச் சக்கரவர்த்தி அவையோரிடம் பேசியதும் அவர்கள் மறு மொழி கூறினார்கள். "மன்னனே! பிரஹ்லாதனின் சீர்மைக் குணத்தால், கொடியவனான அவன் தந்தை இரணியன், மன்னிப்பும் வாழ்ச்சியும் பெற்றான். அது போலக் கொடியவன் ஆன வேனனும், நீ அவன் மகனாகையாலே பெருமையும் சீர்மையும் பெறுகிறான். தம்மினும் மேலான மக்களைப் பெறும் தாழ்ந்த தந்தையும் பெருமை பெறுவது உன்னால் விளங்குகிறது. 986

இந்த மாநிலத்து அரசனாகிய நீ, தேன் சிந்தும் திருத்துழாய் மாலை சூடிய திருமால் திருவடிகளில் நீங்காத பக்தி உடையவன் ஆனாய். அதனால் உன் குடிமக்களாகிய நாங்கள் இம்மைக்கும் மறுமைக்கும் பயன் பெற்றோம். அரசே! நீ நெடு நாள் வாழ்க" இவ்வாறு அந்த அவைக்கு வந்த சித்தர் முதலியோர் வாழ்த்துக் கூறிச் சென்றார். 987

இவ்வுலகைப் பிருது மன்னன், தன் பெண்ணைக் காப்பது போலக் கவனித்து வந்ததால், இப்பூமி 'பிருதுவி' என்றாயிற்று. இத்தகைய பெருமை உடைய அவன் முன்பு சனகாதி முனிவர் நால்வரும் வந்து தோன்றினர். 988

கௌவைநீர் வேலி மன்னன்
கதும்என எழுந்து தாழ்ந்து
தெய்வமா தவத்தோர் அம்பொன்
சேவடிக் கமலம் போற்றி
எவ்வகை கடக்க லாகும்
ஏழ்பெரும் பிறவி வேலை
அவ்வகை மொழிமின் என்ன
அருந்தவர் உரைக்கல் உற்றார். 989

பொறிகளை அடக்கித் தன்னை
புலப்பட அறிந்தான் ஆயின்
உறுதுயில் கனவு தன்னின்
உற்றிடு படைகள் எல்லாம்
செறிதுயில் நீங்கின் பொய்யாம்
திகழ்பவன் ஒருவன் தான்போல்
நெறிஉறும் உபாதி நீங்கும்
நிறைந்து ஓர்அறிவாய் நிற்பான். 990

ஐயதாம் அறிவோடு இவ்வாறு
அமர்வதற்கு எளிதாம் ஏது
மைஅறு மாலை வந்து
மயக்கும் ஓர்அரவு போலும்
பொய்யுமாய் மெய்யு மாகி
பொலிதரும் மாயன் தாளாம்
செய்யதா மரைக்கண் அன்பு
செய்வதுஎன் றுஉரைசெய் வாரே. 991

உரவுநீர் உலகம் எல்லாம்
உண்டுஒளி கிளைக்கும் செஞ்சூட்டு
அரவணைத் துயிலும் அண்ணல்
அடிப்புணை பற்றி அன்றி
கரைஅழி பிறவி வேலை
கடப்புஅரிது என்று கூறி
மருவிரி தெரியல் மன்னன்
மனம்தெளித்து ஏகி னார்ஆல். 992

சனகாதியர் வந்ததும், கடல் சூழ்ந்த உலகைக் காக்கும் பிருது மன்னன் எழுந்து நின்று வணங்கித் தொழுதான். அவர்கள் திருவடித் தாமரைகளில் விழுந்து பின், "ஏழு பிறவிக் கடல்களை அடியேன் எவ்விதத்தில் தாண்டிக் கரை சேர்வேன்? அதற்கான வழியைக் கூறி அருள வேண்டும்" என்று வேண்டினான். 989

சனகாதியர் அரசனுக்குக் கூறிய அருளுரையாவது :-

"எவன் ஒருவன் இந்திரியங்களை அடக்கி, அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு ஞான நெறியில் நிலை நிற்கிறானோ, அவன் ஞானமயமாய்ப் பிரமத்தை உணர்கிறான். தூக்கத்தில் மனத்தால் படைக்கப்படும் கனவுப் பொருள்கள், உறக்கம் நீங்கியதும் விடுபட்டுப் போவது போல, மாயை ஆகிய தடை நீங்கும். 990

இந்த மாயை என்பது பொய்யை மெய்யாகத் தோற்றுவிக்கவல்லது. பூமாலையைப் பாம்பாக எண்ணி மயங்குதல் போல, மாயையால் அறிவின்மை ஆட்கொள்கிறது. இத்தகைய மாயையின் செயலைக் கடக்க வேண்டுமாயின், மாயவன் ஆகிய திருமால் திருவடித் தாமரைகளில் பக்தி செய்தே விடுவித்துக் கொள்ளமுடியும். 991

கடல் சூழ்ந்த உலகெங்கும் ஒளி பரப்பும் சிவந்த வணாமுடிகளைக் கொண்ட ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டுள்ள திருமால் திருவடிகளையே துணையாகப் பற்ற வேண்டும். பெருமான் பாதங்களைப் புணையாகக் கொண்டே பிறவிக் கடலை நீந்த முடியும். மலர் மாலை சூடிய அரசனே! இதனைத் தெளிவாகத் தெரிந்து கொள்" என்று அருளுரை கூறிய சனகாதியர் விடைபெற்றுச் சென்றனர். 992

உடம்புஅறப் பழுத்த லோடும் ஒருதனித் திகிரி மன்னன்
விடம்பொழி குடுமி வைவேல் வேந்துஎலாம் வந்து தாழ
மடங்கல்ஏறு அனைய கொற்ற மைந்தனை மௌலி சூட்டி
நடந்தனன் தேவி யோடு நறுமலர்க் கானத்து அன்றே. 993

கார்உறழ் கவிகை மன்னன்
கனியொடு கிழங்கு தின்னா
நீர்உணா சருகுஅருந்தா
நிறைந்து உலாம் காற்று மாந்தா
மாரியில் புனலில் தாழ்ந்தும்
மாறுஇலாது இருந்தும் வேனில்
ஆரழல் இடையே நின்றும்
அருந்தவம் அயராது ஆற்றும். 994

பூதம்ஐந் தொடும் பொறிகளைப் புகல்அகங் காரத்து
ஆதி நாளினில் தோற்றிய முறையதின் அடக்கி
ஏதம்இல்அகங் காரத்தை மகத்தினில் இருத்தி
ஓது சீர்திகழ் மகத்தினை மாயையின் ஒடுக்கி. 995

இருள்உயிர்க்குஅற இருந்து உலாம் உயிர்ப்பினை அடக்கி
உரைசெய் கின்றஆ தாரம் ஓராறும் உய்த்து அதனால்
பிரம ரந்திரம் பிளந்து உயர் பிரமமாய் ஒன்றாய்
பரமம் ஆகிய பசுந்துழாய் முகில்பதம் அடைந்தான். 996

தொடப்பெ றாததூ மலர்புரை மேனியள் பூமேல்
நடக்கல் ஆற்றலா நளினமென் சீறடி நங்கை
தடத்த கங்கையாம் தண்துறை ஆடினள் கொழுநன்
உடல்தழல் கொளீஇ ஒள்ளழல் மூழ்கிவீ டுஉற்றாள். 997

பிருது மன்னவன் பெருங்கதை பெட்பொடு கேட்போர்
விரியும் நான்மறை யோர்எனின் விழைந்தன பெறுவர்
அரச ராயின்ஏழ் புவியும் ஓர் ஆழிஉய்த்து ஆள்வர்
மருவு சீர்திகழ் வணிகரேல் வளர்திரு உறுவர். 998

பிருது மன்னன் முதுமை அடைந்து உடல் தளர்ந்தான். நஞ்சு தோய்ந்த உச்சியுடைய வேலாயுதம் தாங்கிய சிற்றரசர்கள் முன்னிலையில், பிருதுச் சக்கரவர்த்தி சிங்கக் குட்டி போன்ற தன் புதல்வனுக்குத் திருமுடி சூட்டினான். பிறகு தன் மனைவியுடன் தவம் செய்யக் காடு சென்றான். 993

காட்டில் தவம் செய்கையில், மேகம் போன்ற பிருது, முதல் நிலையில் கனி, கிழங்குகளை உண்டு வந்தான். பிறகு தண்ணீர் அருந்திச் சருகுகளை உணவாகக் கொண்டு தவம் செய்தான். அதன்பிறகு அவற்றையும் விட்டுக் காற்றை மட்டுமே சுவாசித்துக் கடுந்தவம் செய்தான். மழையென்று பாராது நனைந்தும் வெய்யிற் காலத்தில் தீயில் நின்றும் விடாமல் சோர்வின்றித் தவம் செய்தான். 994

ஐம்பூதங்களால் ஆன ஐந்து புலன்களையும் பிருது தவ வலிமையால் அடக்கி, அவற்றை அகங்காரத்தில் அடக்கினான். பின்னர் அந்த அகங்காரத்தை மகத் தத்துவத்தில் அடக்கிய பிறகு மாயையிடம் ஒடுக்கினான். 995

மாயை கெடும்படி அஞ்ஞானத்தை அழித்துப் பிராணாயாமம் செய்தான். அதன் பின்னர், அப்பிராணனை மூலாதார சக்கரத்திலிருந்து மேலே கொண்டு வந்து முறையாக, ஆறாவதான, பிரமரந்திர இடத்தில் நிலை நிறுத்தினான். இவ்வாறு பிரமறந்திரத்தில் பிராணன் அடங்கியதும், திருத்துழாய் மாலை சூடிய மேகநிறத் திருமால் பதம் அடைந்தான். 996

இவ்வாறு பிருது மன்னன் வைகுந்தம் அடைந்த பிறகு, அவன் மனைவி அர்ச்சிஸ் கங்கையில் நீராடினாள். தொட்டதும் வாடும் பூப்போன்ற உடம்பும், பூ மேல் நடக்கவும் முடியாத மென்மையான சிவந்த பாதங்களும் கொண்ட அந்நங்கை, தன் கணவன் உடம்மை தீயில் தகனம் செய்தபின்னர், தானும் அந்நெருப்பிலே விழுந்து உயிர் துறந்தாள். 997

மேற்கூறப்பெற்ற பிருது மன்னனின் சரித்திரத்தைப் பக்தியுடன் கேட்பவர்கள் அவரவர்களுக்கேற்ற நற்பயன்களைப் பெறுவார்கள். அந்தணர்கள் ஞான வளர்ச்சியையும் அரசர்கள் உலகை ஆளும் ஆட்சிப் பொறுப்பையும் வணிகர்கள் வளரும் செல்வத்தையும் பயன்களாகப் பெறுவார்கள். 998

தள்ள ரும்புகழ்ப் பின்னவர் தயங்கும்இக் கதையை
உள்உ வப்பொடு கேட்கின்நல் உத்தமர் ஆவர்
பிள்ளை இல்லவர் வினைவுறின் பிள்ளைகள் பெறுவர்
எள்அ ரும்திறல் விதுரஎன்று இசைத்தனன் முனிவன். 999

குருகு லத்தினில் உதித்தவேல் கொற்றவ என்று
பெருகு மாதவச் சுகமுனி பேசினன் என்னா
உருகு காதலோடு அந்தணர் உவப்புஉற உரைத்தான்
சொரியும் தேன்கமழ் துளவினோன் பதம்தொழு சூதன். 1000

5. பிராசீனபரிகி ஆவிர்த்தானன் கதை

பாய்ந்து வண்டுஇமிர் பசுந்தொடைப் பிருதுமுன் பயந்த
வாய்ந்த சீர்விசி தாச்சுவன் மதலைதன் மதலை
ஆய்ந்து முத்தழல் வேள்விகள் அளப்பில புரியும்
ஏந்தல் காதைகேள் எனமுனி விதுரனுக்கு இசைப்பான். 1001

பிளிறும் மும்மதக் களிற்றினான் பிருதுமன் மதலை
வளையும் விற்கொடு வானவர்க்கு இறைகவர்ந் துஏகும்
உளைவ யப்பரி மீட்டவன் உலகு எலாம் அளித்தான்
இளைய நால்வர்க்கு நால்திசை இனிதினில் கொடுத்தே. 1002

வாச வன்தனைப் பரிகவர்ந்து ஏகுநாள் மறையா
பூசல் வேட்டுஉறு வில்கொடு போய்வெருட் டுதலால்
பேசு பேர்அந்தர்த் தானன்என்று அடைந்திடு பெயரோன்
மாசி லாஎழில் சிகண்டினி தனைமணம் புரிந்தான். 1003

திசைஎ லாம்புகழ் நல்எழில் சிகண்டினி என்னும்
பசிய கோதையை மணந்துபா வகன்பவ மானன்
சுசிஎ னப்படும் மைந்தரை ஈன்றுதொல் வேள்வி
இசைகொள் பல புரிந்தனன் இசைக்கும்அவ் வேந்தன். 1004

தள்ளாத பெரும் புகழுடைய வேளாளர்கள், இக்கதையை உவந்து கேட்டால், உத்தமர்களாய் உயர்வார்கள். பிள்ளைகள் இல்லாதவர் இக்கதை கேட்டுப் பிள்ளைப் பேறு பெறுவார்கள். 999

இவ்வாறு பிருது மன்னன் சரிதத்தை மைத்திரேயர் விதுரருக்குக் கூறினார்.

"குருகுலத்தில் தோன்றிச் சிறப்பாக விளங்கும் வேலாயுதம் ஏந்திய அரசனே! மைத்திரேயர் விதுரருக்கு உரைத்த பிருது சரிதத்தை இது வரை கேட்டாய்" என்று சுக முனிவர் பரீட்சித்து மன்னனிடம் கூறினார். 1000

இக்கதையினை உருகிய அன்புள்ளத்துடன் சௌனகாதி முனிவர்கள் உவந்து கேட்கும்படி, சூதமாமுனிவன் கூறினான். தேன் துளிர்க்கும் திருத்துழாய் மாலை அணிந்த திருமால் பாதங்களில் வழிபடும் சிறந்த பக்தர் இச்சூதமாமுனிவர் ஆவார்.

5. பிராசீன பரிகி ஆவிர்த்தானன் கதை

மைத்திரேய முனிவர் விதுரனிடம், "பிராசீன பரிகியின் கதையைக் கேட்பாயாக" என்றார். வண்டொலிக்கும் மாலை அணிந்த பிருதுவின் புதல்வன் ஆன விஜிதாசுவன் பிராசீனபரிகியைப் பெற்றான். இம் மன்னன் மூன்று அக்னிகளாலும் கணக்கற்ற யாகங்கள் புரிந்தவன். 1001

மூன்று மதங்களைப் பொழியும் யானை போன்ற பிருதுமன்னன், தன் மகன் விஜிதாசுவனுக்கு அரசாட்சி கொடுத்தான். வில்லேந்தியபடி, தேவேந்திரன் கவர்ந்த அசுவமேதக் குதிரையை மீட்டுக் கொண்டு வந்த பெருமை உடையவன் இவன். அவன் தம்பியர் நால்வரும் நான்கு திசைகளிலும் ஆட்சியில் பங்கு கொண்டனர். 1002

இந்திரன் குதிரையைக் கவர்ந்து சென்ற பொழுது, போர் செய்த விஜிதாசுவன் மறைந்து நின்று போர் செய்ததால், 'அந்தர்த்தானன்' என்னும் பெயர் பெற்றான். குற்றமற்றவளும் நிறைந்த அழகும் உடைய 'சிகண்டினி என்னும் நங்கையை இவன் மணந்தான். 1003

திக்கெல்லாம் புகழ் பெற்ற அழகுடைய சிகண்டினியைத் திருமணம் செய்து கொண்ட அந்தர்த்தானன், அவள் மூலம் மூன்று பிள்ளைகளைப் பெற்றான். பாவகன், பவமானன், சுசி என்னும் பெயர்கள் உடையவர் இம்மூவர் ஆவார். 1004

மைந்தர் மூவரும் வளர்தழற்கு இறையவர் வசிட்டன்
வெம்தி றல்கொடும் சாபத்தால் வேந்தனுக்கு உதித்தார்
அந்த மூவரும் மீட்டும்அவ் அழற்குஇறை யானார்
சுந்த ரத்தவன் பின்னும்ஓர் தோகையை வேட்டான். 1005

அடல்செய் வேல்அந்தர்த் தானன்பின் அன்பொடு வேட்ட
தொடையல் வேய்நபச் சுவதிஎன் றுஉரைபெறுந் தோகை
உடைதி ரைப்புவி போற்றுஅவிர்த் தானனை உயிர்த்தாள்
விடல்அரும் திறல் வேந்தனும் அறுவரை அளித்தான். 1006

மேவிப் போர்செயும் கண்ணியர் வேள்அவிர்த் தானன்
பூவில் தான்தரும் புதல்வர்ஓர் அறுவரில் பொன்பூங்
காவில் சேர்ந்தவர் கூட்டுஉண கணக்கில்பல் வேள்வி
ஆவிர்த் தானனாம் மன்னவன் ஆற்றினன் அன்றே. 1007

மருத மைந்ததார் மன்னவர் புகழும்அம் மன்னன்
விருப்பின் வெள்ளிடை இன்றியே கீழ்திசை முகமாய்
தருப்பை பார்எலாம் பரப்பியஅத் தருப்பையின் பெயர்பெற்று
உருத்தி கழந்திடும் வேள்விகள் உலப்பில புரிந்தான். 1008

மறைவ டித்தஅம் மன்னவன் வயங்கிய செந்தீ
இறையும் கண்டனன் ஏக்கற இன்எழில் கனிந்த
நிறைபு ணற்குஇறை உயிர்த்தநே ரிழைதனை வேட்டான்
பிறைஎ னத்திகழ் மைந்தர்ஓர் பதின்மரை பெற்றான். 1009

காதல் மைந்தர்ஓர் பதின்மரும் கலைக்கடல் கடந்து
தாது அலர்ந்தசெந் தாமரைக் கண்ணனை வழுத்தி
மாதர் மென்மொழி மடவரல் பங்கினன் தெளிய
ஓது கீதைகேட் டுஉயர்வனம் அடைந்தனர் அன்றே. 1010

மருப ரந்தபூங் கானகம் மைந்தர் சென்று அடைய
விருப்பின் மீளவும் வேள்விகள் பற்பல புரியும்
தருப்பை யின்பெயர் படைத்தஅத் தரணிபன் தன்பால்
நரப்பு நல்லிசை பயில்முனி நண்ணினன் நவில்வான். 1011

இம்மூன்று புதல்வர்களும் அக்னி தேவர்கள் ஆவார். வசிஷ்ட முனிவர் சாபத்தால் இவர்கள் அந்தர்த்தானன் புதல்வர்களாய்ப் பிறந்தனர். ஆகவே அவர்கள் மீண்டும் அக்னிக்கே இரையாகி மறைந்தார்கள். அந்தர்த்தானன் 'நபஸ்வதி' என்னும் மங்கையை இரண்டாம் தாரமாக மணந்தான். 1005

போர் வலிமை பெற்ற அந்தர்த்தானன் மலர் மாலை சூடிய நபஸ்வதியுடன் அன்பொழுக இல்லறம் நடத்தினான். அவர்களுக்கு அவிர்த்தானன் என்னும் புதல்வன் பிறந்தான். கடல் சூழ்ந்த உலகம் முழுதும் போற்றும்படியான அவிர்த்தானன் ஆறு புதல்வர்களைப் பெற்றான். 1006

கண்ணழகுடைய பெண்களுக்கு மன்மதன் போல் விளங்கிய அவிர்த்தானனின் புதல்வர்களில் ஆவிர்த்தானன் என்னும் பெயருடைய புதல்வன் வேள்விகள் செய்வதில் சிறப்புப் பெற்றான். அமராவதியில் கற்பகப் பூங்காவில் வாழும் தேவர்களுக்கு இம்மன்னன் அவிஉணவு அளிப்பதற்காகக் கணக்கற்ற வேள்விகள் செய்தான். 1007

மணம் வீசும் மலர் மாலை அணிந்த அம் மன்னன் பூமி முழுவதும் கிழக்குத் திசையில் தருப்பைப் புல்லைப் பரப்பி வேள்வி செய்தான். இக் காரணத்தால் இவன் 'பிராசீனபர்ஹிஸ்' என்னும் பெயர் பெற்றான். 1008

வேதங்களை ஓதிச் சிறப்புற்ற ஆவிர்த்தானன், சமுத்திரராஜனுடைய மகளான 'சதத்ருதி' என்பவளைத் திருமணம் செய்து கொண்டான். சதத்ருதியின் அழகைப் பார்த்த அக்னிதேவனும் மனம் இழந்து மயங்கினான். அவிர்தானனுக்கும் சதத்ருதிக்கும் பத்துப் பிள்ளைகள் பிறந்தனர். 1009

அன்புள்ளம் கொண்ட இப் பத்துப் புதல்வர்களும் சாத்திரக் கலைகளைக் கற்று உயர்ந்தனர்; மகரந்தத்துடன் கூடிய செந்தாமரையை ஒத்த கண்களுடைய திருமாலைப் பக்தியுடன் வணங்கினர். இனிய மென்மொழி பேசும் பார்வதியை உடலில் பெற்ற சிவனிடம் உருத்திர கீதையைப் பயின்று, வனம் சென்றனர். 1010

வாசனைப் பூக்கள் மலர்ந்த காட்டிற்குப் பத்துப் புதல்வர்களும் சென்ற பிறகு, பிராசீனபர்ஹிஸ் என்னும் ஆவிர்த்தானன் மீண்டும் பற்பல யாகங்கள் செய்தான். அப்பொழுது அவனிடம் நரம்புடன் கூடிய யாழில் இசைக்கும் நாரத முனிவன் வந்தான். 1011

அயம கத்தினில் அரசநீ படுத்தஅம் மறிகள்
செயிர்க தழ்ந்துகண் தீஉக வரவுபார்த் திருக்கும்
பயில்வி சும்புசெல் காலையில் வெருவரப் பாய்ந்து
வயிறு போழும்வல் இருப்பின்ஒண் மருப்பினின் மாதோ. 1012

படுத்திடும் மறிகள் வேள்வி
புரிந்தவன் பனிவி சும்பின்
அடுத்திடும் காலம் நோக்கி
அழல்விழி ஒழுகப் பாய்ந்து
வடித்தகார் இருப்பின் செய்த
மருப்பினில் வயிறு போழ்ந்தது
எடுத்துநாம் உரைத்தும் கேட்டி
இறைவஎன் றுஉரைக்கல் உற்றான். 1013

விரித்தபூங் கதிர்கள் பொங்கு
விழுமணி அணிவி ளங்கி
அரைத்தசெம் மலயச் சாந்தும்
அகிலும் ஓர் காதம் நாறி
உரைத்திடப் பட்ட வாயில்
ஒன்பது பொருந்தித் தோன்றும்
புரத்தினான் ஒருவன் உண்டு
புரஞ்சன் என்னும் வேந்தே. 1014

தோழன் ஆங்கு ஒருவ னோடு சுடர்உமிழ் மணியின் செய்த
ஆழியம் தடம் தேர் ஏறி அதிர்இமிழ் அருவி மாலை
தாழ்தரும் இமயச் சாரல் சார்ந்தனன் சார்ந்து மற்றுஓர்
மாழைமான் அன்ன உண்கண் மடந்தையை கண்ணுற் றான்ஆல்.
1015

கொண்டலின் தாழ்ந்த நீலக் குழலும்நல் எழில்சேர் திங்கள்
மண்டலம் என்னத் தோன்று வதனமும் மதர்த்த கண்ணும்
ஒண்டொடிக் கரமும் தண்முத்து உரிஞ்சுவெம் முலையும் காணா
தெண்திரை அமுதின் தோன்றும் திருஎன தெருமந் தான்ஆல்.
1016

அந்த நாரத முனிவர் ஆவிர்த்தானனிடம், "அரசே! நீ செய்த அசுவ மேத யாகத்தில் கொன்ற ஆடுகள், உன் வரவைத் தேவருலகில் எதிர்பார்த்திருக்கும். நீ அங்குச் சென்றதும் அவை கண்களில் தீப் பறக்க இரும்பு போன்ற தம் கொம்புகளால் உன் வயிற்றைக் கிழித்துத் துன்புறுத்தும்" என்று கூறினார். 1012

நாரத முனிவர் ஆவிர்த்தானனிடம் மேலும் தொடர்ந்து பேசியதாவது : "அரசனே! வேள்வியில் உன்னால் கொல்லப்பட்ட ஆடுகள், நீ தேவலோகம் அடையும் பொழுது தீக்கண்களுடன் எதிர் பார்த்து நிற்கும். தம் இரும்புக் கொம்புகளால் உன் வயிற்றைக் கிழிக்கும்" என்று நான் கூறியதை ஒட்டி, இதிகாசக் கதை ஒன்று சொல்கிறேன் கேள்". 1013

மேற்கண்டபடி பேசிய நாராதர் புரஞ்சனன் வரலாற்றைப் பின்வருமாறு கூறினார்.

புரஞ்சனன் என்னும் அரசன் ஒன்பது வாசல்கள் கொண்ட அழகிய நகரத்தைப் பெற்றிருந்தான். மலர்கள் வீசும் மணமும் ஒளியும் உடையதாய், மணிகள் பதிக்கப்பட்டதான அந்நகரில், தென்றல் வீசும்; சந்தனமும் அகிலும் எங்கும் மணம் வீசும். 1014

இந்நகருக்கு அதிபதியான புரஞ்சனனுக்குத் தோழன் ஒருவன் கூடவே இருந்தான். மணிகளால் செய்யப்பட்ட அழகிய சக்கரங்களுடைய தேரில் ஏறி, அப்புரஞ்சனன் இமயமலைப் பகுதிக்கு வந்தான். அங்கே, மான் கண்களைப் பெற்ற ஒரு மங்கையைப் பார்த்தான். 1015

அந்த அழகிய பெண் மேகம் போன்ற கருங்கூந்தல் கொண்டவள்; சந்திரனை ஒத்த அழகான முகம் உடையவள்; பளிச்சிடும் கண்களும், வளைக் கரங்களும், முத்துமாலை தவழும் மார்பகங்களும் பெற்றவள். 'பாற்கடலில் உதித்த அமுது போன்ற இப்பெண் திருமகளோ?' என்று புரஞ்சனன் மயங்கி, அவளை அடைய விரும்பினான். 1016

தாமரை இன்று செங்கைத்
தாமரை மலரின் தெய்வத்
தேமலர் அன்ன அஞ்செம்
சீறடி நிலத்தில் தோயும்
பூமகள் அல்லள்அம்ம
புவிமக ளாகும் மற்றுஇக்
காமரு கோதை என்று
கருதினன் களிப்பு மிக்கான். 1017

ஐந்தலை அரவுஒன் றாலே
அணிபெறக் காவல் பூண்டு
மைந்து உடைப் பதின்மர் என்ன
அரும்படைத் தலைவ ரோடும்
வெந்திறல் வயவ ரோடும்
மிடைந்தது ஓர் புரத்தில் நின்ற
சுந்தர மாதை அன்னோன்
துதித்தனன் சொல்ல லுற்றான். 1018

ஏர்செய் அல்குல் இடைமுலை கண்ணுதல்
தேர்செய் கின்ற துடிஇரு சிந்துரம்
கூர்செய் அம்பு கொடுமரம் ஆகநீர்
போர்செய் யாறுஎன் புகல்புகு வேனொடே. 1019

மண்ணும் கொங்கை மதம்படு வேழமே
எண்ணும் உள்ளம் இனிது உண்ணும் அன்றி ஏர்
நண்ணும் தோள்எனும் வேழமும் நல்உயிர்
உண்ணு மாறுஎன் உரைமின் எனக்கு அரோ. 1020

பூட்டும் பூண்வெயில் பூங்கதிர் காமத்தீ
மூட்டும் அன்றி மொழிதரு சிந்துரம்
தீட்டும் வாண்முகச் செவ்வி மதியமும்
வாட்டு மாறுஎன் உயிரை வழங்குமே. 1021

"இப்பெண்ணின் கரங்களில் தாமரைப் பூ இல்லை. தாமரைப் பூப் போன்ற இவள் சிவந்த திருவடிகள் பூமியில் பரவி நிற்கின்றன. ஆகவே இவள் திருமகள் அல்லள். பூமிப் பிராட்டியே வந்து நின்றாளோ எனத் தோன்றுகிறது. இவளைக் கண்டதும் மனம் மகிழ்ச்சி அடைகிறதே!" என்று புரஞ்சனன் அப்பெண்ணை விரும்பினான். 1017

அழகான அப்பெண் ஐந்து தலைப் பாம்பாலே காவல் செய்யப் பெற்றாள். வலிமை பெற்ற பத்துப் படைத் தலைவர்களும் நஞ்சு போன்ற கொடிய வீரர்களும் புடை சூழ அவள் வந்தாள். அந்நங்கையைக் கண்ட புரஞ்சனன் அவளைத் துதித்துப் பேசலுற்றான். 1018

"போர் செய்ய வந்தது போலே அழகாலே வருத்துகிற பெண்ணே! தேர்த்தட்டுப் போன்ற நிதம்பத்தையும், உடுக்கை போன்ற இடையையும் யானைகள் போன்ற இரு முலைகளையும், அம்பு போன்ற கண்களையும் வில் போன்ற முகப் புருவத்தையும் கொண்டு, என்னுடன் போரிட வந்தாயோ? தோற்று நான் அடைக்கலம் புகுந்தேன். ஏற்க வேண்டும். 1019

அலங்கரிக்கப்பட்ட உன் முலைகளாகிய யானை என் நெஞ்சை உண்ணுகின்றது. திரண்ட உன் தோள்களாகிய கரும்போ என் உயிரை உண்கின்றது. 1020

காமம் ஆகிய நெருப்பு வெயில் கொளுத்தும் சூரியனைப் போல் சுடும் என்பதறிவேன். என்றாலும் பொட்டு இடப்பட்ட உன் ஒளி மிகுந்த சந்திரனாகிய முகமும் கூட என்னை இவ்வாறு கொளுத்தும் என்பதை இப்பொழுது அறிந்தேன். என் உயிரையே அது வாட்டுகிறதே! 1021

அருள்வி ளைக்கும்அமுதமன் னீர்குழல்
மருள்வி ளைக்கும் அதுஅன்றி மதிநிலாத்
தெருள்வி ளைக்கும் சிறுநகை மையலாம்
இருள்வி ளைக்கும் இதுஎன் கொல் விளம்புமே. 1022

முருக்கும் வண்ண முகத்தில் விழிஎன
இருக்கும் வெம்விடம் அன்றி எழில்நுதல்
குருக்கும்.திங்கள் குழவியும் உள்ளுயிர்
உருக்கு மாறுஎன் எனக்கு இங்கு உரைமினே. 1023

பாட்டு வண்டுஇமிர் பைங்குழல் பொன்வரைக்
கோட்டின் வீங்கு குவிமுலைக் கொல்லுலைத்
தீட்டும் வேல்விழிச் சேயிழை யீரிதழ்
ஊட்டும் நாள்என்று எனக்கு உரை செய்ம்மினே. 1024

தரித்த தாமரை தன்னை முகமென
திருப்பெண் மானும் தரித்தனள் சேர்ந்து எனும்
உருதி கழ்ந்த ஒளிர்வத னத்துநீர்
இருக்க ஏர்பெற்று இருப்பது எவ் ஊர்?அரோ. 1025

துன்னு மேகம் சுமந்தது முன்என
அன்னது ஏந்திமின் ஆற்றுகைம் மாறுபோல்
மன்னு கூந்தல் தரித்து வணங்குஇடைக்
கன்னி யீர்! கடைக் கண்அருள் செய்ம்மினே. 1026

அமுதம் நேர்மனை யாரைஅம் மூவரும்
விமல யாக்கையின் மீதுவைத் தார்என
இமக ரன்தன்இடத்தின்வைத் தான்எனும்
குமுத வாய்திற வாதது என் கூறுமே. 1027

என்று கூறி இடர்உறு ஏந்தலை
நன்று நீ எழில் நாயகன் ஆம்என
வென்றி மேவுஅடல் வேல்விழி மெல்லியல்
மன்றல்ஆகம் மணந்தனள் என்பவே. 1028

அருள் உண்டாக்கும் அமுதம் போன்ற உன் இருண்ட கூந்தல் எங்கும் இருட்டைப் பரப்புகிறது. எனின், சந்திரன் ஒளியோ எனப் பளிச்சிடும் உன் புன்னகை, மயக்கமாகிய இருளை எவ்வாறு உண்டாக்கியதோ...? (அதாவது நான் உன் புன்னகையில் மயங்குகிறேன்). 1022

உன் முகத்தில் உள்ள கண்கள் என்னும் நஞ்சு தான் என்னைக் கொல்கிறது என்றெண்ணினேன். ஆனால், வெண்மை நிறம் உடைய பிறைச் சந்திரனை ஒத்த உன் முகமும் என் உயிரை எவ்வாறு உருக்கி அழிக்கிறது? 1023

இசை பாடும் வண்டு அமரும் பூச்சூடிய கூந்தல் உடையவளே! மேருமலைச் சிகரம் போன்று ஓங்கிய முலைகளுடனும் கொல்லன் உலையில் தீட்டிய வேல் போன்ற விழிகளுடனும், என்னைக் கொல்கிறீரே! உமது இனிய இரண்டு உதடுகளைப் பருகும் நாள் என்று எனக்குக் கூறலாகாதா! 1024

'திருமகள் அமர்ந்த தாமரையையே நீ உன் முகமாகப் பெற்றாயோ?' என்னும்படியான உருவ அழுகுடையவளே! அழகும் தகுதியும் பெற்ற நீர் எவ்வூரிலிருந்து வந்தீரோ? 1025

மேகம் தன்னைச் சுமந்தது என எண்ணி, மின்னல், அதற்குக் கைம்மாறு செய்வது போல, உமது மின்னலாகிய இடை மேகமாகிய கூந்தலைச் சுமந்து நிற்கிறதோ! கன்னியே! என்மேல் உன் கடைக் கண் அருள் விழலாகாதா? 1026

அமுதம் போன்ற தம் மனைவிமார் மூவரையும் மும்மூர்த்திகளும் தத்தம் உடம்பில் கொண்டனர். இதனை எண்ணிய சந்திரன் தன் மனைவியான குமுத மலரைத் தன்னுடம்பில் கொண்டது போல, உமது சந்திர முகத்தில் குமுதமாகிய வாய் இடம் பெற்றதோ?" 1027

மேற்கண்டவாறு புரஞ்சனன் அந்த அழகிய பெண்ணிடம் தன் காதலை வெளிப்படுத்தினான். உடனே அவள், "நாயகனே! நன்று. உன்னை மணந்து கொள்கிறேன்" என்று பதில் கூறினாள். வெற்றி தரும் வேலை ஒத்த கண்களுடைய அப்பெண் புரஞ்சனைத் திருமணம் செய்து கொண்டாள். 1028

திங்கள்ஒன்று முடிதிகழ் மாளிகை
தங்கு கின்ற தனிநகர் சார்ந்துஉறும்
கங்குல் என்றும் பகல்என்றும் காண்கிலான்
மங்கை நல்நலம் மாந்தினன் மன்னனே. 1029

ஆர்க்கும் வண்டுஉண ஆய்பிழி சிந்துபூங்
கார்க்க ரும்குழல் காரிகை செய்வதே
தார்ப்பு யத்தவன் தானும்அங்கு ஆற்றுமால்
பார்க்கும் ஆடிஅம் பாவையைப் போலவே. 1030

இன்ன வண்ணம் இயைந்த புரஞ்சனன்
மன்ன வாய்ந்த கரும வலியினால்
உன்னு வேட்டம் உவந்தனள் ஆகவே
பொன்அம் தேர்மிசைப் போந்ததை ஓதுவாம். 1031

சகடு இரண்டில் தகும்கதி பெற்றது
விகடம் ஆர்ஐந்து வெம்பரி பூண்டது
பகடு சேரும்ஐந்து ஆணி படைத்தது
முகடு சேர்கொடி மூன்று செறிந்தது ஆல். 1032

சாற்று கின்ற ஓர் அச்சில் தழைத்ததேர்
ஆற்றல் சேரும்ஏழ் ஆவர ணத்ததுஆல்
ஏற்ற பாகன் இயைந்ததுஇத் தேர்மிசை
போற்றும் வேல்கைப் புரஞ்சனன் ஏறினான். 1033

காட்டின் மேவிக் கணமணித் தேரொடு
வாட்டம் நீங்கி வயங்குஇரண்டு அம்பினால்
ஈட்ட மாக இயைந்தவெம் மாக்களை
வேட்டம்ஆடி மெலிந்தனன் வேந்தனே. 1034

முத்த மூரல் மனைவி முனிந்திடின்
சித்தம்நொந்து தொழுது திருத்தியும்
வித்ரு மத்துஇதழ் விளையும் தேன்உண்டும்
இத்தி றம்மகிழ்வு எய்தி இருக்கும்நாள். 1035

சந்திர மண்டலத்தைத் தொடும் அளவு உயர்ந்த மாளிகையில் அந்தத் தனி நகரத்தில், அவ்விருவரும், இரவு பகலென்னும் வேற்றுமை இல்லாதபடி, கலந்து இன்புற்று நாள்களைக் கழித்தனர். 1029

ஒலிக்கும் வண்டுகள் அமர்ந்ததும் தேன் சிந்துவதும் ஆகிய பூக்கள் சூடிய கூந்தல் பெற்ற அம்மங்கை செய்வதையே பின்பற்றிய புரஞ்சன மன்னன், கண்ணாடியில் தோன்றும் பிரதி பிம்பம் போல் அவளுக்கு நிழலாக என்றும் அடிமை உற்றான். 1030

இவ்வாறு புரஞ்சனன் திருமணம் பற்றிக் கூறிய நாரதர், ஆவிர்த்தானனிடம், அவன் கரும வசத்தால் வேட்டை ஆடுவதற்குத் தன் தேரில் ஏறிக் காடு சென்றதை விவரிக்கத் தொடங்கினார். 1031

புரஞ்சனன் ஏறிச்சென்ற தேர் இரண்டு சக்கரங்களைப் பெற்றதும் விரைந்து ஓடும் தன்மையும் பெற்றது. வேறுபாடுடன் கூடிய குதிரைகளால் இழுத்துச் செல்லப்பட்ட அது ஐந்துருவான கடைஆணி பெற்றது. அத்தேரின் உச்சியில் மன்னனின் கொடி கட்டப்பட்டிருந்தது. 1032

வன்மையான அச்சின், மேல் அமைக்கப்பட்ட இத்தேர் ஏழு சுற்றுக்களைக் கொண்டதாய் வலிமையுடன் இருந்தது. ஓட்டுவதில் வல்ல பாகன் உடைய இத்தேரின் மேல் மன்னன் புரஞ்சனன் ஏறினான். 1033

மணி கட்டப்பட்ட தேரில் ஏறிக் காடு சென்ற மன்னன், தன் கூர்மையான அம்புகளை எய்து கொடிய விலங்குகளை வேட்டை ஆடினான். வேட்டைத் தொழிலால் அவன் தளர்ச்சி அடைந்தான். 1034

காட்டில் வேட்டை முடிந்த பின் நகர் திரும்பிய மன்னன் தன் மனைவியுடன் இன்பமாகப் பொழுதைக் கழித்தான். முத்துச் சிரிப்பால் மயக்கிய அவள் கோபம் கொண்ட பொழுது, மன்னன் அவளைப் பணிந்து நடந்து கொண்டான். மனம் நொந்தாலும் பொருட்படுத்தாது அவள் பவளவாய் உதடுகளையே பருகியவனாய்ச் சிற்றின்ப வாழ்வில் நாள்களைக் கழித்தான். 1035

ஆயி ரத்துஒரு நூறுஎன்று அறைதரு
சேய் அனாரையும் செப்புஒரு நூற்றொடு
மேய பத்துஎனும் மெல்லிய லாரையும்
நேய மாக உயிர்த்தனன் நேரிலான். 1036

அள்ளல்அம் சேற்றில் தோன்றும்
ஆடகப் பசும்பொன் தோட்டு
வள்ளவாய் முளரித் தேறல்
வரிச்சிறை வண்டு வீழ்ந்து
கொள்ளைகொண்டு உண்ணு மாபோல்
கோல்தொடி குமுதச் செவ்வாய்
தெள்ளமுது இனிது மாந்தி
தெவிட்டலன் ஆயி னான்ஆல். 1037

கண்கவர் உருவு கண்டும்
கயன்மலைப்பு அன்ன கண்ணாள்
பண்கவர் மழலை கேட்டும்
படாமுலைத் தடத்தில் தோய்ந்தும்
விண்கவர் பவளச் செவ்வாய்
விளையமுது ஊறல் உண்டும்
மண்கவர் குவவுத் தோளான்
வருபகல் கழிப்பான் மன்னோ. 1038

வழிமதுக் கலுழி போல
மதுரம்வீற் றிருந்த மென்சொல்
எழில்வளர் மகளி ரோடும்
இலங்கிய குமரர்க்கு எல்லாம்
விழவுஎலாம் இயற்று வித்தான்
விழுமிய மறிகள் வீட்டி
பழமறை முடிவால் வேள்வி
பற்பல ஆற்றி னான்ஆல். 1039

இவ்வாறு சிற்றின்பத்தில் வாழ்நாளைக் கழித்த மன்னன் புரஞ்சனன், ஆயிரத்து நூறு புதல்வர்களையும் நூற்றுப் பத்துப் பெண்களையும் பெற்றான். இத்தகைய மக்கள் செல்வத்துடன் அன்பொழு வாழ்வதில் ஒப்பற்றவன் ஆனான். 1036

ஆழமான சேற்றில் மலர்ந்ததும் ஆடகப் பொன்னொளியை வீசும் இதழ்களுடன் கூடியது மான தாமரையில் வண்டு விழுந்து, தேனைப் பருகுவதைப் போல, மன்னன் புரஞ்சனன் தன் மனைவியின் குமுத மலர் போன்ற செவ்வாய் அமுதத்தைப் பருகித் தெவிட்டும் வரை இன்பம் நுகர்ந்தான். 1037

மன்னன் புரஞ்சனன், தன் மனைவியின் அழகை ரசித்தபடியே பொழுதைக் கழித்தான். கயல் மீனை ஒத்த கண்களுடைய அவள் கொஞ்சிப் பேசுவதைக் கேட்டும், முலைகளைத் தழுவியும், பவள உதடுகளைப் பருகியும், பல நாள்களை வீணாக்கினான். பகைவர் நாட்டைக் கவரும் ஆற்றலுடைய தோள்களைப் பெற்றும், அவன் இவ்வாறு சிற்றின்பத்தில் ஆழ்ந்தான். 1038

தேன் வெள்ளம் போல் இனிமையான பேச்சுக்களைக் கொண்ட தன் அழகிய பெண் களுக்கும் புதல்வர்களுக்கும் செய்ய வேண்டிய திருமணங்களைச் செய்து முடித்தான். வேதமுறைப் படி பல ஆடுகளைப் பலி இட்டுப் பற்பல வேள்விகளைச் செய்தான். 1039

மைந்தர்ஒவ் வொருவர் நூறு
மைந்தரை உயிர்த்தார் சொல்லும்
அந்தம்இல்அழகு வாய்ந்த
அரிமதர் நெடும்க ணாரும்
செம்துவர் மழலைச் செவ்வாய்
சிறுவரை உயிர்த்தார் மன்னன்
இந்திரன் இவன்கொல் என்ன
இனிதுவீற் றிருந்தான் அன்றே. 1040

மின்னனாள் ஆகம் எல்லாம்
கவர்ந்துவிண் கிழிய ஓங்கு
பொன்நெடுங் குன்றம் என்ன
புணர்முலை பொருத மார்பன்
இன்எழில் இளமை எல்லாம்
இறந்துபா டுறலும் கால
கன்னிஎன்று ஒருத்தி வந்து
காதலின் மரீஇயி னாள்ஆல். 1041

அடையலர் பரவு மன்ன!
அடைந்தஅக் கன்னி முன்னம்
தொடையணி கொழுநன் தேடி
சொல்லும் மூ வுலகும் செல்லக்
கடலெனும் தானை ஆதி
காதலன் பூரு அன்றி
விடல்அரு வெற்றி யாளர்
வெறுத்தனர் விரும்பி லார்ஆல். 1042

ஒருவரும் விரும்பி லார்என்று
உற்றனன் என்னை நீதான்
மருவுதல் வேண்டும் என்றாள்
மகளிரைத் தீண்டேன் யான்என்று
உரைசெய ஒருபால் வைகாது
உழலுக எங்கும் என்ன
விரைவொடு பயத்தின் மாட்டு
மேவினாள் உரைக்கல் உற்றாள். 1043

புரஞ்சனின் புதல்வர்களில் ஒவ்வொருவரும் நூறு நூறு பிள்ளைகளைப் பெற்றனர். அவனுடைய எல்லையற்ற அழகுடைய, பெண்கள் சிவந்த உதடுகளும் மழலைப் பேச்சும் உடைய குழந்தைகளைப் பெற்றனர். 'இவன்தான் தேவேந்திரனோ!' என்னும்படி புரஞ்சனன் வளமுடன் வாழ்ந்தான். 1040

மின்னல் ஒளி போலும் உடம்புடைய மனைவியின், குன்றங்கள் போன்ற முலைகளைத் தழுவி வாழ்ந்த மன்னன், காலம் செல்லச் செல்லத் தன் இளமையை இழந்தான். கால கன்னியான மூப்பு என்னும் கிழத்தனம் வந்தது. மூப்பாகிய கன்னி அவனைத் தழுவிக் கொண்டாள். 1041

மேற்கண்டவாறு புரஞ்சனின் கதையைக் கூறிய நாரதன் ஆவிர்த்தானனிடம் மேலும் கூறுவார். "மன்ன! மேலும் கேட்பாயாக. ஜரை என்னும் கன்னியான 'மூப்பு' என்பவளின் கதையைக் கேள். முன்னம் அவள் தனக்கென்று கணவனைத் தேடி மூவுலகும் சென்று அலைந்தாள். கடல் போலும் சேனை பெற்ற யயாதியின் புதல்வனான பூரு ஒருவனே அவளை விரும்பி ஏற்றுக் கொண்டான். மற்றைய அரசர்களோ அவளை விரும்பவில்லை. 1042

ஒருவரும் தன்னை விரும்பவில்லை என்றுணர்ந்த ஜரையான மூப்பு நங்கை, என்னை அடைந்தாள். தன்னை நான் திருமணம் செய்து கொள்ள வேண்டினாள். 'நான் பெண்களைத் தொட மாட்டேன்' என்று பதில் கூறினேன். என்னை வெறுத்த அவள், 'நீ உலகெங்கும் திரிந்து அலைவாய்' என்று சபித்து விட்டுப் 'பயம்' என்னும் காலயவனனிடம் சென்றாள். 1043

என்னைநீ மணம்செய்க என்ன
என்னுடன் பிறந்தாய் நீ என்று
அன்னவன் அநுசர் ஆகும்
அரும்சுரன் முதலி னோரை
மன்னும்உன் தனக்கு நாளும்
மருவுஉப கார மாக
பன்னுவன் படர்தி என்ன
பயம்அவட்கு உரைத்தது அன்றே. 1044

அன்றுவெம் பயம்சொல் வண்ணம்
அருஞ்சுரன் தாபன் ஆதி
துன்றுஇரும் பிணிகள் என்ன
துலங்குறு வோர்தம் மோடும்
ஒன்றிய உலகு ளோர்பால்
உவந்தனள் உற்றாள் உற்று
நின்றனள் புரஞ்ச னன்தன்
நெடும்புரத்து இருந்தாள் அன்றே. 1045

தாவாத வென்றிகெழு சண்டவே கத்தன் என்னும்
மூவாத் திறல்வேந்தன் முந்நூற்று அறுபதின்மர்
ஓவா வயவ ருடன்சென் றுஉடல்சினத்தால்
பூவார் வடிவேல் புரஞ்சனன் மேல் போர்விளைத்தான். 1046

கவ்வை அகன்றுதங்கள் காவலன் கண்டுஇருப்ப
எவ்வம்இல்லா வண்ணம் இருண்டமனை யாரொடு வந்து
அவ்வயவர் ஒவ்வொருவர் ஆகி அமர்விளைத்தார்
செவ்விஉறு வேலான் சிறிதும்அறி யாவகையே. 1047

முந்நூற்று அறுபதின்மர் முற்றி அமராட
பொன்ஆர் புரம்அழிந்து போக புரஞ்சனனும்
தன்ஆற்றல் விட்டுஇறக்கும் காலைத் தன் காதலியை
உன்னா விழிநீர் உகுப்பப் புலம்பினனால். 1048

காலயவனன் இடம் சென்ற காலகன்னியாகிய ஜரை, 'என்னை நீ மணம் செய்து கொள்' என்று வேண்டினாள். அவனோ, தான் கூடப் பிறந்தவன் ஆதலால் தகாது என மறுத்துத் தன் தம்பியான ஜ்ரம் முதலியோரைக் காட்டினான். "ஜரையே! ஜ்ரம் முதலிய தம்பியரை நீ தழுவிப் படர்ந்து கொள். அதற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்று பயம் கால கன்னியிடம் கூறிற்று. 1044

அந்தக் காலம் முதல், 'பயம்' கூறியபடியே, கால கன்னியாகிய 'மூப்பு' என்பவள் ஜ்ரம் அவன் தம்பி தாபன், நோய் ஆகியோருடன் கூடி மகிழ்ந்து, உலகத்தோர் நடுவே உலவுகிறாள். இவ்வாறு புரஞ்சனன் நகரத்தையே அவள் தன் இருப்பிடமாகக் கொண்டாள். 1045

சண்ட வேகத்தன் என்னும் வலிமை உடைய அரசன் ஒருவன், அழியாத பலம் கொண்டவன் ஆவான். அவன் தனக்குத் துணையாக முன்னூற்று அறுபது வீரர்களுடன், வேல் ஏந்திய புரஞ்சனன் மீது போர் புரிய வந்தான். 1046

அந்த முன்னூற்று அறுபது வீரர்களும் தம் அரசன் ஆகிய சண்டவேகனுக்கு எந்தத் துன்பமும் இல்லாமல் காத்தபடி, புரஞ்சனனைத் தாக்கினர். குற்றமற்ற அவ்வீரர்கள் ஒவ்வொருவராய் வந்து, புரஞ்சனன் சிறிதும் அறியாதபடி அவனைத் தாக்கிப் போரிட்டார்கள். 1047

முன்னூற்று அறுபது வீரர்களும் தாக்கியதால், புரஞ்சனின் உயர்ந்த நகரம் அழிந்தது. அவன் தன் ஆற்றலை இழந்தான். முடிவில் அவன் இறக்கும் பொழுது கூடத், தன் காதல் மனைவியையே நெஞ்சில் எண்ணிக் கண்ணீர் விட்டுப் புலம்பினான். 1048

உண்ணின் அல்லதை உண்ணலள்; சாந்தமும்
தண்ணம் தாரும் தணக்கின் புனையலள்;
கண்அ கன்றிடின் காமரு சாயல்அம்
பெண்அ ணங்கு உயிர் பெற்றிட வல்லளோ. 1049

பாடு கிள்ளைப் பனிமொழி கேட்கிலள்
ஆடு தோகையின் ஆடலும் காண்கிலள்
வாடின் வாடும் மகிழின் மகிழும்நான்
வீடின் எங்ஙனம் மெல்லியல் உய்வளே. 1050

நெஞ்சு நொந்து கணம்என்னை நீங்குறின்
அஞ்சி வெண்பிறைத் தீ சுடல் ஆற்றலள்
துஞ்சின் யான்மதிச் சூடு பொறுத்துஇவண்
வஞ்சி எங்ஙன் உயிரொடு வாழ்வளே. 1051

என்று வேட்ட இளங்கிளி மென்மொழி
குன்றின் வீங்கிய கொம்மை வருமுலை
மன்ற லார்குழ லாளை மனக்கொளா
பொன்றி னான்புவி போற்றும் புரஞ்சனன். 1052

தரைத்த லத்துஉறும் தாவரம் பற்றி நின்று
எரித்தி டும்தழல் காண்டலும் ஏற்றஅம்
மரத்தை விட்டுஎழும் வான்சிறைப் புள்ளென
புரத்தை விட்டனன் பொன்னுலகு எய்தினான். 1053

மகம்இ யற்றுழி மாய்த்த மறியெலாம்
திகழ்இருப்பினில் செய்த மருப்பினால்
நகுபொன் நாட்டகம் நண்ணு புரஞ்சனன்
அகடு கீண்ட அழன்றெதிர் குத்தியே. 1054

மாய்வு ழிதன் மனைவியை உள்ளலால்
சேய் உயர்ந்தவிண் தீர்ந்து புரஞ்சனன்
மேய பொங்கர் விதேகத்து அரசனுக்கு
ஆய்ந லத்தபெண் ணாக உதித்தனன். 1055

"நான் சாப்பிடாவிட்டால் என் மனைவி சாப்பிட மாட்டாளே! என்னைப் பிரிந்தால் குங்குமச் சாந்து பூசிக் கொள்ளாள்; மாலை சூடிக் கொள்ளாள். என்னை மிகவும் விரும்பும் அழகிய சாயலுடைய அவள் நான் இறந்தால் உயிருடன் இருப்பாளோ? 1049

என்னைப் பிரிந்தால் அவள் கிளியுடன் பேசாள்; மயில் ஆடுதலையும் காணாள். நான் வருந்தினால் அவளும் வருந்துவாள். இத்தகைய என் மனைவி நான் இறந்தபின் எங்ஙனம் வாழ்வாள்? 1050

என்னைக் கணநேரம் பிரிந்தாலும், அப்பிரிவுத் துயரில் சந்திரன் நிலா ஒளியும் அவளைக் கொளுத்தும். அதனைப் பொறுக்க இயலாத அவள் நான் உயிர் துறந்த பின் எவ்வாறு பிரிவின் வெம்மையைப் பொறுப்பாள்?" 1051

மேற்கண்டவாறு, இறக்கும் தருவாயில் இருந்த புரஞ்சனன் ஓங்கிய முலைகள் பெற்ற தன் மனைவியையே எண்ணியபடி தன் உயிர் துறந்தான். 1052

தரையில் உயர்ந்து வளர்ந்து நிற்கும் மரம், தீப்பற்றி எரியும் பொழுது, அம்மரத்தில் வாழும் பறவை அதை விட்டு நீங்கி அகலும். அதே போல, புரஞ்சனனும் தன் உடம்பாகிய புரத்தை விட்டு மேல் உலகம் அடைந்தான். 1053

புரஞ்சனன் மேலுலகம் சென்றதும், அவனை முட்டிக் கிழிக்க ஆடுகள் வந்தன. அவன் செய்த யாகத்தில் கொன்ற ஆட்டு மறிகள், இரும்புக் கொம்புகள் கொண்டு அவன் வயிற்றில் குத்திக் கிழித்தன. ஆவி உடலில் புரஞ்சனன் அத்துன்பத்துக்கு ஆளானான். 1054

புரஞ்சனன் இறக்கும் பொழுது, தன் மனைவியையே எண்ணியதால் அந்நினைவின் காரணமாய் விதேக தேசத்து அரசனுக்குப் பெண்ணாகப் பிறந்தான். 1055

நன்ன லம்கனி வுஉற்ற நறுநுதல்
அன்ன பேதை அலர்முலை புல்லினன்
பொன்னம் குன்றின் பொருகயல் தீட்டிய
மன்னர் மன்னன் மலயத் துவசனே. 1056

நிழலும் செய்யகோல் நித்தில வெண்குடைச்
செழியன் வேட்ட சிறுநுதல் சேயிழை
எழுவர் மைந்தரோடு ஏறுஎழில் வாய்ந்த ஓர்
மழலை மென்மொழி மாதை உயிர்த்தனள். 1057

அலைஅ ரும்பும் அமுது பொதிந்துமெல்
முலைஅ ரும்பும் அமுதினை முத்தமிழ்க்
கலைஅ ரும்புதண் காந்தள்அம் சாரல்மா
மலைஅ ரும்தவன் வந்து மணந்தனன். 1058

கார்த ழைந்த கடலை வயிற்றின்வைத்து
ஆர்த ழைந்த அகத்தியன் அன்பொடும்
ஏர்த ழைந்தநல் இத்தும வாகன்என்
பேர்த ழைந்த முனிவனை பெற்றனன். 1059

உந்து நீர்நிலன் ஓர்குடை நீழலின்
மைந்தன் ஆள வழுதி வழங்கினன்
செந்த மிழ்ப்பசுந் தென்றல் உலாவரும்
சந்த வெற்பில் தவம்புரிந் தான்அரோ. 1060

பொன்அம் தாமரைப் போது புரிஅவிழ்
கன்னி அம்துறை யாடி கனிநுகர்ந்து
தன்ன மெல்நடைத் தேவியும் ஆற்றினள்
மன்னு சந்த வரையினில் மாதவம். 1061

மத்த யானை மலயத் துவசன் நீள்
முத்தி எய்த முழங்குஅழல் மூழ்குவான்
கொத்து உலாமலர்க் கோதை குறுகலும்
மெய்த்த வம்செய் ஒருவன் விளம்பும்ஆல். 1062

அப்பெண், நன்றாக வளர்ந்து பெரியவளாகி, முகஅழகும் முலை அழகும் பெற்றாள். மேருமலையில் கயல் மீனைப் பொறித்து வெற்றியை நிலை நாட்டிய மலயத்துவஜன் என்னும் பாண்டியன், அவளைத் திருமணம் செய்து கொண்டான். 1056

செங்கோல் ஏந்திக் கொற்றக் குடைக் கீழ், ஆட்சி செய்த பாண்டியன் இப்பெண்ணுடன் இல்லறம் நடத்தினான். இவர்கள் இருவருக்கும் ஏழு புதல்வர்களும் ஒரு பெண்ணும் பிறந்தனர். 1057

திருத விருதை என்னும் அந்தப் பெண், பாற்கடலில் உதித்த அமுதம் போல் இனியவள்; நன்றாக வளர்ந்து, மங்கைப் பருவம் கொண்டு திகழ்ந்தாள். அவளை, முத்தமிழ் உதித்த பொதிகைமலை முனிவர் ஆன அகத்தியர் திருமணம் செய்து கொண்டார். 1058

மேகம் தவழும் பெருங்கடலையே தன் வயிற்றில் வைத்து அடக்கிய அகத்திய முனிவருக்கும் திருதவிருதை நங்கைக்கும் ஒரு தவப்புதல்வன் பிறந்தான். அவன் வித்துமவாகன் எனப் பெயர் கொண்டான். 1059

கடல் சூழ்ந்த உலகை ஆண்ட மலயத்துவச பாண்டியன் தன் புதல்வனுக்கு முடிசூட்டி விட்டுத் தமிழும் தென்றலும் விளங்கும் பொதிகை மலை சென்று தவம் புரிந்தான். 1060

மெல்லிய நடை உடைய பாண்டியன் மனைவியும், சந்தன மரங்கள் உயர்ந்த பொதிகை மலை அடைந்து தவம் புரியத் தொடங்கினாள். மகரந்தம் உடைய தாமரை மலரும் பொய்கையில் நீராடிக் கனிகளை மட்டுமே உண்டு தவம் ஆற்றினாள். 1061

மதயானை போன்றிருந்த மலயத்துவச பாண்டியன் தவம் இயற்றுகையில் முக்தி அடைந்தான். உடனே, அவன் மனைவி, நெருப்பு மூட்டி உயிர் விடத் துணிந்தாள். அச்சமயம் அங்கிருந்த தவமுனிவன் ஒருவன் அவளிடம் பின்வருமாறு கூறினான். 1062

மன்றல் மாமலர் மானத வாவியின்
அன்று இருந்தனம் அஞ்சிறை அன்னமாய்
இன்று மேவினம் இவ்வுடல் இத்திறன்
ஒன்ற லாத உடலம் எடுத்தனம். 1063

முல்லை அன்ன முகிழ்நகை நீ உடம்பு
அல்லை என்ன அறிந்தனள் தன்னையவ்
வில்லை வென்ற திருநுதல் மெய்ஒரீஇ
எல்லை அற்றவீடு எய்தினள் என்றனன். 1064

என்று கூறலும் ஏழுயர் யானையான்
ஒன்ற நீஉரை யாடல் தெளிந்திலன்
மன்ற மற்று வகுத்துரை யாய்என
நன்று உரைத்தனன் நாரதன் என்பவே. 1065

மின்பொழிந்து இலகு கின்ற
விழுமணி அணிய தாகி
தென்புல மலயச் சாந்தும்
தேங்கமழ் அகிலும் நாறி
ஒன்பது வாயில் சேர்ந்த
ஒருபுரம் என்னப் பட்டது
இன்புற எடுத்து நின்ற
யாக்கைஎன்று அறிதி வேந்தே. 1066

எய்துவது அன்றி எய்தாது
என்பதை அறியான் யானே
செய்தனன் என்றுஉட் கொண்டு
செறுவினைச் சிமிழ்ப்பில் பட்டு
பொய்திகழ் புரம்உண் டாக்கி
புரஞ்சனன் என்னப் பட்டான்
மைதிகழ் மாயை மாதை
மணந்தஅப் புருடன் ஆம்ஆல். 1067

"நான் முற்பிறவியில் மணம் வீசும் பூக்கள் மிகுந்த மானசப் பொய்கையில் ஓர் அன்னமாக இருந்தேன். இன்று இவ்வுடலொடு முனிவன் ஆனேன். ஆகவே உடம்பும் உயிரும் ஒன்று அன்று. 1063

முல்லைப் பூப் போன்ற புன்னகை பெற்ற பெண்ணான நீ உடம்பையே உயிராக எண்ணாதே. உன் ஆத்மா உடம்பு அன்று. இவ்வாறு முனிவன் கூறியதைக் கேட்ட பாண்டியன் மனைவி உண்மை ஞானம் பெற்றாள். அதனால் வீடு பேறு அடைந்தாள். 1064

மேற்கண்டவாறு நாரதர் புரஞ்சனன் வரலாற்றைக் கூறி முடித்தார். ஏழு முழம் உயர்ந்த யானையை உடைய ஆவிர்த்தானன் 'உமது உரையிலிருந்து நான் தெளிவு பெறவில்லை. மேலும் தெளிவு படுத்துக" என்று நாரதரிடம் வேண்டினான். 1065

புரஞ்சனனது வரலாற்றின் தத்துவம் :

"மின்னல் ஒளியுடனும் மணிகளால் இழைக்கப்பட்டதும், தெற்குத் திசையில் சந்தனம் , அகில், மணம் கூடியதும் ஆன, ஒன்பது வாயில்கள் கொண்ட புரம் எனப்பட்டது. உடம்பைக் குறிப்பதாகும்! என்று நீ அறிவாய்" என்று நாரதர் கூறினார். 1066

மேலும் அவர் கூறியதாவது :- "பெறுவதும் பெறாததும் எவை என அறியாத புருஷன் எனப்படும் ஆத்மா, தானே யாவற்றையும் செய்வதாக எண்ணிக் கொண்டு, வினைகளால் உண்டாகிய கட்டுக்குள் அகப்படுகிறான்! பொய்யான உடலைத் தன் இடம் என நம்பி, அவன் மாயை என்னும் பெண்ணை மணந்து கொள்கிறான். இவன்தான் புரஞ்சனன் ஆனான். 1067

அடைதரு தோழன் சொல்லும்
அணிமனம் புரம்ஓர் ஆக்கை
மிடையும்ஐந் தலைசேர் நாகம்
மேவிய பிராணன் மிக்க
படையெனும் வயவ ரோடு
பதின்மர் என்று உரைக்கப் பட்டோர்
விடயமொ டுஉற்று நின்று
விளங்கும்இந் தியங்கள் பத்தே. 1068

புகல்இரு சகடு செய்யும்
புண்ணிய பாவம் ஆகும்
இகல்பரி ஐந்து ஞான
இந்தியம் ஆகும் ஐந்து
தகைமைசேர் ஆணி யாகும்
சாற்றிய வாயு ஐந்தே
திகழ்தரு கொடிமூன்று ஆகும்
செப்புமுக் குணங்கள் தாமே. 1069

பரித்திடும் ஓர் அச்சு என்றல்
பகுதிஆ வரணம் ஏழு
பொருத்திய தாது பாகன்
புந்திதேர் ஆக்கை காடு
தரைத்தலம் இரண்டாம் அம்பு
சார்விருப் பொடுவெ றுப்பாம்
குருத்திகழ் வேட்டை மாக்கள்
உரைமுத லாய வைந்தே. 1070

வண்ணம்ஆர் கால கன்னி
வளர்சரை சண்ட வேகன்
எண்உறு கால மேனி
இருள்தரு மனையா ரோடும்
அண்ணல்பால் அமர்செய் முந்நூற்று
அறுபதுஎன் றுஉரைசெய் வீரர்
நண்இரு பொழுதுஎன் றுஓது
நாள்கள்என்று அறிதி வேந்தே. 1071

அவன் பெற்ற தோழன் என்பவன் மனத்தைக் குறிக்கும். புரம் என்பது உடல் ஆகும். அங்குக் கூடிய நாகம் என்பது பிராணனைக் குறித்தது. படைகளாய் வந்த வீரர்களே புலன் இன்பங்கள் ஆகும். பதின்மர் என்பவர் பத்து இந்திரியங்கள் ஆவன. இவை சிற்றின்பங்களுடன் பொருந்தி நிற்பன. 1068

இரண்டு சக்கரங்கள் என்பன புண்ணியமும் பாவமும் ஆவன. ஐந்து குதிரைகளும் ஞானேந்திரியங்கள் ஐந்தினையும் குறித்தன. ஐந்து ஆணிகள் என்பன ஐந்து பிராணன்களைக் குறிப்பிட்டன. மூன்று கொடிகளும் முக்குணங்களைக் காட்டுவன. 1069

தாங்கும் ஓர் அச்சு என்பது மூலப் பிரகிருதியையும், ஏழு ஆவரணம் என்பது ஏழு தாதுக்களையும், பாகன் என்பது புத்தியையும், தேர் என்பது உடம்பையும், காடு என்பது பூமியையும் குறித்தன. மேலும் விருப்பு, வெறுப்பு இரண்டு அம்புகளாக உருவகிக்கப்பட்டன. ஒலி, தொடு உணர்ச்சி, வடிவம், சுவை, நாற்றம் என்னும் ஐந்தும் வேட்டை மிருகங்களாகக் குறிப்பிடப்பட்டன. 1070

நிறம் விளங்க வந்த காலகன்னியே மூப்பைக் குறித்தது. காலமே சண்டவேகன் எனப் பட்டது. முன்னூற்று அறுபது இரவுகளை இருண்ட மேனியுடைய மனைவியர் என்று உருவகிக்கப்பட்டது. வீரர்கள் என்றது பகல்களே ஆகும்." 1071

99

விடுத்திடல் வேண்டும் வேந்தே
மேவரு கின்ற போகத்து
இடைப்படு கருமம் எல்லாம்
மிருள்படப் பொதுளும் கானில்
படுப்பவன் இசையில் சென்று
படுவதோர் விலங்கு போலும்
அடுப்பரும் துறக்கத்து இன்ப
அவாவினை விளைக்கின் றான்ஆல். 1072

ஆற்றிய ஆக்கை வீயும்
ஆயினும் அதனுள் நின்று
தோற்றிய இலிங்கம் என்று
சொல்லும்அத் தனுவீ யாதுஆல்
மாற்றரும் கருமம் எல்லாம்
மனச்செயல் ஆக லானே
ஏற்றிடும் இன்ப துன்பம்
இலிங்கநல் தனுவுக்கு ஆமே. 1073

அமைதனில் மறைந்து நின்ற
அணிமதி போல என்றும்
சுமையுறு தூலம் என்ன
தோற்றிய உடலி னின்றும்
இமையவ ரானும் வெல்லாது
இலங்குறும் இலிங்கம் என்ன
சமைவுறு தனுவின் தன்மை
சாற்றதும் கேட்டி வேந்தே. 1074

ஐவகை வாயு ஈரைந்து
ஆகிய புலன்கள் புந்தி
மைவகை ஐயம் சேரும்
மனத்தொடு மருவுஇ லிங்க
மெய்வகை பதினேழு ஆகும்
விளங்கிய தனுவின் செய்கை
பொய்வகை யாகும் சீவன்
பொருந்தினன் போலும் மாதோ. 1075

இவ்வாறு கூறிய நாரதர், ஆவிர்த்தானனை நோக்கி மேலும் கூறுவார். "அரசே! போக ஆசையால் செய்யும் கருமங்களை நாம் விட்டு விட வேண்டும். சுவர்க்க போகத்தில் ஆசை கொள்வதையும் விட வேண்டும். காட்டில் வேடன் எழுப்பும் ஒலியில் அகப்பட்டுச் சிக்கும் விலங்கு போல, மனிதன் சுவர்க்கத்தில் ஆசைப்படுகிறான். 1072

உலகில் உண்டாகும் உடம்பு அழியும்; ஆனால், அதனுள்ளே தங்கிய ஆத்மா, சூக்கும உடம்பு பெறுவதால், அது அழிவற்றது. மாற்றமுடியாத கருமங்கள் எல்லாம் மனத்தால் ஏற்படுவது. ஆதலால் இன்பமும் துன்பமும் இலிங்க சரீரமான சூக்கும உடம்புக்குப் பொருந்தும். 1073

அமாவாசை என்பது சந்திரன் அதில் மறைந்து நிற்பதையே குறிப்பதாகும். அது போலப், பருப்பொருளாக தெரியும் புறஉடம்பின் உள்ளே, சூக்கும உடல் மறைந்து நிற்கிறது. வேந்தனே! தேவர்களாலும் வெல்ல இயலாத தன்மை இது. உடம்பின் தன்மையை மேலும் விளக்குகிறேன். கேட்பாயாக. 1074

ஐந்து வகையான பிராணன்களும் பத்து இந்திரியங்களும் புத்தி, மனம் ஆகிய பதினேழு தத்துவங்கள் நம் உடம்பில் உள்ளன. இவற்றைச் சார்ந்தே இந்த உடம்பு இயங்குகிறது. அதற்குள் ஜீவன் பொருந்தியிருப்பது அறியப்படாமல் பொய் போலவே உள்ளது. 1075

மனத்தினுக் குஉற்ற செய்கை
சீவனை மருவி நிற்றல்
கனத்துறு கதிஅவ் வானில்
கதிர்மதிக்கு அணுகல் போலும்
புனத்துறு சலூகை யென்னப்
பொருந்திய இலிங்கம் வேறுஓர்
நினைத்து உறும் ஆக்கை பற்றி
நீங்கிடும் நின்ற யாக்கை. 1076

ஆதலான் ஆக்கை சேராது
அறிவொடு பொருந்த எண்ணின்
கோதுறும் இலிங்கம் என்று
கூறுஉடல் மாய்க்கல் வேண்டும்
ஓதுஉடல் பொய்ய தேனும்
உறும்உணர்வு இன்றி நீங்கும்
ஏதம்இல் ஞானம் வந்துற்று
இலங்கும்அந் நாளின் மாதோ. 1077

அயர்தரு வேள்வி இன்பம்
அழிவுறும் அதனை வெஃகல்
புயல்உறழ் மேனி நம்பன்
பொன்னடிக் கமலம் போற்றி
உயர்வுஅற உயர்வீட்டு இன்பம்
பெறுதிநன் றுஉணர்ந்தோய் என்னா
பயிலுறு திவவின் நல்யாழ்ப்
பண்ணவன் போனான் மன்னோ. 1078

பண்ணவன் அகல ஒன்றும்
பற்றிலான் ஆகி செங்கண்
கண்ணனை உளத்து நாடி
கபிலனது இருக்கை சார்ந்து
விண்ணவர் வழுத்தும் வண்ணம்
விழுத்தவம் பலவும் ஆற்றி
அண்ணலம் தனிவீட்டு இன்பம்
அடைந்தனன் அரசர் கோமான். 1079

மேகத்தின் சலனத்தால் வானில் சூரிய சந்திரர் ஓடுவது போலத் தோன்றும். அதே போல மனத்தின் செய்கை ஜீவனைச் சார்ந்து நிற்பதாகும். அட்டை பற்றிக் கொள்வது போல, உடம்பைப் பற்றி நிற்கும் ஜீவன் அவ்வுடம்பு அழிந்ததும் இன்னொரு உடலைப் பற்றிக் கொள்கிறது. அப்பொழுது முன்னிருந்த உடம்பை நீங்குகிறது. 1076

ஆதலால், தேக சம்பந்தம் இல்லாத ஞானம் பெற எண்ணினால், இலிங்க சரீரத்தை அழிக்க வேண்டும். கூறப்படும் உடல் பொய்யே ஆகும். எனவே, ஞானம் தோன்றும் பொழுது, உடல் உணர்ச்சி இல்லாமல் போகும். அது உணர்ச்சி இல்லாமல் நீங்கும். 1077

ஆன்ம விடுதலையை வேள்விச் செயல்கள் தர மாட்டா. ஆகையால், வேள்வி செய்வதையும் அதனால் வரும் இன்பத்தையும் நீ விரும்பாதே. மேகத்தை ஒத்த திருமேனி உடைய திருமால் திருவடித் தாமரைகளைத் தொழுது துதித்து உயர்ந்த நிலையாகிய வீடு பேற்றை அடைவாயாக. இதை நன்கு உணர்ந்து கொள்." 1078

மேற்கண்டவாறு நாரத முனிவர் ஆவர்த்தானன் இடம் கூறிவிட்டு, அங்கிருந்து சென்றார்.

யாழிசை வல்ல நாரதர் சென்ற பிறகு அரசன் ஆவிர்த்தானன் பற்றுக்களை விட்டான். சிவந்த கண்களுடைய கண்ணனை மனத்தில் தியானித்தான். கபிலதேவர் ஆசிரமம் அடைந்து தேவர்கள் வியக்கும்படி தவங்கள் செய்து முடிவில் திருமால் திருவடிகளை அடைந்தான். 1079

பெறலரு வீடு பெற்ற
　　பிராசீன பரிகி என்றும்
இறைவர்சொல் ஆவிர்த் தானன்
　　என்றும்நல் நாமம் உற்றான்
நிறைபுகழ்ச் சரிதம் கேட்போர்
　　நினைத்தவை பெறுவர் என்னா
விறலுறு மயித்தி ரேயன்
　　விதுரற்கு விளம்பி னான்ஆல். 1080

6. பிரசேத சாக்கியர் பதின்மர் கதை

மழலைஇளம் சுரும்பர்முரல்
　　மலர்த்துளவோன் தனைவழுத்தி
குழவிமதி புனைசடையோன்
　　கூறியகீ தையைக் கேட்டு
விழைவினொடு மேல்திசையின்
　　விழுத்தவம்செய் பதின்மர்கதை
மொழிதி எனும் விதுரனுக்கு
　　மொழிந்தனன்மித் திரைமகனே. 1081

பரவுஅரிய தனிவீடு
　　படர்தருபார் வேந்தன் அருள்
ஒருபதின்மர் தவம் புரிந்தார்
　　ஒருபதினா யிரம்பருவம்
அருமணிச்செஞ் சுடர்விரிக்கும்
　　அனந்தபணா டவிக்கிடந்த
இருநிலம் ஓர் அடிக்கரந்த
　　இறையவனை மனத்துணர்ந்தே. 1082

பாய்புனலில் தவம் புரியும்
　　பதின்மர் எதிர் முதியமுகை
வாய்விரி பைந் துளவமலர்
　　மாலைமதுத் துளிதூற்ற
காய்கதிர்சூழ் குன்றுஇவர்ந்த
　　கருமுகில்போல் கலுழன்மிசை
ஆயிரம்வாய்ப் பாம்பணையான்
　　அருள்சுரந்து வெளிப்பட்டான். 1083

பிராசீன பரிகி என்னும் ஆவிர்த்தானன் பெறுவதற்கரிய வீடு பேறு பெற்றான் என்னும் சரிதத்தை மைத்திரேயர் விதுரர்க்குக் கூறினார். 'நிறைந்த புகழுடைய இச்சரிதத்தைக் கேட்போர் நினைப் பனவற்றைப் பெறுவார்கள். அவர்கள் விருப்பங்கள் நிறைவேறும் என்று அவர் கூறி முடித்தார். 1080

6. பிரசேத சாக்கியர் பதின்மர் கதை

மைத்திரேயரிடம், விதுரர் ஆவிர்த்தானன் புதல்வர்களான பிரசேத சாக்கியர் பதின்மரின் கதையைக் கேட்க விரும்பினார். இப் பத்துப் புதல்வர்களும் வண்டு முரலும் துழாய் மாலை சூடிய திருமாலைத் துதித்து வணங்கி, சந்திரனை அணிந்த சிவனிடம் உருத்திர கீதை கேட்டவர்கள் ஆவார். 1081

சொல்வதற்கரிய வீடு பேறு பெற்ற பிராசீன பரிகியின் பத்துப் புதல்வர்களும் வனம் சென்று பதினாயிரம் ஆண்டுகள் தவம் செய்தனர். ஒளி வீசும் மணிகள் உச்சியில் பெற்ற, படங்களை உடைய ஆதிசேடன் மீது பள்ளி கொண்ட, திருமாலை மனத்தில் தியானித்தனர். பரந்த உலகைத் தன் காலால் அளந்த பெருமானைத் துதித்தனர். 1082

தண்ணீரில் நின்று கடுந்தவம் புரிந்த அப்பத்துப் பேர்கள் முன்னே, துழாய் மாலை அணிந்த திருமால் தோன்றினார். தேனைச் சிந்தும் திருத்துழாய் மாலை அணிந்தவராய், மலையிலிருந்து இறங்கி வந்த மேகம் போன்ற பெருமான் கருடன் மீதேறி வந்து, நின்று தரிசனம் கொடுத்தார். ஆயிரம் வாய்களுடைய ஆதிசேடனை அணையாகப் பெற்ற திருமால் அருள் அப்பதின்மருக்கும் கிடைத்தது. 1083

உந்திவிரி செங்கமலத்து
ஊடுஎழுந்த பொலந்தாது
சிந்தினபோல் பொற்காஞ்சி
திகழநகை நிலவுமுக
சந்திரமண் டலத்துஅரும்ப
தாமரைக்கண் அருள்பொழிய
வந்தெதிரே நின்றபழ
மறைமுதலை நனிவியந்தார். 1084

எழுதாத மறைமுடிவின்
இருந்ததனிச் சுடர்நமக்கு
விழிகாண வந்தது என
வெள்ளநீர் நின்று எழுந்து
தொழுதார் கண் ணீர் மாரி
சொரிதரநெஞ் சகம்உருகி
அழுதார் மீண்டு ஆனந்த
வெள்ளத்தின் ஆழ்ந்தினர்ஆல். 1085

குளிர்ப்பு உறுதெள் நீரினிடை
குளித்துஅரிய தவம்பலநாள்
விளைத்தவர்கள் உளம் குளிர
விழிக்கருணை மாரிசொரிந்து
அளித்திடுதும் விழைந்தவரம்
அறைமின்கள் என்ன நறாத்
துளித்த துழாய் முகில் உரைப்ப
துதித்தனர்மா தவர்உரைப்பார். 1086

கள்ளுடைந்து ஒழுகு தண்பூங்
கற்பகம் எதிர்ந்த வண்டு
விள்ளுபூந் தருவேறு ஒன்று
விழையுமோ கமலச் செங்கண்
வள்ளல்!நின் காண்டல் ஒன்றே
வரன்என வணங்கி வாழ்த்த
புள்ளரசு உயர்த்த பெம்மான்
புகன்றனன் மகிழ்வு கூர்ந்தே. 1087

கொப்பூழில் மலர்ந்த தாமரையிலிருந்து மகரந்தம் எங்கும் பரவிட மேகலாபரணம் எங்கும் ஒளி வீச, சந்திர மண்டலம் போன்ற முகத்தில் தாமரைக் கண்கள் அருள் வீச, திருமால், அப்பதின்மர் முன்னே தோன்றினார். பழைய வேத முதல்வனைக் கண்ட அவர்கள் வியந்தனர். 1084

திருமாலைத் தரிசித்த அவர்கள் "எழுதாத வேதத்தின் முடிவான தனிப் பெருஞ்சுடர் நமக்காகவே இங்கு வந்ததோ? கண் முன்னாலே தோன்றிய அவன் அருள் என்னே!" என்று துதித்து ஆனந்தக் கண்ணீர் விட்டனர். நெஞ்சம் உருகித் தொழுதார்கள். அழுதார்கள்; மீளவும் ஆனந்தக் கண்ணீர் வெள்ளத்தில் ஆழ்ந்தார்கள். 1085

உடல்கள் குளிரும்படி, தண்ணீரில் குளித்து நின்று பலகாலம் தவத்தில் நின்ற பிரசேத சாக்கியர்கள் மனம் குளிரும்படி, திருமால் தம் கண்களினின்று அருள் மழை பொழிந்தார். 'நீங்கள் விரும்பும் வரங்களை அளித்திடுவேன். கேட்பீர்!' என்று திருத்துழாய் மாலை சூடிய மேகவண்ணப் பெருமான் கூறினார். அதற்கு அப்பதின்மரும் கூறிய பதில் வருமாறு : 1086

"பெருமானே! மதுவைத் துளிர்க்கும் கற்பக மரத்தை நேரில் காணும் வண்டு, வேறு ஏதாவது மரத்தை அடைய விரும்பாதன்றோ! அதே போல், வள்ளலான உம்மைத் தரிசித்த பிறகு வேறு வரத்தை நாங்கள் வேண்டுவோமோ?" என்று பதின்மரும் கூறினார்கள். கருடனைக் கொடியாய் உயர்த்தி திருமால் மகிழ்ந்து பதில் உரைத்தார். 1087

வானக மடவாள் பாரில்
வந்தனள் ஒருத்தி மன்றல்
கானிடைத் தவம்செய் கின்ற
கண்டுமா முனிவன்புல்லி
நீல்நிற விசும்பை வென்று
நெறிந்துநெய்த்து இருண்டு வார்ந்து
தேனொடு சுரும்பு மூசும்
செறிகுழ லங்கை ஈன்றாள். 1088

உழைஉழை ஒதுங்க நீண்ட
ஓடரித் தடங்கண் வண்டா
மழலைபைந் தேனா செவ்வாய்
மன்னுதண் தளிரா ஆய்ந்த
குழைதிகழ் கொடியின் தோன்றும்
கோதையை நெகிழ்ந்து பூந்தேன்
பொழிதரு நிழல்வைத்து ஈன்றாள்
போகு உயர் விசும்பு புக்காள். 1089

வைத்திடும் நறிய கோதை
மாரிடை எனும் பேர் பெற்று
தத்துஒளி கிளைக்கும் தண்ணம்
தடம்கதிர் மதியம் காப்ப
கொத்துறு தருக்கட்கு எல்லாம்
கூறும்ஓர் பெண் என்று ஆகி
புத்தமு தோடு தோன்றும்
பொன்எனப் பொலிகின் றாள்ஆல். 1090

ததைமலர் செறிந்து தாழ்ந்த
தடம்சினைத் தருக்கள் தாமே
மதர்அரி பரந்த உண்கண்
வல்லியை வழங்கும் நீவிர்
பதின்மரும் பவளச் செவ்வாய்ப்
பாசிழை யாளை வேட்டு ஓர்
புதல்வனை ஈன்று வேலைப்
புவிஎலாம் புரக்கல் வேண்டும். 1091

“பிரமலோசை என்னும் தேவநங்கை, காட்டில் தவம் செய்து வந்த கண்டுமாமுனிவரைத் திருமணம் செய்து கொண்டாள். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. வானை விடவும் இருண்டு அடர்ந்த கூந்தல் உடைய அப்பெண் 'மாரிஷா' எனப் பெயர் பெற்றவள். 1088

மாரிடை என்னும் அப்பெண் பூங்கொடி போன்றவள். பக்கங்களில் ஓடும் செவ்வரி படர்ந்த அவள் கண்களே வண்டுகள் ஆவன. அவள் மழலைப் பேச்சே தேன் போல் ஒழுகும். செவ்வாயே தளிர்களாக விளங்கின. இத்தகைய 'மாரிஷா' என்னும் தன் குழந்தையைத் தாய் பிரமலோசை ஒரு மரத்தின் நிழலில் போட்டு விட்டு வானுலகம் சென்று விட்டாள். 1089

'மாரிஷா' என்னும் பெயருடன் அப்பெண் குழந்தை சந்திரன் ஒளி வீசும் மரங்கள் கீழேயே, மரங்களின் பெண்ணாகவே வளர்ந்தாள். புதிய அமுதம் போல் மிகுந்த அழகுடன் அவள் விளங்குகிறாள். 1090

அழகும் ஒளியும் பரந்து வீசும் கண்களை உடைய கொடி போன்ற அந்த 'மாரிஷா' என்னும் பெண்ணைப் பூக்கள் நிறைந்த கொம்புகளுடைய மரங்களே உங்களுக்கு வழங்கும். நீவிர் பத்துப் பேர்களும் பவளச் செவ்வாய் உடைய மாரிஷாயை ஏற்றுக் கொண்டு திருமணம் செய்து கொள்ளுங்கள். பின் ஒரு புதல்வனைப் பெறுவீர்கள். அவன் அரசனாய் உலகைக் காப்பாற்றுவான். 1091

எண்ணுபத் திலக்கம் ஆண்டுஅவ் ஏழையோடு இன்பம் துய்த்து
மண்ணகம் புரந்து வீடு மருவுதிர் நீவிர் என்னா
அண்ணல்அம் பசும்புள் பாகன் அருளினின் புகன்று போக
பண்ணவற் பரவி நீங்கி பதின்மரும் நகரம் சார்ந்தார். 1092

கருங்கடல் வேலி ஞாலம் காடுகொண்டு இருத்தல் காணா
பரந்திடு கனலும் காலும் படைத்தனர் விடுத்து வல்லே
சுரும்புசூழ் மரங்கள்எல்லாம் சுட்டனர் சுடலும் நின்ற
மரம்சுடல் ஒழிமின் என்று மலரவன் விலக்கி னானே. 1093

அளிக்குலம் பரந்து பாட
அரும்பவிழ் வல்லி புல்லும்
நளிச்சினைத் தருக்கள் தம்மை
நான்முகன் சென்று நண்ணி
விளைத்துளரி ஊட்டு கின்ற
வெம்திறல் வேந்தர்க்கு அன்பால்
வளர்த்தபொன் கொடியை நீவிர்
வழங்குமின் என்று சொற்றான். 1094

அரக்குஇதழ் முளரி மேலான்
அரசர்பால் நண்ணி ஞாலப்
பரப்பெலாம் புரப்பீர் நீயிர்
பதின்மரும் கோடல் ஆகும்
தருக்குலம் வளர்த்த தெய்வத்
தாமரை முகத்தி னாளை
விருப்புற மணத்திர் என்ன
வேட்டனர் என்ப மன்னோ. 1095

ஐயிரு மன்னவர் ஆடு பாந்தளின்
பையினை வென்றுஅகல் பரும அல்குலாள்
வெய்யபூண் இளமுலை விருப்பின் புல்லினர்
வையகம் நிழற்றினர் மாலை வெண்குடை. 1096

கொத்தலர் துளவுஅணி கொண்டல் கூறிய
அத்திற மாதொடும் அமரர் ஆண்டினில்
பத்துநூ றாயிரம் பருவம் வேலையின்
தத்துநீர் சூழும்இத் தரணி தாங்கினர். 1097

பத்து லட்சம் வருடங்கள் இல்லறத்தில் இன்பம் நுகர்ந்து, உலகத்தை ஆட்சி செய்வீர்கள். அதன் பின்னர், வீடு பேறு அடைவீர்கள்" 1092

மேற்கண்டவாறு அருள் செய்து பேசி விட்டுக் கருடனை வாகனம் ஆகக் கொண்ட திருமால் மறைந்தார். அப்பத்துப் பிரசேதர்களும் நகரம் அடைந்தனர்.

கருங்கடல் சூழ்ந்த பூமி எங்கும் காடு பரந்து சூழ்ந்திருந்ததைக் கண்ட அவர்கள், தீயாலும் காற்றாலும் அங்கிருந்த மரங்களை எரித்து அழிக்கலாயினர். அவ்வாறு மரங்களைச் சுட்டு எரித்து அழிக்கலாகாது என்று பிரமதேவன் அவர்களைக் கேட்டுக் கொண்டான். 1093

பிரம தேவன், வண்டுகள் பரந்து பாடும், அரும்புடன் கூடிய செடிகொடிகளை நோக்கி, "நீங்கள், காட்டை எரிக்கும் பிரசேதர்களாகிய மன்னர்களுக்கு, உங்கள் பெண்ணான மாரிஷாவைக் கொடுங்கள்" என்று பணித்தான். 1094

சிவந்த தாமரையில் அமர்ந்த பிரமதேவன் அந்தப் பத்து அரசர்களிடம் வந்தார். "உலகைக் காப்பாற்றும் பணியில் நீங்கள் ஈடுபடுங்கள். மரங்களால் வளர்க்கப்பட்டவளும் தாமரை முகம் கொண்டவளும் ஆகிய மாரிஷாவை நீங்கள் விருப்பத்துடன் திருமணம் செய்து கொள்ளுங்கள்" என்று பிரமதேவன் கூறினார். 1095

அதன்படியே அப்பதின்மரும் மாரிஷாவைத் திருமணம் செய்து கொண்டனர். பாம்புப் படத்தை வெல்லும் அழகுடைய இடையையும் விரும்பத் தகுந்த மார்பகங்களையும் பெற்ற அந்நங்கையைத் திருமணம் செய்து கொண்ட பின்னர், கொற்றக் குடைக் கீழ் அமர்ந்து அவர்கள் ஆட்சி நடத்தினார்கள். 1096

கொத்தாகத் திருத்துழாய் மாலை சூடிய திருமால் கூறியபடி அப்பெண்ணுடன் அவர்கள் தேவ வருஷங்கள் ஒரு இலட்சம் இல்லறம் நடத்தி உலகை ஆண்டனர். 1097

மன்னவன் சாக்குட மனுவின் காலத்து
பன்னுபல் லுயிர்எலாம் படைத்த தக்கன்முன்
உன்னும்ஊழ் வினையினால் உடலம் நீத்தனன்
துன்னுசீர்ப் பதின்மர் தம் தோன்றல் ஆயினான். 1098

ஈன்றஅத் தக்கனை இனிது நோக்கினர்
ஆன்றஇவ் வுலகம்நீ ஆளு வாய்என
கான்றபொற் சுடர்முடி கவித்து கானகம்
தேன்தரு தாரவர் சென்று மேயினார். 1099

இல்லறம் சில்பகல் இயற்றி வைகலால்
தொல்லைநல் லறிவுஎலாம் தொலையப் பெற்றனம்
வல்லிதின் முத்திசேர் வழிஉ ரைக்கஎன
நல்லிசை நாரதன் நண்ணிக் கூறுவான். 1100

கார்முகில் வண்ணனைக் கருதி லார்களை
ஓர்இரு கால்விலங்கு என்ன ஓதுவார்
கூரும்வா லறிவினர் என்று கோதுஇலா
நாரத மாமுனி நவிலும் மீட்டுமே. 1101

விரிதரு தண்புனல் வேரில் பெய்திடின்
மரன்எலாம் தழையுமா போல மாய்வுஇலா
முருகுஉலாம் தண்துழாய் முதல்வற் போற்றிடின்
உரவுநீர் உலகுஎலாம் உவக்கும் என்பவே. 1102

கந்தரம் வான்மிசைக் கவினி ஒல்லையின்
வந்துஅதின் மறைவது போல மால்உழைச்
சுந்தர உலகெலாம் தோன்றி நின்றபின்
அந்தமும் அவனுழை அடையும் என்பவே. 1103

வெய்யவன் கதிரினால் வீழும் தண்புனல்
செய்யஅக் கதிரினால் சேரும் நாசம்போல்
கையுறும் உலகெலாம் கருணை மாலுழை
ஒய்யென தோன்றிப் பின் ஒன்றும் நாசமே. 1104

நான்காம் மனுவான சாக்குட மனு என்னும் மன்னன் காலத்தில், பிரஜாபதியாய் விளங்கிய தக்ஷன், ஊழ்வினையால் உயிர் நீத்த பிறகு, இப்பதின்மர்களாகிய பிரசேதஸர்களின் புதல்வனாய்ப் பிறந்தான். 1098

இப்படிப் பிறந்த புதல்வன் தக்கனை அவர்கள் ஆசி செய்து, 'நீ இனி இவ்வுலகை ஆள்வாயாக' என்றனர். அவர்கள், அவனுக்கு முடிசூட்டி விட்டுத் தவம் செய்யக் காடு சென்றார்கள். 1099

காடு அடைந்த பிரசேதர்கள் நாரத முனிவரைத் தரிசித்தனர். அவரிடம் அவர்கள் "இல்லறத்தில் பலகாலும் ஈடுபட்ட நாங்கள் நல்லறிவை இழந்து விட்டோம். சிறந்த பேறான வீடு அடையும் வழியை நீங்கள் எங்களுக்குக் கூறி அருள்க" என்று வேண்டினார்கள். 1100

"கார்மேக நிறமுடைய திருமாலை எண்ணித் தியானிக்காதவர் நாற்கால் பிராணிகளுக்குச் சமம் ஆவார்கள் எனச் சான்றோர் உரைப்பர். உண்மை அறிவுடைய அம்மேலார்கள் சொல்லைக் கேட்க வேண்டும்" என்று பேசிய நாரதர் மேலும் அறிவுரை கூறலானார். 1101

வேரில் பெய்த தண்ணீர் மரம் முழுவதற்கும் பயன் தருவது போலத் திருமாலைத் தொழுது வணங்கினால் உலகம் எல்லாம் உய்வு பெறும். 1102

மேகம் வானத்திலே தோன்றி மழை பொழிந்த பின், அந்த ஆகாயத்திலேயே மறைவது போல, அழகான உலகங்கள் எல்லாம் திருமாலிடத்தேயே தோன்றி முடிவில், அவனிடத்தேயே ஒடுங்கும். 1103

சூரியன் கிரணத்தால் மேகம் ஆகிப் பெய்யும் தண்ணீர் மறுபடியும் அச்சூரிய வெப்பத்தாலேயே பருகப்பட்டு மறைவதைப் போல, உலகங்கள் எல்லாம் திருமால் அருளாலேயே காப்பாற்றப்பட்டுப் பின்னர் அவனாலேயே அழிந்து ஒடுங்கும். 1104

பாடுமின் பசுந்துழாய்ப் பரமன் பல்புகழ்
சூடுமின் மாயவன் தூய தாள்மலர்
நாடுமின் நாகணை யானை நன்குஎன
பீடுசால் நாரதன் பெயர்ந்து போயினான். 1105

பதின்மரும் மாதவம் பலபு ரிந்துவான்
நதிதரும் மால்பதம் நண்ணி னார்என
விதுரனுக்கு இயம்பினன் வெளிறு நீங்கிய
மதியினில் சிறந்தஅம் மயித்தி ரேயனே. 1106

எனஉயர் சுகமுனி எடுத்துஇ யம்புவான்
வினைமுதல் தடிந்தஅவ் விதுரன் வல்லைபோய்
நனைகவுள் புழைக்கைம்மா நகரம் நண்ணினன்
தனிவனம் புகுத்தினான் தம்முன் தன்னையே. 1107

பெரும்புகழ் சேர்பிர சேத சப்பெயர்
பொருந்திய பதின்மர்தம் பொருஇல் மாக்கதை
தெரிந்துற மொழிபவர் செவியின் மாந்துவோர்
அரும்பெறல் நலம் நுகர்ந்து அடைவர் முத்தியே. 1108

ஒன்னலர் வணங்கும்உத் தான பாதனாம்
மன்னவன் மரபினை வழங்கி னேன்அவன்
முன்னவன் மரபுஇனி மொழிவல் கேள்எனா
பன்னினன் முனிவரன் பார்த்தி பற்குஅரோ. 1109

போதின்நான் முகன்தொழும் புனித மால்கதை
காதலால் நிச்சலும் கருத்துள் நாடும் மா
மாதவம் புரிதரு மறைவல் லீர்என
சூதமா முனிவரன் சொல்லல் மேயினான். 1110

நான்காம் கந்தம் முற்றிற்று

ஆதலால், பசுந்துழாய் மாலை சூடிய பரமன் ஆகிய திருமால் புகழ் பாடுங்கள். மாயவன் ஆன அவன் தூய திருவடித் தாமரைகளில் தொழுது துதியுங்கள். நாகத்தை அணையாகக் கொண்டவனையே நாடுங்கள். இவ்வாறு நாரதன் அறிவுரை கூறி விட்டுப் பிரசேதர்களை விட்டு நீங்கினான். 1105

பத்துப் பிரசேதர்களும் தவங்கள் செய்து முடிவில் திருமால் திருவடி அடைந்தனர். இவ் வரலாற்றை தெளிவான ஞானம் பெற்ற மைத்திரேய முனிவர் விதுரனுக்குக் கூறினார். 1106

மேற்கண்டவற்றை சுகமுனிவர் பரீட்சித்திடம் தொகுத்துக் கூறினார். வினைகளை அடியோடு போக்கிய ஞானியான விதுரன், அத்தினாபுர நகரம் சென்று, தம் தமையன் ஆன திருதராட்டிரனை வனம் செல்லச் சொன்னான். 1107

புகழுடைய பதின்மர் பிரசேதர்களின் வரலாற்றைப் பயில்பவர்கள், சொல்பவர்கள், கேட்பவர்கள் ஆகிய யாவரும் பெறுதற்கரிய வீடு பேற்றைப் பெற்று உய்வு பெறுவார்கள். 1108

சுகமுனிவர் பரீட்சித்திடம், "பகைவர்களால் வணங்கப் பெறும் உத்தானபாதனின் வழியில் வந்தோர் சரிதத்தைக் கூறினேன். இனி அவன் தமையன் ஆன பிரிய விரதனுடைய சரிதத்தைக் கூறுவேன்" என்றார். 1109

இவ்வாறு சுகர், பரீட்சித்துக் கூறியவற்றை சூதமா முனிவர், சௌனகாதியரிடம் விவரித்தார்.

"தாமரையில் அமரும் பிரமதேவன் தொழுது கூறும் திருமால் வைபவங்களைப் பக்தி மேலிட்டால் தினமும் நீங்கள் பயின்று துதியுங்கள். வேதம் வல்ல முனிவர்களே அதனால் உய்வு பெறலாம்" என்று கூறினார். 1110

நான்காம் கந்தம் முற்றிற்று

110

ஐந்தாம் கந்தம்

ஸ்ரீ

துருவன் வரலாறும் உலகங்களின் படைப்பும்

ஐந்தாம் கந்தம்

ஐந்தாம் கந்தம்

1. பிரியவிரதன் வமிசம்

கேட்டிவாள் அரச மகதியாழ் முனிபால்
கேட்டனன் தன்நிலை அறிந்த
வாள்திறல் பிரிய விரதன்வண்டு அறைதார்
மன்னவர் மணிமுடி வணங்க
சேட்டுஇளம் பருதி யிளவெயில் கிளைக்கும்
திருமணி நெடுமுடி புனைந்து
சூட்டுவாள் அரவம் சுமந்தபார் புரந்து
துழாய்முகில் பதமடைந்தனன்ஆல். 1111

என்னலும் இறைவன் முழுதுணர் சுகன்தன்
எறிக்கும்வாள் மதிமுகம் நோக்கி
தன்நிலை அறிந்த தாமவேல் வேந்து
தயங்குஒளி பொழிமணிச் சுடிகை
பன்னகம் சுமந்த நெடுநிலம் பரித்த
பான்மைஎன் பரவைமண் பரித்தும்
கன்னியம் துளவோன் உயர்பதம் யாங்கு
கலந்தனன் கழறுஎனக் கரைவான். 1112

குளிறுவெண் தரங்கக் கருங்கடல் முகந்த
கொண்டல்வாய் பொழிந்தவெண் முத்தும்
ஒளிறுசெம் மணியும் அருவி கொண்டு இறங்கும்
ஓதைபெற்று ஒழுகுமும் மதத்துக்
களிறுகண் படுக்கும் காந்தள்அம் சாரல்
கந்தமா தனநெடுங் குன்றம்
வெளிறுஇலாக் கேள்வி மன்னவன் அடைந்து
விழுத்தவம் இழைத்தனன் விழைந்தே. 1113

வியன்இரு விசும்பின் இமையவர் எரிபொன்
விமானம்என் இறந்தன தொடர்ந்து
வயின்வயின் மிடைய உயிரெலாம் பூத்த
வானவன் கதிர்மணி விமானம்
உயர்வெளி அளக்கும் பருதிபல் கோடி
உதித்தென ஒள்ஒளி தழைந்து
புயன்முகம் கிழித்து மன்னவன் தவம்செய்
பொலங்கிரிப் புறத்துஇறுத் ததுவே. 1114

ஐந்தாம் கந்தம்

1. பிரிய விரதன் வமிசம்

சுகமுனிவன் பரீட்சித்து மன்னனிடம் கூறியதாவது :- "அரசே! கேள். மகதி என்னும் வீணை ஏந்திய நாரத முனிவனிடம் தன்னிலையைக் கேட்டறிந்த பிரிய விரதன் என்னும் மன்னன் அரசாட்சியை மேற்கொண்டான். சிற்றரசர்கள் வணங்க, அவன், சூரிய ஒளியினும் மிகுந்த மணிக் கிரீடத்தைப் புனைந்து கொண்டு ஆதிசேடனால் தாங்கப்படும் இவ்வுலகைப் பல ஆண்டுகள் ஆண்டான். முடிவில் திருமால் திருவடி அடைந்தான்." 1111

இவ்வாறு கூறிய சுகரை விளித்துப் பரீட்சித்துக் கேட்டான். "முனிவரே! தன்னிலைமை அறிந்த பிரியவிரத மன்னன், வேலேந்தி உலகை ஆண்ட விதம் எவ்வாறு? ஒளி வீசும் மணிகளுடைய ஆதிசேடன் தாங்கும் இப் பாரினை ஆண்ட பின், திருத்துழாய் சூடிய திருமால் திருவடி அடைந்த விதம் எவ்வாறு? விளக்கி உரைப்பீராக" இதனைக் கேட்ட சுகர் பின்வருமாறு பிரியவிரதன் வரலாற்றைக் கூறினார். 1112

பிரிய விரதன் கந்தமாதனம் என்னும் மலையை அடைந்து தவம் செய்தான். இம்மலையில் காந்தள் பூக்கள் நிறைய உண்டு. அலைகள் முழங்கும் கடலினின்று ஏறி வந்த மேகங்கூட்டங்கள் பொழிந்த மழை வெள்ளத்தில் முத்துக்களும் மணிகளும் விழும் அருவிகள் கொண்டது இம் மலை ஆகும். மூவகை மதங்களை வெளிவிடும் யானைகள் இங்கு வாழும். குற்றமற்ற ஞானச்செல்வம் பெற்ற பிரியவிரதன் இம்மலை அடைந்து தவம் செய்தான். 1113

இத்தகைய மலையில் ஆகாயத்தில் தேவர்களின் விமானங்கள் பலவும் இயங்கின. அவற்றின் நடுவே, சூரியனைப் போல் ஒளி வீசும் ஒப்பற்ற தனி விமானத்தில் பிரமதேவன் வந்தான். கோடி சூரியர்களின் ஒளி கூடிய பிரமனின் விமானம் மேகத்தைக் கிழித்துக் கொண்டு வந்து, அங்கே தவம் புரியும் பிரியவிரதன் அருகே இறங்கிற்று. 1114

கோத்தவெண் திரையில் வளர்தரு பச்சைக்
குழவிதன் எழில்வரும் உந்தி
பூத்தசெம் முளரி மலரினோன் வருதல்
புரவலன் கண்டுஎழுந்து இறைஞ்சி
ஏத்தினன் ஏத்த வாள்திறல் குரிசில்!
என்னைநீ அருந்தவம் புரிதி
காத்தியால் ஒருவெண் குடைநிழல் பரப்பி
கண்ணகன் புவிஎன பகர்வான். 1115

எண்ணுறு காமம் முதற்பகை அடக்கார்
இருள்படு கானகத்து ஏகி
நண்ணினும் மாயை வலையினைக் கடவார்
நவிற்றுவெம் பகைநலிந்து அறிந்தோர்
மண்ணகம் புரந்து மகவொடு மகிழ்ந்து
வைகினும் மாயையை மருவார்
பண்ணுறு கருமம் கனாஎனப் பார்த்து
பார்புறந் தருகஎனப் பணித்தான். 1116

மோட்டுநீர் உலகம் முழுவதும் பூத்த
முதலவன் பணிக்கஉள் மகிழ்கூர்ந்து
ஊட்டரக்கு எறிசெந் தாமரை அனைய
ஒண்மலர்க் கரத்தினால் தந்தை
சூட்டிய பசும்பொன் சுடர்முடி புனைந்து
சூட்டுஅராச் சுமந்தபார்ஏழும்
பாட்டுவண்டுஇமிரும் நறுமலர்த் தெரியல்
பனிமதிக் குடைகவித்து அளித்தான். 1117

ஒருதனி ஆழி வெஞ்சுடர் மறைந்த
ஓர்புறத்து இருட்குறும்பு எறிவான்
விரைசெலல் மான்தேர்ப் பருதியின் கடாவி
மேருவை வலம்கொளத் தடந்தேர்
எரிமணி ஆழி இருநிலம் கிழித்த
எல்லையே ஏழ்எனக் கிடந்த
பொருதிரை ஆழி யாயமற்று அவன்தன்
புகழினை எங்ஙனம் புகல்கேன். 1118

பாற்கடலில் பள்ளி கொண்ட திருமால் கொப்பூழ்த் தாமரையில் தோன்றிய பிரமதேவன் வருவதைப் பிரிய விரதன் கண்டான். உடனே அவன் எழுந்து பிரமனை வணங்கினான்.பிரமன், "மன்னனே! கொற்றக் குடைக் கீழ் இருந்து ஆட்சி புரிய வேண்டிய நீ ஏன் தவம் செய்கிறாய்?" என்று கேட்டான். 1115

மேலும் பிரமதேவன் பிரியவிரதனிடம் கூறியதாவது :-

"காமம் முதலிய ஆறு பகைகளைக் கடவாதவர் காடு அடைந்து தவம் செய்தாலும் மாயையின் வலையினின்று மீளார். அவைகளைப் பகை என உணர்ந்து, இந்திரியங்களை அடக்குவோர் பூமியை ஆண்டு, மக்களைப் பெற்று மகிழ்ந்தாலும் அந்த மாயையிடம் அகப்படாமல் இருப்பார்கள். ஆதலின் நீ செய்யும் கருமங்களைக் கனவாகவே கொண்டு, உலகை ஆண்டு வருவாய்". 1116

பெருமையுடன் கூடிய உலகங்களைப் படைத்த பிரமதேவன் கூறியதைக் கேட்ட பிரிய விரதன் அரசாள இசைந்தான். செந்தாமரைக் கையால் தந்தை முடிசூட்ட அவன் ஆதிசேடன் தாங்கும் ஏழுலகங்களையும் வெண்கொற்றக் குடைக் கீழ் இருந்து ஆட்சி செய்தான். 1117

ஒற்றைச் சக்கரத்தில் பவனி வரும் சூரியனால் மறைக்கப்பட்ட இருளாகிய குறும்பை அழிப்பதற்காகப் பிரியவிரதன் குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் ஏறி மேருவை வலங்கொண்டான். அவ்வாறு சென்ற பொழுது, தேர் கிழித்த எல்லையை இடமாகக் கொண்டு, அவன் கடல் சூழ்ந்த இந்நிலவுலகைப் பகுத்தான். 'அவன் புகழை எங்ஙனம் புகல்வேன்?' என்று சுகர் பரீட்சித்திடம் கூறினார். 1118

எழுதினம் ஆழி எழுமுறை உருளும்
இடைவெளி ஏழுதீவு என்ன
விழைவொடு தடம்தேர் நடத்தும்அவ் வேந்தன்
விச்சுவ கருமன்என் றுஉரைக்கும்
தழைபுகழ் விதிமுன் உயிர்த்தநல் அணங்கை
தழுவி ஓர் தயங்கெழில் பெண்ணோடு
அழகுசெய் ஆக்கி னித்திரன் முதலாம்
ஐயிரு புதல்வரை அளித்தான். 1119

ஆரழல் நாமம் சான்ற
ஆங்குஅவர் தம்மின் மூவர்
கூர்அழல் காமம் காய்ந்து
குறிப்புஅரும் தவத்தர் ஆக
ஓர்எழு தீவம் ஓர் ஏழ்
புதல்வரும் உவப்ப ஈந்தான்
கார்எழு மின்னின்அன்ன
காய்கதிர்ப் புலவு வேலான். 1120

காவலன் உயிர்த்த மாதை
காவியற்கு அளித்தான் அன்னோன்
கோவைவெண் முத்த மூரல்
குவிமுலை அணங்கைப் புல்லி
ஆவிஅம் துகிலாள் தெய்வ
யானையை ஈன்றான் அந்த
மாவகிர் நெடும்க ணாளை
யயாதிமா மணம்செய் தான்ஆல். 1121

மத்தவெங் களிநல் யானை
மனுமகன் பின்னும் வேறு ஓர்
புத்தமுது அனைய மாதை
புணர்ந்தனன் புணர அன்னாட்கு
உத்தமன் தாம தன்பார்
உரைக்கும்ரை வதன்இம் மூவர்
வித்தகர் மனுக்கள் ஆவோர்
விளங்கவந் துஉதித்தார் அன்றே. 1122

அந்த அரசன், ஏழே நாள்களில், தன் தேர்ச் சக்கரம் கிழித்த ஏழு இடங்களும் ஏழு கடல்களாகவும், அவற்றின் இடையே அகப்பட்ட நிலங்களை ஏழு தீவுகளாகவும் ஆகும்படி பகுத்தான். பிரஜாபதியான விசுவ கர்மா பெற்ற மகளைத் திருமணம் செய்து கொண்டாள். (இவள் பெயர் பர்ஹிஷ்மதி ஆகும்). ஆக்கினீத்தரன் முதலிய பத்துப் புதல்வர் களையும் அழகிய ஊர்ஜஸ்வதி என்னும் பெண்ணையும் பெற்றான். 1119

நெருப்பின் பெயருடைய ஆக்கினீத்தரன் முதல் பத்துப் புதல்வர்களில் மூவர், காமத்தை வெறுத்துத் தவசிகள் ஆனார்கள். மற்றைய ஏழு பிள்ளைகளுக்கும் அரசன் ஏழு தீவுகளை கொடுத்தான். மேகத்தில் தோன்றும் மின்னலை ஒத்த வேல் ஏந்திய பிரியவிரதன் இவ்வாறு ஆட்சியைப் பகுத்தான். 1120

பிரிய விரதன் தன் மகள் ஊர்ஜஸ்வதியைச் சுக்கிரனுக்குத் திருமணம் செய்வித்தான். வெண்முத்துப் போன்ற பற்களுடைய அவளுடன் வாழ்ந்த சுக்கிரன், தெய்வயானை என்னும் பெண்ணைப் பெற்றான். புகை போலும் மெல்லிய சேலை அணிந்த அத்தெய்வயானை மாவடு போன்ற கண்ணுடையவள் ஆவாள். அவளே யயாதியை மணம் செய்து கொண்டவள் ஆவாள். 1121

மதயானை போன்ற வலிமை பெற்ற, பிரியவிரதனாகிய மனுவின் மகன், புதிய அமுது போன்ற வேறொரு பெண்ணையும் மணம் செய்து கொண்டான். அவர்களுக்கு மூன்று புதல்வர்கள் மனுகுலம் விளங்கும்படி தோன்றினர். அவர்களே, உத்தமன், தாமதன், ரைவதன் எனப் படுபவர் ஆவர். 1122

துதிதரு தீவுஓர் ஏழும்
தொடுகடல் ஏழும் ஆக
முதுநில வரம்பு கண்ட
முதல்வன் என்று எவரும் போற்ற
பதினொரு பத்தி னோடே
படர்ந்துஉறு கோடி யாண்டு
விதிமுறை உலகம் காத்து
மேவினன் மீட்டும் கான்ம். 1123

மேவரும் தவத்தோர் கூறும் மெய்ம்மறை கேட்டு நாளும்
பூவையும் கிளியும் பேசும் பொதும்பர்சூழ் இமயச் சாரல்
தீவிய மழலைச் செவ்வாய் சிறுவரைப் பெறுதல் வேண்டி
நாவலம் தீவு காப்போன் நற்றவம் இயற்றி னான்ஆல். 1124

அற்றம்இல் புகழ்சேர் வைவேல் ஆக்கினித் திரன் என்று ஓதும்
வெற்றிநா வலந்தீவு ஆளும் வேந்துசெய் தவம்உட் கொண்டான்
பொன்தரு நீழல் வாழும் பூருவ சித்தி ஆதி
உற்றுஅர மகளிர் பாட உவந்து உறை மலரி னானே. 1125

ஏடுஅவிழ் கமலத் தண்ணல் இன்சுவை அமுதம் ஊற
பாடினள்நின்ற செவ்வாய் பவளவாய் அணங்கை நோக்கி
நாடினன் தவஞ்செய் கின்ற நாவலம் தீவி னாற்கு
தோடுஅவிழ் அலங்கல் மாலை சூட்டுஎன அருளி னான்ஆல் 1126

அன்னமும் மயிலும் போல அரசிளங் குமரர்க்கு எல்லாம்
முன்னவ னாகி நின்ற மூரிவேல் காளை முன்னர்
பொன்இணர் வல்லி என்ன பூருவ சித்தி என்பாள்
மின்என அமுதம் என்ன விண்கிழித்து எய்தல் உற்றாள். 1127

அளைஉறை அரியேறு அன்னான் அழகுவீற் றிருந்த மார்பும்
வளைகடல் அவனி தாங்கி வரையெனப் பணைத்த தோளும்
தளைஅவிழ்ந்து அலரும் செய்ய தாமரைக் கண்ணும் உண்கண்
களிகொள நோக்கி நெஞ்சம் கலுழ்ந்தனள் வியந்து நின்றாள்.
1128

ஏழு தீவுகளையும் ஏழு கடல்களையும் உலகைப் பகுத்து ஆண்ட முதல்வன் என்று பிரிய விரதன் போற்றப்பட்டான். அவன் நூற்றுப் பத்துக் கோடி ஆண்டுகள் உலகத்தைக் காப்பாற்றி ஆட்சி செய்த பின்னர் மறுபடியும் தவம் செய்யக் காடு சென்றான். 1123

நாவல் தீவான பாரதத்தை ஆண்ட ஆக்கினீத்தரன் மழலை பேசும் குழந்தைகளைப் பெற வேண்டும் என, இமயமலைச் சாரல் சென்று தவம் செய்யலானான். முனிவர்கள் கூறியபடியே அவன் அவ்வாறு செய்தான். நாகணவாய்ப் பறவைகளும் கிளிகளும் கூடி மிழற்றும் சோலைகள் அந்த இமயமலைப் பகுதிகளில் உண்டு. 1124

நிறைந்த புகழுடன் வேலாயுதம் ஏந்தி நாவல் தீவை ஆளும் அரசனான ஆக்கினீத்தரன், தவம் செய்யும் செய்தியை பிரமதேவன் அறிந்தான். கற்பகச் சோலையில் வாழும் பூருவசித்தி முதலிய தேவமாதர்கள் பாடியபடி பிரமனை அணுகி நின்றனர். 1125

பவளம் போன்ற வாயுடைய பூருவசித்தியின் அமுதம் போன்ற இனிய சுவை கூடிய பாட்டைத் தாமரையில் தோன்றிய பிரமதேவன் கேட்டான். அவன் அவளிடம், "நாவலந்தீவின் அரசனான ஆக்கினீத்தரன் ஆராய்ந்து தவம் செய்கிறான். அவனிடம் சென்று, நீ மலர்மாலை சூட்டித் திருமணம் செய்து கொள்" என்று பணித்தான். 1126

அரச புதல்வர்களுக்கெல்லாம் தலைவனாய்க் காளை போல் விளங்கும் ஆக்கினீத்தரன் முன்னே, அன்னமும் மயிலும் போல, பொற்கொடியான பூருவசித்தி வந்து நின்றாள். அமுதமோ இவள் அல்லது மின்னலோ என்னும்படி அவள் வானிலிருந்து கீழிறங்கி, அரசன் முன்னே நின்றாள். 1127

குகையில் வாழும் ஆண்சிங்கத்தைப் போன்ற ஆக்கினீத்தரனின் அழகிய மார்பை அவள் பார்த்தாள். கடல் சூழ்ந்த உலகைத் தாங்கி ஆளும் அம்மன்னனின் திரண்ட தோள்களையும், இதழுடன் மலரும் தாமரை மலர் போன்ற அவன் கண்களையும், அந்நங்கை தன் மைக்கண்களால் நோக்கினாள். அவ்வாறு பார்த்ததும் அவள் நெஞ்சுருகி வியந்தாள். 1128

மழைகிழித்து எழுந்த மின்போல்
வந்தனள் நின்ற மாதின்
குழைகிழித்து ஒழுகும் கண்ணும்
குறுநகைப் பவள வாயும்
இழைகிழித்து எழுந்த கொம்மை
இளமுலைத் தடமும் நோக்கி
அழல்உயிர்த்து ஒளிறும் வேலான்
ஆற்றலன்ஆயி னான்ஆல். 1129

ஏந்துஎழில் பிறைவெண் கோட்ட
இளங்களி யானை அன்னான்
கூந்தல்அம் பிடியின் நின்ற
குறுநகை குமுதச் செவ்வாய்
மாந்தளிர் அன்ன மேனி
மழைமதர் நெடுங்கண் பேதை
சாந்தணிந்து ஏந்து கொம்மைத்
தடமுலை தழுவி னான்ஆல். 1130

கொந்துஅழல் குருதி வேலான்
கொய்ம்மலர் அகலம் தோய்ந்த
அந்தளிர் அனைய செவ்வாய்
அணிஇழை வயிறு வாய்த்த
நந்தல்இல் சிறப்பு மேவும்
நாபியே முதல்வர்ஆய
மைந்தர்ஒன் பதின்மர் மாலை
மதிஎன வளர்ந்தார் மன்னோ. 1131

உரைசெயும் நாபி வைவேல் உற்றகிம் புருடன் வண்மை
அரிதிகழ் கேது மாலன் அணிஇளா விரதன் நன்மை
மருவுபத் திராச்சு வன்ஏர் வாய்ந்திடும் இரம்மி கன்வெம்
குருதிவேல் இரண்ம யன்சீர்க் குருஎனும் அவர்கள் பேரே. 1132

மேவலர் கடந்த ஒள்வேல் வேந்துஅழல்நாமத் தோன்றல்
ஓவலில் சிறப்பு வாய்ந்த ஒன்பது வருடம் ஆக்கி
நாவலம் தீவு தன்னை நாபியே முதலி னோர்க்கு
கோவடு குருதி வைவேல் குமரர்பே ராக ஈந்தான். 1133

நெருப்பை உமிழும் வேலாயுதம் ஏந்திய அம்மன்னன், மேகத்தைக் கிழித்துக் கொண்டு வந்த மின்னல் போல் அங்கு நின்றவளைக் கண்டான். காதுக் குழைகளைத் தொடும் அளவு நீண்ட கண்களும், புன்னகை தவழும் பவள வாயும், மாலைகளைக் கிழித்தபடி மேலெழும் முலைகளும் உடைய அந்நங்கையைப் பார்த்ததும் அவள் அழகில் மன்னன் தன்னை இழந்தான். 1129

பிறைச் சந்திரனை ஒத்த கொம்புகளை உடைய யானை போன்ற அம்மன்னன், பெண் யானை போல் நின்ற பூர்வசித்தியை விரும்பினான். புன்னகை விளங்கும் குமுத மலர் போன்ற, வாயும் மாந்தளிர் உடம்பும், மேகம் போன்ற கருத்த கண்களும் கொண்ட அந்நங்கையின் வட்டமான அழகிய முலைகளை அவன் தழுவினான். 1130

இரத்தம் கொப்புளிக்கும் வேல் ஏந்தும் மன்னன், பூப் போன்ற மார்புடைய அந்நங்கையை மணந்து இல்லறம் ஏற்றான். தளிர் போன்ற செவ்வாயுடைய பூருவசித்தியின் வயிற்றில் நாபி முதலிய ஒன்பது புதல்வர்கள் பிறந்தனர். அவர்கள் யாதொரு குறையும் இன்றி, மாலைக்காலச் சந்திரன் போல் வளர்ந்தனர். 1131

அவ்வொன்பது புதல்வர்கள் வருமாறு :- பெயர் பெற்ற நாபி, வேல் ஏந்திய கிம் புருடன், வன்மை உடைய அரிவர்ஷன், கேதுமாலன், இளாவிருதன், நலம் மிகுந்த பத்ராச்வன், நேர்மை உடைய இரம்யகன், வேல் உடைய ஹிரண்மயன், சீருடைய குரு என்பவர்களே அவர்கள். 1132

பகைவர்களைத் தன் வலிமையால் வென்ற வேலேந்திய ஆக்கினீத்தரன் தன் நாடாகிய நாவலந்தீவை ஒன்பது பகுதிகளாகப் பிரித்தான். அவ்வொன்பது பகுதிகளையும் நாபி முதலிய ஒன்பது புதல்வர்களுக்கும் அவரவர் பெயர்களுக்கு உரிமை செய்து கொடுத்தான். 1133

நவில்கரும் கடல்சூழ் கின்ற
நாவலம் தீவுஎன்று ஓதும்
புவிமிசை மனையாள் ஆய
பூருவ சித்தி யோடும்
கவினொடு பத்தி னோடும்
கலந்துறு கோடி ஆண்டு
குவைபெறும் இன்பம் துய்த்தோன்
குறுகினன் வானத்து அன்றே. 1134

அழிவில்சீர் நாபி ஆதி
ஆகும்ஒன் பதின்மர் செம்பொன்
எழில்திகழ் மேரு ஈன்ற
இளநகை பவளச் செவ்வாய்
விழைவுஉறு மேருத் தேவி
முதலமென் கொடிய ன்னார்ஏர்
தழையும்ஒன் பதின்மர் தம்மை
தனிமணம் இயற்றி னார்ஆல். 1135

ஆற்றல்வேல் நாபி வேள்வி
ஆற்றலும் கருணை கூர்ந்து
காற்றுஎறி சிறைப்புள் பாகன்
கருமுகில் என்னத் தோன்ற
மாற்றுஅரு நின்போல் மைந்தன்
வழங்குஎன யாமே வந்து
தோற்றுதும் என்று வேதத்
தொன்முதல் அருளி னான்ஆல். 1136

மடவரல் மேருத் தேவி
வனமுலை பொருது விண்ட
தொடையல்அம் கோதை தாழ்ந்து
துயல்வரப் பணைத்து வீங்கும்
அடல்கெழு திணிதோள் நாபிக்கு
ஆழிஅம் தடக்கை யானே
இடபன்என்று உலகம் எல்லாம்
ஏத்துறத் தோற்றம் செய்தான். 1137

கருங்கடல் சூழ்ந்த நாவலந் தீவில், ஆக்கினீத்தரன் தன் மனைவியான பூருவ சித்தியுடன் பத்துக் கோடி வருஷங்கள் இல்லற இன்பத்தில் வாழ்ந்தான். அதன் பின்னர் உலக வாழ்வை நீத்துத் தேவருலகம் சென்றான். 1134

அழிவில்லாத நாபி முதலிய ஒன்பது புதல்வர்களும், பொன் போன்ற மேருவின் பெண்கள் ஒன்பது பேரைத் திருமணம் செய்து கொண்டனர். புன்னகை தவழும் பவளச் செவ்வாயுடைய அந்த ஒன்பது மங்கைகளுடன் அவ்வொன்பது புதல்வர்களும் தனித்தனி இல்லறம் நடத்தினர். 1135

ஆற்றல் மிகுந்த நாபி என்னும் அவ்வரசன் வேள்விகள் செய்தான். அதனால் மகிழ்ந்த, வேத முதல்வனான திருமால், அவ்வேந்தன் முன்னே, அவ்வேள்வியில் வந்து தோன்றினான். காற்றை விடவும் வேகமாகச் செல்லக் கூடிய கருடன் மீதேறி வந்த கருணை உடைய மேகவண்ணத் திருமால், நாபியிடம், "உன்னைப் போலவே நீ ஒரு மகனைப் பெறுவாய்; யாமே அம் மகனாக வருவோம்" என்று அருள் செய்தான். 1136

நாபியின் மனைவியான மேருதேவி, மடப்ப குணம் கூடியவள்; அழகிய பூமாலை சூடியவள். இத்தகைய மனைவியின் மார்பு பொருந்திய திரண்ட தோள்களுடைய நாபி, அவள் மூலம் ஒப்பற்ற புதல்வனைப் பெற்றான். உலகமெல்லாம் புகழும் பெருமை உடைய 'ரிஷபதேவர்' இப்புதல்வனே ஆவார். 1137

பயந்தநன் மகவுஎன்று ஓதும்
பசுந்துழாய் இடபன் என்போன்
சயந்திஎன் றுஉரைக்கும் மாதைச்
சதமகன் அளிப்ப வேட்டு
வயம்தரு வளம்செ றிந்த
மாநிலம் மகிழ்ந்து காப்ப
நயந்துநல் தவம்செய் வான்கான்
நண்ணினன் நாபி மாதோ. 1138

மழைவளம் சிறப்ப முந்நீர்
மாநில வளாகம் காத்து
விழைவுஎறிந்து உலகம் எல்லாம்
மெய்ந்நெறி படரும் வண்ணம்
பழமறை முடிவு கூறும்
பாடல்சால் இடபற்கு ஆங்கு
நுழைபுலன் வாய்ந்த மைந்தர்
நூற்றுவர் தோற்றம் செய்தார். 1139

மருவரும் துறவு பூண்டு
மைந்தர்ஒன் பதின்மர் செல்ல
உரைசெய்வே தியராய் எண்பத்து
ஒருதிறல் குமரர் செல்ல
பரதன்என் றுஉலகம் ஏத்தும்
பருதிவேல் மைந்தன் ஏனை
அரசிளங் குமரர் தம்மோடு
அகல்நிலம் புரந் திட்டானே. 1140

மன்னிய துறவ றங்கள் வழங்கியும் வங்கம் ஆதி
உன்னிய தேயத்து ஊமர் உணர்விலாப் பெயரே போல
துன்னியும் உலகு ளோர்க்கு தொலைவில்பேர் வீடு சேரும்
நல்நெறி தெரித்தும் முத்தி நண்ணினன் இடபன் மாதோ. 1141

புனைகுடைப் பரதன் என்போன் போற்றுதன் பெயரே பெற்று
பனிவரை எல்லை யாம்இப் பார்அகம் பொலியக் காத்து
தனியெழில் சேரும் பஞ்ச சனிஇள முலையில் புல்லி
வனைகழல் சுமதி ஆதி மைந்தர்ஐ வரைப்பெற் றானால். 1142

திருமாலின் அம்சமான திருத்துழாய் மாலை அணிந்த ரிஷப தேவர் இந்திரனின் புதல்வியான ஜயந்தியைத் திருமணம் செய்து கொண்டார். இவ்விருவரும் இல்லறத்தில் ஈடுபட்டனர். வளம் நிறைந்த நாட்டை, மக்கள் மகிழுமாறு, ரிஷபதேவர் ஆட்சி செய்தார். அவர் தந்தையான நாபி, தவம் செய்வதற்குக் காடு சென்றார். 1138

ரிஷபதேவர் ஆட்சியில் நாடெங்கும் மழை பெய்து வளம் கூடிற்று. கடல் சூழ்ந்த நிலப் பரப்பெல்லாம் நன்கு காவல் செய்யப்பட்டு உலகம் நன்னெறியில் இயங்கிற்று. தொன்மையான வேதஞானம் மிகவும் நிறையப் பெற்ற ரிஷபதேவருக்கு அறிவு மிகுந்த நூறு புதல்வர்கள் பிறந்தனர். 1139

அந்த நூறு புதல்வர்களில் ஒன்பது பேர்கள் துறவிகள் ஆனார்கள். எண்பத்தொரு குமாரர்கள் வேதியர்களாகச் சென்றனர். எஞ்சியவர்களில் பரதன் என்னும் பெயருடையவன், உலகம் புகழுமாறு வேலேந்திய மன்னன் ஆகி, ஏனைய அரசகுமாரர்களுடன் அகன்ற நாட்டை ஆண்டான். 1140

ரிஷபதேவர் சிறந்த ஞானி ஆதலால், பலருக்குத் துறவறத் தன்மைகளை எடுத்துரைத்தபடி நாடெங்கும் திரிந்தார். வங்கம் முதலிய தேசங்களுக்குச் சென்று, பித்தர் போல அலைந்தார். வீடு பேறு அடையும் ஆன்ம மார்க்கத்தை எங்கும் உபதேசித்தார். முடிவில் அவர் முக்தி பெற்றார். 1141

வெண் கொற்றக் குடைக் கீழ் நின்று பரதன் ஆண்ட இந்தப் பூமி அவர் பெயரால் பரத கண்டம் எனப்பெயர் பெற்றது. இமயமலையே எல்லையாக உடைய இப்பரத கண்டத்தை ஆண்ட அவர், பஞ்சசனி என்னும் மங்கையைத் திருமணம் செய்து கொண்டார். அழகு மிகுந்த அவளுக்கும் பரதருக்கும் சுமதி முதலிய ஐந்து புதல்வர்கள் பிறந்தனர். 1142

எவ்வரைக் குலமும் அஞ்ச
வேந்தெழில் திணிதோள் மைந்தர்
ஐவரும் அவனி காப்ப
ஐவரை அகத்துள் வென்றோன்
கைவரை அழைப்ப வந்த
காரணற்கு அன்பு பூண்டு
மைவரை அருவிச் சாரல்
மருவினன் மன்ன என்றான். 1143

2. பரதன் சரித்திரம்

வரதன் மாயன் மலரடிக்கு அன்புசெய்
பரதன் செய்திறம் பன்னுதி நீஎன
விரதம் மேவிய வேந்து வினாதலும்
சரத மாதவத் தோன்அது சாற்றுமால். 1144

பந்தம் நீக்கும் பரதன் பருப்பதத்து
எந்த வண்ணம் மால் எய்த நினைக்கினும்
அந்த வண்ணம்மால் ஆங்குஉற அன்புசெய்
புந்தி யான்புல கன்உழை போயினான். 1145

புக்கு உறைந்து பொருஅரு மாதவம்
மிக்குஇயற்றி வீடு எய்துற வைகும்நாள்
தக்க யோகத்தின் தன்மை தகர்வுஉற
அக்கண் உற்றது அறைவன் என்று ஓதுவான். 1146

கொண்டலின் பிளிறும் யானை
கூர்நுதி மருப்பில் தோன்றி
வண்டொடு சுரும்பர் மூச
மன்றல்அம் பொதிவாய் விண்டு
கண்டல்நாண் மடல் தேன் சிந்தும்
கண்டகி என்னும் யாற்று
தண்துறை ஒழுகு நல்நீர்
ஆடுவான் தலைச்சென் றானால். 1147

மலைக் கூட்டங்களும் அஞ்சும் படியான தோள்களைப் பெற்ற அந்த ஐந்து புதல்வர்களும் உலகத்தை ஆண்டு காத்தனர். மனத்தை அடக்கி ஐந்து இந்திரியங்களையும் வென்ற பரதன், மேகம் தவழும் மலைப்பக்கம் தவம் செய்யச் சென்றான். கஜேந்திரனாகிய யானை அழைத்ததும் அதற்கு அருள் செய்த திருமாலிடம், பரதன் மிகுந்த பக்தி கொண்டு, தொழுது தவம் செய்தார். 1143

2. பரதன் சரித்திரம்

பாகவதக் கதை கேட்கும் விரதத்தில் ஊன்றிய பரீட்சித்து, சுகமுனிவரை நோக்கி, "திருமால் திருவடிகளில் பக்தி கொண்ட பரத சக்கரவர்த்தியின் வரலாற்றைக் கூறுக" என்று வேண்டினான். சுகப் பிரம்மமும் அவ்வரலாற்றைக் கூறுவார் ஆயினார். 1144

புலக மாமுனியின் ஹரிக்ஷேத்திரம் என்னும் ஆசிரமத்துக்குச் சென்றவர் எந்த வண்ணம் திருமாலை நினைந்தாலும் அந்தப்படியே பேறு பெறுவார்கள். இத்தகைய ஆசிரமத்துக்குப் பரதன் திருமால் பாதத்தைத் தியானித்துத் தவம் இயற்றச் சென்றான். 1145

"பரதன் அங்குச் சென்று வீடு பேறு அடைவதற்காகத் தவம் செய்து வரும் பொழுது அத் தவயோகம் பாழாகும் படி நடந்தவற்றைக் கூறுகிறேன்" என்று சுகமுனிவர் பரீட்சித்திடம் உரைத்தார். 1146

அவ்வரலாறு வருமாறு :

கண்டகி என்னும் நதி பாய்ந்தோடும் மலைப் பகுதியில் தாழைச் செடி மலர்ந்து, அதன் மடல்களிலிருந்து மணம் எங்கும் வீசும். மேக ம் போலப் பிளிறும் யானையின் கொம்பைப் போல விளங்கும் அத்தாழை மடலில் வண்டுகளும் தேனீக்களும் உட்கார்ந்து ரீங்காரம் செய்யும். இத்தகைய நதியில் நீராடுவதற்காகப் பரதன் சென்றான். 1147

நிரைஉளை அரிமான் ஏறு நிழல்சுளி களிறு நாடி
உரும்என உரறி ஆர்க்கும் ஒலிசெவி படுதற்கு அஞ்சி
கருநனி கலங்கி அங்கண் கவையடி இளமான் ஈன்ற
ஒருபசுங் கன்று நீரோடு ஒழுகிஆங்கு உற்றது அன்றே. 1148

கைம்முகந்து எடுத்து மெல்மான்
கன்றுஉயர் கரையின் உய்த்து
மெய்ம்முகம் தெளிந்த தூயோன்
விரிபுனல் நெறியின்நாடி
நெய்ம்முகம் கமழும் சூல
நிழற்படை அண்ணல் போல
அம்மறி ஏந்தி ஏகி
அன்பொடு வளர்த்திட் டானால். 1149

குன்றின்வா னருவி வீழ்ந்து
குழித்திடும் அறையில் ஆமான்
கன்றுஉள்ளிப் பொழிந்த தீம்பால்
காதலின் பருக ஊட்டும்
இன்றுஇது கறிக்கும் என்னா
எழுந்துதன் கையால் கொய்து
துன்றிய பசிய பச்சைத்
தோட்டுமெல் அறுகு நீட்டும். 1150

தெறித்துஎழுந்து ஒழுகு தெய்வத் தீம்புனல் ஆற்றுத் தண்அம்
துறைத்தலைக் கிடந்த பச்சை மரகதம் சுடர மண்மேல்
எறித்தஅம் சுடரைப் பைம்புல் என்றுதன் எருத்தம் கோட்டி
கறிப்பநா வளைத்தல் நோக்கி கதிர்இள முறுவல் காட்டும். 1151

மன்னுபூந் துறையில் தண்ணீர் மாந்துவான் படரும் காலும்
கொன்அழல் சீற்றப் பேழ்வாய் கோட்புலி கவரும் என்னா
பின்எழுந்து ஏகும் மாலைப் பிறைநுதல் மடந்தை வேட்ட
பொன்உழை தொடர்ந்து சென்ற புயல்நிறக் கடவுள் போன்றே.
1152

அச்சமயம், பிடரிமயிருடைய ஆண்சிங்கம் ஒன்று, யானையின் நிழலை க்கண்டு கோபம் கொண்டு, இடி போலக் கர்ஜனை செய்தது. அங்கு வந்த பெண்மான் ஒன்று அந்த ஒலியைக் கேட்டு நடுங்கிக் கலங்கவும், கர்ப்பமுடைய அது, ஒரு குட்டியை ஈன்றது. பிளந்த கொம்புகளைப் பெற்ற மான் ஈன்ற அக்குட்டி, பரதன் நீராடும் நீர்த்துறையில் நீருடன் இழுக்கப்பட்டு அவன் அருகே வந்தது. 1148

தூயவனான பரதன் அந்த மான் குட்டியைக் கைகளால் தூக்கி எடுத்துக் கரைக்குக் கொண்டு வந்தான். அதனிடம் அன்பு மீதூரப் பெற்ற அவன், சூலம் ஏந்திய சிவபிரான் போல, அக்குட்டியைக் கையில் ஏந்தியபடி, ஆசிரமம் சென்று, அதனை வளர்க்கலானான். 1149

மலையருவி விழுந்து தேய்ந்த கற்பாறைகளில் உண்டான குழிகளில் காட்டுப் பசுக்கள் தம் கன்றுகளை எண்ணிப் பாலைச் சுரந்து நிரம்பி இருக்கும். அவ்வாறு கிடைத்த பாலைப் பரதன், தான் வளர்க்கும் மான் குட்டிக்கு ஊட்டுவான். வளர்ந்த அறுகம் புற்களைக் கொய்து, 'இக்கன்று கடித்து உண்ணட்டும்' என்னும் ஆசையுடன் அவன் தன் கையால் அதற்கு ஊட்டுவான். 1150

தெய்வ நிலை பொருந்திய அந்நதித் துறையில் கிடந்து ஒளி வீசும் மரகதக் கற்களை அக் குட்டி மான், புல் என்று எண்ணிக் கடிக்க ஓடும். அப்பொழுது அது தன் கழுத்தை வளைத்துக் கடிப்பதற்காக நாக்கை நீட்டும். ஒளி மிகுந்த அதன் பல்லழகைப் பார்த்துப் பரதன் மனம் இழப்பான்; புன்முறுவல் பூப்பான். 1151

அந்த மான்குட்டி தண்ணீர் குடிப்பதற்காக நீர்த்துறை செல்லும் பொழுது, தீ உமிழும் பெரிய வாயுடைய புலி வந்து கவர்ந்து விடுமோ என்று அஞ்சிப் பரதன் அதனைக் காப்பதற்காகப் பின்னால் செல்வான். இவ்வாறு அவன் மான் பின் போவது, பிறைச் சந்திரனைப் போன்ற புருவங்கள் பெற்ற சீதையின் விருப்பத்திற்காக, பொன்மான் பின் சென்ற இராமன் செயல் போல் இருந்தது. 1152

துளிக்கரும் கமம்சூல் கொண்ட
துயில்குளிர் சோலை தாழ்ந்த
நளிச்சினை மறையின் யாங்கு
நண்ணியது என்று நேடும்
ஒளிக்கறை மதியில் துஞ்சும்
ஓங்கெழில் இளமான் என்ன
பளிக்கறை முகட்டின் ஏறித்
துஞ்சுதல் பரிந்து பார்க்கும். 1153

பாந்தள்அம் சேக்கை யானை
பரவுறு பொழுது நாடும்
வாய்ந்தபூங் கமலக் கையால்
வருக என்று அழைக்கும் வந்து
மோந்துதன் மேனி நக்க
முகமலர் மலர்ச்சி கூரும்
ஏந்தினன் எடுக்கும் புல்லும்
எழின்மணித் தோளின் ஏந்தும். 1154

மின்நுழை மருங்கு லார்போல்
விழித்திடும் இளமான் கன்று
தன்னுழை வளர மாலைத்
தண்மதி புரையும் தக்கோன்
இன்னவாறு ஒழுகி ஆவி
இறந்திடு பொழுது மான்மேல்
மன்னிய நினைவு தன்னால்
மான்உரு ஆயினான்ஆல். 1155

தெறிநடை மடமா னாக
பிறந்துமுன் பிறப்பின் சேர்ந்த
அறிவுவிட்டு அகலாது ஆக
அருவியம் சாரல் குன்றும்
எறிதிரை நதியும் ஆடி
சில்பகல் இறப்பத் துஞ்சி
மறைபயில் அங்கி ராவின்
வழியினில் தோன்றல் உற்றான். 1156

சூல் கொண்ட மேகங்கள் போல் இருண்டு தழைத்த சோலை மரக்கிளைக்களுக்குப் பின்னே மான்குட்டி மறைந்தால், பரதன் அதனைத் தேடிச் செல்வான். அது பளிங்குப் பாறை உச்சியில் ஏறி உறங்குவதைக் காணும் பொழுது, சந்திரனிற் காணப்படும் கறை உடைய மானைப் போன்றுள்ளதை எண்ணிப் பரதன் மகிழ்வான். 1153

ஆதிசேடனைப் படுக்கையாகக் கொண்ட திருமாலைப் பரதன் வழிபடும் பொழுது கூடத் தன் தாமரைக் கரங்களால் அம் மான்குட்டியை, 'வருக' என்றழைத்துத் தடவுவான். அது அவன் உடம்பை நக்கிடவும் முகமலர்ச்சி கொள்வான். மகிழ்ச்சியுடன் அதை எடுத்துத் தழுவிப் பின் தன் தோளில் சுமந்து கொள்வான். 1154

மின்னலிடைப் பெண்கள் போன்ற பார்வை உடைய அந்த மான்குட்டி பரதனிடம் மேற்கண்டவாறு வளர்ந்து வந்தது. மாலைக் காலச் சந்திரனை ஒத்த பரதன் அந்த மான்குட்டியிடம் அதிகம் பாசம் கொண்டு உழன்றதால், அவன் இறக்கும் பொழுது அதன் நினைவாகவே உயிர் நீத்தான். ஆகையால் மறு பிறவியில் அவன் ஒரு மானாகவே பிறந்தான். 1155

இவ்வாறு பரதன் மானாகப் பிறந்தாலும் முற்பிறப்பின் ஞான முழுமை காரணமாகத் தெய்வ நினைவாகவே இருந்தான். மலை அருவிகளிலும் நதிகளிலும் நீராடி வாழ் நாள்கள் கழிந்தன. மான் வாழ்க்கை முடிந்தபின் அந்த ஆத்மா, ஆங்கிரஸ முனிவர் கோத்திரத்தில் பிறவி பெற்றது. 1156

முற்றுணர் வுஉடைமை யாலே முனிவரர் கிளந்த வாறு
கற்றிலன் எழுதா முன்நூல் கலைத்திறம் கேட்டி லான்ஆல்
பற்றிலன் மனத்தில் யாதும் படுபகை நட்போடு இல்லான்
பெற்றிலன் வருந்தி ஒன்றும் பேசிலன் ஒழுகி னான்ஆல். 1157

நங்குலத் துஉதித்த தோன்றல் நவில்கிலன் மறைமற்று என்னா
திங்களின் கலைகள் வாய்ந்த தெய்வதக் கிழவர் எல்லாம்
தங்களில் புலம்பி நைந்து தாறுஇளங் கமுகு சூழ்ந்த
பைங்கழைக் கரும்பு வேலிப் பழனம்நீ காத்தி என்றார். 1158

வினைவிளைவு இன்றி நின்றோன்
வேதியர் பணித்த வண்ணம்
நனைவிளை பொங்கர் வேலி
நளிபுனல் பழனம் காத்தும்
பனைவளைத் தடக்கை வேழம்
படர்வரை அருவிச் சாரல்
தினைவிளை புனங்கள் காத்தும்
தெள்ளிதின் ஒழுகு நாளின். 1159

அழற்கதிர்ப் பருதி வெம்மை
அரசுவீற் றிருக்கும் பாலைக்
கிழத்திகொள் பலிக்கு வந்து
கிடைத்தனன்இவன் என்று எண்ணுஉ
தழைத்துஎழும் உவகை யால்ஓர்
வேட்டுவத் தலைவன் பற்றி
வழித்தனன் குருதிச் சாந்தம்
மலர்த்தொடை சூட்டி னான்ஆல். 1160

இன்அமுது ஒழுகு மாலை இளம்பிறை சடிலத்து ஏந்து
கன்னிமுன் எய்தக் கன்னி கண்கடை கனல நோக்கி
அன்னவன் தன்னைக் கொல்வான் அமைந்தவர் சென்னி சிந்த
மின்உமிழ்ந்து இலங்கு வாளால் வெய்தினில் துணித்து வீழ்த்தாள்.
1161

பூர்வஜன்ம ஞானத்தாலே, இந்தப் புதிய பிறவியில் பரதன் வேதம் கற்காவிட்டாலும் மெய்யுணர்வு பெற்றிருந்தான். வேதசாத்திரப் பயிற்சி பெறவில்லை; ஆயினும் பற்று இல்லாமல், ஞானியாகவே திகழ்ந்தான். பகை, நட்பு இரண்டுமே இன்றிப் பேசாத சான்றோன் ஆக வாழ்ந்தான். வருந்தி எத்தொழிலும் மேற்கொள்ளவில்லை. 1157

அக்குல அந்தணர்கள், இவன் அந்தணனாகப் பிறந்தும் வேதநூல்களைக் கற்கவில்லையே என வருந்தினர். ஆகவே அவர்கள் இவனைக் குலைகளுடன் கூடிய கமுக மரங்கள் சூழ்ந்த கரும்புத் தோட்டத்தைக் காவல் செய்ய நியமித்தனர். 1158

வினைப் பயன்களைப் பற்றி எண்ணாத பரதன், ஜடமாகவே வாழ்ந்தான். அந்தணர்கள் நியமித்தபடியே, அவன் சோலைகள் சூழ்ந்த வயல்களையும் புனங்களையும் காத்தபடி அருவிகள் உள்ளதும் யானைகள் திரிவதும் ஆகிய மலைப் பகுதிகளில் வாழ்வைக் கழித்தான். 1159

ஜடபரதன் புனம் காத்து வருகையில் அங்கு வந்த வேடர் தலைவன், இவன் எளிமையைக் கண்டு, காளிக்குப் பலி கொடுக்க, இவனே சிறந்த நரன் என எண்ணினான். நெருப்பாலே சூரியன் கொளுத்தும் பாலை நிலத் தெய்வம் துர்க்கைக்கு இவனே நரபலிக்கு ஏற்றவன் என எண்ணி, அவனைப் பிடித்துச் சிவந்த சந்தனம் பூசி மாலை அணிவித்தான். 1160

மாலை சூடியவளாய்ச் சந்திரனைச் சடையில் தாங்கிய துர்க்கை முன்னே ஜடபரதன் கொண்டு வரப்பட்டதும், காளியாகிய அவள் சினம் கொண்டு கண்களில் தீப்பொறி பறக்கப் பார்த்தாள். விவேகம் மிகுந்த ஜடபரதனை அவர்கள் பலியிடுவது தகாது என்றெண்ணிய அவள் தன் வாளால் வேடர்கள் தலைகளை வெட்டி வீழ்த்தினாள். 1161

நிறைந்தபே ரொளியை நெஞ்சில்
நிறீஇ உணர் தூயோன் தன்னை
எறிந்திட உற்றார் ஒள்வாள்
ஏறுபட்டு இறந்து ளார்ஆல்
அறந்தலை மணந்து நின்ற
அறிவினர்க்கு இறுதி எண்ணும்
மறந்தலை மணந்தார் வாழ்தல்
உண்டுகொல் மதிக்கும் காலே. 1162

உரனுடை யொருவன் இவ்வாறு
ஒழுகுநாள் ஒலிநீர் வேலி
இருநில வலயம் காக்கும்
ரகுகணன் என்னும் ஏந்தல்
மருள்அறு ஞானம் எய்த
மாமணிச் சிவிகை ஊர்ந்து
கருணைபாய் கமலச் செங்கண்
கபிலனது இருக்கை செல்வான். 1163

முனிவொடு விழைவு இலானை முழுமக்கள் வலிதின் பற்றி
புனைமணிச் சிவிகை ஆங்கு பொறுக்எனப் பொறுத்த லோடும்
இனிதினில் பொறுத்தி என்னே இளைத்திருந் தாய்கொல் என்ன
கனியிதழ் விண்டு கூறா கட்டுரை கழறல் உற்றான். 1164

இளைத்தலும் பெருத்தல் தானும் யாக்கையின் குணம் மற்று அன்றே
கிளத்திடின் உயிர்க்கும் உண்டே என்னலும் கேட்ட வேந்தன்
உளத்தினில் நடுக்கம் எய்தி ஊர்திநின்று இழிந்து வல்லே
அளித்திடல் வேண்டும் என்னாஅமலனைத் தொழுது சொல்வான்.
1165

இந்தனத்து அழலின் வெம்மை இயைந்தவெம் பதலை நீருள்
வெந்திடும் அரிசி போல மிடையும்வெவ் இடும்பை யாலே
நொந்திடும் ஆக்கை உற்ற நுவலரும் தாபம் எல்லாம்
நந்தலில் உயிர்க்கு உண்டு என்றே நாடும்என் உள்ளம் ஐயா.
1166

மெய்யுணர்வு நிறைந்த ஜடபரதனைக் கொல்ல எண்ணிய வேடர்கள், காளியின் வாளால் கொல்லப் பட்டனர். தர்ம வழியில் நிற்கும் ஞானிகளுக்கு முடிவு சூழும் பாவிகள் வாழ மாட்டார்கள் என்பது இதனின்றும் தெளிவு ஆகிறதன்றோ! 1162

அறவலிமை கொண்ட ஜடபரதன் இவ்வாறு வாழ்ந்து வரும் பொழுது, கடல் சூழ்ந்த பூமியை ஆளும் ரகுகணன் என்னும் அரசன், பல்லக்கில் ஏறியபடி அவ்வருகே வந்தான். அவ்வரசன் ஞானம் பெறுவதற்காகக் கருணை பொழியும் தாமரைக் கண்களுடைய கபிலதேவர் ஆசிரமம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான். 1163

அரசன் ரகுகணனின் பல்லக்கைத் தூக்கி வந்த மூடர்கள், விருப்பு, வெறுப்பு இரண்டுமே இல்லாத ஞானியான ஜடபரதனைக் கண்டனர். உடனே அவர்களை ஜடபரதனை வலுக் கட்டாயமாக அழைத்து, அப்பல்லக்கைச் சுமக்கச் செய்தனர். ஜடபரதன் பல்லக்கைச் சுமக்கையில் மேலே உட்கார்ந்திருந்த ரகுகணன் அவனை நோக்கி, "நீ இளைத்திருக்கிறாயே! எளிதாகப் பல்லக்கைச் சுமக்க முடிகிறதா?" என்று கேட்டான். 1164

இதனைக் கேட்ட ஜடபரதன் அரசனை நோக்கி, "இளைப்பதும் பெருத்தலும் உடம்புக்குத் தான் உண்டு. ஆனால் ஆத்மாவுக்கு அத்தன்மை உண்டோ? கிடையாதே!" என்று பதில் கூறினான். இதனைக் கேட்ட வேந்தன் மனம் நடுங்கிப் பல்லக்கிலிருந்து கீழிறங்கினான். ஜடபரதனைப் பணிந்து, "என் பிழையைப் பொறுத்திடுக" என்றான். 1165

"விறகு எரிவதால் ஏற்படும் வெம்மையால், அடுப்பின் மேல் உள்ள பாத்திரமும் உள்ளே உள்ள தண்ணீரும் சுடும். அச்சூட்டால் நீரின் உள்ளே கிடக்கும் அரிசி வெந்து போகிறது. அது போலவே, உடம்பு அனுபவிக்கும் துன்பங்களும் தாபங்களும் உயிரையும் பாதிக்கும் என்று நான் எண்ணுகிறேன்." என்று ரகுகணன் ஜடபரதனிடம் கூறினான். 1166

ஆரைநீ பொறுத்தல் வேண்டும்
அறிந்திலன் அளியேன் மையல்
வேர்எறிந்து அகற்றி மெய்ம்மை
விரித்திடல் வேண்டும் என்ன
மூரல்கொள் முகத்தன் ஆகி
முழுவதும் உணர்ந்த தூயோன்
தேர்அரு மறைகள் எல்லாம்
தெள்ளிதின் தெரிக்கல் உற்றான். 1167

தாள்இணை பொறுத்து நின்ற
தழைத்தது ஓர் மார்பு மார்பு
தோள்இணை பொறுத்தது ஏந்து
தோளிணை சுடர்ந்து மின்னும்
வாளுடை அரசன் என்ன
வருபொருள் பொறுத்த மற்றுஎன்
கோளுறும் ஈங்குஇவ் எல்லாம்
குறிக்கின்மண் ஆகும் அன்றே. 1168

வியப்புறும் அனலினால் வெதுப்பு நீருறும்
செயிர்ப்புஅறு வானைஅத் தீச்சு டாதுபோல்
நயப்புறு மனத்தினை நண்ணும் தாபத்தீ
உயிர்க்குஇலை அறிந்தவர் உணரும் காலையே. 1169

திரியொடு நெய்செறி உற்ற செஞ்சுடர்
எரிதலம் கீறுஉறாது இலங்கு மாறுபோல்
விரியும்முக் குணத்தொடு மேவின் மாமனம்
உரைதரு பிறவியை ஒழிப்பது இல்லையே. 1170

பன்னும் முன் பிறந்தையில் பரதன் என்னயான்
இந்நிலம் புரந்துஇடர்அகற்றி யாவும் விட்டு
உன்னிய தவத்தொடும் ஒழுகும் நாளின் ஓர்
கன்னிமான் உழைமனம் கலந்து இறத்தலான். 1171

ரகுகணன் மேலும் தொடர்ந்து, "ஐயா! நீர் அடியேன் பிழையைப் பொறுத்திட வேண்டும். ஞானம் நிறைந்த நீர் யாரென அறியேன். அருள் கூர்ந்து, தேவரீர் அடியேன் மயக்கத்தை வேருடன் வெட்டி, ஞான வழியை விவரித்துக் கூற வேண்டும்" என்று வேண்டினான். முற்றிலும் ஞானம் வாய்க்கப் பெற்ற ஜடபரதன் புன்முறுவல் செய்தபடி, வேத மார்க்கத்தைத் தெளிவாக விளக்கினான். 1167

ஜடபரதரின் உபதேசம் :

மன்னா! உடம்பின் மார்பை இரு கால்களும் தாங்குகின்றன. அந்த மார்போ இரு தோள்களையும் தாங்குகிறது. உன் தோள் தான் உடைவாளைத் தாங்குகிறது. இத்தகைய வாள் ஏந்திய அரசனே! நீ உட்கார்ந்த பல்லக்கைச் சுமப்பது அதனால் வரும் துன்பம் என்றெல்லாம் கூறப்படுபவை உண்மையா? எல்லாமே ஒரு காலத்தில் மண்ணாவதுதானே! 1168

நெருப்பால் தண்ணீர் வெப்பம் அடைகிறது. ஆனால் அதே நெருப்பு ஆகாயத்தைச் சுடுவதில்லை. அதே போல் மனத்தைச் சுடும் மூன்று தாபங்களும் ஆத்மாவைச் சுடுவதில்லை. இதை ஞானிகள் உணர்வார்கள். 1169

அகல் விளக்கில் எண்ணெய்யுடன் கூடிய திரி, தீச்சுடரால் எரிந்து நாசம் அடைகிறது. ஆனால் அத்தீச்சுடர் அகலின் அடியை அழிப்பதில்லை. அதே போல், ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களுடன் கூடிய மனம் அவற்றால் பாதிக்கப்படுவதே அன்றிப் பிறவியை அதனால் ஒழிக்க முடியாது. 1170

நான் முற்பிறவியில் பரதன் என்னும் பெயருடன் நாடாளும் அரசனாய் இருந்தேன். எல்லாவற்றையும் விட்டுத் தவம் செய்த நாளில் மான்குட்டியின் மீது வைத்த பாசத்தால், இறக்கும் பொழுதும் அந்நினைவிலேயே இறந்தேன். 1171

அவ்உழை உருவமும் அடைந்து விட்ட பின்
இவ்உரு எடுத்தனன் இன்னம் ஒன்றினும்
கவ்வைசெய் மனம்கது வாது நின்றனன்
செவ்வியோய் பவக்கடல் செலவு மாற்றியே. 1172

சீலம்உற் றுஉயர்ந்தவர்ச் சேரின் வீடு உறும்
மாலைஉற்று அறிவிலார் மருங்கு அடைந்திடின்
வேலையுற்று அலைதுரும்பு என்ன வெம்பவக்
கோலமுற்று இறந்துஇறந் துஉழலல் கூடும்ஆல். 1173

இடையுறும் என்பினை நரம்பின் ஆர்த்திடா
புடைஉறும் இறைச்சியால் பொதிந்து போக்குஅற
மிடைதரு தோலினால் வேயப் பட்டது ஓர்
உடலினை யான்என உரைக்கல் ஒண்ணுமோ. 1174

பண்ணுறு கருமத்தால் பவக்க டற்கரை
நண்ணுவன் நான்என நயந்து இருத்தல்வாழ்
எண்ணுறு புலிமிடைந்து இயல்வெம் கானகம்
கண்ணிலான் கடந்திட கருதல் போலுமே. 1175

காட்டினில் கலந்துஉறை விலங்கு கானலை
ஆட்டுதெண் திரைஅரு நீர்அது ஆம் என
வேட்டுறு மாறுபோல் விடய இன்பமே
நாட்டமுற்று அறிவிலார் நலிவர் உள்ளமே. 1176

பொன்னினை விழைந்துஉழைப் புகுந்து வாடுவார்
மன்னிய குளிர்நனி மாற்று வோம்என
துன்னுவெம் கான்அழல் துலங்கு வாய்நரி
தன்னைவெம் கனல்எனச் சார்தல் போலுமே. 1177

வரும்சுரம் தனில்வழி வழுவி ஏகுழி
பொருந்திவெங் கரிவரப் புலம்பு வார்என
அரும்பிணிக் குழிவிழுந்து அழுந்திக் கூற்றுவன்
விரைந்துகண் எதிர்உற வெருவு வார்அரோ. 1178

அதனால் மானாகவே மறுபடி பிறந்தேன். அதற்கு அடுத்த பிறவியில் இவ்வுருவத்தை அடைந்துள்ளேன். ஆதலின் துன்பத்தை உண்டாக்கும் மனத்துடன் பொருந்தாமல் உள்ளேன். அரசனே! பிறவிக் கடலில் செல்லாது இருக்க மனத்தொடு பொருந்தக் கூடாது. 1172

ஞானமும் ஒழுக்கமும் உடைய உயர்ந்தவர்களைச் சேர்ந்தால் நாம் மோட்சம் அடையலாம். ஞானம் இல்லாமல் மயங்குபவர்களுடன் சேர்ந்தால் பிறவியாகிய கடலில் அகப்பட்டுத் துரும்பு போல அதில் திரிந்து உழல நேரிடும். 1173

எலும்புகளை நரம்புகளாய் கட்டி, இறைச்சிக் குள்ளே பொதிந்து வைத்துத் தோலால் வேயப்பட்ட உடம்பை 'நான்' என்றுணரும் ஆத்மா ஆகக் கொள்ளலாமோ? 1174

ஒருவன் தான் செய்யும் கருமங்களாகிய வினைகளால், பிறவியாகிய கடலைக் கடந்து விடலாம் என்று விரும்பி வாழ்தல், கண்ணற்ற குருடன் புலிகள் வாழும் கொடிய காட்டைக் கடந்து விடலாம் என்று நம்புவது போலவே ஆகும். 1175

காட்டில் வாழும் மான், கானல்நீரை அலை அசையும் நீர்நிலை என்று விரும்பித் துன்புறுதல் போல, அறிவில்லாதவர் காமம் ஆகிய சிற்றின்பங்களில் விருப்பம் கொண்டு, உழன்று, மனம் துன்புறுவார்கள். 1176

பொன் முதலிய செல்வங்களை விரும்பி வாடித் துன்புறுவது, காட்டில் குளிரைப் போக்கிக் கொள்ள, நரியின் வாயைத் தீயென்று கருதிச் சார்வது போலவே ஆகும். 1177

காட்டில் செல்பவர் வழி தவறிக் குழியில் விழுந்ததும் அங்கு யானை வருதலைக் கண்டு புலம்புவது போல, பிறவியில் அகப்பட்டவர் வியாதியாகிய குழியில் விழுந்து அழுந்தி, யமன் வருவது கண்டு பயப்படுவார்கள். 1178

பறவைவெம் பசியினில் பழுத்துக் காட்டகத்து
உறையும்முள் இலவைஉற்று உணங்கு மாறுபோல்
நெறிதவிர் உலுத்தர்தம் நீள்க டைத்தலை
அறிவிலர் அடைந்து அடைந்து அழுங்கு வார்கள் ஆல். 1179

தீட்டஅரும் பழமறைச் சென்னி மேல்உற
சூட்டிய மால்பதத் துணைநி னைக்கிலார்
வீட்டஅரும் இடர்இருள் விரிந்த வெம்பவக்
காட்டினை எங்ஙனம் கடக்க வல்லரே. 1180

கருதுசேய் அன்னைகா தலிஇப் பாருளோர்
பொருஅரும் தாதைநற் புதல்வன் நாயகன்
அரசன்என்று அறையநீ அடைதல் போல்ஒரு
பிரமமே மாயையில் பேர்கள் பெற்றதே. 1181

ஈனுலகு இடரற இனிது கொண்டநீ
யான்எனும் செருக்கினோடு இராகம் ஆதியாம்
கான்உறை குறும்புகள் கடிந்து தீங்குஅற
ஊனமில் ஞானமாம் உலகும் கோடியால். 1182

என்றனன் உரைத்தலும் இறைஞ்சி வேந்தனும்
சென்றனன் பாற்கடல் சேர்ப்பன் பூங்கழல்
மன்றல்அம் தாமரை மனத்துள் நாடினான்
வென்றனன் வல்வினை வீடுஉற் றான்அரோ. 1183

பரவைமா நிலம்புகழ் பரதன் காதலன்
உரைதரும் இடபன்ஒத்து ஒழுகு சீலவான்
சொரிமது மலர்த்தொடைச் சுமதி பெற்ற சேய்
தெரிபுகழ் புனைதரு தேவ தாசித்தே. 1184

அன்னவன் அளித்த சேய் அடைய லார்தினம்
சென்னியின் வணங்குதாள் தேவத் தியும்மனன்
என்னும்அம் மன்னவன் ஈன்ற மைந்தனாம்
பன்னுசீர் சேர்பர மேட்டி என்பவே. 1185

காட்டிற் பறக்கும் பசியுற்ற பறவைகள் முள்ளை உடைய இலவ மரத்தை அடைந்து உணவின்றி வருந்துவதைப் போல அறிவிலிகள் உலோபிகள் வாசலில் நின்று ஒன்றும் பெறாது வருந்துவர். 1179

எழுதற்கரிய வேதத்தின் சிகரமாக விளங்கும் திருமால் திருவடிகளை எண்ணித் துதிக்காதவர்கள் போக்குதற்கரிய துன்பமாகிய இருளில் அகப்பட்டுப் பிறவிக் காட்டில் உழல்வார்கள். அதனைத் திருமால் அருளில்லாமல் எவ்வாறு கடக்கவல்லவர்? 1180

அரசனே! நீ பிரமை என்னும் மாயையில் கட்டுப்பட்டதால், மயங்குகிறாய். உன்னை அரசன் என்றெண்ணி மயங்குதல் போல், குழந்தை, தாய், மனைவி, உலகோர், தந்தை, புதல்வன், கணவன் என்னும் பெயர்களை வைத்துக் குழப்பம் அடைகிறாய். 1181

இரகுகணனே! நீ இந்த உலகத்தை இன்பமாகக் கொண்டுள்ளாய். 'நான்' என்னும் அஹங்காரம், விருப்பு, வெறுப்பு ஆகிய குறும்புகளை ஒழித்துத் தீங்கின்றி, ஞானமாகிய நிலைத்த உலகத்தைக் கொள்வாய்." 1182

மேற்கண்டவாறு ஜடபரதர் இரகுகணனுக்கு உபதேசம் செய்தார். அந்த அரசனும் விடை பெற்றுச் சென்று பாற்கடலில் பள்ளி கொண்ட திருமாலின் தாமரைத் திருவடிகளைத் தியானித்தான். அவன் தன் கொடிய வினைகள் நீங்கப் பெற்று வீடு பேறு அடைந்தான். 1183

பரத சக்கரவர்த்தியின் புதல்வன் 'சுமதி' என்பவன் ரிஷபதேவர் போலவே சீலமும் ஞானமும் பெற்றவனாய் விளங்கினான். மலர்மாலை அணிந்த அந்த சுமதி வேந்தனின் புதல்வனே 'தேவதாசித்' ஆவான். 1184

இந்த தேவதாசித்தின் புதல்வனே தேவத்தியும்னன் எனப்படுவான். பகைவர்கள் பணிந்து வணங்கத் தக்க திருமுடி சூடி ஆண்ட தேவத்தியும்னனின் மகனே சீர்மை பொருந்திய பரமேட்டி என்பவன். 1185

ஆங்குஅவன் பிரதிகன்ஆகும் மைந்தனை
தீங்குஅற உயிர்த்தனன் செப்பும் இன்னவன்
பூங்கழல் பிரதிகத் தாவை பூத்தனன்
ஈங்குஇவன் மதலைபூ மன்என்று ஏத்துவார். 1186

உரைத்தஅம் மன்னவன் உதவு கீதனாம்
வரைத்தடம் புயன்அருள் மரபின் வாரிசூழ்
தரைத்தலத்து உயிர்கள்தன் உயிர் என்று எண்ணுபு
நிரைத்ததார்க் கயன்என நிகழ்த்து வேந்தனே. 1187

யான்எனது எனும்செருக்கு அகற்றி யாவையும்
தான்எனக் கருதிஇத் தரணி காத்து உயர்
வானவர் மகிழ்தர மகங்கள் ஆற்றினன்
ஊனமில் அவன்புகழ் யாவர் ஓதுவார். 1188

இத்திறம் புரிகயன் இனிதின் ஈன்றசேய்
சித்திர ரதன்என செப்பும் மானவேல்
வித்தகன் அளித்தனன் விளங்கு பைங்கதிர்
தத்துஎழில் பூண்அணி சம்மி ராட்டுவே. 1189

அடையலர் வணங்கும்அவ் அரசன் நல்கிய
மடல்அவிழ் பூந்தொடை மரீசி பெற்றனன்
விடலரும் அன்புடை விந்து மான்எனும்
கடலெனும் தானைஅக் கலைவல் லானையே. 1190

சாற்றிய இந்து மான்தான்
தந்தனன் மதுஎன் போனை
மாற்றஅரும் புகழ்வி ரிக்கும்
மதுஇனிது அளித்த தோன்றல்
வேல்திறல் படைத்த வீர
விரதன்ஆம் வேந்தன் அன்னோன்
பற்றமன் னியுஎன்று ஓதும்
இறைவனை இனிதின் ஈன்றான். 1191

தீமை இல்லாத பிரதிகன் என்பவன் பரமேட்டியின் புதல்வன் ஆவான். பிரதிகனின் புதல்வன் பிரதிகத்தா எனப்படுவான். இந்தப் பிரதிகத்தாவின் மைந்தனே பூமன் ஆவான். 1186

மேற்குறிப்பிடப்பட்ட பூமன் பெற்ற பிள்ளை கீதன் எனப்படுவான். கீதனின் புதல்வன் பெயர் 'கயன்' ஆகும். இந்தக் கயன் என்னும் அரசன் தன் வமிசத்துக்கேற்றபடி, அருள் மிகுந்தவனாய், நாட்டு மக்களைக் காப்பதே தன் உயிர்க் கடன் என்று எண்ணிக் காத்தான். 1187

அவன், 'யான்' என்னும் அகங்காரம் இல்லாதவன்; உலக மக்களைத் தன்னைப் போலவே எண்ணிக் காத்தான். தேவர்கள் மகிழும்படி வேள்விகள் பல செய்தான். குற்றமற்ற அவன் புகழை யாரால் விவரித்து முடிக்க முடியும்? 1188

இப்படிப்பட்ட பெருமைகளுடைய கயன் பெற்ற புதல்வன் சித்திரரதன் எனப்படுவான். வேல் ஏந்திய சித்திரரதனின் புதல்வன் ஒளிவிடும் அணிகலன்கள் சூடிய 'சம்ராட்' என்பவன். 1189

பகைவர்களும் வணங்கும் ஆண்மை நிறைந்த அந்த 'சம்ராட்' அரசனின் புதல்வன் மரீசி என்பவன் ஆவான். இந்த 'மரீசி' பெற்ற பிள்ளை 'விந்துமான்' என்பவன், அன்புடையவனாய்க் கலைகளில் வல்லவன் ஆனான். கடல் போன்ற பெரிய படைக் கூட்டங்களைப் பெற்றான். 1190

மேற்சொல்லப் பட்ட விந்துமான், 'மது' என்னும் புதல்வனைப் பெற்றான். சொல்லுக்கடங்காத புகழுடைய 'மது' பெற்ற புதல்வன் 'வீரவிரதன்' என்பவன் ஆவான். வேல் ஆயுதம் தாங்கிய வீரர்களின் படை பெற்ற வீரவிரதனுக்கு 'மன்னியு' புதல்வனாகப் பிறந்தான். 1191

உரைகொள்மன் னியுஆம் வேந்தன் உயிர்த்தமாண் சிறுவன் வெள்வேல்
மருவிய பசும்தார் வேயும் புவன்எனும் மன்னன் தோன்றல்
தரைபுகழ் துவட்டா என்பான் சாற்றுறு துவட்டா மைந்தன்
விரசன்று எவரும் போற்ற விளங்கிய வேந்தன் மாதோ. 1192

வரம்மிகு புதல்வர்ப் பெற்று மனுமகன் மரபை நாளும்
விரசன்என் றுஉரைக்கும் வேந்தன் விளக்கினான் விளம்பும்இந்த
பரதன்நல் காதை கேட்போர் பகருவோர் படர்வார் முத்தி
அரசஎன் றுஉரைத்தான் மிக்க அருந்தவ முனிவன் அம்மா. 1193

3.நாவலந்தீவின் வளம்

ஆழி ஒன்று உருட்டிவாள் அரசர் போற்றுஉலகு
ஏழ்இரும் பொழில் முதல் ஏழ் இரண்டையும்
சூழிவெம் களிறுஅனான் சொல்மி யாஎன
வாழும்நல் தவமுனி வழங்கு மால்அரோ. 1194

குடகடல் முதலாக் குணகடல் காறும்
குலவும் ஓர் இலக்கம்யோ சனையா
வடகடல் முதலா தென்கடல் வரையும்
வகுக்கும்அவ் இலக்கம்யோ சனையா
கடல்புடை சூழும் வட்டமாய் ஒன்பான்
கண்டமா கமலமெல் பொகுட்டின்
நடுஉறை மேரு எனும் வரை உடைத்தாய்
நாவலம் தீவுவாய்த் திடுமே. 1195

பொன்நெடு வரையின் தெற்குஇடை விட்டு
பொலிதரும் நிடதவெற்பு இலகும்
மின்எழில் ஏம கூடவெற்பு இமயம்
எனும்வரை மூன்றுமா லிகைபோல்
பன்னிய மேல்கீழ் கடல்உற நீண்டு
பகர்வரை யொன்றினுக்கு ஒன்று
மன்னிய நீளம் வரவரக் குறைந்து
வருடநல் வரம்புஎனப் படுமால். 1196

புகழுரைகள் பலவும் பெற்ற 'மன்னியு' வேந்தனுக்குப் 'புவன்' மகனாகப் பிறந்தான். இந்தப் புவனின் மகன், உலகப் புகழ் வாய்ந்த 'துவட்டா' ஆவான். துவட்டாவின் புதல்வன் 'விரசன்' ஆவான். 1192

விரசன் என்னும் வேந்தனும் தன் மனுவமிசப் புகழுக்கேற்றபடி புதல்வரைப் பெற்றான். 1193

மேற்கண்டவாறு சுகமுனிவர், பரீட்சித்திடம் பரத வமிச வரலாற்றைக் கூறினார். "அரசே! ஜடபரதன் கதையைக் கேட்போரும், கூறுவோரும் வீடுபேற்றுப் பலனை அடைவார்கள்" என்று சுகர் கூறினார்.

3. நாவலந்தீவின் வளம்

யானை போன்ற பெருமிதம் உடைய பரீட்சித்து வேந்தன் சுகமுனிவரை நோக்கிப் பதினான்கு உலகங்கள் உண்டான விதம் பற்றிக் கேட்டான். "முனிவரே! ஆணைச்சக்கரத்தால் அரசர்கள் ஆண்டதும் சோலைகள் சூழ்ந்ததுமான பதினான்கு உலகங்களைப் பற்றி அடியேனுக்குக் கூறுங்கள்" என்றான். முனிவரும் பின்வருமாறு கூறினார். 1194

'ஜம்பூத்வீபம்' என்னும் நாவலந்தீவு ஒன்பது வருஷங்கள் (கண்டங்கள்) ஆகிய பகுதிகள் உடையதாகும். இது கீழைக்கடல் முதல் மேலைக்கடல் வரை ஒரு லட்சம் யோசனை தூரமும் வடகடல் முதல் தென்கடல் வரை ஒரு லட்சம் யோசனை தூரமும் உடைய பரப்புக் கொண்டது. வட்டவடிவாய்த் தாமரை வடிவம் பெற்ற இங்கே அதன் நடுத் தண்டுக்கொட்டையாக அமைவது உயர்ந்த மேருமலை ஆகும். 1195

பொன் மயமான மேருமலைக்குத் தெற்கே, நிடதம், ஒமகூடம், இமயம் என்னும் மூன்று மலைகள் ஒரு மாலை போலப் படர்ந்துள்ளன. மேற்கடலும் கீழ்க்கடலும் நாவலந்தீவின் கண்டங்களுக்கு எல்லைகளாக, உள்ளன. நீளத்தில் இம்மலைகள் ஒன்றுக் கொன்று குறைந்திருக்கும். 1196

சாற்றிய மேரு வரையினில் வடக்கண் தயங்குறு நீலம் ஒண் சுவேதம்
போற்றுறு சிருங்கி என்னும்மூ வெற்பும் புகலிருள் கடலுற நீண்டு
தோற்றிய நீளம் ஒன்றினுக்கு ஒன்று சொல்முறை குறைந்துறும் இருமூன்று
ஆற்றல்சேர் வரையும் யோசனை இரண்டாம் ஆயிரம் உயர்ந்துஅகன் றிடுமே. 1197

மேருவின் கீழ்பால் மாலிய வானும் மேல்திசை கந்தமா தனமும்
சேரும்முப் பான்நாலாயிரம் எனவே திகழும்யோ சனைகள்தென் வடக்கா
ஏரொடு நீண்டு நிடதநீ லத்தை இனிதுஉற முட்டியே கிடக்கும்
ஓர்இரு வரையும் யோசனை இரண்டாம் ஆயிரம் உயர்ந்துஅகன் றிடுமால். 1198

நீலநீள்நிடத மாலிய வான்முன் நிகழ்த்துநல் கந்தமா தனமாம்
நால்எனும் வரைக்கும் உட்பட நிரவி நவில்வட வரையினால் திகைக்கும்
கோலமார் ஒவ்வோர் திசையினுக்கு ஒன்பான் ஆயிரம் கூறும் யோசனையாய்
ஏலும்அவ் வரைசூழ்ந்து இலங்குஇளா விரதம் எனும்பெயர் வருடம்ஒன் றுஉறுமே. 1199

பொன்நிறம் ஆய கந்தமா தனமா
புகல்வரை தனக்குமேற்கு ஆகி
பன்னும்மேல் கடற்கு கீழ்த்திசை யாகி
பளகுஅறு நீலமால் வரைக்கு
மன்னிய தெனாது நிடதமால் வரைக்கு
மருவிய வடாதுஎனல் ஆகி
துன்னிய கேது மாலம்என்று எவரும்
சொலத்தகு வருடம்வாய்த் திடுமே. 1200

பகர்வுஉறு கேது மாலம்ஆம் வருடம்
பளகுஅற கிழக்குமேற் காக
அகலும்முப் பான்ஓராயிரம் என்ன
அறைதரு யோசனை ஐதா
திகழும்முப் பான்நாலாயிரம் என்ன
செப்பும்யோ சனைகள்தென் வடக்கா
தகைபெற நாளும் விளங்கும்என் றுஉரைப்பர்
சாற்றுநல் நூல்பொருள் தெரிப்பார். 1201

மேருமலையின் வடக்கே, நீலம், சுவேதம், சிருங்கி என்னும் மூன்று மலைகள் உள்ளன. இவை, நீளத்தில் ஒன்றிற்கொன்று குறையும். மொத்தமாக இந்த ஆறு மலைகளும், இரண்டாயிரம் யோசனை தூரம் உயர்ந்து அகன்று காணப்படும். 1197

மேருமலையின் கிழக்கே, மாலியவானும் மேற்கே கந்தமாதனமும் முப்பத்து நாலாயிரம் யோசனை தூரங்களுக்கிடையில் தெற்கு வடக்காக நிடதத்தையும் நீலத்தையும் முட்டிக் கிடக்கும். இருமலைகளும் இரண்டாயிர யோசனைகள் உயர்ந்து அகன்றிருப்பன. 1198

நீலம், நிடதம், மாலியவான், கந்தமாதனம் ஆகிய நான்கு மலைகளுக்கு உட்பட்ட நாட்டை 'இலாவிருத வருஷம்' என்னும் பகுதியாகக் கூறுவார்கள். அழகிய மலைகள் சூழ்ந்த இந்நாடு எதிரெதிர் திசைகளுக்கு இடையே ஒன்பதினாயிரம் யோசனைகள் தூரம் உள்ள நீளங்கள் கொண்டதாகும். 1199

பொன்னிறம் உடைய கந்தமாதன மலை மேற்புறத்தில் அமையும்படி உள்ள கண்டம் கேதுமாலம் எனப்படும். இப்பகுதி மேலைக் கடலுக்குக் கீழ்த்திசையில் உள்ளது. நீல மலைக்குத் தெற்கிலும் நிடதமலைக்கு வடக்கிலும் உள்ளது இந்நாடு. 1200

கேதுமால வருஷம் என்னும் இக்கண்டம் கிழக்கு மேற்காக முப்பதினாயிரம் யோசனை நீளமும் தெற்கு வடக்காக முப்பதினாயிரம் யோசனை நீளமும் உள்ளடங்கிய பரப்பு உடையதாகும். நல்ல நூலறிவுடையவர்கள் இவ்வாறு இந்நாட்டின் பரப்பினைக் குறிப்பிடுவர். 1201

கூறுமா லியவான் வரைக்குநேர்க் கிழக்கா
குணகடல் தனக்குமேக்கு ஆகி
வீறுஉயர் நீல வரைக்குநல் தெற்கா
விளங்கிய நிடதத்தின் வடக்கா
ஈறிலா வளம்சேர் கேதுமா லம்போல்
இசைக்குறும் அளவின தாகி
பாறுசேர் வேலாய் பரக்கும்அவ் வருடம்
பத்திராச் சுவம்எனப் படுமே. 1202

விண்உயர் நீல வரைக்குநல் வடக்கு
விளங்கிய சுவேதமால் வரைக்கு
நண்ணுதெற்கு ஒன்பான் ஆயிரம் என்ன
நவின்றிடும் யோசனை அகன்றே
என்உறு மேல்கீழ்ப் பரவைநீர் நீண்டுஅங்கு
இயங்கும்அவ் வருடத்தை எவரும்
புண்ணியம் புரிந்தோர் பொருந்துஇரம் மிகமா
புகலுவர் இனிது எடுத்து அன்றே. 1203

நிகர்இலா சுவேத வரைக்குநேர் வடக்கா
நிகழ்த்திய சிருங்கத்தின் தெற்கா
தகைபெறும் ஒன்பான் ஆயிரம் என்ன
சாற்றிய யோசனை அகன்று
புகலும்மேல் கீழ்பால் புணரிநீண்டு அங்கண்
பொருந்துறும் புகழ்வரு டத்தை
இகல்இலா வளம்சேர் இரண்மய வருடம்
எனப்பெயர் இயம்புவர் அன்றே. 1204

வான்உயர் சிருங்கி வரைக்குநேர் வடக்கா வாரிதிக்கு இசைந்திடு தெற்கா
கூன்உடைப் பிறையின் வடிவ மது ஒத்து கூறுஇருள் கடல்உற நீண்டு அங்கு
ஊனம்இல் நடுஒன் பான்சகத் திரமாம் ஓசனை அகன்றுஉறு வருடம்
தேன்இமிர் தொடையாய் உத்தர குருவாம் தீங்குஅறு வருடம்என் றுஉரைப்பார்.
1205

கெடல்அரு மேரு வரைக்கு இடை விட்டு கிளரொளி பரந்ததென் திசைசேர்
நிடதவெற் பினுக்கு தெனாதுஎனல் ஆகி நிகழ்த்திய ஏமகூ டத்தின்
வடதிசைத்து ஆகி யோசனை ஒன்பான் மருவிய ஆயிரம் அகன்று
கடல்இரு கரையும் வரம்புஎன நீண்டு கருதுஅரி வருடம்வாய்த் திடுமே.
1206

பருந்துகள் விரும்பும் படியான வேல் ஏந்திய அரசனே!' என்று பரீட்சித்தை விளித்தழைத்த சுகர், நாவலந்தீவின் பகுதிகளை மேலும் விவரித்தார்'

பத்திராச்வம் எனப்படும் மிகுதியான கண்டம் எல்லை இல்லா வளம் உடைய கேதுமாலம் போலவே சிறப்புப் பெற்றதாகும். மாலியவான் மலைக்கு நேர்கிழக்கே, கிழைக்கடல் தனக்கு மேற்கே அமையும்படி, நீலமலைக்குத் தெற்கே, நிடதத்துக்கு வடக்கே உள்ளடங்கிய பகுதியே பத்திராச்வம் என்னும் வருஷம் ஆகும். 1202

வானைத் தொடும் நீலமலைக்கு வடக்கேயும் சுவேத மலைக்குத் தெற்கேயும் ஒன்பதினாயிரம் யோசனை நீளம் அமைந்த பகுதியை 'இரம்யகம்' என்னும் கண்டம் என்பார்கள். மேற்கடலுக்கும் கீழ்க்கடலுக்கும் இடையே அமைந்த இக்கண்டம் புண்ணியம் புரிந்தோர் வாழும் சீர்மை உடையது என்று கூறுவார்கள். 1203

இரண்மய வருடம் எனும் கண்டம் ஒன்பதினாயிரம் யோசனை அகலம் கொண்டதாய்க் கடலைத் தன் கிழக்குப் புறம் உடையது. நிகரில்லாத சுவேத மலைக்கு நேர் வடக்கேயும் சிருங்கி மலைக்குத் தெற்கேயும் உள்ள இப்பகுதி, பகை இல்லாததாய் வளங்கள் கொண்டதாகும். 1204

வானம் உயர்ந்த சிருங்கி மலைக்கு நேர் வடக்கேயும் கடலுக்குத் தெற்கேயும் வளைந்த பிறைச் சந்திரன் வடிவில் அமைந்தது உத்தரகுரு என்னும் வருஷம் ஆகும். ஒன்பதினாயிரம் யோசனை அகலம் உடையது இந்நாடு ஆகும். 1205

ஹரிவர்ஷம் எனப்படும் கண்டம் கெடுதல் இல்லாத மேரு மலைக்கு தெற்கில் உள்ள ஒளி பரப்பும் நிடதமலைக்குத் தெற்கே உள்ளது. ஏமகூட மலைக்கு வடக்கே உள்ள நாடு இது. ஒன்பதினாயிரம் யோசனை அகலம் பரந்தது இப்பகுதி ஆகும். இரு கடல்களுமே இந்நாட்டின் இரண்டு எல்லைகள் ஆவன. 1206

ஏமகூ டத்தின் தென்திசைத்து ஆகி
இமயத்தின் வடக்கண்நல் வருடம்
தாமமே போலக் கடல்உற நீண்டு
சாற்றுஅரி வருடத்தின் அகன்று
நாமமும் எழில்சேர் கிம்புரு டப்பேர்
நண்ணுறும் அதனது தெற்கு
தேமலர்த் தொடையாய் பாரத வருடம்
சிறக்கும் ஆங்கு அதன்இயல்பு உரைப்பாம். 1207

இமையநல் தெற்கா யோசனை ஒன்பான்
என்னும்ஆ யிரம்நடு அகன்று
சுமைதரும் உவரி முத்திசை சூழ
துலங்கிய சிலைவடி வாகி
அமைவுறும் இமயம் வடதிசை நாண்போல்
அமையஅப் பாரத வருடம்
சமைவுஉறு கரும பூமிஎன்று எவரும்
சாற்றநன்கு இலங்குவது அன்றே. 1208

சீரி னால்உயர் கதிர்சுழல் வடசிலை எனவே
பாரின் நால்திசை இடத் துஉறை பவர்களும் பகர
ஏர் இலாஇளா விரதத்தின் நடு இயைந்து இருக்கும்
மேரு மால்வரை வியன்அளவு இற்று என விரிக்கின். 1209

ஈரெண் ணாயிரம் யோசனை புவியகத்து ஆழ்ந்தே
ஒரும்அவ்வளவு அடிபருத் துஉம்பர்க ளாலும்
சேரும் எண்பதி னாயிரம் யோசனை திகழ்ந்தே
ஆரும் உச்சிஅவ் அடியினுக்கு இரட்டியாய் அகலும். 1210

சுற்று றும்அள வுஉரைக்குறின் அடியுறும் சுற்று
குற்றம் இன்றிஆ றெட்டெனும் ஆயிரம் குலவ
உற்ற யோசனை உறும்இதன் இரட்டியாய் ஒளிரும்
வெற்றி வேலவ விளங்கிய விரிதலைச் சுற்றே. 1211

கிம்புருட வருஷம் எனப்படும் பகுதி, ஏமகூடத்துக்குத் தெற்கிலும் இமயத்துக்கு வடக்கிலும் உள்ளதாகும். மாலை வடிவில் கடல் போல நீண்ட இந்நாடு, அரிவர்ஷம் போலவே அகலம் உடையது. 1207

இவ்வாறு நாவலந்தீவின் பகுதிகளை விவரித்த சுகர், பரீட்சித்தை நோக்கி, "மலர் மாலை சூடிய மன்னனே! கிம்புருட வர்ஷத்துக்குத் தெற்கே உள்ள பாரத வருஷத்தின் சிறப்பைக் கூறுகிறேன்" என்று உரைத்தார்.

இமயமலைக்குத் தெற்கே, ஒன்பதினாயிரம் யோசனை அளவு அகலம் கொண்ட பாரத வர்ஷம் மூன்று பக்கங்களிலும் கடல் சூழப் பெற்றது. வில்லின் வடிவம் கொண்ட இக்கண்டத்துக்கு வடதிசை நாண் போல் அமையும். இந்தப் பாரத வர்ஷம் கர்ம பூமி என்று எல்லோராலும் புகழப்படும் சிறப்புடையதாகும். 1208

வடதிசையில் உள்ள மேருமலை விவரித்துப் பேச இயலாத அளவு அகன்றது; வடதிசை மலையான அதனைச் சூரியன் சுற்றி வருவான். பாரில் நான்கு திசைகளிலும் யாவரும் இதனைப் புகழ்வர். இது இளாவிருத வர்ஷத்தின் நடுவில் உள்ளதாகும். 1209

தேவர்களாலும் அடைய முடியாத உயரம் உடைய இம்மலையின் அடிவாரம் மிகவும் பருத்திருக்கும். பதினாறாயிரம் யோசனை பூமிக்குள் ஆழமானது. அதன் சிகரமோ முப்பதிரண்டாயிரம் யோசனை உயரத்தில் உள்ளது. 1210

அம்மலையின் அடிச்சுற்றளவு நாற்பத்தெட்டாயிரம் யோசனை உள்ளது. அதன் மேற்பாகத்து உச்சியின் சுற்றளவோ அடிச் சுற்றளவைப் போல் இரண்டு மடங்கு உள்ளது. 'வெற்றி வேலுடைய பரீட்சித்தே இதனை நீ அறிவாய்' என்று சுகமுனிவர் மேருமலையை வர்ணித்தார். 1211

வயங்கு மேருவின் கீழ்த் திசை மந்தர மலையும்
தயங்கும் அம்மலை மேல் உறை தனிக்கொடி எனவே
பயம்கொள் மாஎன பகர்தரு பராரைமா மரனும்
நயங்கொள் நந்தன வனமும்நன் பால்எனும் மடுவும். 1212

விளங்கு மேருவின் தென்திசை மேருமந் தரமும்
கிளர்ந்த தீவுதன் வண்பெய ரேபெறக் கெழுமி
வளங்கொள் நாவலும் சயித்திர ரதம் எனும் வனமும்
துளங்கு நீடுஆலை மது எனச் சொலப்படும் சுனையும் 1213

சொன்ன மேருவின் மேல்திசை சுபாரிச மலையும்
அன்ன வெற்பின்மேல் அமர்ந்திடும் மலர்ச்சினைக் கடம்பும்
மன்னு நல்வளம் சேர்வயிப் பிரசமா வனமும்
கன்ன லின்சுவைச் சாறுநேர் கடிகமழ் சுனையும். 1214

வனைபொ லம்கிரி வடக்கினில் குமுதம்என் வரையும்
பனிவ ரும்பல பலம்தரு பணைப்பழு மரனும்
கனிப டும்திருச் சருவதோ பத்திரக் காவும்
புனித நீர்நிறை வாவியும் பொருந்தி அங்கு இருக்கும். 1215

உரைத்த நால்திசை மலைகளும் மேருஎன் றுஉரைக்கும்
வரைக்கு வீறுசேர் ஊன்றுகோல் போன்றுவா னவரும்
அருத்தி கூர்இளா விரதத்தின் அமர்ந்திடும் உயரம்
பொருத்தும் ஓர்பதி னாயிரம் யோசனை புகல. 1216

நால்தி சைக்கணும் நவின்றஅம் மலைகளில் நண்ணும்
ஆற்றல் சேருநால் மரங்களும் ஆயிரத் துஒரு நூறு
ஏற்ற யோசனை உயர்ந்து நூறு ஓசனை என்ன
தோற்று சீர்விட பங்களும் சூழ்ந்திடத் தோன்றும். 1217

காந்து பன்மணி மந்தர மலையின்மாங் கனிகள்
வேந்த வெற்பு உறை குவடுஎன வீழ்பழச் சாறுஅங்கு
ஏந்து வார்திரைச் சோணித ஆறுஎன ஒழுகும்
மாந்து வோர்உயிர்ப்பு ஐயிரண்டு ஓசனை மணப்ப. 1218

மேருவின் கீழ்த்திசையில் மந்தரமலை உள்ளது. அம்மலை மேல், கொடிகள் விளங்குவன போல, அடிபருத்த மாமரங்களும் மற்றைய மரங்களும் நந்தவனமும் பால் மடுவும் உள்ளன. 1212

மேருவின் தெற்கே மேருமந்தரம் என்னும் தீவு உள்ளது. அங்கு செழித்து வளர்ந்த நாவல் மரங்களும், சயித்திரரதம் எனப் பெயர் கொண்ட வனமும் உள்ளன. தேன்மடுக்கள் அங்குக் காணப்படும். 1213

மேருவின் மேற்குத் திசையில் சுபாரிசமலை உள்ளது. அங்கே கடம்பு மரங்கள் வளர்ந்துள்ளன. வயிரப்பிரசம் என்னும் வனம் அங்குள்ளது. கரும்புச் சாற்றுச் சுனைகள் பலவும் அங்குண்டு. 1214

பொன் போன்ற மேருமலைக்கு வடக்கே குமுதமலை உள்ளது. அங்குப் பலவகையான பழங்கள் விளையும்; ஆலமரங்கள் நிறைய உள்ள இடம் அது. 'சருவதோபத்திரம்' என்னும் சோலை அங்கே உள்ளது. தூய்மையான நன்னீர்ச் சுனைகள் பலவும் அங்குள்ளன. 1215

மந்தரம், மேருமந்தரம், சுபாரிசம், குமுதம் என்னும் நான்கு மலைப் பகுதிகளின் கூட்டமே மேருமாமலை எனப்படுகிறது. தேவர்களால் விரும்பப்படும் இந் நாற்றிசை மலைகளும் தூண்கள் போல் அமைந்து மேருமலையை உயர்த்தும். இலாவிருத வருடத்தில், இவை பதினாயிரம் யோசனை உயரம் உடையவை. 1216

அந்த மலைகளில் நான்கு திசைகளிலும் வலிமை மிகுந்த, மா, நாவல், கடம்பு, ஆய் ஆகிய நான்கு வகை மரங்கள் பலதரப்பட்ட கிளைகளுடன் வளர்ந்துள்ளன. ஆயிரத்து நூறு யோசனை நீளத்துக்கு இம் மரங்கள் காணப்படும். அவைகளின் உயரமோ ஒவ்வொன்றும் நூறு யோசனை அளவு ஆகும். 1217

'வேந்தனாகிய பரீட்சித்தே!' என்று அழைத்த சுகமுனி மேலும் கூறுவார்.

ஒளி விடும் மந்தரமலையில் வளர்ந்துள்ள மாமரங்களின் உச்சியில் காணப்படும் மாம்பழங்கள், மலை உச்சியோ எனத் தோன்றும். மாங்கனிச் சாறு எங்கும் நீண்டு ஒழுகிப் பாய்வதைப் பார்த்தாய். இது சோணித ஆறோ எனத் தோன்றும். மாம்பழச் சாற்றை அருந்துவோர் விடும் சுவாசம் அந்த மணத்துடன் இரண்டு யோசனை தூரம் வீசும். 1218

பட்டம் ஆர்தரு மாகரி அளவு எனப் பருத்து
கொட்டை நுண்ணிய நாவலின் கொழுங்கனிச் சாறு
பெட்ட சம்புமா நதிஎன வலம்கொடு பெருகி
உள்தெ ளிந்துபொன் மேருவைச் சுலாய்இனிது ஓடும். 1219

அதிரும் அப்புனல் அருந்தினர் அருங்கரை அசும்பு
ததையும் வெங்கதிர் காற்றுஉற உலர்ந்துநற் சாம்பு
நதம் எனும்பொன்ஆம் ஆங்குஅதின்அணிபுனை நலத்தோர்
இதழ்இல் வெம்பிணி நரைதிரை அற்றுஇனிது இருப்பார். 1220

திகழும் மேருவின் மேற்குஇளா விரதத்தில் சேர்ந்த
தகைசெய் நீள்கடம் புஉறும்புழை சார்ந்ததண் தேறல்
அகலும் ஆறு என வழிந்திடும் அதைஅருந் தினர்கள்
பகர்உ யிர்ப்புநூறு ஓசனை இடம்பரி மளிக்கும். 1221

வழங்கு மேருவின் வடதிசை வழுத்திடு வடத்தின்
பழம்கொள் நீள்பெரும் பணைதொறும் பால்தயிர் மதுநெய்
மொழிந்த பூண்துகில் சயனமே முதலிய கொளற்கு
தழங்கு வார்திரை யாறுஎனச் சார்ந்துஇழிந் திடுமால். 1222

புலம்கொள் சங்கம்வை கங்கதம் பொருந்திய நாகம்
நலங்கொள் நாரதம் முதலிய நல்வரைக் குலங்கள்
துலங்கும் மேருவின் சுற்றிலும் கழுமுமால் துகள்தீர்ந்து
இலங்கு நற்பொகுட்டு அருகுசூழ் கேசரம் எனவே. 1223

தேவ கூடமே முதலிய எண் வரை திகழ்ந்து
தாவுஇல் ஓர் திசைக்கு இரண்டு இரண்டு ஆகவே சார்ந்து
பூவின் மேவிய மேருவின் நால்திசைப் பொருந்தும்
பாவ கன்தனைத் தருப்பைசூழ்ந் திடும்பரி சுஎனவே. 1224

தண்ந றும்கம லத்துஉறை தலைவன்உள் விரும்பும்
என்அ ரும்புகழ் மாயனும் ஈசனும் இருப்ப
கண்ண கன்திருக் கடிநகர் இரண்டுஎழில் கலந்து
விண்உ யர்ந்தஅம் மேருவின் முகட்டின்மீ விளங்கும். 1225

அம்மலையில் நாவற்கனிகள் ஒவ்வொன்றும் நெற்றிப் பட்டம் உடைய யானை அளவு பெரிதாகப் பருத்திருக்கும். நுண்ணிய கொட்டைகளை உடைய நாவல் கனிச் சாறு ஆறாகப் பாய்வது 'சம்பு மாநதி'யோ எனத் தோன்றும். தெளிவுடன் அந்த நாவல்பழச் சாற்று ஆறு, மேருவைச் சூழ்ந்து ஓடும். 1219

அந்த நாவல்பழச் சாறு கலந்த ஆற்று நீரை அருந்துவோர் பிணி, நரை, திரை இல்லாமல் நலமாய் இருப்பார். மேலும் அங்கு வீசும் காற்றாலும் சூரிய வெப்பத்தாலும் நதிக் கரையிலுள்ள துளிகள் உலர்ந்த பிறகு சாம்புநதம் என்னும் தங்கமாக மாறும். இந்தத் தங்கத்தால் செய்த ஆபரணங்களை அணிந்தவரும் பிணி, நரை, திரை இல்லாமல் இனிதே வாழ்வார். 1220

மேருவின் மேற்கிலுள்ள இளாவிரதத்தில் வளர்ந்த கடம்ப மரச் சாற்றுடன் சேர்ந்தேன் ஆறாய் ஓடும். அதை அருந்தினவர்கள் வெளிவிடும் பெருமூச்சு நூறு யோசனை மணம் வீசும். 1221

மேருவின் வடதிசையில் வளர்ந்த ஆலமரங்களின் பழங்கள் முதிர்ந்து சாறாகி கிளைகளிலிருந்து விழுந்தோடும். அங்கு ஓடும் நதிகள் பால், தயிர், மது, நெய், பூண், தூசில் ஆகியவற்றை மக்கள் பெற்றிட வளத்தைப் பெருக்கும். இதனால் அங்கு வாழ்வோர் அமைதியுடன் தூங்கவும் முடியும். இப்படி ஆற்று வளம் மிகுந்தது அப்பகுதி ஆகும். 1222

சங்கம், வைகந்கதம், நாகம், நாரதம் முதலிய மலைக் கூட்டங்கள் மேருவைச் சுற்றிக் கூடி உள்ளன. மேரு தாமரைப் பூவின் கொட்டை போலவும் அதைச் சுற்றியுள்ள மலைக்கூட்டங்கள் கேசரம் போலவும் அமைந்துள்ளன. 1223

த்ாமரைப் பூப் போன்ற மேருவின் நான்கு திசைகளிலும், தேவகூடம் முதலிய எட்டு மலைகளும் இரண்டிரண்டாகச் சார்ந்து பொருந்தியுள்ளன. இவ்வமைப்பு, தருப்பைப் புற்களால் நாற்புறமும் சூழப்பட்ட வேள்வி அக்னி போலத் தோன்றும். 1224

குளிர்ந்த தாமரையில் அமரும் பிரமன் மனம் விரும்பும் இடம் இம் மலையில் உள்ளது. அகன்ற இரண்டு நகர்கள் அழகாக விளங்கும் இம் மேருமலையில் மாயன் திருமாலும் சிவனும் மனம் உவந்து தங்குவார்கள். 1225

உச்சி யில்பதி னாயிரம் யோசனை உடைத்தாய்
வச்சி ரப்படை வாசவன் முதல் திசைப் பாலர்
இச்சை கூர்ந்துஉறை எண்பதி சூழஆங்கு இருக்கும்
முச்ச கம்தரு முளரிமேல் முதல்உறை நகரம். 1226

பாயகடல் நிலமளந்த பசும் புயல்நீள் விசும்புஉருவ எடுத்த பொன்தாள்
சேஉயரும் மூதண்ட முகடு உடைப்ப பரந்தலைக்கும் தெய்வ நன்னீர்
ஆயிரம்ஆ யிரம்பருவம் சென்றுஒழிய அதிர்ந்து ஒழுகி அலரின் மேலான்
மேயபொலம் கிரிநகரின் மிசை வீழ்ந்து நால்திசையும் விரியும் மாதோ.
1227

சுடர்செய்நவ மணிமுடிகொள் துருவன்முத லோர்புகழத் துனைவின் எய்தி
வடவரையின் மிசைக்கழுமி வந்து ஒழுகு மாநதிசக் குசை என்று ஓத
கெடலரும்சீர் வாய்ந்து உறையும் கேதுமா லத்துஇனிது கெழுமி முத்தீன்
குடவளைகள் மிகமுரலும் குடகடலின் நீரொடும் போய்க் கூடும் அன்றே.
1228

விரிகதிர்சேர் பொலங்குடுமி மேருவில் வந்து
அப்புறம்போய் விளங்கு நீளம்
சொரிகிரண நவமணிசேர் சுவேதம்அரும்
சிருங்கம்எனச் சொல்லும் நல்ல
பருமவரை கீண்டுஒழுகிப் பத்திரைஎன்
பேர்படைத்த பழுதில் கங்கை
குருவருடம் தனைமேவிக் கோதில்வட
கடல்கிழித்து குலவும் அன்றே. 1229

மீது உயர்வின் ணவர்நாட்டின் விரைகமழும்
கற்பகத்தின் விளங்கு செம்பொன்
போதினொடு வடவரையில் போந்துஇழிந்து
மாலியவான் பொருப்பைக் கீண்டு
சோதிநவ மணிவரன்றி துலங்குபத்தி
ராச்சுவத்தை துன்னும் கங்கை
சீதைஎனும் பெயரினதாய்ச் சிறந்தகுண
கடல்ஒழுகித் திகழும் நீர்த்தால். 1230

வாசவனாகிய இந்திரனுடன் திசைப்பாலர்கள் எட்டுப் பேரும் மிகுந்த விருப்பமுடன் தங்குவதற்கேற்ற எட்டு மாளிகைகள் அங்குண்டு. மூன்றுலகங்களையும் படைப்பவனும் தாமரையில் தங்குபவனும் ஆகிய பிரமன் வசிக்கும் நகரம் இதுவே ஆகும். 1226

மேக நிறத் திரு,மால் கடல்சூழ்ந்த பூமியை அளக்க, எடுத்த திருவடி நீண்டு வான முகட்டைத் தொட்டதும் அதன் முகடு உடைந்தது. உடன் அவனுடைய அத்திருவடியிலிருந்து தெய்வ நதியான கங்கை புறப்பட்டது. ஆயிரம் ஆயிரம் வருஷங்களாய்த் தொடர்ந்து ஓடி வரும் அந்தக் கங்கை ஆறு தாமரையில் அமர்ந்த பிரமனின் பொன்மலை நகரில் விழுந்து அதன் பின் நான்கு திசைகளிலும் விரிந்து ஓடிற்று. 1227

ஒளி வீசும் மணிமுடி அணிந்த துருவன் முதலியோர் புகழும்படி அது விரைவாக ஓடி, மாலியவான் மலையை நிறைத்துப் பாயும். அங்கே அதற்கு சக்குசை என்னும் பெயர். அது மேலும் கேதுமாலத்தில் இனிதாகப் பொருந்தி முத்துக்கள் கொழிக்கும் மேற்கடலில் முழங்கியவாறு கலக்கும். 1228

அக்கங்கை ஆறு உச்சிகள் உடைய மேருவில் வந்து, அப்புறம் போய், நீலம், சுவேதம், சிருங்கம் எனப்படும் மலைகளின் வழியாய்ச் செல்லும். அங்கு அதற்குப் பத்திரை எனப் பெயர் உள்ளது. குற்றமற்ற அக்கங்கை அதன்பின் குருவருஷம் என்னும் நாட்டைச் சேர்ந்து வடகடலைக் கிழித்துக் கொண்டு பாயும். 1229

அக்கங்கை, உயர்ந்த தேவருலகில் மணம் வீசும் கற்பக மலரை இழுத்துக் கொண்டு, மேருமலையில் பாய்ந்து, அதன்பின் மாலியவான் மலையின் ஊடே செல்லும். இவ்வாறு செல்லும் பொழுது ஒளி வீசும் மணிகளை அரித்துப் பாயும். பத்திராச்சுவத்தை அடையும் பொழுது அந்நதி, சீதை என்னும் பெயரால் அழைக்கப்படும். முடிவில் அது கீழ்க்கடலில் சேரும். 1230

கொன்ஒழுகு நேமிமுகில் குரைகழற்பூந்
துளவொடுபொன் குன்றின் வீழ்ந்து
பொன்னொழுகு நிடதவரை புகல்ஏம
கூடவரை இமயம் என்னும்
மின்ஒழுகு மணிவரைகீண்டு அளகநந்தை
எனும்பெயரின் மேவும் கங்கை
தென்ஒழுகு பரதகண்டம் சேர்ந்துதிகழ்
தென்கடல் போய் சிறக்கும் அன்றே. 1231

சாற்று கங்கையை மனத்திடை நினைக்கினும் தனிப்பேர்
போற்றி நின்றுழி பராயினும் காணினும் பொருந்தி
ஏற்ற மாயஅந் நீரிடை மூழ்கினும் இயையும்
பேற்றை யார்குணிப் பார்அவர் முத்தியே பெறுவார். 1232

கங்கை ஆற்றிடை தங்குலப் பிதிர்களைக் கருதி
அங்கை யால்தருப் பணம்உவந்து ஒருமுறை ஆற்றின்
பங்க மாநர கத்துமுற் படினும்அக் குலத்தோர்
செங்கண் மால்பதம் சேர்ந்துஉறை வார்அது திண்ணம். 1233

நீக்கு கின்றநல் அறத்தின ராய்பழி நிரப்பும்
தீக்கொ டும்தொழில் செய்ஞ்ஞரும் இறந்திடின் சிறிதாம்
ஆக்கை என்புஒரு வகையினால் வருகங்கை அடையின்
ஊக்க முற்றுஅவர் உம்பர்தம் உலகுபுக் குஉறைவார். 1234

இறந்து ளோர்களும் கங்கையின் எலும்புஉறின் இமையோர்
உறைந்த நாட்டுஉறை வார்எனின் உயிர்ஒழி வதன்முன்
நிறைந்த அன்பொடு கங்கையில் சென்றுநீ ராட
சிறந்து ளோர்எனின் அவர் பெறும் பேற்றையார் தெரிப்பார். 1235

உரைசெய் பாரத வருடம் விட்டு ஒழிந்தநல் வருடம்
பொருவில் எட்டையும் போகம்ஆர் பூமியென்று உரைப்பர்
வருடம் எட்டினும் வதிபவர் ஆயுளை வழங்கின்
பருவம் ஓர்பதி னாயிரம் பழுதுஅற வாழ்வார். 1236

அச்சுறுத்தும் சக்கரம் ஏந்திய மேகநிறத் திருமாலின் திருவடிகளில் தோன்றிய கங்கை அங்கிருந்த திருத்துழாய் மலருடன் ஓடும். அது கனக மலையில் விழுந்து, நிடதம், ஏமகூடம், இமயம் ஆகிய மலைகள் வழியாய்ச் செல்லும். அந்நிலையில் அதனை 'அளகநந்தை' என்று அழைப்பார்கள். பிறகு அழகு பொருந்திய பரதகண்டத்தில் அது பாய்ந்து தெற்குக் கடலில் போய்ச் சிறப்புப் பெறும். 1231

கங்கையின் பெருமை :

மேற்கூறப்பட்ட கங்கை ஆற்றை மனத்தால் நினைத்தாலே பாக்கியம் ஆகும். அதைத் துதித்தாலும், புகழ்ந்தாலும், பார்த்தாலும், பாவங்கள் விலகும். ஏற்றம் மிகுந்த அந்நீரில் மூழ்கிக் குளித்து நற்முக்தி பெறுவர். இத்தகைய கங்கையின் பயனை அளவிட்டுக் கூற வல்லார் யார்? 1232

கங்கை ஆற்றில், மனிதர்கள் தம் குலத்துப் பிதுர்களைக் கருதி ஒருமுறையாவது தர்ப்பணம் செய்வாராயின், அவர்கள் பாவத்தால் நரகத்தை அடைந்திருந்தாலும், மீண்டு, திருமால் திருவடி அடைவது உறுதி ஆகும். 1233

நன்மை தரும் தருமத்தை விட்டவர் கங்கையில் நீராடினால் அது அவர்கள் பழியை நீக்கும். தீய கொடுந்தொழில் செய்பவர்கள் கூடக் கங்கையில் இறந்தால், அவர்கள் பாவம் தொலையும். இறந்த பின்னர் அவர் எலும்பு கங்கையில் சேர்க்கப் பட்டாலும், அவர்கள் தேவலோகம் புகுவர். 1234

இறந்தவர் எலும்புகள் கங்கையில் கலந்தால், அவர்களும் தேவலோகம் அடைவர் என்றால், வாழும் காலத்தே நிறைந்த பக்தியுடன் அதில் நீராடினால் பயன் அடையாமலா போவர்? அவர்கள் பெறும் பேற்றை ஒருவராலும் சொல்ல இயலாது. 1235

பாரத வருஷம் தவிர்த்த மற்றைய எட்டுக் கண்டங்களையும் போக பூமி என்று அழைப்பார்கள். இந்த எட்டுக் கண்டங்களில் வாழ்பவர்கள் பதினாயிரம் ஆண்டுகள் ஆயுளுடன் வாழ்வார்கள். 1236

தந்தி ஆயிரம் பத்து உறும் தருக்கினர் ஆகி
கந்த வார்குழ லியரொடு கலவியில் களித்து
மைந்த னோடுஒரு வனிதையை மணந்திடப் பெறுவர்
எந்த நாளும்ஆங்கு இரண்டு எனும் ஊழி போன்று இருக்கும். 1237

ஓங்கு சீர் பெறும் ஒன்பது வருடத்தும் உருவோடு
ஆங்கு வாழ்குநர் வழுத்திட அருள்புரிந் துஉறைவான்
தேம்க மழ்ந்ததார் செப்புஇள வனமுலை சுமந்து
வாங்கு நுண்இடை மலர்மகள் மணந்து உறை மார்பன். 1238

இலகு மேருவின் குணக்குஇளா விரதத்தின் எழில்சேர்
அலர்செய் பூங்குழல் அரம்பையர் அளப்பிலர் சூழ
மலைம டந்தைசேர் மதிஅணி சடையினோன் வணங்க
உலகுஎலாம் தரும் உந்தியான் அநந்தன் என் றுஉறைவான். 1239

கமலை மேவும்மால் கலையெனும் அநந்தனை வணங்கி
அமல ஈசன்வாழ் அவ்வுழி ஆடவர் அணுகின்
தமர வண்டுஉறை கருங்குழல் தையலர் ஆக
உமைவ ழங்கிய சாபம்உண் டுஉரைக்குதும் இனிஆல். 1240

இயக்கர் வானவர் முதலிய யாவரும் வணங்கி
மயக்கம் நீக்கிஆள் வாய்என மகிழ்ந்து அருள்நாளும்
பயக்கும் மாயவன் பத்திராச் சுவத்தினில் உறைவோன்
அயக்கி ரீவன்என்று அன்பொடும் ஏத்த ஆங்கு அமர்வான். 1241

ஏமம் ஆர் தரும் ஏந்துஇள வனமுலை எழில்சேர்
தாம வார்குழல் மலர்மகள் உவப்பொடு தழுவ
சேமம் ஆர்தரு கேதுமா லத்தினில் திருமால்
காம தேவன் என்று ஏத்திட கருணைசெய் துஉறைவான். 1242

தேன்உலாம் தொடை ரம்மிகன் முதலினோர் சேர்ந்து
வான்அளாவிய கடையுக வாரிதி நீரின்
பால்நி லாமருப்பு ஏந்தினை பார்என பரவ
மீனம் ஆயிரம் மிகவரு டத்தின்மால் விளங்கும். 1243

இங்கு வாழ்பவர்கள் பதினாயிரம் யானைகளின் வலிமை பெறுவர்; மணம் வீசும் கூந்தலுடைய மங்கைகளை மணந்து களிப்பார்கள். இந்நாட்டில் திருமணம் செய்து வாழும் மங்கையும் மனிதனும் திரேதாயுகத்தில் வாழும் பேறு போன்ற போகங்களைப் பெறுவார்கள். 1237

இந்த ஒன்பது கண்டங்களில் வாழ்பவர்கள் எல்லா நலங்களும் பெறுவது திருமால் அருளாலேயே ஆகும். மணம் வீசும் மாலை சூடியவளும், நுண்ணிடை பெற்றவளும் ஆன திருமகளை மார்பில் பெற்றுள்ள திருமால் இந்தக் கண்டங்களில் எல்லாம் நிறைந்துள்ளார். 1238

மேருவின் கிழக்கில் உள்ள இளாவிரதத்தில் எழுந்தருளிய திருமால் அனந்தன் என்னும் திருநாமம் உடையவர். இங்கு பூக்கள் சூடிய அரம்பையர் அளவற்றவராய்ச் சூழ்ந்து வருவர். பார்வதியை உடம்பில் பெற்றவரும் சந்திரனைச் சடையில் தரித்தவரும் ஆகிய சிவன் திருமாலை வணங்கி வழிபடுவார். உலகங்களை எல்லாம் தோற்றுவித்த கொப்பூழுடைய நாராயணன் இங்கு அனந்தன் என்னும் பெயரில் உள்ளார். 1239

இந்த இளாவிரத வருஷத்தில், குற்றமற்ற சிவனாகிய ஈசன் அனந்தன் ஆகிய திருமாலை வணங்குகிறார். திருமகளை மார்பில் பெற்ற அனந்தன் என்னும், நாராயணன் அம்சமான அனந்தன் என்றும் சிறப்புகள் அவருக்கு உண்டு. இந்தப் பகுதியில் ஆடவர்கள் வந்தால், அவர்கள் கூந்தலுடைய பெண்களாக மாறி விடுவர் என்னும் சாபம் உள்ளது. "இச்சாபத்தைக் கொடுத்தவள் உமாதேவி என்பதை மேலே கதையில் கூறுவேன்" என்று சுகமுனி உரைத்தார். 1240

பத்திராச்சுவத்தில் எழுந்தருளிய திருமால் ஹயக்ரீவன் என்று அன்புடன் அழைக்கப்படுகிறார். இயக்கர், வானவர் முதலிய யாவரும் இங்குள்ள பெருமானை வணங்கி, 'எங்கள் மயக்கத்தை நீக்கி அருளுக' என்று வேண்டுவர். திருமால் அவர்களுக்கு அருள் செய்யும் இடம் இது ஆகும். 1241

கேதுமாலத்தில், திருமால், திருமகளுடன் சேர்ந்து சேவை தருகிறான். ஓங்கிய அழகிய மார்புகளுடைய அழகான லக்ஷ்மியைத் திருமால் இங்கே தழுவியபடி உள்ளதால், அப்பெருமான் 'காமதேவன்' என்னும் பெயருடன் இங்கே எழுந்தருளிக் கருணை செய்கிறான். 1242

இரம்மிய வருஷத்தில் திருமால் மச்சாவதார உருவத்துடன் உள்ளான். இந்நாட்டுத் தலைவன் இரம்மிகன் தன் பரிவாரங்களுடன் பெருமானைத் துதித்தான். வானைத் தொடும் பிரளய காலத்தில், எம்பெருமான் மீன்வடிவம் கொண்டு பால் போன்ற ஒளியுடைய தன் தந்தத்தால் உலகை எடுத்துக் காத்தான். 1243

முரன்உ டைச்சரா சரங்களில் நிறைந்து உறை முதல் என்று
உரன்உ டைத்திரு இரண்மயன் முதலினோர் உரைப்ப
திரள்ம ணிப்பெரு வரைநிகர் கமடமாய் திருமால்
இரண்ம யப்பெயர் எய்திய வருடம்வீற் றிருப்பான். 1244

பராகம் ஒன்று எனப் பாதலத்து எனைமருப்பு ஏந்தி
அராகம் மேல்கொள வைத்தனை எனப் புவி அணங்குஆங்கு
இராக மோடுஉறை பவரொடும் இனிதுஉவந்து ஏத்த
வராக மூர்த்தியாய் உத்தர குருவின்மால் வதியும். 1245

ஒளிகொள் வச்சிரப் படைநிகர் உகிர! என்றுஒழியா
களிகொள் நஞ்சொடு கனகன்மா மதலைநின் றுஏத்த
துளவு சூடும்மால் சொல்அரி வருடத்தில் துலங்கும்
நளின மாதுசேர் நரசிங்க மாகவீற் றிருக்கும். 1246

கேடுஇல் கிம்புரு டத்தினில் கெழுமின ரோடும்
ஆடல் மேவுஅநு மான்அடி வணங்கிட அமர்வான்
வாடு நுண்இடைச் சீதைஎன் பாள்மருங்கு இருப்ப
நீடு வெம்சிலை இராமன்என் பெயரொடு நெடியோன். 1247

வார்அள் கலை வனைதரும் மாதவர்க்கு எழில்வீடு
ஆர்தரத் திறம் உரைத்துஅளி யீர்என வழுத்தும்
நார தற்குஅருள் செயநர நாரணன் எனமால்
பார தப்பெயர் பகர்வரு டத்தின்வீற் றிருக்கும். 1248

கங்கை காவிரி கன்னிதென் பொருநைகா ளிந்தி
துங்க பத்திரை முதலிய மாநதி துவன்றி
மங்குல் கண்படும் மலயமால் வரைமுதல் வரைகள்
பொங்கு பாரத வருடத்தின் தகைமையார் புகல்வார்? 1249

வருண நான்குநான்கு ஆச்சிர மத்திறம் மருவி
அரிய பாவத்தின் நிரயத்தும் அறத்தினால் பலஆம்
பொருஇல் விண்ணினும் ஞானத்தால் வீட்டினும் புகுத்தும்
கரும பூமிஇப் பாரத வருடமாம் கழறின். 1250

இரண்மய வருடத்தில் திருமால் ஆமை வடிவில் எழுந்தருளினான். இரண்மய வருடத் தலைவனும் அடியார்களும், "வெவ்வேறு பட்ட சராசரங்களில் நிறைந்து எல்லோரையும் காக்கும் ஆதி முதல்வனே!" என்று போற்றித் துதிக்கின்றனர். 1244

உத்தரகுருவில் திருமால் வராக மூர்த்தியாக எழுந்தருளி உள்ளார். "பாதாளத்திலிருந்து என்னைக் கொம்பால் எடுத்துத் தூக்கிக் காப்பாற்றிய வராகப் பெருமானே! உன்மேல் ஆசை உண்டாகச் செய்தாய். என்னை ஏற்று அருள்வாய்" என்று பூமாதேவி திருமாலை வேண்டினாள். 1245

திருமால் அரிவருஷத்தில் நரசிம்ம மூர்த்தியாக எழுந்தருளி உள்ளார். "ஒளி உடைய வஜ்ராயுதம் போன்ற நகத்தை உடைய பெருமானே! என்னைக் காப்பாற்றியவனே!" என்று இரணியன் புதல்வன் பிரஹ்லாதன் துதிக்கும் இடம் இது. இங்கு நரசிம்மர் அழகு மிகுந்த லக்ஷ்மியுடன் சேர்ந்தே எழுந்தருளி உள்ளார். 1246

நெடியவன் ஆன திருமால் கிம்புருடப் பகுதியில் இராமனாக எழுந்தருளி உள்ளார். அனுமான் தன் திருவடிகளை வணங்கிட, நுண்ணிடை பெற்ற சீதை அருகில் அமர்ந்திருக்க, நீண்ட வில்லை ஏந்தியபடி இராமபிரானாக எம்பெருமான் எழுந்தருளி உள்ளான். 1247

பாரத வர்ஷத்தில், திருமால் நரநாராயண வடிவில் எழுந்தருளி உள்ளார். நாரதமுனிவர், "பெருமானே! நீண்ட மான் தோல் ஆடை உடுத்தும் முனிவர்க்கு வீடு பேற்றை அளிக்கும் கருணை உடையீர்!" என்று பெருமானைத் துதித்தார். அவருக்கு அருள் செய்ய நரனாகவும் நாராயணன் ஆகவும் தானே ஆன திருமால் எழுந்தருளி உள்ளார். 1248

மலைகள் பலவும் செறிந்த பாரத வருஷத்தின் பெருமையைப் புகலவல்லவர் இல்லை. மேகம் உறங்கும் பொதிகை முதல் பற்பல மலைகள் உள்ள இந்நாட்டில் ஓடும் நதிகள் கங்கை, காவிரி, தாமிரபரணி, யமுனை, துங்கபத்திரை, முதலானவை ஆகும். 1249

இப்பாரத பூமி கருமபூமி எனப் புகழ் பெற்றுள்ளது. நான்கு வர்ணங்களையும் நான்கு ஆசிரமங்களையும் உடையவர்கள் பாவம் செய்வார்கள் ஆயின் நரகம் அடைவார். அவர்கள் தர்மவழியில் நின்றால், சுவர்க்கம் அடைவார். ஞான மார்க்கத்தில் நிலை நின்றால் மோட்சம் அடைவார். இவையே பாரத பூமியின் சிறப்புக்களாம். 1250

புரியும் சத்துவ கருமத்தோர் பொன்உலகு அடைவார்
மருவி ராசத கருமத்தோர் மானிடர் ஆவார்
உரைசெய் தாமத கருமத்தோர் நரகங்கள் உறுவார்
விரவும் அவ்வினைப் பயன்விழை யார்கள் வீடு அடைவார். 1251

ஆற்று நல்வினைப் பயன்பல அயின்றனர் ஆங்காங்கு
கூற்று இருந்துதேன் ஒழுகுபொன் தருநிழல் உறைவோர்
நோற்று மாயவன் செய்யதாள் நிழல்உற நொய்தின்
தோற்று வேம்கொலோ பரதகண் டத்துஎன துணிவார். 1252

பொற்பு வாய்ந்த பொன் நாட்டிடைப் புங்கவர் இங்கே
கற்ப ஆயுள்சேர்ந் துஉறைதலின் கருதுவீடு அடைய
நல்ப தாம்புயம் நாடிமால் நாமம்உச் சரிப்ப
அற்ப ஆயுள்சேர்ந்து ஆங்குஉகித் திடல்அழகு என்பார். 1253

வாமம் உற்றுஅவிர் பாரத வருடம்வந் துஉதித்து
நாம முத்தியின் உய்க்குநன் ஞானம் வந்து அடைய
காமம் அற்றுமுன் செய்திலம் வினைஎனக் கரைவார்
போம் மதித்திடின் பொன்உலகு எனஅறி புலவோர். 1254

என்று நாவலம் தீவின்நல் வளன்எடுத்து இசைத்தான்
துன்று மாதவச் சுகமுனி வரன்என சூதன்
மன்றல் நாள்மலர்த் துளவுஅணி மாயனை வழுத்தி
நின்ற வேதியர் உவப்புஉற அஞ்செவி நிறைத்தான். 1255

4. ஏழு தீவுகளும் கடலின் அளவும்

வளைவு காட்டிய தீவொடு ஏழ் வாரிகள்
அளவு காட்ட அரசனுக்கு ஆய்பிழித்
துளவு சூட்டும் துளிமுகி லைத்தொழும்
தெளிவு பூட்டும் திருமுனி செப்புவான். 1256

வெம்புத் தீத்தரை சகரர்தொட் டுண்டலின் வேறாய்
பம்பிச் சேர்தரு ரமணகம் பாஞ்சசன் னியம்சீர்
மொய்ம்பு உற்று ஓங்கிய அரக்கர்வாழ் இலங்கையே முதலா
சம்புத் தீவினை சாற்றுபல் தீவுசார்ந் துஉறும்ஆல். 1257

இங்கு சத்துவ கர்மங்களைச் செய்வோர் சுவர்க்கம் அடைவார்கள். ராஜஸ குணத்துடன் செயல் புரிவோர் அதனால் மறுபிறவியில் மனிதர்களாய்ப் பிறப்பார்கள். தாமஸ குணத்துடன் செயற்படுவோர் நரகத்தை அடைவார்கள். புண்ணியம், பாவம் இரண்டும் இல்லாதவர்கள், வினைப்பயன் அற்றவராய் மோட்சம் அடைவார்கள். 1251

ஊற்றுப் போல் தேன் சொட்டும் கற்பக மரங்கள் நிறைந்த சுவர்க்கத்தில், நல்வினைப் பயனை அனுபவிக்கும் தேவர்களும், தாம் பாரத பூமியில் பிறக்கவில்லையே என எண்ணுவார்கள். மாயவன் ஆன திருமால் திருவடிகளைப் பணிந்து நோற்கப் பாரத பூமியே ஏற்றது. அங்கு நாம் பிறப்போமோ!" எனத் தேவரும் ஆசைப்படுவர். 1252

இன்பம் மிகுந்த சுவர்க்கத்தில் போகங்களை அனுபவித்துப் பல கற்பகாலங்கள் வாழ்வதைக் காட்டிலும் அற்ப ஆயுளுடைய கர்மபூமியில் பிறந்து, திருமால் திருவடிகளை நாடித் துதித்து நாம ஸங்கீர்த்தனம் செய்து, வீடு பெறுவதே மேலானது என்று தேவர்கள் கருதுவார்கள். 1253

"அழகுள்ள பாரத பூமியில் பிறந்திருந்தால், முக்தி அடையும் வழி கிடைக்கும்; உண்மையான ஞானம் சேரும். விருப்பு வெறுப்ற்று செயல்களில் பயன் கருதாது கர்மம் செய்ய இயலும். இத்தகைய பற்றற்ற கர்ம மார்க்க வழியில் நில்லாது, புண்ணிய வினைப்பயனால் தேவர்கள் ஆனோமே . இனி மோட்சத்துக்கு வழி ஏது?" என்று தேவர்கள் மனம் கரைவார். 1254

"மேற்கண்டவாறு சுகமுனிவர் பரீட்சித்திடம் நாவலந் தீவின் வளங்களை எடுத்துக் கூறினார்" எனச் சூதமாமுனிவர் சௌனகாதியர்களிடம் விவரித்தார். நைமிசாரணிய முனிவர்கள் தங்கள் செவிகள் குளிர இக்கதையினைக் கேட்டுத் திருத்துழாய் மாலை அணிந்த மாயன் ஆன திருமாலைத் துதித்தனர். 1255

4. ஏழு தீவுகளும் கடலின் அளவும்

தேன் சொட்டும் திருத்துழாய் மாலை சூடிய திருமாலைத் தொழுவதற்கான தெளிவைப் பிறப்பிக்கும் சுகமுனிவர், பரீட்சித்திடம் ஏழு கடல்களும் ஏழு தீவுகளும் ஏற்பட்ட விதத்தை விவரிக்கத் தொடங்கினார். 1256

வெம்பும் நெருப்புடைய பூமியைச் சகரர் தோண்டியதால் கடல் ஏற்பட்டது. அதன் விளைவாய், சம்புத் தீவைச் சார்ந்து, பல தீவுகள் ஏற்பட்டன. அவை ரமணகம், பாஞ்சசன்னியம், இலங்கை என்பன. இவற்றுள் இலங்கையில், வலிமை பெற்றோங்கிய அரக்கர் வாழ்ந்தனர். 1257

இலக்கம் யோசனை இயையும்இத் தீவினை இனைத்தா
துலக்கு சீர்நிலா வளத்ததா உவர்க்கடல் சூழும்
விலக்குஇலா இதற்கு இரட்டியாய் விளம்புஉவர்க் கடலை
பிலக்க மாமெனுந் தீவுசூழ் கிடந்திடும் பேசின். 1258

சொன்ன தீவினை அத்துணை அளவையாய்ச் சூழும்
கன்னல்ஈர்ஞ்சுவைச் சாறுசேர் கடல்அரும் கடலை
மன்னும் யோசனை அக்கடற்கு இரட்டியாய் வளையும்
பன்னு சீர்வளர் சான்மலித் தீவு எனப் பகர்வார். 1259

வீறு சேரும்அத் தீவைஅவ் வளவையின் மேவி
மாறுஇ லாமதுக் கடல்வளைந் திடும்மதுக் கடலை
கூறும் யோசனை இரட்டியாய்ச் சூழ்ந்திடும் குசத்தீவு
ஊறு நெய்க்கடல் அவ்வள வாய்அதை உடுக்கும். 1260

திகழு நெய்ப்பெருங் கடலினை செப்புஅதன்இரட்டி
அகலும் நற்பெருங் கிரவுஞ்சத் தீவுசூழ்ந்து அமரும்
குகன்எறிந்திடும் கிரவுஞ்சக் குன்றுநின் றதனால்
பகர்செ ழும்பெயர் கிரவுஞ்சத் தீவு எனப் படுமே. 1261

சேகுஇ லாதநற் கிரவுஞ்சம் எனப்படு தீவை
ஓகை யேசெயும் பாற்கடல் உடுக்கும்அவ் வளவாய்
சாகத் தீவுஇதை இரட்டியாய் வளைந்திடும் தனிப்பேர்
மாகம் மீதுஉயர் சாகம்என் மரத்தினால் மணந்தே. 1262

சீத வாரியை வளைந்திடும் பிலக்கமாம் தீவே
ஆதி ஆகும்இவ் ஐந்தெனும் தீவினுள் அமர்ந்த
ஓது நால்வகை வருணம் ஆயவர்தனி உரைக்கும்
ஏதம் நீங்குபேர் வேறுவேறு இயைகுவர் இயல்பால். 1263

உந்து தேரின்ஏழ் தீவுஎன உஞற்றினற் குஉதித்துஇவ்
ஐந்து தீவினுக்கு அரசராம் ஐவருக்கு எவ்வேழ்
மைந்தர் தோன்றினர் வகுத்திடும் தீவுகள் அவ்ஏழ்
சந்த மார்தரு வருடமாய்த் தனித்தனித் தயங்க. 1264

இலட்சம் யோசனை அளவுடைய சம்பூத்தீவுக்கு அருகே, வளங்கள் நிறைந்த தீவை உவர்க்கடல் சூழும். பிலக்கம் என்னும் தீவு இதற்கு இருமடங்கு பெரியதாய்க் கடலைச் சூழ்ந்திருக்கும். 1258

பிலக்கத்தீவை, அத்தீவின் அளவுடைய கருப்பஞ்சாற்றுக் கடல் சூழ்ந்து இருக்கும். அக்கடலின் அளவுக்கு இரு மடங்கு உடைய சான்மலித் தீவு அக்கடலைச் சூழ்ந்திருக்கிறது எனக் கூறுவர். 1259

வளம் நிறைந்த அந்த சான்மலித் தீவை, அதே அளவுள்ள மதுக்கடல் சுற்றி இருக்கும். இக்கடலுக்கு இரு மடங்கு அளவுள்ள குசத்தீவு அதனைச் சூழ்ந்துள்ளது. அக்குசத் தீவைச் சுற்றி நெய்க்கடல் உள்ளது. 1260

கிரவுஞ்சத்தீவு குசத் தீவைச் சூழ்ந்து இருமடங்கு பெரியதாய் இருக்கும். இத்தீவில் தான் முருகன் வேலாயுதத்தை எறிந்த கிரவுஞ்சமலை நின்றதால் இத்தீவும் அப்பெயர் பெற்றது. 1261

உவகை உண்டாக்கும் பாற்கடல், குற்றமற்ற கிரவுஞ்சத் தீவைச் சூழ்ந்துள்ளது. இந்தப் பாற்கடலைச் சுற்றி உள்ள தீவு இரு மடங்கு அளவில் சாகைத் தீவு எனப் பெயர் பெறும். சாகம் என்னும் தேக்கு மரங்கள் நிறைந்ததால் இத்தீவு அப்பெயர் பெற்றது. 1262

குளிர்ந்த கடலை வளைத்தபடி உள்ள பிலக்கம். சான்மலி, குசத்தீவு, கிரவுஞ்சம், சாகம் ஆகிய ஐந்து தீவுகளில் வாழ்பவர் நால்வகை வருணத்தையும் சார்ந்தவர் ஆவர். இயல்பால் இவர்கள் வேறு வேறு பெயர்களுடன் இருப்பார்கள். 1263

பிரியவிரதன் தன் தேரை ஏழுமுறை செலுத்திப் பூமியை ஏழு தீவாகப் பிரித்தான். இவற்றில் பிலக்கம் முதலிய ஐந்து தீவுகளுக்கும் தன் ஐந்து புதல்வர்களை அரசராக்கினான். அவர்களுக்கு ஏழு மைந்தர்கள் தோன்றினர். ஏழு தீவுகள் அவர்களுக்கு உரிமை ஆயின; வருஷங்கள் எனப்பட்டன. 1264

சொல்லும் ஒவ்வொரு தீவினுள் தோன்றுஇரு கடையும்
ஒல்லெ னப்படு திரைக்கடல் உறகுறுக் காகி
மல்லல் உற்றஅவ் வருடநல் வரம்புஎன வழங்க
எல்இ லங்கும்ஏழ் வரைகள்ஏழ் நதியுடன் இருக்கும். 1265

பன்னும் ஐவகைத் தீவுஉறை பவர்களும் பார்வை
மன்னு கின்றகா ரணங்களாய் வந்துஉதித்து ஒளியும்
உன்னு புந்தியும் புலனும் அங்கு ஒத்தனர் ஆகி
இன்னல் இன்றி ஓர் ஆயிரம் பருவமும் இருப்பார். 1266

உரைத்த பேர்பெறு பிலக்கமாம் தீவினில் உறைவோர்
விரித்த செங்கதிர் வேந்தனை வணங்குவர் விருப்பால்
தருக்கி னோடுஎழில் சான்மலித் தீவுஉறை தக்கோர்
நிரைத்த தண்கதிர்த் திங்களை வழுத்துவர் நினைந்தே. 1267

வானின் ஓங்குற வளர்குசத் தீவினில் வதிவோர்
ஈனம் நீங்குஒளி அங்கியின் பதம்இறைஞ் சுவர்ஆல்
தேன் அம்பொழில் செறிதரு கிரவுஞ்சத் தீவோர்
பேன நீர்க்குஇறை தாள்துணை வழுத்துவர் பெட்பால். 1268

இயம்புஎண் நான்குஎனும் இலக்கம்யோ சனையிடன் அகன்ற
தயங்கு பன்மணிச் சாகத்தீ வுஉறைதரு தவத்தோர்
வயம்செய் கின்றநற் பிராணன்ஆம் வாயுவிண் ணவனை
நயம்செய் அன்பொடு வணங்குவர் நாடிநாள் தோறும். 1269

சேகுஇ லாத முனிவரும் சித்தரும்
நாக ரும்புகழ் நாலெட்டு இலக்கமே
ஆகும் ஓசனை என்ன அகன்றுஎழில்
சாகத் தீவைத் தயிர்க்கடல் சூழுமே. 1270

சாற்று கின்ற தயிர்எனும் வேலையை
ஏற்ற அவ்வள வுக்கும் இரட்டியாய்
நால்தி சைக்கணும் சூழ்ந்து நவையிலோர்
போற்று புட்கரத் தீவு பொருந்தும்ஆல். 1271

அவ்வருஷங்களான பகுதிகள் இரண்டு ஓரங்களிலும் கடல் குறுக்காகி, எல்லை ஆயிற்று. வளங்கள் செறிந்த அந்த ஏழு தீவுகளுக்கும் வரம்பாக ஏழு மலைகளும் ஏழு நதிகளும் இருந்தன. 1265

மேலே கூறப்பட்ட ஐந்து தீவுகளில் வசித்தவர்கள் புத்தி அறிவு பெற்றவராய், இந்திரியங்கள் அதற்கொத்தபடி இயங்க, எந்த வகைத் துன்பமும் இல்லாதவராய் ஆயிரம் வருஷங்கள் வாழ்ந்தனர். 1266

மேலே கூறப்பட்ட பிலக்கத் தீவில் வாழ்பவர் செங்கதிருடைய சூரியனைத் தெய்வமாக வணங்குவார்கள். சான்மலித் தீவில் வாழ்பவர் பெருமிதத்துடன் குளிர்ச்சி பொழியும் சந்திரனைத் தெய்வமாக வழிபட்டனர். 1267

வானம் ஓங்கிய குசத் தீவில் வாழ்பவர்கள் தாழ்ச்சி இன்றி, அக்னி தேவனை வணங்குவார்கள். தேன் சொட்டும் சோலைகள் நிறைந்த கிரவுஞ்சத் தீவில் வாழ்பவர்கள் விருப்பத்துடன் வருணனை வழிபடுவார்கள். 1268

நான்கு லட்சம் யோசனை அகன்றதும் பல மணிகள் செறிந்ததும் ஆன சாகத் தீவில் வாழ்பவர்கள், நமக்குப் பிராணனாக இருக்கும் வாயுதேவனை அன்புடன் வணங்குவார்கள். 1269

சாகத் தீவில் குற்றமற்ற முனிவர்களும் சித்தர்களும் நாகர்களும் வாழ்வார்கள். இந்த அகன்ற தீவைச் சுற்றித் தயிர்க்கடல் பன்னிரண்டு லட்சம் யோசனை அளவு பரந்திருக்கும். 1270

புஷ்கரம் என்னும் தீவு இத்தயிர்க் கடலைச் சுற்றி அதைப் போல் இருமடங்கு அளவுக்குப் பரந்து நான்கு திசையிலும் சூழ்ந்திருக்கும். குற்றமற்ற பெரியோர் இப்புஷ்கரத்தீவைப் போற்றுவார்கள். 1271

விழைந்து நான்முகன் மேவுபொன் தாமரை
தழைந்து சார்தலின் சாற்றும்அத் தீவுதான்
மொழிந்த புட்கரப் பேர்முதல் ஏற்றது
வழங்கு தேவன் மலரயன் ஆங்குஅரோ. 1272

ஏதம் நீங்கி இலங்கும்அத் தீவினுக்கு
ஆதி மாமனு வானவன் மைந்தனுக்கு
ஓது சீர்மகவு ஆகி உதித்திடும்
வீதி கோத்திரன் என்பவன் வேந்தனே. 1273

ஓதும் வேந்தன் உயிர்த்த ரமணகன்
தாத கன்னனச் சாற்றும் இருவர்தம்
கோதுஇல் நாமம் குறிப்ப வருடம்ஏர்
தீதுஇல் ஓரிரண்டு ஆகும்அத் தீவுஅரோ. 1274

ஈனம் நீங்கு வருடம் இரண்டுஎன
ஆன தீவின்நடு எயி லாம்என
மான தோத்தர மாமலை சூழ்ந்திடும்
பானு மீது வளைந்து படரவே. 1275

அறைந்த தீவினை அவ்வளவு ஆகியே
நிறைந்து சேரும்தண் ணீர்க்கடல் சூழ்ந்திடும்
எறிந்த வார்திரை ஓதஅவ் வாரியை
செறிந்து சூழும் திகழ்பசும் பொன்நிலம். 1276

பன்னு தேவர் பயிலுறப் பத்துஎன
மன்னு கோடி மருவிய யோசனை
என்ன வேஅகன்று எங்கணும் சூழ்ந்தஅப்
பொன்னின் பூமிக்குஅப் பாலும் புகலுவாம். 1277

வில்லின்நுதலார் புத்தேளிர் விளையாட்டு அயரும் பொலநிலத்தை
மல்லின்உயர்ந்த தடம்புயத்தாய் மருவி வளைந்துஇப் பார்முதல் மேல்
நல்ல உலகம் மூன்றினுக்கு நவைதீர் புரிசை என உயர்ந்து
சொல்லும் உலோகா லோக மலை துலங்கும் எனவே வழங்குவர்ஆல்.
1278

பிரமனாகிய நான்முகன் தாமரையில் அமர்ந்திருப்பதால் இத்தீவு புஷ்கரம் எனப்பட்டது. அத்தீவின் தெய்வம் பிரமனே ஆவான். 1272

ஆதி மனுவான சுவாயம்பு மனுவின் புதல்வன் பிரியவிரதனுக்குப் பிறந்த பிள்ளையான வீதிகோத்திரனே புஷ்கரத் தீவுக்கு அரசன் ஆவான். அதனால் அத்தீவு குற்றமில்லாமல் விளங்கிற்று. 1273

வீதிகோத்திரனின் புதல்வர்களான ரமணகன், தாதகன் என்னும் இருவரும் அரசர்கள் ஆனார்கள். ஆதலால் அவ்வருஷம் ஆகிய கண்டம் இருவர் பெயராலும் குறிப்பிடப்பட்டு இரண்டாயின. 1274

ரமணகம், தாதகம் எனப் பிரிக்கப்பட்ட அந்த இரண்டு பகுதிகளுக்கும் நடுவில், மானதோத்திர மலை, எல்லையான மதில் ஆயிற்று. சூரியன் அம்மலை மீது சூழ்ந்து வருவான். 1275

மேற்கூறப்பட்ட புஷ்கரத் தீவினைச் சுற்றிச் சுத்த நீர்க்கடல் சூழ்ந்திருக்கும். அவைகள் மேல் எழுந்து கொந்தளிக்கும். அந்த சுத்த நீர்க் கடலைச் சூழ்ந்து தேவலோகம் இருக்கும். 1276

பொன்னுலகமாகிய தேவலோகம் பத்துக் கோடி யோசனை அளவு டையதாகும். தேவர்கள் வாழும் அந்தப் பொன்னுலகத்துக்கு அப்பால் உள்ளதையும் நாம் கூறுவோம். 1277

இவ்வாறு உரைத்த சுகர் பரீட்சித்தை நோக்கி, "மல்யுத்தத்துக்கு ஏற்ற வலிவுள்ள தோள் உடைய மன்னனே! விற் புருவங்கள் உடைய தேவலோகப் பெண்களும் தேவர்களும் கூடி விளையாடும் பொன்னுலகுக்கு மேல் வளைந்தது உலோகாலோக மலை ஆகும். இது சக்கரவாள கிரி எனப்படும்; மூன்றுலகங்களுக்கும் இது மதில் போன்றது ஆகும். 1278

அன்ன வரையின் உள்படும்பார் அதனின்நெடுக்கோடு உறும்குறுக்கு
பன்னு பஞ்சா சற்கோடி பழுதிலா ஓ சனைப்பரப்புஎன்று
உன்னி உரைப்பர் அவ்வரையின்ள ஒளியில் புறமாம் இடமனைத்தும்
மன்னும் பருதி கதிர்உலவா உலகம் எனவே வழங்குவர்ஆல். 1279

கழைசேர் நேமி வரையதனை
கருப்போ தகமாம் கடல்சூழும்
அழிநீர் அலையா ழியைவளைக்கும்
அந்த காரக் குழாம் அதனை
பழிதீர்அண்டச் சுவர்பொதியும்
பதினா லுஉலகும் பொதிபசும்பொன்
எழில்சேர் அண்டச் சுவர்அதனை
இலங்கும் அதனின் பதின்மடங்காய். 1280

குலவு தெளிநீர் சூழும்அதைக்
குளிர்தண் புனலில் பதின்மடங்காய்
இலகும் அழல்சூழ்ந்து இருக்கும் அதை
இலங்கும் மழலின் பதின்மடங்காய்
நிலவு வளிசூழ்ந்து உளரும் அதை
நிகரில் வளியின் பதின்மடங்காய்
அலகில் புகழ்சேர் வான்சூழும்
அதனை அதற்குப் பதின்மடங்காய். 1281

பொருந்து புகழ்சேர் அகங்காரம் பொதியும் அதனைப் பதின்மடங்காய்
விரிந்து மகான்சூழ்ந்து இருக்கும்அதை விளம்பும் அளவு கடந்ததாய்
பரிந்து பருதி சூழும் அதில் பலஆம் அண்டம் பதிந்திருக்கும்
திருந்து மலரின் மணம் போல திருமால் எங்கும் வதிந்திடுமே. 1282

கூன்நத்து ஆர்கடல் சூழும்இத் தீவொடும் குறித்த
ஏனைத் தீவும்மற் றுள்ளவும் இசைத்தனம் இன்னும்
வானத் தேஉயர் பருதிவா னவன்வரு வளனும்
தேனைச் சேர்தொடை அரசகேள்! எனமுனி தெரிக்கும். 1283

அந்த சக்கரவாள கிரியின் உள்ளே அடங்கும் பூமியானது ஐம்பது கோடி யோசனை அளவுள்ளது. அதைப் பற்றி இன்னும் கூறினால், அது ஒளியில்லாத பகுதி ஆகும். அவ்விடங்கள் எங்கும் சூரியன் சஞ்சரிக்காததால், வெளியிடம் முழுவதும் இருளாகவே இருக்கும். 1279

மூங்கில் நிறைந்த சக்கர வாள கிரியைக் கருங்கடல் சூழ்ந்திருக்கும். இருள்கூட்டம் அக்கடலை வளைத்திருக்கும். அந்த இருட்கூட்டத்தை அண்டச்சுவர் சூழ்ந்திருக்கும். பதினான்கு உலகிலும் பரவும் பசும்பொன் ஒத்த அண்டச் சுவரை அதிற் பத்து மடங்காக, தெளிந்த நீர் சூழும். 1280

தெளிந்த நீர் சூழ்ந்த பகுதியைப் போல் பத்து மடங்காக, நெருப்புச் சூழும். அந்த நெருப்பை விடவும் பத்து மடங்காகக் காற்றுச் சூழ்ந்திருக்கும். அக்காற்றுக்குப் பத்து மடங்காக, எல்லையற்ற புகழ் உடைய ஆகாயம் சூழ்ந்திருக்கும். 1281

அந்த ஆகாயத்தைச் சூழ்ந்து பத்து மடங்காக அகங்காரம் சூழும். அதனினும் பத்து மடங்காக மகான் தத்துவம் சூழும். அந்த மகான் தத்துவத்தைச் சுற்றிச் சூரிய அண்டங்கள் பல சூழ்ந்திருப்பன. இவற்றுள் எங்கும் பூவின் மணம் பரவுதல் போலத் திருமால் தங்கி இருப்பார். 1282

இவ்வாறு உரைத்த சுகர், பரீட்சித்திடம், "தேன் சொட்டும் மாலை அணிந்த மன்னனே; வளைந்த சங்குகள் நிறைந்த கடல் சூழும் தீவுகளையும் கடல்களையும் பற்றிக் கூறினேன். இனி மேலே, வானில் பவனி வரும் சூரியனின் மண்டலம் பற்றிக் கூறுகிறேன். கேட்பாயாக" என்று கூறினார். 1283

5. சூரிய மண்டலம்

பாரின் மேல்உறு வானமும் பாரினது அளவாய்
சேரும் ஓரிரு பாதியை ஒன்றுஎனச் செறித்த
ஏரின் மேம்படும் அண்டம்இவ் அண்டத்தின் நடுவே
ஆரும் ஆயிரம் கதிரவன் சூழ்வரும் அன்றே. 1284

இடம்விரிந் திடும்இப் பார்மேல்
இலக்கம்யோ சனையின் அப்பால்
வடபெரும் சிலையை நாளும்
வலம்வரு பருதி என்னும்
சுடரின்மண் டிலமாம் என்பர்
சொல்லும்மண் டிலத்தின் கீழே
அடல்மிகுந் துஉறும்இராகு
மண்டிலம் ஆம் என் பார்ஆல். 1285

மதியொடும் இரவி தன்னை
வழங்கும்முற் பகைமை பற்றி
துதியுறும் இராகு என்பான்
சொல்லும் ஈருவாக்கள் சேரின்
அதிர்திரை ஞால ஏத்த
அவ்வழி மறைத்து மாயன்
கதிர்உமிழ் ஆழி ஏவக்
காண்டலும் அகலும் மாதோ. 1286

மொழிந்தமண் டிலத்தி னுக்கு முறைமுறை அயுதம் என்னும்
தழைந்தயோ சனைகீ ழாக சார்ந்திடும் சித்தர் விஞ்சை
விழைந்தவர் இயக்கர் சொல்லும் வெவ்விய அரக்கர் பூதம்
வழங்கிய பிரேதம் கூளி மழைபுள் சேர்இடங்க ளாமால். 1287

பொய்அறு சமத்தி னோடு பொருந்துமா ரோகம் நன்மை
செய்அவரோகம் என்னும் திருந்துமுக் கதிசெய் வெய்யோன்
மைஅறு கதிர்க்கு ழாத்தால் மருவிய கிரகத் தோடும்
ஐயம்இல் நாள்களுக்கும் அணிசுடர் வழங்கு மன்றே. 1288

5. சூரிய மண்டலம்

பாரின் மேலே உள்ள வானத்தின் பரப்பு பூமியின் அளவே ஆகும். உலகம் ஒரு பாதியும் வானம் மறு பாதியுமாய்ச் சேர்ந்து அண்டம் எனப்படும். இந்த அண்டத்தின் நடுவே, ஆயிரம் கதிர்களை உடைய சூரியன் வலம் வருவான். 1284

இடம் அகன்ற இப்பூமியிலிருந்து ஒரு லட்சம் யோசனை தூரத்துக்கப்பால் சூரியன் வடதிசையில் உள்ள மேருமலையைச் சுற்றுகிறான். அதற்கு மேலே உள்ளது நக்ஷத்திர மண்டலம் ஆகும். சூரிய மண்டலத்துக் கீழே மிகுந்த வலிமை உடைய ராகு மண்டலம் உள்ளது. 1285

இராகு என்பவன் தன் முற்பகைமை காரணமாய் சந்திரனையும் சூரியனையும் அமாவாசை, பௌர்ணமி தினங்களில் மறைப்பான். திருமாலின் சக்கராயுதம் ஏவப்பட்டு வருவதைக் கண்டதும் ராகு மறைப்பதை விட்டு அகலுவான். அப்பொழுது பொங்கும் அலை கடல் சூழ்ந்த உலகோர் மாயவனைத் துதித்து வழிபடுவார்கள். 1286

மேற்கூறப்பட்ட இராகு மண்டலத்துக் கீழே பதினாயிரம் யோசனை தூர அளவில் உள்ள மண்டலத்தில் சித்தர், இயக்கர், பிரேதம், பூதம் முதலியவர் சேர்ந்துள்ளனர். 1287

பொய்யற்ற சமகதி, மேல் ஏறும் கதி, கீழ் இறங்கும் கதி என்னும் மூவகை நிலைகளில் சூரியன் தன் கதிர்க்கூட்டத்தால் கிரஹத்துடன் பொருந்தி, நட்சத்திரங்களுக்கு ஒளிச் சுடரைத் தருகிறான். இந்த நட்சத்திரங்களாலேயே நாங்கள் குறிப்பிடப்படுகின்றன. 1288

அலகுஇலாப் புகழ்சால் வெய்யோன்
ஆயிரம் கதிர்ப்பி ழம்பில்
சிலசில மேலே நோக்க
சிலசில கீழே நோக்கி
நிலமிசை மழையி னோடு
நெடும்பனி மிகஉண் டாக்கி
வலிஉறும் எவர்க்கும் தாபம்
வழங்கும் என்று இயம்பு வாரே. 1289

சித்திரை மதியி னோடு
சிறந்த ஐப் பசியாம் திங்கள்
ஒத்திடும் பொழுதுஇ ரண்டும்
உரைபெறு கடிகை பின்னர்
வைத்தவை காசி ஆதி
மருவிய திங்கள் ஐந்தும்
வித்தக ! பகலில் கன்னல்
விரிந்திடும் நிசியில் குன்றி. 1290

விருச்சிகம் ஆதி யாக
விளம்பிய திங்கள் ஐந்தும்
உரைத்திடு பகலில் கன்னல்
உறுமுறை குறைந்தே அல்லில்
தரைத்தலம் தோறும் சோதிச்
சக்கரத்து அடிதான் மெல்ல
திருத்தகச் சுழல ஆங்கு
சேர்நுனி விரைந்து செல்லும். 1291

படிபுகழ் நாள்கள் தம்மில்
பகர்ந்தசக் கரத்தில் பாதி
இடன்என மருவப் பாதி
வலன்என இருக்கு மாற்றால்
வடதிசை அயனம் என்ன
வருகுவன் மகரம் ஆதி
நடைபெறு மதி ஓர் ஆறில்
நானிலம் புகழ வெய்யோன். 1292

அளவற்ற புகழுடைய சூரியன் தன் ஆயிரம் கதிர்களை வீசும் பொழுது சில கதிர்கள் மேல் நோக்கியும் சில கதிர்கள் கீழ் நோக்கியும் செல்வன. அவற்றால் மழையையும் பனியையும் அவை உண்டாக்கும். இதனால் வலிமையுடைய மனிதர்களுக்குத் தாபம் உண்டாகிறது. 1289

சித்திரை, ஐப்பசி ஆகிய இரு மாதங்களில் பகல் நேரமும் இரவும் நாழிகைகளில் சமமாகவே இருக்கும். வைகாசி முதல் புரட்டாசி முடிய ஐந்து மாதங்களில் பகல்நேர நாழிகை அதிகமாகவும் இரவு நேரம் குறைந்தும் காணப்படும். 1290

கார்த்திகை தொடங்கி, ஐந்து மாதங்களில், பகல் நேர நாழிகை குறைந்தும் இரவு நேரம் அதிகமாகவும் இருக்கும். இதன் காரணம் சூரிய மண்டலத்தின் அடிப்பாகம் மெதுவாகவும், நுனிப் பாகமாகிய மேல் பகுதி விரைவாகவும் செல்வதாலேயே ஆகும். 1291

நாள்களைப் பற்றிக் கூறும் பொழுது அவை இரு பகுதிகளாகும். சூரிய மண்டலச் சக்கரம் இடது புறமாகச் செல்லும் காலமும் வலது புறமாகச் செல்லும் காலமும் தம்முள் சமமாக ஆறு மாதங்கள் இருக்கும். இதில், தை மாதம் முதல் ஆறு மாதம் சூரியன் செல்லும் பருவம் உத்தராயனம் எனப்படும். 1292

தென்திசை அயனம் என்னச்
சேர்குவன் கடகம் ஆதி
ஒன்றிய மதி ஓர் ஆறின்
உறுமுறை உரைக்கும் வெய்யோன்
வன்திறல் பருதி மேவ
மானதோத் தரம்என்று ஓதும்
வென்றிகெரள் மலையின் மீது
விளங்குநால் பதிநால் திக்கில். 1293

கீழ்த்திசை அமரர் கோமான்
கெழுமிய தேவ தானி
வாழ்த்திட மருவும் தெற்கில்
மறலிவாழ் நகர்ஒன் றுஉண்டால்
தாழ்த்தலின் மேற்கு மேவும்
தமனியத் தகடு பொற்கா
ஊழ்த்துஅகத் தொளிரும் நிம்மு
லோசனை உரைக்கின் மாதோ. 1294

வடதிசை தனதன் மேவி வளர்விபா வரிஎன்று ஓதும்
நெடுநகர் பொருந்தும் இங்ஙன் நிகழ்த்திய நகர்கள் தம்மின்
சுடரவன் உதிப்ப ஒன்றில் சொல்முறை நகரம் மூன்றும்
படுநிசி நடுநல் மாலை பழுதுஇலா உச்சி ஆம்ஆல். 1295

கருதுமூ வைந்துஎன்று ஓதும் கன்னலில் கதிர்செய் வெய்யோன்
ஒருநக ரிருந்து மற்றோர் நகர்உறின்இரண்டு கோடி
விரவுமுப் பான்ஏழ் முக்கால் விளம்பிய இலக்க மான
புரையில்ஓ சனையாம் தூரம் பொருந்துறக் கழியும் அன்றே. 1296

பானுவா னவனோர் நாளிற்
பழுதிலா வொன்பான் கோடி
ஊனமி லாத வெண்ணோ
டுற்றிடு மைம்பத் தொன்றே
ஆனசீ ரிலக்க மென்ன
வறைந்தயோ சனையும் செல்வான்
மானதோத் தரமென் றோது
மலைமிசை வளைந்து மன்னோ. 1297

கடக மாதமான ஆடியிலிருந்து ஆறு மாதம் சூரியன் செல்லும் பருவம் தக்ஷிணாயனம் என அறிஞர்கள் கூறுவார்கள். சூரியனின் சக்கரம் செல்லும் மான தோத்திரம் என்றும் மலையில் நான்கு திசைகளிலும் நான்கு பதிகள் உள்ளன. 1293

கீழ்த்திசையில் இந்திரன் இருக்கும் தேவதானி நகரம் உள்ளது. தென்திசையில்யமன் இருக்கும் ஸம்யமனி நகரம் உள்ளது. மேற்குத் திசையில் பொன்தகடுகள் வேயப்பட்டது போன்ற கற்பகச் சோலை உள்ள நிம்முலோசனம் என்னும் நகரம் உள்ளது. 1294

வடதிசையில் குபேரனின் விபாவரி என்னும் நகரம் உள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட நகரங்களில் ஒன்றில் சூரியன் உதித்ததும் மற்ற மூன்று நகரங்களிலும் முறையே, இரவு, மாலை, நடுப்பகல் ஏற்படும். 1295

சூரியன் மேற்குறித்த நான்கு நகரங்களில் ஒன்றிலிருந்து மற்றொரு நகருக்குச் செல்லப் பதினைந்து நாழிகைப் பொழுது ஆகும். அந்த நேரத்தில் அவன் இரண்டு கோடியே முப்பத்தேழு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் யோசனை தூரம் கடக்கிறான். 1296

சூரியன் ஒரு நாளில் மானதோத்திரம் என்னும் மலையில் வளைந்து சுற்றும் தூரம் ஒன்பது கோடியே ஐம்பத்தொன்று லக்ஷம் யோசனை அளவு ஆகும். 1297

வெய்யவ னுதயங் காணும்
வீறுயர் நகர்க்கு நேரா
மையறு திக்கின் மேவ
மாநகர்கு இருள்செய் மாலை
பையவந் துறுத லாகும்
பருதிதான் மறைவ தில்லை
செய்யபொன் மேரு வென்னும்
சிலைநிழல் பரப்ப மாதோ. 1298

செப்பிய நிசியில் வெய்யோன்
சேர்ந்திடும் ஒளிசெந் தீயின்
தப்பற விருக்கும் செந்தீச்
சார்ந்திடு ஒளியு மெல்லின்
ஒப்பறு மிரவி தன்னி
னுறும்பக லொளியு மெல்லில்
அப்புவி னிருக்கு மப்பி
னல்லிருள் பகலும் வைக. 1299

அணிசெயு நாபி மூன்றோடு ஆறெனு நேமி ஈராறு
இணையறு மார மாகி இயன்றவாண் டுருவ மான
தணிவிலோ ராழி வேதச் சந்தசோ ரேழு ஏழும்
பணிசெயப் பூண்ட பச்சைப் பரிதின கரன்றேர்க் கன்றே. 1300

பேருறு செக்கே போலப் பிறங்குவான் ஓங்கு செம்பொன்
மேருவி னுச்சி மீதே விளங்கவோர் தலையைக் கோத்துச்
சேருமோர் தலையோ ராழி செறிந்ததோ ரச்சின் நீளம்
எருறு நூற்றைம் பத்தே ழரையெனும் இலக்க மாமே. 1301

மன்னும் அவ்வொற்றை ஆழி
மானதோத் தரத்தின் மேலாய்த்
துன்னிய வானின் மீதே
சுழன்றுறும் சுடரோன் தேர்க்குப்
பன்னிய பாகன் என்னும்
பழுதுஇலா அருணன் நாளும்
அன்னதேர் ஏறி வெய்யோற்கு
அபிமுக மாக செல்லும். 1302

சூரியன் உதிக்கும் நகருக்கு எதிராக உள்ள நகரில், மேருவின் நிழல் விழும்பொழுது அங்கு மாலைப் பொழுது ஏற்படுகிறது. அவன் ஒரு பொழுவதும் நகருவது இல்லை. மலையின் நிழல்படாத இடம் பகலாகவும் நிழல்படும் இடம் இரவாகவும் உள்ளது. 1298

மேற்கூறப்பட்ட இரவில், சூரியன் ஒளி அக்னியில் புகுந்து தங்குகிறது. ஆனால் பகலிலோ அக்னியானவன் சூரியனில் புகுந்து தங்குகிறான். அதே இரவு நேரத்தில் தண்ணீரில் இருள் தங்குகிறது. பகலிலோ தண்ணீரில் ஒளி தங்குகிறது. 1299

சூரியனின் தேரில் தேர்க்குடத்தின் துவாரங்கள் மூன்று உள்ளன. அவன் தேர் நகர்வது ஓர் ஆண்டைக் குறித்தால், அதன் ஆரங்கள் பன்னிரண்டும் மாதங்களாகிய பகுதிகளைக் குறிக்கும். ஆறு நேமிகள் கொண்ட அத்தேரின் முதன்மைச் சக்கரம் ஒன்றே ஆகும். வேதத்தில் கூறப்படும் ஏழு சந்தங்களும் ஏழு குதிரைகளாக உள்ளன. இழுக்கும் குதிரைகள் பச்சை நிறம் உடையவை. 1300

மேருமலை செக்குப் போல விளங்கும். வானைத் தொடும் அளவு உயர்ந்த பொன்மயமான மேருமலையின் உச்சியில், சூரியனின் துருவ சக்கரம் பொருந்தும். அத்தேரின் அச்சின் நீளம் நூற்றைம் பத்தேழரை இலட்சம் யோசனை அளவு ஆகும். 1301

மான தோத்திரத்தின் மேல் வானிலே ஒற்றைச் சக்கரத்துடன் சுற்றி வரும் சூரியனுக்குப் பாகனாக உள்ளவன் அருணன் எனப்படுவான். அவன் எப்பொழுதும் அத்தேரை அதற்கு எதிர்ப் புறமாகவே ஓட்டுவான். 1302

ஆதபன் தேரின் ஏறி
ஆயிரம் கதிராய் என்றுஎன்று
ஓதிஅங் குட்டம் என்னும்
அளவு உறும் உருவு வாய்ந்த
மேதகு பன்னீ ரைந்தா
யிரர்என்று விளம்ப மேவும்
மாதவ முயன்ற வால
கில்லியர் வழுத்து வார்ஆல். 1303

தாமரைத் தவிசின் மேலான்
தருபுலத் தியனே ஆதி
தோம்அறு முனிவர் திங்கள்
தொறும்முறை மறையின் ஏத்தி
வாமம்ஆர் பருதித் தேரின்
வருகுவார் வடந்தொட்டு ஈர்ப்பார்
ஏமம் ஆம் முறையின் மேவி
எழிற்கிரா மணியர் மாதோ. 1304

வருகதிர்ப் பருதித் தேரை வாசுகி முதலி னோர்கள்
ஒருமதிக்கு ஒருவர் ஆகி உறுமுறை பரிப்பர் தேர்முன்
திரிகுவர் அரக்கர் என்பார் செப்புகந் திருவர் ஆயோர்
புரையறும் அமுத கீதம் புகழ்ந்தனர் பாடு வார்ஆல். 1305

தேன்இமிர் குழல்இளம் திங்கள் வாள்நுதல்
மேனகை முதலிய விளங்கு அரம்பையர்
வான்உயர் வடவரை வலங்கொடு ஏகிய
பானுவின் திருமுனம் பாடி ஆடுவார். 1306

ஆறுஅறி அரசஅவ் அருக்க னோடுஇவண்
கூறிய எழுவகைக் குழுவி னோர்களும்
வீறுஉயர் உலகுசீர் மேவ நல்முறை
மாறுஅல் மதிதொறும் வலங்கொள் வார்கள்ஆல். 1307

வாலகில்லியர் என்னும் பதினைந்தாயிரம் முனிவர்கள் ஒவ்வொருவரும் பெருவிரல் அளவே உள்ளவர்கள். அவர்கள் சூரியனின் தேரில் இருந்தபடி 'ஆயிரம் கதிர்களைப் பெற்ற சூரிய பகவானே!' என்று தோத்திரம் செய்வார்கள். 1303

தாமரையில் தோன்றிய பிரமதேவனின் புதல்வனான புலத்தியன் முதலிய குற்றமற்ற முனிவர்கள் மாதந்தோறும் வேதங்களை ஓதுவார்கள். கிராமணியார் என்னும் தேவர்கள் அழகிய அத்தேரின் வடத்தை இழுப்பார்கள். 1304

கதிர் ஒளி வீச ஓடும், சூரியனின் தேரை வாசுகி முதலானோர் மாதத்துக்கு ஒருவராகத் தாங்குவார்கள். அத்தேரின் முன்னே அரக்கர்கள் திரிவார்கள். குற்றமற்ற கந்தருவர்கள் பாடுவார்கள். 1305

வண்டு ஒலிக்கும் பூக்கள் சூடிய கூந்தலையும் சந்திரனைப் போன்ற முகத்தையும் பெற்ற மேனகை முதலிய தேவமாதர்கள் சூரியன் முன்னே ஆடிப்பாடுவார்கள். அவனுடைய தேர், வானைத் தொடும் மேருமலையை வலம் வரும். 1306

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறு அங்கங்களை உடைய அரசன் போன்ற பெருமை உடையவன் சூரியன் ஆவான். அவனைச் சுற்றி மாதந்தோறும் 'ஸப்தகணம்' எனப்படும் ஏழு வகையினர் துதி செய்தவாறு வலம் செய்வார்கள். இதனால், உலகத்தின் வளம் மேலோங்கிச் சிறப்படையும். 1307

வையகம் படைத்தல்செய் மலரின் அண்ணலும்
பொய்அறு மாயனும் புகன்முக் கண்ணனும்
ஐயசெங் கதிர்கள் ஓர் ஆயிரம்திகழ்
வெய்யவன் ஆம் என விளம்பும் நூல்களே. 1308

என்றலும் வேந்தும்அவ் எழில்கொண் மேருவை
வன்திறல் சூரியன் வலங்கொள் வான்எனின்
ஒன்றிய இராசியின் உறுவது எங்ஙனம்
நன்றுஉரை எனமுனி நவிற்றும் ஆல்அரோ. 1309

சூரியன் வலங்கொடு சுற்றும் என்றது
பேர்உறு சக்கரம் பெற்ற நற்கதி
கூரிய வேலவ கொண்ட தாம்அவன்
ஏர்உற இடன்வரவு இசைப்ப கேட்டிஆல். 1310

வலன்வர குயமகன் வளைந்த சக்கரத்து
இலங்கி அங்கு இடன்வரும் எறும்பு போலும் என
குலவிய நற்கதிக் கோள்கள் ஏழுமாம்
குலவுஇரா சியில்எதிர் உற்று மேவுமே. 1311

வெய்ய வன்கவி மால்எனும் மூவரும் விதித்த
மைஅ றும்மதி ஒன்றுஒரு ராசியின் வதிவார்
பொய்யில் திங்கள் நாள் இரண்டுடன் கால்ஒன்றில் பொருந்தும்
செய்ய வக்கிரன் ஒன்றரை மதியொன்றில் சேரும். 1312

மன்னு ராசிஒவ் வொன்றினில் மருவும் ஓர் ஆண்டு
துன்னு பேரெழில் பொன்முனம் சொல்லிய காரி
உன்னு இரண்டரை ஆண்டு உறும் ஒன்றரை ஆண்டு
பன்னு கின்றசீர் இராகுவும் கேதுவும் படரும். 1313

குற்ற மற்றசேய் முதலிய ஐந்து எனும் கோளும்
கற்றை வெங்கதிர்க் கடவுளை அருகுற கலக்கின்
பெற்று உறைந்திடும் அத்த மனப்பெயர் பேரும்
மற்றை அப்பெயர் அக்கதிர் அகன்றுறின் மாதோ. 1314

உலகைப் படைக்கும் பிரமதேவனும் பொய்யற்ற மாயனான திருமாலும் மூன்று கண்களை உடைய சிவனும், ஆயிரம் செங்கதிர்களைப் பெற்ற சூரியனாக உள்ளனர் என்று நூல்கள் கூறும். 1308

மேற்கண்டவாறு சுகமுனிவர் சூரியமண்டலம் பற்றிக் கூறியதைக் கேட்ட பரீட்சித்து அரசன் இராசி சக்கரத்தைப் பற்றிக் கேட்டான். "மேருவைச் சூரியன் வலம் வருகின்றான் என்றால், அவன் இராசிகளில் எவ்வாறு சஞ்சரிக்கிறான்? நன்றாக விளக்கி அருள்வீராக" என்று அவன் கேட்டான். முனிவரும் மேலே அது பற்றி விளக்கலானார். 1309

சுகமுனிவர் மன்னனை நோக்கி, "கூர்மையான வேல் ஏந்திய அரசனே! சூரியன் வலது புறமாக சுற்றும் என்பது, சக்கரம் போல் மண்டலாகாரமாகக் கதி பெறுவான் என்பதாகும். இதனைப் பற்றிக் கூறுகிறேன். கேட்பாயாக" என்று பேசினார். 1310

குயவன் வளைந்த சக்கரத்தில் எறும்பு இடது புறமாகப் போவது போல, பெருமை உடைய ஏழு கிரகங்களும் இராசிச் சக்கரத்தில் எதிர்ப்புறமாகப் பயணம் செய்யும். 1311

சூரியன், சுக்கிரன், புதன் மூவரும் ஒவ்வொரு ராசியிலும் ஒரொரு மாதம் தங்கிச் செல்வார்கள். பொய்யற்ற சந்திரன் இரண்டேகால் நாளில் (அதாவது நட்சத்திரங்களில்) ஒரு ராசியில் தங்கிச் செல்வான். அங்காரகன் ஆகிய செவ்வாய் ஒரு ராசியில் ஒன்றரை மாதம் தங்கிச் செல்வான். 1312

அழகு விளங்கும் குரு எனப்படும் வியாழன் ஒவ்வோர் ராசியில் ஒரு வருட காலம் தங்கிச் செல்வான். சனி பகவான் ஒரு ராசியில் இரண்டரை ஆண்டுக் காலம் தங்கிச் செல்வார். இராகு, கேது இருவரும் ஒவ்வொரு ராசியிலும் ஒன்றரை ஆண்டு தங்கிச் செல்வார்கள். 1313

குற்றமற்ற செவ்வாய் முதலான ஐந்து கிரகங்களும், கற்றையான வெங்கதிர்களை வீசும். சூரியன் அருகே வந்தால், அஸ்தமனம் அடைவர். சூரியனை விட்டு நீங்கினால் அஸ்தமனம் நீங்கும். 1314

சொன்ன ஐந்து எனும் கோள்களும் துனைவுநற் சமம்சீர்
மன்னு மந்தம் என்று உரைத்தமுக் கதியொடு மருவும்
பன்னு வக்கிரக் கதியினை பகர்ந்தவக் கிரத்தை
அன்ன செங்கதிர்க்கு அருகுமால் புகர்அடைந் துறும்ஆல். 1315

குருவும் மந்தனும் சேயும் என்று இசைத்த கோள் மூன்றும்
மருவு இராசிமுன் ஆகி ஐந்து எனவரும் இடத்தின்
பருதி சென்று உறின் வக்கிரன் சேர்ந்ததைப் பருதி
உரைசெய் ஒன்பது என்று உறுமிடத்து உற்றிடின் ஒழிக்கும். 1316

பன்னு தன்கலை தேய்ந்து உறும் வளர்ந்துறும் பக்கம்
என்இ ரண்டினில் பிதிர்களுக்கு இராப்பகல் ஆக்கி
சொன்ன திங்கள்தோ றும்பிதிர் கணத்தொடும் சுரர்க்கும்
உன்னு நல்லமுது அளிக்குபு மதிஉயிர் ஓம்பும். 1317

வெள்ளி மாமழை பொழிதர மிகவிளை விக்கும்
உள்உ வப்புறின் எழிற்புதன் காற்றைஉண் டாக்கும்
தள்ள ரும்பழி தழைத்திடச் செய்துஅரும் சனிதான்
தெள்ளு நான்மறை யோர்க்கும் நன்று அல்லன செய்யும். 1318

விரியும் நீள்கதிர் சூழும் வியாழமாம்
பொருஇ லாபுல வோர் தொழும் புங்கவன்
தெரியும் நான்மறை யோர்கள் திருஉற
உரைசெய் வானில் உலாவி ஒளிருமே. 1319

எனஇ சைத்த இருந்தவன் ஏர்செய
வனைபொ லங்கழல் மன்னனை நோக்கி ஏழ்
கனைக டல்புவி மேல்கக னத்திடை
தனிகி டந்த உலகினைச் சாற்றும்ஆல். 1320

6.மேல்உலகம்

பருதி வானவன் மண்டலம் மேல்பகர் இலக்கம்
உரைசெய் யோசனை கடந்தபின் உடுபதி உறையும்
மருவும் மண்டல மாம்இதன் மேல்வயங் குஉடுச்சேர்
பொருஇல் மண்டலம் அத்துணை இயைந்திட பொருந்தும். 1321

மேற்குறிப்பிடப் பட்ட ஐந்து கிரகங்களும் தம் பயணத்தில் விரைவு, சமம், மந்தம் என்னும் மூன்று கதிகளைப் பெறும். மேலும் அவை பின்னோக்கிச் செல்லும் வக்கிர கதியையும் பெறும். புதனும் சுக்கிரனும் சூரியன் அருகே வரும்பொழுத வக்கிர கதி பெறும். 1315

வியாழன், சனி, செவ்வாய் ஆகிய மூன்று கிரகங்களும் சூரியன் இருக்கும் இராசிக்கு முன்னாக ஐந்தாம் இடத்தில் வரும் பொழுது வக்கிர கதி அடையும். ஆயின் ஒன்பதாம் இடத்தில் வரும் பொழுது வக்கிர கதி நீங்கி விடும். 1316

சந்திரன் தேய்ந்து போகும் தேய்பிறைப் பக்ஷமும், வளரும் வளர்பிறைப் பக்ஷமும் பிதுரர்களுக்கு இரவும் பகலும் ஆகும். ஆகவே மாதந்தோறும் அமாவாசை அன்று பிதுரர்களுக்கும் தேவர்களுக்கும் தர்ப்பணம் ஆகிய கடனைச் செய்து அமுதளித்தால் சந்திரன் திருப்தி அடைந்து உயிர்களைக் காப்பாற்றுகிறான். 1317

சுக்கிரன் மழையைப் பொழிவித்து நலம் செய்பவன். புதன் மனம் உவப்புற்றால் காற்றை வீசச் செய்கிறான். சனியோ, பழியை வளரச் செய்து, அந்தணர்க்குத் தீமைகளை விளைவிப்பான். 1318

தேவர்களின் குருவான ஒப்பற்ற வியாழன் சூரியனைச் சூழ வந்து, அந்தணர்கள் செல்வத்தையும் மங்களத்தையும் அடையச் செய்வான். 1319

இவ்வாறு இராசி மண்டலப் பெருமைகளை விவரித்த சுகமுனிவர், அணிகலன் அணிந்த பரீட்சித்து மன்னனிடம், மேல் உலகுகள் பற்றிப் பேசலானார். "ஏழு கடல்கள் சூழ்ந்த இவ்வுலகுக்கு மேலே ஆகாயத்தில் விளங்கும் மேலுலகம் பற்றிக் கூறுகிறேன்" என்றார். 1320

6. மேல்உலகம்

சூரிய மண்டலத்துக்கு மேலே ஒரு லட்சம் யோசனை தூரத்தில் சந்திர மண்டலம் உள்ளது. இந்தச் சந்திர மண்டலத்துக்கும் மேல் தான் நட்சத்திர மண்டலம் உள்ளது. எல்லா விணமீன்களும் இங்கே பிரகாசிக்கும். 1321

உடுவின் மண்டலம் மேல் இரண்டு இலக்கம்யோ சனைவிட்டு
இடன்அ கன்று உறும் வெள்ளிதன் மண்டலம் இதன்மேல்
அடல்மி கும்திறல் அரச! அத் துணைகடந்து அப்பால்
சுடர்வி ரிந்திடும் மதிமகன் மண்டலம் துலங்கும். 1322

சோமன் நல்கிய புந்திமண் டலத்தின்மேல் சொற்ற
நாம யோசனை இரண்டுஇலக் கமும்நடந்து ஒழிந்ததால்
பூம கன்றிகழ் மண்டிலம் இதன்மிசை பொன்சேர்
வாம மண்டலம் அத்துணை இறந்தபின் வயங்கும். 1323

பொன்னின் மண்டலத் தினுக்குமேல் புகல்இரண்டு இலக்கம்
மன்னு கின்றயோ சனைகடந்து இருஞ்சுடர் வயங்க
துன்னு மண்டலம் சனியின்மண் டலம்எனச் சொல்வர்
இன்ன மண்டலம் மேல்வடக் காக ஏழ் முனிவர். 1324

பொருந்து மண்டலம் பத்தொடு ஒன்று இலக்கமாப் புகல
விரிந்த யோசனை கடந்தபின் விண்ணிடை விளங்கும்
இருந்த மண்டலம் மேல்பதின் மூன்று எனும் இலக்கம்
வரைந்த யோசனை கடந்தபின் துருவமண் டலமே. 1325

உலவு கின்றவான் உடுக்களை ஒளிசெயும் கிரணன்
நிலவு நல்கிர ணங்களை நிலைபெற நிறுவி
அலகுஇல் அன்புடைத் துருவன்ஆங்கு அமர்ந்து உறை பதத்தை
இலகு வண்புகழ் சேர்விண்டு பதம் என இசைப்பார். 1326

கிளந்த நல்கிர கங்களே முதல்கிளர் வான்மேல்
விளங்கு யாவையும் வாயுபா சத்தினால் வீக்கி
வளம்கொ ளும்சிஞ்சு மாரசக் கரத்தினில் வளைந்து
துலங்கு சக்கரச் சிரம்மிசை உறைகுவன் துருவன். 1327

மன்னு கின்றகுண் டலினிபோல் வளைந்துவால் கீழாய்
துன்னு சிஞ்சுமா ரத்துஅவ யவம்தொறும் சூழ்ந்து
மின்னு கின்றநாள் விதிமுதல் விண்ணவர் தருமம்
பன்னு கின்ற ஏழ் முனிவரர் உறைகுவர் பரிவால். 1328

நட்சத்திர மண்டலத்துக்கு இரண்டு லட்சம் யோசனை தூரம் கடந்தால் சுக்கிர மண்டலம் காணப்படும். வலிமை மிகுந்த அரசனே! இந்த சுக்கிர மண்டலத்துக்கு அப்பால், ஒளி மிகுந்த சந்திரனின் புதல்வனாகிய புதனின் மண்டலம் உள்ளது. 1322

சந்திர புத்திரன் ஆகிய புதனின் மண்டலத்துக்கு மேலே இரண்டு லட்சம் யோசனை தூரம் கடந்தால் பூமாதேவி புதல்வன் ஆன செவ்வாய் மண்டலம் உள்ளது. அதற்கும் மேலே, அழகு மிகுந்த வியாழ மண்டலம் உள்ளது. 1323

குருபகவானின் மண்டலத்துக்கு மேலே இரண்டு லட்சம் யோசனை தூரம் சென்றால், சனி மண்டலம் காணப்படும். இச்சனி மண்டலத்துக்குமேல் வடக்காக, ஸப்தரிஷி மண்டலம் உள்ளது. 1324

ஸப்தரிஷி மண்டலத்தைத் தாண்டிப் பதினொரு லட்சம் யோசனை தூரத்தில், ஆகாய மண்டலம் உள்ளது. இதற்கும் மேலே பதின்மூன்று லட்சம் யோசனை கடந்தால், துருவ மண்டலம் தென்படும். 1325

துருவன் அந்த மண்டலத்தில் ஒளி மயமாய் இருப்பதால், வானத்து நட்சத்திரங்களை நிலை நிறுத்தி, அவற்றின் கிரணங்களை ஒளி வீசச் செய்கிறார். அளவற்ற அன்புடைய துருவன் அம் மண்டலத்தில் இருப்பதால், அது விஷ்ணுபதம் என்று அழைக்கப்படுகிறது. 1326

கிரகங்கள் தொடக்கமாக வானத்தில் விளங்கும் மற்றெல்லாவற்றையும் வாயு பகவான் தன் பாசக் கயிற்றால் பிணைத்திருக்கிறார். இப்படி வாயுவால் கட்டப்பட்ட சக்கரம் முதலை வடிவத்தில் இருப்பதாகும். இதனைச் சிம்சுமார சக்கரம் என்பார். இதன் உச்சியில் துருவன் இருக்கிறார். 1327

வளைந்த பாம்பு வடிவத்தில் அமைந்த சிம்சுமார சக்கரத்தின் அவயவங்களில், நட்சத்திரங்கள் தொடங்கி ஸப்தரிஷிகள் வரை உள்ளவர்கள் தங்குவார்கள். 1328

மாலை யேநிகர்த் திடும்என வயங்குஎழில் துளவ
மாலை யேஅணி மார்புடை மால்உரு என்ன
மாலை நீக்கினர் புகழ்சிஞ்சு மாரத்தை வணங்கி
மாலை யாம்பொழுது ஏத்துவர் மருவுவர் அறனே. 1329

அவனி மேல் திகழ் ஆதவன் மண்டலத்து அளவும்
புவரு லோகம் என்று இயம்புவர் புகன்றமண் டலம்மேல்
எவரும் ஏத்திட துருவன்வாழ் எழிற்பதம் காறும்
கவிஞர் தாம்சுவ லோகம்என் றுஉரைசெய்வர் கருதின். 1330

துருவன் வாழ்தரு பதத்தின்மேல் துகள்அற துலங்கு
மருவு சீர்மகா லோகம்இவ் உலகின்மேல் வதியும்
பொருஇ லாசன லோகம்அங்கு அதன்மிசைப் பொருந்தும்
தரும யோகியர் சார்ந்து உறை தருதவ லோகம். 1331

கண்அ கன்றஇவ் உலகின்மேல் கவின்செய துலங்கும்
பண்அ மைந்தசீர் உலகினை முச்சகம் படைத்த
தண்ந றும்கம லத்தவி சுஉகந்தவன் தயங்கும்
எண்ணி றந்தசீர்ச் சத்திய லோகம் என்று இசைப்பார். 1332

என்று கூறிஇவ் உலகெலாம் இறையவர் வழுத்தும்
மன்றல் ஆர்பசும் துளவினான் உருஎன வழங்கி
வென்றி வேலவ கீழுலகு ஏழையும் விளங்க
நன்று கூறுதும் கேள்என சுகமுனி நவிற்றும். 1333

7. கீழ்உலகம்

அணிதிகழ் அவனி யின்கீழ் அதலம்நல் விதலம் நாக
மணிதிகழ் சுதலம் வண்மை மருவிய தலாத லம்தான்
இணைஅறு மகாத லம்சீர் இலகிய ரசாத லம்சேர்
பணிதிகழ் பாத லம்பேர் பகர்உலகு ஏழு உண்டு அன்றே. 1334

மாலை நேரத்தில் இந்த சிம்சுமார சக்கரம் ஆகிய துருவ மண்டலத்தைப் பார்த்து வணங்குபவர், திருத்துழாய் மாலை சூடிய மேகநிறத் திருமாலை வணங்கும் பலனைப் பெறுவார்கள். அதனால் மயக்கமாகிய அறிவின்மை நீங்கி, அவர்கள் தர்ம மார்க்கத்தையே தழுவுவார்கள். 1329

பூமிக்கு மேலே, சூரிய மண்டலம் வரை உள்ள இடத்தை நூலோர், புவருலகம் என்று அழைப்பார்கள். புவருலகத்தின் மேல் துருவ மண்டலம் வரை உள்ள இடத்தை, ஸுவர் உலகம் என்பார்கள். 1330

துருவ மண்டலத்துக்கு மேலே உள்ள பகுதி மகர் உலகம் என அழைக்கப்படுகிறது. மகர் உலகத்துக்கு அப்பால் உள்ள இடம் அனைத்தும் ஒப்பற்ற ஜனலோகம் எனப்படும். இந்த ஜன உலகத்துக்கு அப்பால் உள்ள இடம் தவருலகம் எனக் கூறப்படும். இந்தத் தவலோகத்தில் தருமவழி சார்ந்த யோகிகள் நிலை பெற்றுள்ளார்கள். 1331

இடம் அகன்று அழகுடன் கூடிய மேற்கூறப்பட்ட ஆறு உலகங்களுக்கும் அப்பால் உள்ள இடமே ஸத்திய உலகம் என்றழைக்கப்படும். சீர்மையும் அழகும் பொருந்திய மூவுலகங்களையும் படைப்பவனும், தாமரைப் பூவையே தன் ஆசனமாகக் கொண்டவனும் ஆகிய பிரமதேவன் இந்த சத்திய லோகத்தில் தங்கி உள்ளார். 1332

இப்படிக் கூறப்பட்ட ஏழுலகங்களும் பச்சைத் திருத்துழாய் மாலை அணிந்த திருமாலின் இருப்பிடமே ஆகும். இந்த உலகங்கள் யாவற்றிலும் அவனே தங்கி, நியமித்துக் காத்து வருகிறான். 1333

மேற்கண்டவாறு மேலுலக வர்ணனை கூறிய சுகமுனிவர் பரீட்சித்தை நோக்கி "வெற்றி தரும் வேலேந்திய மன்னவனே! இனிமேல் நான் உனக்குக் கீழுலகங்கள் ஏழினைப் பற்றியும் விவரித்துக் கூறுகிறேன் கேட்பாயாக" என்றுரைத்தார்.

7. கீழுலகங்கள்

அழகான இந்தப் பூவுலகின் கீழே, அதலம், விதலம், நாகமணிகள் ஒளி வீசும் சுதலம், கொடைத்தன்மை கூடிய தலாதலம், ஒப்பற்ற மகாதலம், சீர்மை விளங்கும் ரசாதலம், பாம்புகள் வாழும் பாதாலம் ஆகிய ஏழுலகங்கள் உள்ளன. 1334

சாற்றிய உலகம் ஏழும் தயங்கிட ஒன்றுக்கு ஒன்று ஆங்கு
ஏற்றிடும் அயுதம் என்றே இயம்பியோ சனைகீழ் கீழா
தோற்றிடும் அகலம் கீழ்கீழ் சொன்முறை அஃகி மேவும்
மாற்றரு வளம்அவ் வான நாட்டினும் மல்கும் அன்றே. 1335

தழைவுஉறு பொழிலும் புள்ளும்
தயங்கிய உறையும் மாங்கு
விழைவுஉறு பகல்ஈது என்று
மேவிய இரவு ஈது என்றும்
மொழிவதுஅவ் உலகுக்கு இல்லை
மொய்பெறாது இருளைச் சீக்கும்
புழைஉறு எயிற்றுப் பேழ்வாய்
புயங்கநன் மணிகள் அம்மா. 1336

தேனினம் முரலும் கூந்தல் சிதர்அரி மழைக்கண் செவ்வாய்
பால்நலம் கடந்த தீஞ்சொல் பணைமுலை மகளி ரோடும்
தானவர் அரக்கர் நாகர் சாற்றுமூ வகைஉள் ளோரும்
ஊனமில் லாதஇவ் ஏழ் உலகினும் உறைவர் மாதோ. 1337

விரிதலை அரவம் மேவும்
விதலத்தின் நாட்டுக்கு ஈசன்
புரிகுழல் உமையாள் கொங்கை
புல்லினன் பொலியும் அன்னோன்
அரியவீ ரியம்தான் ஆங்கோர்
ஆடக நதியாய் ஓடும்
கரையின்மீப் புலர்ந்த சேறும்
காஞ்சனம் ஆக மாதோ. 1338

மனுமுதல் ஆயி னோரும் மாயினும் மாய்வு உறாநல்
வினையுறு புகழி னோடு விளங்குமா வலியென்று ஓதும்
புனைகழல் மேலோன் இன்னும் புகன்றிடும் சுதலம் தன்னின்
கனைகடல் துயில்மால் வாயில் காப்பஆங்கு இருக்கின் றான்ஆல்.
1339

மேற்கூறப்பட்ட ஏழுலகங்களும் ஒன்றிற்கொன்று பதினாயிரம் யோசனை தூரம் இடைவெளி உள்ளதாய்க் கீழ் நோக்கி அமைந்துள்ளன. அவற்றின் அகலங்கள் கீழ் நோக்கிச் செல்லுங்கால் குறைந்து காணப்படும். இந்த ஏழுலகங்களிலும் எல்லா வளங்களும் வானுலகு போலவே நிறைந்துள்ளன. 1335

அங்கே தழைத்த மரங்கள் நிறைந்த சோலைகள் உள்ளன; பறவைக் கூட்டங்கள் வாழ்கின்றன. என்றாலும், இரவு பகல் என்று கூறப்படும் வேறுபட்ட பொழுதுகள் அங்கில்லை. பொந்துகள் போன்ற வாயில், பற்களுடன் கூடிய பாம்புகள் தங்கள் மணிகளின் ஒளியால் எல்லா இடங்களிலும் இருளை விரட்டும். 1336

அசுரர், அரக்கர், நாகர் ஆகிய மூன்று இனத்தவர்களும் தத்தம் மனைவிமார்களுடன் இவ்வுலகங்களில் வாழ்கிறார்கள். இங்குள்ள மாதர்கள் வண்டுகள் ரீங்காரம் செய்யும் பூக்கள் சூடிய கூந்தல் உடையவர்கள்; செவ்வரி படர்ந்த, மேகம் போன்ற கண்களையும் சிவந்த உதடுகளையும் பெற்றவர்கள். பாலின் சுவையை வெல்லும் இனிய பேச்சும், பருத்து வளர்ந்த முலைகளும் உடையவர்கள் இம் மாதர்கள் ஆவார். 1337

விரிந்த தலையில் பாம்பைச் சூடியவனும், உமாதேவியைத் தன் உடலில் மனைவியாகப் பெற்றவனும் ஆகிய சிவபெருமான், விதல நாட்டுக்கு இறைவன் ஆவான். அவன் அருளால், அங்குப் பொன் நதி ஒன்று ஓடுகிறது. அவ்வாற்றின் கரையின் மீது உலர்ந்த சேறும் தங்கமாய் மாறிவிடும். 1338

மனுமுதலிய மன்னர்கள் மறைந்தாலும், இறப்பே இல்லாமல், மிகுந்த புகழுடன் வாழும் மஹாபலிச் சக்கரவர்த்தி சுதல உலகத்தில் இருப்பவர் ஆவார். வீரக்கழல் அணிந்த அந்த மேலோன் ஆகிய மஹாபலியின் சுதல உலகில் பாற்கடலில் பள்ளி கொண்ட திருமாலே வாயிற் காப்போனாக உள்ளார். 1339

பேசுமா இருநூற் றைந்துஎண்
பெறுபெரும் தலையர் ஆய
வாசுகி ஆதி நாகர்
வதிந்தபா தலத்தின் கீழா
ஒசனை பலபோம் பின்னர்
உற்றுஒளி பொதுளும் ஆங்கு
தேசுறு சேடன் என்போன்
சேர்ந்துஉலகு அளிப்பான் மன்னோ. 1340

ஆயிரம் பகுவாய் முழைஞ்சுகொப் புளிக்கும்
ஆழற் பிழம்பினும் சேந்து
காயும்வெம் சினக்கண் கனலினும் காலக்
கடையினில் உலகங்கள் யாவும்
தீயெழக் கனற்றி யாவையும் ஒழிய
நிற்றலால் சேடன்என்று ஒருபேர்
மேயசெஞ் சுடிகைப் பஃறலை அநந்தன்
மெய்த்தவர் வழுத்தவீற் றிருக்கும். 1341

ஊழிவாய் உலகம் முழுவதும் முருக்கும்
உருத்திர மூர்த்தியாய் விளங்கும்
பாழிவாய்ச் சேடன் செழுமணிச் சூட்டு
பணஅடவிப் பரப்பிடை பரவை
ஆழிசூழ் உலகு ஓர் அணுஎன தாங்கும்
என்னலும் முழுவதும் அறைந்தாய்
தாழ்அழல் நரகம் எவ்விடத் தனகொல்
சாற்றுஎன மறையவன் சாற்றும். 1342

8. நரகஇயல்

துன்பம் உற்றுஅறம் துன்னலர் தாழ்தரும்
கொன்ப முத்த நிரயம் குறிக்குறின்
மின்ப முத்தவேல் வேந்த உலகின்கீழ்
தென்பு லத்தில் செறியும் அது என்பவே. 1343

பாதாள உலகில், ஆயிரம் தலைகள் பெற்ற வாசுகி முதலிய நாகர்கள் வாழ்கிறார்கள். இப் பாதளத்தின் அடியிலே தான், பலபல யோசனை தூரங்களுக்குக் கீழே ஆதிசேடன் வாழ்கிறான். ஒளிமயமாய் விளங்கும் அந்த ஆதி சேடனே, அனைத்தையும் தன் தலையில் தாங்குகிறான். 1340

இந்த ஆதிசேடன், குகை போன்றதும் பிளவுபட்டதுமான ஆயிரம் வாய்களுடையவன்; அவற்றால் கொப்புளிக்கும் நெருப்பை அள்ளி வீசுபவன். தீப்பொறி பறக்கக் கண்களால் சீறுபவன். இத்தகைய வலிமை உடைய பெருமான், உலகங்களை எல்லாம் நெருப்புப் பிழம்புகள் அழிக்கும் ஊழிக் காலத்திலும், தான் மட்டும் அழியாமல் திருமாலுடன் இருப்பதால், ஆதிசேடன் எனப் பெயர் பெற்றான். சேடன் என்றால் மீதம் உள்ளவன் எனப் பொருள் ஆகும். சிவந்த மணிகள் விளங்கும் பல தலைகளை உடைய அனந்தன் என்று முனிவர்கள் துதித்து வணங்குவர். 1341

ஊழிக் காலத்தில், உலகங்கள் எல்லாவற்றையும் விழுங்கும் உருத்திர மூர்த்தி போல ஆதிசேஷன் உள்ளான். பெரிய வாயையும் மணிகள் விளங்கும் உச்சிகளையும் பெற்ற ஆதிசேடனின் படங்கள் காடுகள் போல் அகன்ற பரப்புடையன. ஏழு கடல்கள் சூழ்ந்த இவ்வுலகம் எல்லாம் சேர்த்தால், அவ்வகன்ற பாம்புப் படத்தின் மேல், ஓர் அணு போலக் குறுகி இருக்கும். இவ்வாறு தன்தலையில் ஆதிசேடன் உலகங்களைத் தாங்குகிறான். 1342

மேற்கண்டவாறு சுகமுனிவர் கூறி முடித்ததும் பரீட்சித்து நெருப்புப் போலத் துன்புறுத்தும் . தாழ்ந்த நரக உலகு பற்றிக் கூறுமாறு கேட்டான். சுகரும் அந்நரக உலகம் பற்றி விவரிக்கலானார்.

8. நரக உலகம்

'மின்னல் போல் ஒளி விடும் வேல் ஏந்திய மன்னனே!' என்று பரீட்சித்தை அழைத்த சுகர், நரக உலகின் தன்மைகளைப் பின்வருமாறு எடுத்துரைத்தார்.

தரும வழியில் செல்லாதவர் இறந்த பின்னர் சேரும் இடம் துன்பத் தைத் தரும் நரகம் என்பதாகும். இது தெற்குத் திசையில் உள்ளது. 1343

பழிப டைத்த பலநர கங்களின்
அழிவு இலாத்துயர் ஆரும் அமர்வுற
மொழியும் தாமிச் சிரம்முத லாகநால்
எழுவ கைத்துஇறை யாகும் நரகமே. 1344

நெஞ்சம் வைத்து நிதிமுத லாகவே
வஞ்சம் அற்ற பிறர்பொருள் வவ்விேனோர்
நஞ்சம் ஒத்த நமன்படர் தள்ள ஓர்
தஞ்சம் அற்றதா மிச்சிரம் சார்குவார். 1345

மைந்த ரோடு மனைவியர் ஆதியோர்
சிந்தை கூர்துயர் சேர்ந்திடச் செய்தவர்
வெந்து நாப்புனல் இன்றி மெலியுமாறு
அந்த தாமிச் சிரத்தை அடைவர்ஆல். 1346

வாடி மாழ்க உயிர்கள் வருத்துவோர்
கோடி காலம் உளங்கொதித் தேஅழ
ஓடி ஓடி நமன்தமர் உற்றுஉடல்
நாடி மோத ரவுரவம் நண்ணுவார். 1347

நம்பி னோர்பிதா நான்மறை யோர்பசு
வெம்பி வாட மிகும் துயர் ஈட்டுவோர்
தும்பி போல்கருந் தூதுவர் சூழ்ந்துற
கும்பி பாக நரகம் குடிகொள்வார். 1348

மறுக்க லாதம் மறைநெறி விட்டுளோர்
வெறுக்க வந்து விழிஎதிர் தூதுவர்
கறுக்க யாக்கையைக் கன்னலின் துண்டு போல்
அறுக்க வீழ்வர் அசிபத் திரவனம். 1349

சிந்தி யாஅப வாதம் தெரித்துஇரும்
புந்தி யில்துயர் பூட்டுவெம் புன்மையோர்
அந்த ராய்மசக ஆதி வருத்திட
அந்த கூப அருநரகு ஆழ்வர் ஆல். 1350

பழிக்கத் தகுந்ததும் எல்லை இல்லாத துயரங்களைக் கொடுப்பதும் ஆகிய பல நரகங்களில் தாமிச்சிரம் என்பது முதலாவது ஆகும். இது முதல் நரகங்கள் இருபத்து எட்டு ஆகும். 1344

நெஞ்சத்தில் வஞ்சனையுடன் பிறர் செல்வத்தைக் கவர்ந்தவர் சேரும் நரகம் அந்த தாமிச்சிரம் எனப்படும். நஞ்சு போன்ற, யமன் வேலையாட்கள் விஞ்சகர்களைத் தள்ளும் இடம் இதுவே. 1345

மனைவி, மக்களைத் துன்புறுத்தி, சிந்தை நோகச் செய்பவர், குடிக்கத் தண்ணீர் இன்றி நாக்கு வெந்து போகும் நிலை அடைந்து, மெலிந்து அந்த தாமிச்சிர நரகத்தை அடைவார்கள். 1346

பிற உயிர்களை வருத்தி வாடச் செய்வோர், ரௌரவம் என்னும நரகத்தை அடைந்து கோடி காலம் மனம் கொதிக்கத் துயரம் அடைவார். நமனும் அவன் சுற்றத்தாரும் அங்கு இவர்களை ஓட ஓட விரட்டி உடலைத் துன்புறுத்துவார்கள். 1347

தம்மை நம்பியவர்கள், தந்தை, அந்தணர், பசு ஆகியவரைத் துன்புறுத்தி வாடச் செய்பவர்கள் இறந்தபின், யானை போன்ற கரிய யமதூதர்கள் சூழ்ந்து வரக் கும்பிபாகம் என்னும் நரகம் சென்று குடியேறுவர். 1348

மறுக்க இயலாத நன்நெறியாகிய தம் வேதவாழ்க்கையை விட்டவர்கள் இறந்த பின்னர், யமதூதர்களால் எதிர்கொள்ளப்பட்டு அசிபத்ரவனம் என்னும் நரகம் அடைவார்கள். அங்கு அவர்கள் யமதூதர்களால் கோபிக்கப்பட்டு கரும்புத் துண்டங்கள் போல் தம் உடல்கள் வெட்டப்படுவார்கள். 1349

சிந்தனை இல்லாமல், பழியைப் பிறர் மேல் ஏற்றி துன்புறுத்துபவர்கள், தம் கண்களை இழந்து குருடர்கள் ஆகிக் கொசு முதலியவை கடித்துத் துன்புறுத்த, அந்தகூபம் என்னும் நரகம் அடைவார்கள். 1350

பெருக்கும் மாமுலைப் பேதையர் ஆடவர்
செருக்கி னால்பிறர் காமுறச் சேர்வரேல்
கருக்க யாக்கையைக் காந்துஎரி சிந்துறும்
உருக்குத் தூண்தழு வும்நரகு ஒன்றுவார். 1351

அரிய நல்சவு சாதிகள் அற்றவர்
விரிம லத்தின் விளங்குஅள றுஎய்துவார்
தரும சேதுவைத் தள்ளும் அறிவிலோர்
மருவு வார்வை தரணியின் மன்னனே. 1352

பத்தி இன்றி படிற்றுஒழுக் கம்நெஞ்சின்
வைத்து நன்மறி மாய்க்கும் மகத்தினோர்
முத்தி இன்றிவாய் மூக்கொடு மூச்சுஅற
பொத்தி மாய்க்கப் புகுவர் நரகமே. 1353

விள்ள ரும்பொய் விளம்பி விருப்பொடு
கள்அ ருந்தும் கசடர்தம் வாய்வயின்
ஒள்அ ழல்வைத் துஉருக்கிரும் புஊற்றிட
தள்ளு வெம்நர கத்திடை சார்வரால். 1354

அருந்தும் அன்னம் அளித்தி என்று உற்றநல்
விருந்தி னோரை விழிகொடு சுட்டவர்
பருந்து கோடி பறித்துஉணப் பார்வையை
வருந்தி மன்நர கத்துஇடை மாழ்குவார். 1355

நேயம் அற்ற நெடும்பகை யால்சுடு
தீயை வைத்துச் செழுமனை தீப்பவர்
காய முற்றும் கடித்து கணக்கிலா
நாய்அலைக்கும் நரகம் புகுவர்ஆல். 1356

நேயத் தான்நனி நெஞ்சம் அழிந்துசொல்
தாயத் தார்மட வாரைத் தழுவினோர்
வீயுற் றேமிகு வீரியச் சேற்றினை
மாயத் தூதர் மடுக்கஅங் குஉண்பர்ஆல். 1357

வளர்ந்தோங்கிய முலைகள் பெற்ற செருக்கால் பிற ஆடவர்களுடன் விபசாரம் செய்யும் பெண்களும், காமம் மேலிட்டவர்களாய்ப் பிற பெண்களுடன் விபசாரம் செய்யும் ஆண்களும் இறந்தால் 'தப்தோர்மி' என்னும் நரகத்தை அடைவார்கள். அங்கு அவர்கள் உடம்புகள் கருகும்படி, கொழுந்து விட்டுக் கொதிக்கும் உருக்குத் தூண்களைத் தழுவித் துன்புற நேரும். 1351

உள்ளத் தூய்மை, உடல் தூய்மை ஆகிய பரிசுத்தங்கள் இல்லாதவர் இறந்தபின்னர், மலச் சேற்றில் அழுந்தி, வைதரணி என்னும் நரகம் அடைவர். தருமம் என்னும் அணையை உடைத்துச் செல்வோரும் இந்த வைதரணி நரகம் அடைந்து துன்புறுவார்கள். 1352

பக்தி மார்க்கத்தைத் தள்ளி விட்டு ஆடுகளைக் கொன்று யாகம் செய்பவர்கள் இறந்த பின்னர் முக்தி அடையமாட்டார்கள். அவர்கள் வாயும் மூக்கும் அடைக்கப்பட்டு, மூச்சுத் திணறித் துன்புறுவர். இப்படித் துன்புறும் நரகம் 'பிராணரோதம்' எனப்படும். 1353

சொல்லத் தகாத பொய்களை விரும்பிக் கூறியும், கள் குடித்தும் வாழும் கசடர்கள் இறந்த பின்னர் நரகம் அடைவார்கள். அங்கே அவர்கள் வாயில், உருக்கிக் காய்ச்சிய இரும்புக் குழம்பு ஊற்றப்பட்டுத் துன்புறுவார்கள். 1354

'சாப்பிடச் சாதம் தாருங்கள்' என்று யாசிக்கும் விருந்தினர்களைக் கண்பார்வையால் சுட்டு, விரட்டுபவர்கள், கொடிய நரகம் சேருவார்கள். அங்கே, அவர்கள் கண்களைக் கோடிப் பருந்துகள் குத்திப் பறக்கும். அதனால் பார்வை இழந்து அவர்கள் வருந்துவார்கள். 1355

அன்பில்லாமல் பகைமை கொண்டு பிறர் வீடுகளைத் தீக்கொளுத்துபவர் நரகம் சென்றதும், அவர்கள் உடம்புகளைக் கணக்கற்ற நாய்கள் கடித்துக் கொல்லும். இதுவே 'ஸாரமே யாதனம்' நரகம் ஆகும். 1356

தகாத காதலால் நெஞ்சைப் பறி கொடுத்து, உரிமை அல்லாதபடி, பந்துக்களாகிய பெண்களைத் தழுவிக் கற்பழிப்பவர்கள், நரகம் அடைந்ததும் யமதூதர்கள், வீரியச் சேற்றை வாயில் ஊட்டித் துன்புறுத்துவார்கள். 1357

மோகமுற்று ஒருவன் பூண்ட
முழுமணி களவின் கொண்டோர்
ஆகம்நொந் துஉயங்க கல்போல்
ஆம்கனல் திரள்உண் பாரால்
சேகுஅறு மறையோர் வாட
தீமைமிக்கு இயற்றி னோர்தாம்
சூகர முகம் என்று ஓதும்
சுடுநரகு எய்து வார்ஆல். 1358

நரபலி நயந்து செய்தோர் நலிதர உடலம் கீறி
சொரி தரும் உதிரம் உண்போர் சூழ்தரு நரகம் சேர்வார்
உரைதரு நடலை யோர்தாம் ஒளியவீ சிமதி என்னும்
நிரையம் மேல் தலைகீழ்ஆக நெடுமலை நின்று வீழ்வார். 1359

தன்னைத் தான் புகழ்வோர் சார
கருத்தம நரகம் சார்வார்
முன்னம்வெம் துயரம் தன்னால்
முனிவொடும் அடைந்தோர் தம்மை
துன்னிவந்து அலைப்போர் மிக்க
துயரொடு புலம்பி வீழ்வார்
மன்னும்மா ரவுர வப்பேர்
மருவிய நரகின் மாதோ. 1360

வந்ததோர் முறையில் தம்பால் வழங்குவான் வேண்டு நர்க்கு
புந்தியோ டுஉதவார் கீட போசன நரகில் போவார்
நைந்திட உயிரை பாந்தள் ஆதியால் நலிவித் தோர்தாம்
தந்தசூ கப்பேர் உற்ற தனிநரகு எய்து கிற்பார். 1361

குற்றம் ஒன்று இழைத்தி லாரை கொணர்ந்துமுன் கோறல் செய்தோர்
வெற்றிசேர் கொடிய சூலம் மிடைகுறு நரகம் வீழ்வர்
உற்றிடு நிதியின் குப்பை ஒழியும்என் றுஉதவா லுத்தர்
அற்றம்இல் துயர்செய் சூசி முகநரகுஅழுந்து வார் ஆல். 1362

மற்றவன் அணிந்த மணியை ஆசைப்பட்டுத் திருடிக் கொண்டவர் நரகம் அடைந்ததும், கல் போன்ற நெருப்புத் துண்டங்களை உண்டு வருந்தும்படி நேரிடும். குற்றமற்ற அந்தணர் வாடும்படி தீமை செய்பவர்கள் சூகரம் என்னும் சுடுகின்ற நரகை அடைவார்கள். 1358

நரபலியை விரும்பிச் செய்பவர்கள் இறந்த பின்னர் நரகம் அடைந்ததும் அங்கு அவர்கள் உடல்கள் கீறப்பட்டு இரத்தம் சொட்டும்; அதனைக் குடிப்பவர்கள் அங்குண்டு வஞ்சகம் சூழும் தீயவர்கள், 'அவீசிமதி' என்னும் கொடிய நரகத்தை அடைந்ததும், மலையிலிருந்து தலைகீழாக உருட்டப் படுவார்கள். 1359

தன்னைத் தானே புகழ்ந்து கொள்பவர்கள் 'சாரகருத்தமம்' என்னும் நரகத்தை அடைவார்கள். ஏற்கனவே துன்பப்பட்டு அதனால் கோபம் கொண்டு வந்தவரை மேலும் மேலும் துன்புறுத்துவோர் 'மாரௌ ரவம்' என்னும் நரகம் அடைந்து புலம்பி வீழ்வார்கள். 1360

யாசகம் வேண்டி வந்தவர்களுக்கு மனமுடன் ஈயாதவர்கள் 'கீடபோசனம்' என்னும் நரகத்தை அடைவார்கள். பாம்பு முதலான பிராணிகளையும், பறவைகளையும், விலங்குகளையும் துன்புறுத்துவோர்கள் 'தந்த சூகம்' என்னும் நரகத்தை அடைவார்கள். 1361

குற்றம் செய்யாதவர்களைக் கொண்டு வந்து கொல்பவர்கள் கொடிய சூலங்கள் நிறைந்த 'சூலப்ரோதம்' என்னும் நரகம் அடைவார்கள். தாம் அடைந்த செல்வக் குவியல் தம்மை விட்டுச் செல்லல் ஆகாது என்று அதனைக் காத்துப் பிறர்க்குதவாத உலோபிகள் முடிவில்லாத 'சூசிமுகம்' என்னும் நரகை அடைவார்கள். 1362

புண்ணியம் புரிந்தோர் விண்ணில் பொருந்திய சேடம் மாந்த
மண்ணிடைப் பிறத்தல் போல மருவும் இப் பாவம் செய்தோர்
எண்உற நரகம் எய்தி இயைந்தஅச் சேடம் மாந்த
நண்ணுவார் நிலக்கண் யாரும் நலன்அறிந்து இயம்ப மாதோ. 1363

எண்திசை நரகம் ஈரேழு
உலகமென்று இசைத்த எல்லா
அண்டம்அவ் அகண்டம் மேல்கீழ்
அப்புறத் துஉள்ள யாவும்
ஒண்துளவு அமலன் தூல
உருவமாம் உரைக்கும் காலை
வண்டுஇமிர் தொடை யாய்இவ்வாறு
அறிகுறின் மருவும் வீடே. 1364

என்றுவாள் அரசு கேட்ப
இயம்பினன் முனிவன் நீரும்
வன்திறல் உலகம் எல்லாம்
மனத்திடை அறிந்து பார்க்கின்
ஒன்றிய மாயன் தூய
உருவினை உணர்ந்த தாகும்
நன்றுஇருந் தவத்தீர் என்ன
நவிற்றினன் சூதன் மாதோ. 1365

ஐந்தாம் கந்தம் முற்றிற்று

புண்ணியம் செய்தவர்கள் சுவர்க்க போகத்தில் மீதத்தை அனுபவித்து விட்டு, மறுபடியும் இம்மண்ணிலேயே பிறக்கிறார்கள். அதே போல, பாவம் செய்தவர்கள் நரகம் அடைந்து துன்புற்ற பின்னர் மீதத்தை அனுபவிக்க, மறுபடியும் பூமியில் பிறக்கிறார்கள். 1363

இவ்வாறு நரகலோகத்தின் அமைப்பை எடுத்து விவரித்த சுகமுனிவர் பரீட்சித்தை நோக்கிக் கூறினார் :-

"வண்டொலிக்கும் பூமாலை அணிந்த மன்னனே! அண்டங்களும் அவற்றுக்கு மேலும் கீழும் அப்பாலும் உள்ளவைகளும், நரகமும், பதினான்கு உலகங்களும் திருத்துழாய் மாலை அணிந்த திருமாலின் வெளி வடிவமே ஆகும். இவை அனைத்திலும் அமலனான திருமாலே எழுந்தருளி உள்ளான் என்பதை உள்ளபடி நீ அறிந்தால் அதுவே வீடு பேற்றுக்கு வழியாகும்". 1364

மேற்கண்டவாறு சுகமுனிவர் பரீட்சித்துக்குக் கூறினார் என்பதை சூதமாமுனிவன் நைமிசாரணிய முனிவர்களுக்கு உரைத்தார். அவர் "நீங்களும் உம் மனத்தாலே உள்ளபடி உணர்வீராயின் எல்லா உலகங்களும் மாயவனான திருமாலின் வடிவமே என்று அறிவீர்" என்றார். 1365

ஐந்தாம் கந்தம் முற்றிற்று

ஆறாம் கந்தம்

ஸ்ரீ

துருவன் வரலாறும் உலகங்களின் படைப்பும்

ஆறாம் கந்தம்

ஆறாம் கந்தம்

1. அசாமிளன் கதை

பன்னும் ஓர்பதி னான்கு உல கத்தொடு
கொன் உலாவு குணத்த நரகமும்
சொன்ன வாறு துகள்அறக் கேட்டலும்
மன்னர் தாழ்கழல் மன்னவன் கூறுவான். 1366

செய்யும் வல்வினை யால்சிமிழ்ப் புஉண்டவர்
வெய்ய ஆம்நர கத்திடை வீழ்வுறாது
உய்யு மாறும் உளதுகொல் என்னலும்
ஐயம் தீர அருந்தவன் சொல்லுவான். 1367

தீய ஆம்நர கத்திடைச் சேர்பவர்
தூய நாள்மலர் தூவி அளவுஇலா
ஆய பேரின்ஒன்று ஆயினும் ஓதிஅம்
மாயன் தாள்வணங் காமதி கேடரே. 1368

தீமை உற்றஅச் செய்வினை நீக்குவான்
வாமம் உற்று வரும்நல் வினையினால்
ஓமம் முற்றி வினைபுரி வோர்அரி
நாமம் உற்றில ரேல்நன்மை உற்றிலார். 1369

தாம மார்ப தழல்வினை யால்வினை
போம்இங்கு என்றல் பொருந்துவது அன்றுஅரோ
சேமம் ஆர்ந்தஅத் தீவினை நீக்கிமால்
நாம கீர்த்தன மேநலம் செய்யுமே. 1370

காராய் விசும்பாய் கதழ்வளியாய் வெம்கனலாய்
நீராய் நிலனாகி நின்றதனி நேமியான்
ஓரா யிரநாமத்து ஒன்று ஒருகால் ஓதினர்மற்று
ஆரா யினும்அவ் அளறுபடி யார்களே. 1371

ஆறாம் கந்தம்

1. அஜாமிளன் கதை

மேல் உலகங்கள், கீழ் உலகங்கள் ஆகிய பதினான்கு உலகங்களைப் பற்றியும் அச்சம் மிகுந்த நரகம் பற்றியும் சுகமுனிவர் தெளிவாக எடுத்துக் கூறியதைக் கேட்ட சக்கரவர்த்தியான பரீட்சித்து அவரிடம் பின்வருமாறு கேட்டான். 1366

"வலிய வினைகள் புரிந்தவர்கள் அவற்றாற் கட்டுப்படுவதால் வீழ்ச்சி அடைகிறார்களே! அவ்வாறு வீழ்ந்து நரகம் அடையாமல் உய்வு பெறுவதற்கு வழி உண்டா?" இவ்வாறு பரீட்சித்துக் கேட்டதும் சுகர், அவன் ஐயம் அகலும்படி பதில் உரைத்தார். 1367

"தூய்மையான பூக்களைத் தூவி, மாயவனான திருமால் திருவடிகளை வணங்கி அவன் திருநாமத்தில் ஒன்றாயினும் கூறாதவர்கள் கொடிய நரகத்தை அடைவார்கள். 1368

தம் தீமைகள் நீங்குமாறு ஓமமாகிய யாகத்தைச் செய்பவர்கள், அந்த யாகத்தையே பெரிதாக எண்ணித் திருநாமத்தைக் கூறாது மறந்து விட்டால் நன்மை பெற மாட்டார்கள். 1369

மலர் மாலை அணிந்த பரீட்சித்து மன்னனே! யாகங்கள் ஆகிய கர்மங்களால் மட்டுமே வினைப் பயன்கள் போகமாட்டா. அவ்வினைப் பயன்கள் நீங்க வேண்டுமாயின் திருமால் நாம ஸங்கீர்த்தனம் ஒன்றே நன்மைகள் செய்யும். 1370

மேகம், வானம், காற்று, நெருப்பு, நீர், பூமி ஆகிய யாவற்றிலும் பரந்து நிற்கும் சக்கரம் ஏந்திய திருமாலின் ஆயிரம் நாமங்களில் ஒன்றையாவது ஒரு தடவையேனும் ஓதுபவர்கள் நரகச் சேற்றில் அழுந்தார்கள். 1371

கன்னியா குச்சம் எனக் கட்டுரைக்கும் நீர்வளம் சேர்
நல்நகரான் ஆங்கு ஒருநாள் நாராய ணாஎனவே
சொன்னதனால் பாவம் தொலைந்த துயக்கு அறுசீர்
பன்னுதும்கேள் என்றே பகரமுனி மேயினான்ஆல். 1372

வீழும் மழலைஅளி வீழ்ந்து நறைபருகி
சூழும் முளரித் தொடைதாழ் தடமார்பன்
ஆழி உலகம் அசாமிளன் என்றுரைப்ப
வாழும் ஒருவன் மறைநூல் வடித்து உணர்வோன். 1373

ஈன்றோன் பணிப்ப இறைவழிபாடு ஆற்றுதற்கு
தேன்தோய் செழும்கனியும் தேனொடுபண் வண்டுஅரற்றும்
கான்தோய் மலரும் கவர்ந்து தனிக்கருவி
வான்தோய் நீண்டு வளர்காவி னின்று எழுந்தான். 1374

வேளாண் மரபில் மெல்லியலாள் மட்டு அருந்தி
நாள்ஆர் மலர்க்கா நறுநிழலில் நிற்கின்றாள்
நீள்வேல் பொருது நெறிக்குவளை வென்றவிழி
வாளால் எறியக் கலங்கிமதி மாழ்கினன்ஆல். 1375

கோதுஇல் நெறியான் கோல்தொடி தன் பால் ஏகும்
பேதை மனத்தைப் பிடிக்கவும்நில் லாது எழவே
தாதை யொடுதன் மனையாள் தனைமறந்தே
காதல் எனும்வாரிக் கரைகாணா துஉற்றனன்ஆல். 1376

காந்தி மதியின் கதிர்செய்பரு முத்துஅணிந்து
ஏந்தி வளரும் இளமுலையாள் செவ்விநலம்
மாந்தி மயங்கி மலைவுண்டு நல்லொழுக்கம்
நீந்தித் தனது நிலையின் இழிந்து ஒழிந்தான். 1377

காமுறு சேயிழைபால் காதலர் ஒன்பதின்மர்
ஏமுற வந்து உதிப்ப எண்பத்தெட்டு ஆண்டு உறைந்தான்
தேமழலை மென்சொல் சிறுவன் ஒருவனுக்கு
நாமம் புனைந்தனன் ஆல் நாரா யணன் எனவே. 1378

கன்னியாகுச்சம் என்னும் நீர்வளம் சேர்ந்த நகரில் வாழ்ந்த ஒருவன் 'நாராயணா!' என்று ஒரு தடவை கூறிய காரணத்தால் பாவம் தொலையப் பெற்றான் என்னும் கதையைக் கூறுகிறேன். கேட்பாயாக" என்று சுகர் கூறினார். மேலே அதனை விவரித்தார். 1372

அஜாமிளன் என்னும் பெயருடைய அந்தணன் ஒருவன் வாழ்ந்து வந்தான். வேதநூல்கள் பயின்ற அவன் வண்டு ஒலிக்கும் தாமரைப் பூமாலை அணிந்த ஆசாரம் உடையவனாய் இருந்தான். 1373

அவன் தந்தையார் கூறியபடி, அவருக்குப் பூஜைக்கு வேண்டிய பூக்களைச் சேகரித்துக் கொண்டு வரச் சோலை நோக்கிச் சென்றான். அச்சோலையில் தேன் சொட்டும் கனிகளும் வண்டுகள் அமர்ந்து பாடும் பூக்களும் பற்பல உண்டு. தந்தை செய்யும் பூஜைக்காகக் கனியும் மலரும் எடுத்துக் கொண்டு திரும்பினான். 1374

அவ்வாறு அவன் திரும்பி வரும் பொழுது அச்சோலையின் நிழலில் ஒரு வேளாளப் பெண் தன் அழகு வெளிப்பட நின்று கொண்டிருந்தாள். கள் குடித்திருந்த அவள் வேல் போன்ற கண்கள், குவளைப் பூவையும் வெல்லும் அழகுடன், அவனை ஈர்த்தன. வாள் போன்ற அக்கண்களின் அழகில் மயங்கிய அஜாமிளன் தன் புத்தியை இழந்தான். 1375

இதுவரை குற்றங்கள் செய்யாத அஜாமிளன் அப்பொழுது அப்பெண் அருகே சென்றான். தன் மனத்தை அப்பெண்ணிடம் இழந்தவனாய் அவன் தந்தையையும் மனைவியையும் மறந்தான். காதல் என்னும் கடலில் விழுந்து கரை காணாமல் தத்தளித்தான். 1376

சந்திரன் ஒளி வீசும் முத்து மாலை தவழும் அவளுடைய மார்பகங்களின் போகத்தில் மூழ்கிய அவன் சிற்றின்பத்திலேயே மயங்கி, அறிவிழந்து, நல்லொழுக்கங்களை விட்டுத் தன் அந்தண நிலையிலிருந்து தவறி விழுந்தான். 1377

அப்பெண்ணுடன் நடத்திய காம வாழ்வில் அவன் ஒன்பது மக்களைப் பெற்றான். எண்பத்தெட்டாண்டு வயது வந்தது. அவன் தன் பிள்ளைகளில் ஒருவனுக்கு நாராயணன் என்னும் பெயரை வைத்திருந்தான். 1378

வேரா விதிர்விதிரா மெய்தளரா உள்ளாவி
சோரா இறந்து தொலையும் அமையத்தின்
ஓரா மறையோன் ஒருகால் தன் காதலனை
நாரா யணாஎனவே நாவால் அழைத்தனன்ஆல். 1379

அழைத்தவன் இறக்கும்முன் அதிரும் வான்என
தெழித்தனர் யமபடர் சென்று தீப்பட
விழித்தனர் வைதனர் வெய்ய வாள்உறை
கழித்தனர் வீசினர் கால பாசமே. 1380

மறுத்தலை மணக்கலா மதியம் ஆம் என
எறிக்கும்வெண் சங்கினர் ஏந்து நேமியர்
நறைத்துழாய்ப் பரஞ்சுடர் அன்பர் நண்ணினர்
அறுத்தனர் பாசம்நல் அறம் உணர்த்தினார். 1381

பத்திசெய் தாயினும் பகைசெய் தாயினும்
வித்தகன் ஒருவன் பேர் விளம்பற்கு ஆயினும்
ஒத்துநா ராயணா என உரைப்பரேல்
கொத்து வெம்பாதகம் குலைந்து நீங்குமே. 1382

மெய்வினை நீக்கும்நா லெழுத்து வெம்கொலை
மைவினைப் பாதகம் மாற்றி அங்கிநெய்
பெய்வினை முதலிய பிராயச் சித்தமாம்
செய்வினைக் குறையையும் தீர்க்கும் என்பவே. 1383

முத்தியில் பொருத்தும்நா லெழுத்து முன்னுவோர்
புத்தியின் அழுக்கினைப் போக்கிப் பொய்யற
சுத்தமாம் படிமிகத் துலக்கும் சொல்லிய
சித்தமாம் வினைக்கும் ஓர் சீவ னாகுமே. 1384

தும்மினும் இருமினும் துயரம் மிக்கு உளம்
விம்மினும் வீழினும் வினைசெய் போதினும்
அம்மஇந் நாலெழுத்து அறைவ ரேல்அவர்
செம்மலர் மால்பதம் சேர்தல் திண்ணமே. 1385

முதுமை காரணமாய் அவன் இறக்கும் நேரமும் வந்தது. வேர்த்து விதிர் விதித்து, உடல் தளர்ந்து மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கும் சமயம். அஜாமிளன் தன் பிள்ளையை எண்ணி, 'நாராயணா!' என்று அழைத்தான். 1379

அவன் இவ்வாறு அழைத்த நொடியிலேயே ஆவி பிரிந்தது. உடனே அங்கு மேகம் இடித்தது போல் முழங்கியபடி யமபடர்கள் வந்து நின்றனர். அவர்கள் கோபத்துடன் நெருப்புமிழ விழித்தனர். தங்கள் கொடிய வாள் உறையிலிருந்து எடுத்துக் கால பாசக் கயிற்றை வீசினர். 1380

அதே நேரத்தில் அங்கே திருமாலின் அடியார்களாகிய துவாரபாலரும் வந்து நின்றனர். மறுவற்ற சந்திரன் போல வெண்மை உடைய சங்கும் சக்கரமும் ஏந்திய திருத்துழாய் மாலையன் திருமாலின் அன்பர்களான அவர்கள், யமபடர் வீசிய பாசக் கயிற்றை அறுத்தார்கள். அவர்கள் யமபடர்களை அறிவுறுத்தியபடி கூறியதாவது :- 1381

"பக்தி செய்தோ, பகைத்தோ வித்தகனான திருமால் நாமத்தை ஒருமுறை கூறி 'நாராயணா!' என்று அழைப்போரின் கொடிய பாவங்கள் யாவும் கொத்தாகக் குலைந்து நீங்கி விடும். 1382

நாலெழுத்து மந்திரமாகிய நாராயண நாமம் வினைப் பயன்களைப் போக்கும். கொடிய கொலைக் குற்றப் பாதகங்களையும் நீக்கும். நெய் விட்டுச் செய்யும் வேள்விகளில் ஏற்படும் தவறுகளுக்குப் பிராயச்சித்தமாகி, கர்மயோகப் பிழைகளையும் போக்கும். 1383

முக்தியை அளிக்கும் நாலெழுத்து மந்திரம், அதனை எண்ணி தியானிப்பவர்களின் சித்தத்தில் பொய்யை நீக்கிச் சுத்தமாக்கித் தியானத்துக்கும் உயிராகவே நிற்கும். 1384

தும்மும் பொழுதும் இருமும் பொழுதும் உள்ளம் துயரில் விம்மி விழும் பொழுதும் செயல்களை ஆற்றும் பொழுதும் தாய் போல் உள்ள நாலெழுத்து மந்திரமான நாராயண நாமத்தை உச்சரித்தால், அவ்வாறு உச்சரிப்பவர் திருமாலின் தாமரைத் திருவடிகளை அடைவது உறுதியாகும். 1385

ஆதலான் இந்தநா லெழுத்து அசாமிளன்
ஓதினான் ஒருமக வுஉரைக்கும் ஏதுவா
தீதுஎலாம் ஒழிந்தனன் செப்பின் ஈதுநும்
நாதனே உரைசெயும் நடமி னோடு என்றார். 1386

ஆற்றல்அம் திகிரியான் அன்பர் வல்லையின்
ஏற்றனர் பாசம் நீத்து இயம்பல் கேட்டலும்
காற்றுஎன நமன்தமர் கலங்கி ஓடினர்
கூற்றொரு விளைதிறம் கூறி னார்அரோ. 1387

மற்றுஅது கேட்டலும் மறலி நோக்கிநீர்
பற்றுதற்கு உரியனோ பகவன் நாமம் ஒன்று
இற்றிடும் அமைதியின் இயம்பி னான்அவன்
உற்றவெம் தீவினை ஒருங்கு போயதுஆல். 1388

திருமறு மார்பனைச் சிந்தை செய்யுபு
பரவுறு தொண்டர் எம் பகவர் ஆகுவார்
அரவணை யான்கழல் அடையப் பெற்றிலார்க்கு
உரியதுஎம் மாணைஎன் றுஉணர்ந்து கொள்விர்ஆல். 1389

பணியணைத் துயில்வுஉறும் பரம இந்திரை
கணவசெந் தாமரைக் கண்ண ஆகம்மா
மணிநிற வண்ணஎன் பவர்ம ருங்குநீர்
அணுகன்மின் என்றனன் அறத்தின் வேந்தனே. 1390

ஆழியான் அன்பர் ஆங்கு உரைத்து ஏக
அசாமிளன் நெஞ்சகம் உருகி
தாழ்இரும் கூந்தல் மனைவியை மறந்து
தாதைசொல் கடந்தனன் ஆகி
ஊழ்உற கொடிய வினைபுரிந் தேற்கும்
உதவியது ஒரு பெயர் என்னின்
வாழிமால் நாம கீர்த்தனம் அல்லால்
வருகதி இல்என மதித்தான். 1391

இந்த நாலெழுத்தை அஜாமிளன் தன் மகனைக் குறித்து அழைப்பதாகக் கூறினாலும் அது பயன் தரக்கூடியதே ஆயிற்று. ஆகவே அவன் தீமைகள் ஒழிந்தன. "யமபடர்களே! இதனை உங்கள் தலைவனான யமனிடம் கூறுங்கள். இங்கிருந்து போங்கள்". இவ்வாறு திருமாலின் ஏவலாளர்கள் கூறினார்கள். 1386

ஆற்றல் மிகுந்த சக்கரக் கையன் திருமாலின் ஏவலாளர் கூறியபடி யமபடர்கள் தம் பாசக் கயிற்றை வீசாது திரும்பினார்கள். காற்றே போல் அவர்கள் கலங்கி ஓடி, யமனிடம் சென்று திருமால் அடியார்கள் கூறியவற்றை எடுத்துரைத்தார்கள். 1387

அதைக் கேட்ட யமன், "பகவான் நாமத்தை உச்சரித்தவனை நீங்கள் பாசத்தால் பற்றப் போகலாமோ? பகவான் நாமத்தால் தீவினைகள் ஒழிந்து போய்விடுமே!" என்றான். 1388

"ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவை மார்பிலே உடைய திருமாலைச் சிந்தையில் கொண்டு துதிக்கும் தொண்டர்கள் எமது தலைவர்கள் ஆவர். ஆதிசேடனைப் படுக்கையாகக் கொண்ட திருமால் அடியார்கள் அல்லாதவர்க்கே எமது ஆணையைச் செலுத்துவீர். திருமால் அடியாரைப் பணிவீர். இதனைத் தெரிந்துக் கொள்ளுங்கள்" என்று யமன் கூறினான். 1389

மேலும் அவன் கூறியதாவது : "ஆதிசேடன் மீது பள்ளி கொள்ளும் திருமாலை நோக்கி, 'லக்ஷ்மி நாயகனே! செந்தாமரைக் கண்ணா! பரமனே! மணிநிற வண்ணா!' என்று அழைப்பவர்கள் பக்கம் நீங்கள் செல்லக் கூடாது". இவ்வாறு தருமராஜன் பணித்தான். 1390

திருமால் அன்பர்கள் யமனிடம் தன்னைத் தவிர்த்ததை உணர்ந்த அஜாமிளன் நெஞ்சம் உருகினான். இருண்ட கூந்தலுடைய மனைவியை மறந்து தந்தை சொல்லைக் கடந்து கொடிய தீவினை செய்தேனே; என் ஊழ்வினையா இது! நாராயண நாமம் ஒன்றே என்னைக் காத்தது என்றால் இனி நான் உய்வு பெற எம்பெருமான் நாம ஸங்கீர்த்தனமே துணை வேறு கதியில்லை' என உணர்ந்தான். 1391

பெருகும்உள் என்பால் மாயவன் பெயரே
பேசினன் அவன் திரு உருவே
கருதினன் கங்காத் துவாரம்உற் றுஉறைந்து
கருத்தினை ஒருப்படுத்து அடக்கி
அருளொடு முன்னம் அடைந்தமால் அன்பர்
ஆங்குற கண்டுஅவ ரோடும்
விரிகதிர் விமானம் ஏறினன் ஞானா
நந்தமால் மருங்குவீற் றிருந்தான். 1392

நெறியினில் பிழைத்த அசாமிளன் தானும்
நேமிஅம் தடக்கையான் நாமம்
அறிவிலன் ஒருகால் கூறலால் உயர்வீடு
அடைந்தனன் அம்மமற்றுஅறிந்து
நறைவிரி துளவப் படலைஅம் தாரான்
நாமமே உரைசெயப் பெற்றார்
உறுவினைத் துவக்கு நீத்துவீடு அடைதல்
உரைப்பதுஎன் அரசஎன் றுஉரைத்தான். 1393

இயம்பும்இக் காதை பொதியிலின் மேய இருந்தவக் குறுமுனி எமக்கு
நயம்பெற உரைத்த வாறுநிற் குஉரைத்தேம் நவிலுவோர் இதுகேட் பவர்தாம்
பயம்தரு பாவத் தொடர்புவிட்டு ஒழிந்து பரமவீட் டுஉலகினில் படர்வார்
வயங்குவாள் அரச எனவழங் கினனால் மாசறு சுகமுனி மாதோ. 1394

2. தக்கனின் படைப்பு

அண்டரோடு அவுணர் முதலினர் படைப்பை ஆதிஅம் மனுஉறை காலத்து
எண்தகு முறை ஈது எனத் தொகை பெறவே இயம்பினை இன்னுநீ விரித்து
பண்டைநான் மறையின்இயல்புளி பகர்தி பளகுஇலா நல்தவ எனவே
விண்டு ராதப்பேர் வேந்து உரைத் திடலும் மேதகு சுகமுனி விளம்பும்.
1395

கண்ணுதல் அரிய பழமறை ஒருங்கு
கசடுஅறத் தேர்ந்துமுன் வினையின்
மண்ணிடைப் பதின்மர் மகவுஎன வழங்க
மாரிடை இடத்துவந் துஉதித்த
தண்நறும் தொடைதாழ் தக்கனாம் வேந்தன்
தநயரை மிகப்பெற வேண்டி
விண்ணவர் புகழும் விந்திய மலையின்
வீறுஉயர் சாரல்மே யினன்ஆல். 1396

அன்று முதல் அஜாமிளன் பெருகிய உள்ளன்புடன் மாயவன் ஆன திருமால் திருநாமமே உச்சரித்தான். அவன் திருவடிவத்தையே தியானம் செய்தான். கங்கையின் பலத்துவாரத்தை அடைந்து, மனத்தை அடக்கித் தவம் செய்தான். ஆதலால் திருமால் அருளால், அன்பர்கள் நேரில் காண, விமானம் ஏறி ஞானானந்தமான திருமால் அருகடைந்தான். 1392

"அரசே! ஒழுக்கத்தில் தவறிய அஜாமிளன் சக்கரக் கையன் ஆன திருமால் நாமத்தை அறிவில்லாமல் கூறிய பொழுதும், அந்நாமத்தின் மகிமையால் மோட்சத்தை அடைந்தான். ஆதலால் திருத்துழாய் மாலை சூடிய திருமாலின் நாமத்தை உச்சரிக்கிறவர் வினைப்பயன்கள் நீங்கப் பெற்றவராய் வீடு அடைவது உறுதி ஆகும். 1393

இக்கதையினைப் பொதிய மலை முனிவரான அகத்தியர் எமக்குக் கூறினார். அதனை உனக்கு நான் கூறினேன். இதனைக் கூறுபவர்களும் கேட்பவர்களும் அஞ்சத்தக்க பாவத் தொடர்பு நீங்கப்பெறுவார்கள். அவர்கள் பரந்தாமனின் வீட்டை அடைவார்கள்". 1394

இவ்வாறு சுகமுனிவர் பரீட்சித்திடம் அஜாமிளன் கதையைக் கூறினார்.

2. தக்கனின் படைப்பு

பரீட்சித்து சுக முனிவரிடம், "ஆதியான சுவாயம்பு மனு காலத்தில் உண்டான தேவாசுரப் படைப்புப் பற்றி இதுவரை கூறினீர். இனிப் பழைய வேதமுறையின் இயல்பு வழியாகக் கூறுக" என்று கேட்டான். சுக முனிவரும் பின் வருமாறு கூறினார். 1395

பிரசேத சாக்கியர் பத்துப் பேருக்கும் மனைவியான மாரிடைக்கு முன்வினைப் பயனால் தக்கன் புதல்வனாய்ப் பிறந்தான். நினைத்தற்கரிய வேதங்களைக் குற்றமறக் கற்றவன் இத்தக்கன் ஆவான். மணம் வீசும் குளிர்ந்த மாலை சூடிய வேந்தன் தக்கன், பிள்ளைகளைப் பெற விரும்பி, தேவர்களால் புகழப்படும் விந்தியமலைக்குத் தவம் செய்யச் சென்றான். 1396

கோட்டுமால் விந்தக் குலவரைச் சாரல்
குலவுஅக மருடணை எனும் ஓர்
மோட்டுநீர் வாவி முழுகிய தக்கன்
முருகுஅவிழ் துளவினான் கமலத்
தாள்துணை நினைந்து தவம்செயச் செய்ய
தாமரைத் தடங்கண்எம் பெருமான்
வேட்டுநா ரதனே முதலினர் பரவ
விண்இடை கலுழன்மீது எழுந்தான். 1397

தண்டையும் கடக மகுடமும் கலையும்
தனிஎழில் கவுத்துவ மணியும்
எண்தரும் புயமும் இலகமுன் எழுந்த
வியன்மறை முதலியை விழியால்
கண்டுஉளம் குளிரக் களிகொளும் தக்கன்
கமலநாள் மலர்ப்பதம் வணங்கி
கொண்டலே! அடியேற்கு அருள்என வழுத்த
குவலயம் அளந்தவன் கூறும். 1398

புரிந்தநின் தவத்தால் உளன்நனி மகிழ்ந்தேம்
புகல்அசிக் கினிஎனும் பெயர்சேர்
விரும்புஎழில் பஞ்ச சனன் தரும்அணங்கை
வேட்டுநீ படைத்திஎன் றுஉரைத்து
கருந்துழாய்ப் பரமன் அகன்றபின் தக்கன்
கழறுஅசிக் கினிதனை மணந்து
திருந்துஎழில் பதினா யிரம்மகவு அளித்துஅச்
சிறுவரைப் படைத்திர் என்று உரைத்தான். 1399

மைந்தர்அவ் உரைகேட்டு ஒருப்படும் உளத்தர்
மருவினர் விரைந்துபோய்க் குடக்கின்
சிந்துசா கரத்தில் கலந்திடும் ஆங்கு
செறியும்நா ராயண சரசின்
விந்தைசேர் மாலை உளமிசைப் பொறுத்து
விழுத்தவம் புரிதரு காலை
நந்தல்இல் அறிவு நாரதன் கொளுத்த
நடந்தனர் தாதைசொல் வெறுத்தே. 1400

சிகரத்தை உடைய பெரிய விந்தியமலைச் சாரலில் தக்கன் அகமருடணை என்னும் குளத்தில் நீராடினான். பிறகு, அழகிய திருத்துழாய் சூடிய திருமால் திருவடிகளைத் தியானம் செய்தபடி, தவம் செய்தான். கடுந்தவத்தை அவன் தொடர்ந்து செய்கையில், தாமரைக் கண்களுடைய திருமால ஆகாயத்தில், கருடன் மீது காட்சி தந்தார். நாரதர் முதலிய முனிவர்கள் வந்து தொழுதனர். 1397

தண்டை, வளை, கிரீடம், பீதாம்பரம், கௌத்துப மணி ஆகியன அணிந்தபடி, மேகவண்ணனான திருமால் தக்கன் முன்னே தோன்றினான். வேதங்களின் முதல்வனான பெருமானைத் தரிசித்த தக்கன் களிப்புக் கொண்டு மனம் குளிர்ந்து, திருமால் திருவடிகளை வணங்கி, "மேகவண்ணனே! அடியேனுக்கு அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டினான். உலகளந்த திருமால் அவனிடம் கூறியதாவது : 1398

"தக்கனே! நீ செய்த தவத்தால் நாம் மனம் மகிழ்ந்தோம். பஞ்சசனன் பெற்ற அழகான பெண்ணாகிய அஸிக்னியை நீ திருமணம் செய்து கொண்டு, பிரஜைகளைப் பெற்றும் படைப்பாயாக" இவ்வாறு அருளிய திருமால் மறைந்தபின், தக்ஷப்பிராஜாபதி அவிக்னியை த் திருமணம் செய்து கொண்டான். அதன் பின்னர் அவர்களுக்குப் பதினாயிரம் புத்திரர்கள் உண்டானார்கள். தந்தையான தக்கன் அவர்களை மேலும் பிரஜைகளைப் படைக்குமாறு பணித்தான். 1399

தக்கனின் புதல்வர்கள் தந்தை சொல்லைக் கேட்டுச் சம்மதித்தனார். அவர்கள் மேற்கிலுள்ள சிந்துநதி கடலில் கடக்கும் இடத்தில் உள்ள நாராயணசரஸ் என்னும் பொய்கையை அடைந்து திருமாலை எண்ணித் தவம் செய்யலாயினர். அப்பொழுது அங்கு நிறைந்த ஞானம் பெற்ற நாரதர் தோன்றி, அவர்களுக்கு உபதேசம் செய்தார். அதனால் மனம் தெளிந்த அப்புதல்வர்கள் படைப்புத் தொழிலை வெறுத்து விட்டு, மோட்ச வழியைத் தேடிச் சென்று விட்டனர். 1400

நன்னர்யாழ் முனிசொல் நாடிய மைந்தர்
நடந்தது கேட்டுஅயர் தக்கன்
பின்னரும் பதினா யிரமகவு ஈன்று
பெருகநீர் படைமின் என் றுஉரைப்ப
அன்னவர் தாமும் அவ்விடன் அணுகி
அருந்தவம் புரிவுழி அடைந்து
முன்னரே போல்அம் முனிஉரைத் தமையால்
முன்னவர் போல ஏகினரால். 1401

நாரதன் மீட்டும் உரைத்தது கேட்டு
நண்ணிஅம் முனிமுகன் நோக்கி
சீருறு காமம் நுகர்ந்தபின் அல்லால்
சேரும்கொல் மனத்து ஒழிவு அறம்தான்
ஆர்எழில் சிறுவர்க்கு ஒழிவறம் உரைத்தாய்
அம்மநன் றுஉனதுஅறிவு என்றும்
ஓரிடன் அன்றி உழல்க எனச் சபித்தான்
உருத்துஎழு தக்கன்நெஞ்சு உடன்றே. 1402

அரிநெடும் கண்ணி இளமுலை துவர்வாய் அசிக்கினி அணிநலம் துய்த்து
விரிபுகழ்த் தக்கன் மீட்டும்ஓர் அறுபான் மெல்லிய லாரை ஈன்று அவருள்
ஒருபது மடவார் அறக்கட வுளுக்கும் ஒருபதின் மூவர்கா சிபற்கும்
இருபதோ டெழுவர் இமகரன் தனக்கும் இனிது உவப் புறஉத வினன்ஆல். 1403

பூதன்என் போனுக்கு இருவரைக் கொடுத்தான்
புகழ்பெறும் அங்கிரா வினுக்கு
சூதுறு முலையார் இருவரை அளித்தான்
சொல்கிரு சாச்சுவன் தனக்கு
தாதுஅவிழ் குழலார் இருவரை தந்தான்
சாற்றிய தாக்கியா யனுக்கு
மாதர்ஓர் நால்வர் தமைவழங் கினனால்
மறைஉணர் தக்கன் உள் மகிழ்ந்தே. 1404

குழைகிழித்து உலவு மதர்அரி நெடும்கண்
குமுதவாய்க் குறுநகை மடவார்
அழகுறு மகிணர் தடவரை மார்பம்
அன்பொடு புணர்ந்து இனிது உயிர்த்த
குழவிகள் தம்மால் உலகம் ஓர் மூன்றும்
கோதுஅற நிறைந்த இம் மடவார்
விழைவுஉறு பெயரும் உயிர்த்தஅம் மைந்தர்
வீறுசால் பெயரும் ஈங்குஅறைவாம். 1405

நாரதர் சொல்படி தம் பதினாயிரம் புதல்வர்களும் அகன்று விட்டதை அறிந்த தக்கன் மேலும் பதினாயிரம் பிள்ளைகளைப் பெற்று அவர்களைப் படைப்புத் தொழிலில் ஈடுபடுத்தலானான். அவர்களும் தவம் செய்கையில், முன்போலவே நாரதர் அவர்கள் முன்பு தோன்றி உபதேசம் செய்ததால் அவர்களும் தம் முயற்சியை விட்டு விட்டுப் போனார்கள். 1401

நாரதன் இவ்வாறு செய்ததை அறிந்த தக்கன் அவரிடம் பின்வருமாறு பேசினார். "காமத்தை அனுபவித்த பிறகு அன்றோ தர்மவழியில் மனம் செல்லும்? அதற்குப் பிறகு அன்றோ துறவறம்? இதனை விட்டு என் புதல்வருக்கு வேறு உபதேசம் செய்தாய். நன்றாகதத்தான் இருக்கிறது உன் ஞானம்! ஆகவே நீ ஓரிடத்தில் நிலையாக இருக்காமல் உலகெங்கும் திரிந்துழல்வாய்" இவ்வாறு நாரதருக்குத் தக்கன் சாபம் இட்டான். 1402

செவ்வரி படர்ந்த கண்களை உடைய அஸிக்னியுடன் தக்கன் இல்லற இன்பம் அனுபவித்து அறுபது பெண்களைப் பெற்றான். அவர்களில் பத்துப் பெண்களைத் தரும தேவனுக்கு மணம் செய்வித்தான். பதின்மூன்று பெண்கள் காசியபரையும், இருபத்தேழு பெண்கள் சந்திரனையும் மணந்தனர். 1403

பூதன் என்பவனுக்கு இரு பெண்களைத் தக்கன் திருமணம் செய்வித்தான். புகழுடைய அங்கிரஸ முனிவருக்கு இரு பெண்களையும், கிருசாச்வனுக்கு இரு பெண்களையும், மீண்டும் காசியபருக்கே இரு பெண்களையும் திருமணம் செய்வித்தார். 1404

மகரக்குழை உடைய காதினைத் தொடும் அளவு பரந்த கண்களும், குமுதம் போன்ற வாயும் புன்னகையும் கொண்ட இப்பெண்கள் தங்கள் கணவர்களின் மார்புகளைத் தழுவி இன்புற்று இல்லறம் நடத்தினார்கள். அவர்கள் பெற்ற மக்கள் உலகம் மூன்றும் நிறையும் படி சந்ததிகளைப் பெருக்கியவர்கள். அம்மக்களின் பெயர்களை முறையாக மேலே கூறுவேன். 1405

மதிநுதல் பானு வசுமருத் துவதி வளர்எழில் சாமிவிச் சுவைசேர்
கதிர்முலை முகூர்த்தை சாத்தியை இலம்பை ககுப்புசங் கற்பைஆம் பதின்மர்
துதிஉறு தருமன் விழைவுறு மனையார் சொல்மனை யார்களில் பானு
இதமுறு தேவ விடபனை இவன்நல் இந்திர சேனனை ஈன்றாள். 1406

வசுஎனும் மடந்தை வசுக்களை ஈன்றாண் மற்றுஅவர் பெயரினை வகுக்கின்
இசைஉறு துரோணன் இலங்கிய பிராணன் ஏத்துசீர்த் துருவன்நல் அருக்கன்
வசைஅறு தோடன் அக்கினி வத்து மன்னிய விபாவசு என்பார்
நசைஉறும் இந்த எண்மரும் சால நல்கினர் புதல்வரை மாதோ. 1407

விளம்புஎழில் மல்கு விச்சுவை என்பாள் விச்சுவ தேவரை ஈன்றாள்
வளம்தரு மணிப்பூண் சாத்தியை மகிழ்ந்து மன்னுசாத் தியர்தமை உயிர்த்தாள்
தளர்ந்தநுன் இடையாள் எனும் மருத் துவதி சாற்றிய மருத்துவா னோடும்
அளந்துஅறிவு அரிய அரிந்தமன் கலையே ஆகும்நல் சயந்தனை அளித்தாள். 1408

முருந்துஉறழ் மூரல் முகூர்த்தைஎன் றுஉரைப்பாள்
முகூர்த்தர்கள் தமை உவந்து ஈன்றாள்
சுரும்புஇமிர் குழலாள் சாமியாம் அணங்கு
துறக்கநல் தெய்வம்நல் கினள்ஆல்
மருந்து என மொழியும் எழில்கொள்சங் கற்பை
வயங்குசங் கற்பனை அளித்தாள்
கருங்குழல் இலம்பை மின்இடி உயிர்த்தாள்
ககுபுசங் குடுவனை தந்தாள். 1409

ஆரலே முதல்மூ ஒன்பது நாளாம்
அவிர்எழில் பிணாக்களை மணந்த
சீர்பெறு சோமன் மனைவிய ரிடத்தில்
சிறுவரைப் பெற்றிலன் கயநோய்
பேர்பெறு தக்கன் வழங்குசா பத்தால்
பெற்றனன் பின்அரும் தவத்தால்
ஏர்பெறு கலைகள் முறைமுறை வளரும்
இயற்கையும் எய்தினன் அன்றே. 1410

சந்திரனை ஒத்த முகம் உடைய பானு, வசு, மருத்துவதி , அழகுடைய சாமி, விச்சுவைய, முகூர்த்தை, சாத்தியை, இலம்பை, ககுபு, சங்கற்பை ஆகிய பத்துப் பெண்களும் தரும தேவனை மணந்தனர். இவர்களில் பானு, தேவவிடபனையும் இந்திர சேனனையும் பெற்றாள். 1406

வசு என்பவள் எட்டு வசுக்களான, துரோணன், பிராணன், துருவன், அருக்கன், தோடன், அக்னி, வஸ்து, விபாவசு ஆகிய எட்டுப் புதல்வரைப் பெற்றாள். இந்த எண்மரும் பல புதல்வர்களைப் பெற்றனர். 1407

அழகு கூடிய விச்சுவை என்பவள் விச்வதேவரைப் பெற்றாள். அணிகலன்கள் அணிந்த சாத்தியை சாத்தியர்களைப் பெற்றாள். தளர்ந்த நடையும் நுட்பமான இடையும் பெற்ற மருத்துவதி மருத்துவானைப் பெற்றாள். இவள் பெற்ற இன்னொரு மகன் சயந்தன் ஆவான். இவன் திருமாலின் அம்சம் ஆனவன். 1408

மயில் இறகின் குருத்தைப் போன்ற பற்களைப் பெற்ற முகூர்த்தை என்பவள் முகூர்த்தர் என்னும் தேவகணங்களைப் பெற்றாள். வண்டு ரீங்காரம் செய்யும் மலர் சூடிய கூந்தலுடைய சாமி என்பவள் சுவர்க்கன் என்னும் புதல்வனைப் பெற்றாள். அமுதம் போன்ற இனிய பேச்சுடைய சங்கற்பை என்பவள், சங்கற்பனைப் பெற்றாள். கறுத்த கூந்தல் பெற்ற இலம்பை வத்யோதயனைப் பெற்றாள். ககுபு என்பவள் சங்குடனைப் பெற்றாள். 1409

கார்த்திகை முதலிய இருபத்தேழு பெண்களை மணந்த சந்திரன் குழந்தைகளைப் பெறவில்லை. தக்கன் கொடுத்த சாபத்தால் அவன் காச நோய் பெற்றான். பின்னர் தவம் செய்து, முறையாக வளரும் இயல்பைப் பெற்றான். 1410

பூதன்என் றுஉரைப்போன் பூந்தொடை புனைந்து
புல்கிய மகளிரைப் புகலின்
தாதுஅடர் குழலாள் பஞ்சதா மோதை
தன்னொடு சுரூபையா மிவரின்
ஏதம்இல் எழில்சேர் பஞ்சதா மோதை
இயம்புபூ தங்களை ஈன்றாள்
ஓதிய சுரூபை பற்பல கோடி
உருத்திரர்ப் பொறையுயிர்த் தனள்ஆல். 1411

ஆரண மறைதேர் அங்கிரா என்போன்
அணைந்தஅம் மகளிரை அறையின்
தாரணி குழலார் சுதைசதி என்ன
சாற்றுபேர் இருவர் அங்கு அவரின்
பேர்அணி விளங்கும் சுதைஎனும் பெயராள்
பெற்றனள் பிதிர்களைச் சதிதான்
காரண வேதம் எனப்புவி புகழ்ந்து
கருதுஅத ருவணரை ஈன்றாள். 1412

பெரும்புகழ்க் கிருசாச் சுவன்அக லம்தோய்
பேதையர் இவர்பெயர் பேசின்
திருந்துஎழில் அருச்சித்து என்றுசொல் அணங்கும்
திடணையென் பாளுமாம் திடணை
விரும்புநல் வேத சிரசனை முதலா
விளம்புஒரு மூவரை அளித்தாள்
சுரும்பிமிர் கூந்தல் எனும்அருச் சித்து
தூம்பிர கேசனை ஈன்றாள். 1413

நான்கு எனும் மறைதேர் காசிபன் என்போன்
நல்மணம் புணர்ந்தநால் வர்கள்தாம்
தேன்க்மழ் அலங்கல் விநதைகத் துருபூ
செறிகுழல் பதங்கியா மினி ஆம்
வான்கொளும் புகழ்சால் இவர்களின் விநதை
வண்புகழ் அருணனோடு அசுரர்
ஊன்கொளும் திகிரிப் பரமனைப் பரிக்கும்
மொண்டிறல் கருளனை உயிர்த்தாள். 1414

பூதன் என்பவன் பஞ்ச தாமோதை, சுரூபை ஆகிய இரு பெண்களைத் திருமணம் செய்து கொண்டான். பூந்தாது உள்ள மலர் மாலை சூடிய கூந்தலாள் பஞ்ச தாமோதை, பூதகணங்களைப் பெற்றாள். சுரூபை என்னும் மற்றைய மனைவி உருத்திரர்களைப் பிள்ளைகளாகப் பெற்றாள். 1411

வேதம் ஓதுவதில் சிறந்த ஆங்கீரஸ் முனிவன் திருமணம் செய்து கொண்ட பெண்கள் யாவர் எனின், அழகிய கூந்தலுடைய சுதையும் சதி என்பவளும் ஆவார்கள். இவர்களின் சுதை என்பவள் பிதுரர்களைப் பெற்றாள். மற்றவளான சதி என்பவள் அதர்வசிரஸ் என்னும் அதர்வணரைப் பெற்றான். இந்த அதர்வசிரஸ் என்பவர் வேதங்களில் வல்லவராகி உலகப் புகழ் அடைந்தார். 1412

அருசித்து, திடனை என்னும் இருபெண்களும், பெரும் புகழ் பெற்ற கிருச்சாச்வனைத் திருமணம் செய்து கொண்டனர். திக்ஷணை எனப்படும் திடணை வேதசிரஸ் முதலிய மூன்று பிள்ளைகளைப் பெற்றாள். வண்டமர் பூச்சூடிய கூந்தலை உடைய அருசித்து, தூம்பிரகேசனைப் புதல்வனாகப் பெற்றாள். 1413

நான்கு வேதங்களிலும் தேர்ந்த காசியபன் திருமணம் செய்து கொண்ட நான்கு பெண்கள் விநதை, கத்துரு, பதங்கி, யாமினி என்பவர் ஆவர். விநதைக்குப் பிறந்தவர்கள் கருடனும் அருணனும் ஆவார்கள். இந்தக் கருடனே சக்கராயுதம் தரித்த திருமாலுக்கு வாகனம் ஆனான். 1414

ஒள்நக துவர்வாய் கத்துரு வென்பாள்
உரகரை உயிர்த்தனள் உவப்பின்
பண்ணெனும் மொழியாள் பதங்கியாம் அணங்கு
பதங்கமே முதலிய பயந்தாள்
தண்நறும் குழலாள் யாமினி விரும்பி
சலபமே முதலிய தந்தாள்
எண்ணரும் குணம்சால் காசிபன் மனையார்
ஈன்றவர் இயல்புஎடுத் துஉரைப்பாம். 1415

விதிமுது மறைதேர் காசிபன் வேட்ட மெல்லிய லார்பெயர் விளம்பின்
அதிதிநற் பிரியை திதிதனுக் காட்டை அணிகெழும் அரிட்டைவான் சுரசை
மதிபுரை வதன விளைமுனி குரோத வசைமகிழ் தாம்பிரை சுரபி
புதுமலர்க் குழலாள் சரமைஎவ் வுலகும் புகலும்சீர்த் திமியெனப் படும்ஆல்.
1416

உரைதரும் மடவார் தங்களில் சரமை
உயிர்த்தனள் சுவாபதக் குழுவை
சுரபி ஈன்று எடுத்தாள் பசுமுத லாக
சொல்இரு குளம்பவாம் விலங்கை
தரைபுகழ் எழில்சேர் தாம்பிரை என்பாள்
தந்தனள் பறவையின் தொழுதி
அரிமதர் நெடுங்கண் முனிஎன இசைப்பாள்
அரம்பையர் தமைஅளித் தனள்ஆல். 1417

இனமலர்க் குழலாள் திமி எனும் ஏழை ஈன்றனள் நீரின்வாழ் உயிரை
நினைவுறும் வலிசேர் யாதுதா னவரை நிகழ்த்திய சுரசைபெற் றனள்ஆல்
தனுஉவந்து ஈன்றாள் தானவர் தமைஅத் தானவர் சம்பர னொடுதார்
புனைவிட பருவா முதலிய அறுபான் பொருந்தும் ஒன்று என்னும்எண் ணினரால்.
1418

விரும்புஎழில் அதிதி உயிர்த்தநற் சிறுவர் விவச்சுவான் அரியமா பூடா
வருகதிர்த் துவட்டா வயங்குசொல் சவிதா மன்னிய பகன்வளர் தாதா
அருந்திறல் விதாதா மித்திரன் வருணன் ஆர்ந்தசீர்ச் சக்கரன் இருஞ்சீர்
பொருந்துவிக் கிரமன் என்றுபன் னிருவர் போற்றுமா தித்தியர் ஆவார்.
1419

ஒளி வீசும் சிவந்த வாயுடைய கத்துரு என்பவள் உரகரைப் பெற்றாள். இனிய இசை போலப் பேசும் பதங்கி பறவைகளைப் பெற்றாள். இருண்ட கூந்தலுடைய யாமினி என்பவள் விட்டிற்பூச்சி முதலியவைகளைப் பெற்றாள். 1415

தொன்மையான வேதத்தில் வல்ல காசியபன் மணந்த பதின்மூன்று பெண்களும் அதிதி, திதி, தனு, காட்டை, அரிட்டை, சுரசை, இளை, முனி, குரோதவசை, தாம்பிரை, சுரபி, சரமை, திமி என்பவர்கள் ஆவர். 1416

மேற்கூறப்பட்ட பதின்மூன்று பெண்களில் சரமை என்பவள் துஷ்டமிருகங்களைப் பெற்றாள். சுரபி என்பவள் பசு முதலிய இரட்டைக் குளம்புடைய விலங்குகளைப் பெற்றாள். அழகிய தாம்பிரை என்பவள் பறவைக் கூட்டங்களைப் பெற்றாள். செவ்வரி படர்ந்த செழிப்பான கண்களை உடைய முனி என்பவள் அரம்பையரைப் பெற்றாள். 1417

கொத்தாகப் பூச்சூடிய கூந்தலை உடைய திமி என்பவள் தண்ணீரில் வாழும் பிராணிகளைப் பெற்றாள். சுரசை என்பவள் யாது தானவர்களைப் பெற்றாள். தனுவுக்கு அசுரர்கள் பிறந்தனர். அவர்களே, சம்பரன், விஷபர்வா முதலிய அறுபத்தோரு பேர்கள் ஆவார்கள். 1418

விரும்பும் படியான அழகுடைய அதிதி என்பவள் பெற்ற பிள்ளைகள் விவச்வான், அரியமா, பூஷா, த்வஷ்டா, ஸவிதா, பகன், தாதா, மித்ரன், வருணன், சக்கரன், விக்கிரமன் ஆகிய பன்னிரண்டு சூரியர்கள் ஆவர். 1419

சாற்று உயர் குரோத வசை எனும் மாது
தந்தசூ கங்களை தந்தாள்
வேல்தடங் கண்ணாள் அரிட்டையாம் அணங்கு
விஞ்சையர் தமைவழங் கினள்ஆல்
ஏற்றசீர் இளைதான் தருக்குழு வோடும்
இணர்க்கொடி தொடக்கத்த ஈன்றாள்
கோல்தொடி காட்டை இருகுளம்பு அல்லா
கோதுஅறு விலங்கு உயிர்த் தனள்ஆல். 1420

வெங்கதிர் விவச்சு வான்என உரைப்போன்
விளங்குவை வச்சுத மனுவை
அங்கண்மா ஞாலம் புகழ்தரும் கூற்றை
அரும்திறல் யமுனையை அளித்து
பொங்குநன் மனையாள் சாயை ஓர் உருவாம்
பூவையைப் புணர்ந்தபின் சனியை
தங்கும் ஓர் பெயர்ச்சா வன்னியாம் மனுவை
தபதியென் பாளொடும் உயிர்த்தான். 1421

வழங்கிய கதிர்சேர் அரியமா என்போன்
மானிடர் தமைமகிழ்ந்து அளித்தான்
விழைந்திடும் புதல்வர்ப் பெறாதவன் பூடா
விளம்பிய தக்கன்முன் இயற்றும்
முழங்குஅழல் வேள்வி அடைந்துபல் இழந்த
முறைமையால் வேள்விகள் தொறும்சீர்
தழைந்துநுண் மாவே மாந்தும்என் றுஉரைத்து
தவமுனி பின்னரும் சாற்றும். 1422

3. இந்திரன் விச்சுவரூபனைக் குருவாக கொள்தல்

வலிகெழும் அசுரர்தம் குலத்து மங்கையை
பொலிதரும் மலர்த்தொடை புனைந்து வேட்டிடும்
தொலைவுஅறு புகழ்த்துவட் டாஎ னும்பெயர்
மிலைகதிர்க்கு உதித்தனன் விசுவ ரூபனே. 1423

உயர்ந்தவளான குரோதவசை என்பவள் பாம்புகளைப் பெற்றாள். வேல் போன்ற கண்களைப் பெற்ற அரிஷ்டை, விஞ்சையர்களைப் பெற்றாள். சீர்மை உடைய இளை என்பவள் மரங்கள், செடிகள், கொடிகள் முதலானவற்றைப் பெற்றாள். கொடி போன்ற காஷ்டை என்பவள் இரண்டு குளம்புகள் இல்லாத விலங்குகளைப் பெற்றாள். 1420

ஒளி வீசும் கதிர்களை உடைய விவச்வான் எனப்படுபவன். புகழ் ஓங்கிய வைவச்வத மனுவையும், அகன்ற பெரிய உலகங்கள் புகழும் யமனையும் பெற்றான். மேலும் அரிய வலிமை உடைய யமுனையையும் பெற்றான். அத்தியின் பிள்ளையான இந்த விவச்வான் சாயாதேவியை மணந்த பின்னர் அவள் மூலம் சனி பகவானையும் சாவன்னிய மனுவையும் பெற்றான். இவனுக்கு தபதி என்னும் பெண்ணும் பிறந்தாள். 1421

ஒளிமிகுந்த அரியமா என்பவன் மனிதர்களைப் பெற்றான். புதல்வர்களைப் பெறாதவன் பூஷா ஆவான். தக்கன் செய்த வேள்வியில், மாவையே தன் அவியுணவாகப் பெற்று உண்டவன் இந்த பூஷாவே ஆவான். பல்லிழந்த காரணத்தால், பூஷா எல்லா வேள்விகளிலும் மாவையே உணவாகப் பெறுவான். 1422

இவ்வாறு தக்கன் படைத்த வற்றை விவரித்த சுக முனிவர் பரீட்சித்திடம் மேலும் கதையைத் தொடர்ந்தார்.

3. இந்திரன் விச்வரூபனைக் குருவாக கொள்தல்

எல்லையற்ற புகழ்பெற்ற துவஷ்டா, வலிமையுடைய அசுரர் குல மங்கையான ரசனை என்பவளை மலர்மாலை சூட்டித் திருமணம் செய்து கொண்டான். அவர்கள் இருவருக்கும் விசுவரூபன் பிறந்தான். 1423

வெற்றிவேல் அவுணர்தம் குலத்து மெல்லியல்
முற்றுஇழை அணிமுலை முயங்கிச் செங்கதிர்
பெற்றஅம் மதலையைப் பெட்பின் கொண்டனன்
கொற்றவாள் இந்திரன் குரவன் ஆகவே. 1424

என்றலும் மதிக்குடை இறைவன் என்னைகொல்
துன்றுசெங் கதிரினுக்கு உதித்த தோன்றலை
குன்றுஎறி கொற்றவன் குரவன் ஆக்குதல்
மன்றநீ உரைக்கஎன வழங்கும் மாதவன். 1425

அண்ணல்வாள் இந்திரன் அரும்பு அவிழ்ந்தபூ
தண்நறா பிலிற்றுபொன் தருவின் நீழலின்
எண்இலா விஞ்சையர் இயக்கர் கின்னரர்
விண்ணவர் அடிதொழ வீற்றி ருந்தனன். 1426

முழுமறை அந்தணன் முன்னம் எய்தலும்
செழுநிதிச் செருக்கினால் தெரிய கிற்றிலன்
எழுகலன் இருந்தனன் எரிபொன் தாதுஉண
மழலைவண் டரற்றுதார் வான வேந்தனே. 1427

அண்ணல்அம் குரவன் வந்து அணுகல் லாயிரம்
கண்ணுடை இந்திரன் கண்டிலான் எனின்
மண்ணிடை காண்பர்கொல் வந்துஉற் றார்தமை
எண்அரு நிதிச்செருக்கு எய்தி னார்ஆரோ. 1428

பனிஇரு விசும்புஅகம் பொலியப் பைந்தொடை
வனைமுகில் இந்திரன் வைக நோக்கினன்
இனிதுஇவன் அசிருப்பு என்று போயினன்
தனிமறை யோன்என சாற்று மேன்மையான். 1429

ஏயதன் அரசிருப்பு எழுந்து வல்லையே
போயினன் குரவன் என்று அறிந்து போயுழி
ஆயிரம் கண்ணினான் அடையக் கண்டிலன்
மாயையின் மறைந்தனன் மறைவல் லாளனே. 1430

வெற்றி தரும் வேல் ஏந்திய அசுரர் குல மங்கை ஆன ரசனையின் மார்பைத் தழுவிக் கலந்த துவஷ்டா, விச்வரூபனைப் பிள்ளையாகப் பெற்றான். அவனே வெற்றி வாள் தரித்த இந்திரனுக்குக் குரு ஆனான். 1424

மேற்கண்டவாறு சுக முனிவன் பரீட்சித்திடம் கூறியதும் சந்திர வட்டக்குடைக் கீழ் நின்ற மன்னன், முனிவரிடம் கீழ்க்கண்டவாறு கேட் டான். 1425

"சிவந்த ஒளி வீசும் துவஷ்டாவுக்குப் பிறந்த பிள்ளையான விசுவரூபன் இந்திரனுக்கு குருவான விதம் எப்படி என்று நீங்கள் கூறுக". உட னே சுகமுனிவரும் பின்வருமாறு விவரிக்கலானார்.

தலைமை பெற்ற தேவராஜன் இந்திரன், தேன் துளிர்க்கும் பூக்கள் மலர்ந்த கற்பக மரச்சோலை நிழலில், எண்ணற்ற வித்யாதரர்கள் , இயக்கர்கள், கின்னரர்கள் அடி தொழ, வீற்றிருந்தார். 1426

வேதங்கள் அனைத்தையும் அறிந்த பிரஹஸ்பதியாகிய குரு இந்திரன் முன்னே வந்தான். செல்வச் செருக்குடைய இந்திரன், குருதேவர் வந்ததைக் கண்டும் தெரியாதவன் போல் நடித்து, எழுந்திருந்து மரியாதை தராமல் உட்கார்ந்திருந்தான். வண்டு அமரும் பூமாலை அணிந்த இந்திரன் குருவை இவ்வாறு அவமதித்தான். 1427

தேவர்கள் தலைவனான ஆயிரம் கண்ணுடைய இந்திரனே தன் குருநாதன் வந்ததைக் கவனியாமல் இருந்தால், பூவுலகில் செல்வச் செருக்குடையவர் தம்மை அணுகினோரைக் கவனிப்பார்களா? 1428

தேவலோகம் முழுவதும் காணும்படி, மாலை சூடிய இந்திரன் தன் ஆச்சாரியர் முன்னே உட்கார்ந்ததைப் பொறுக்காத குரு, "இவன் அரசாட்சி இருக்கிற இனிமை தான் என்னே!" என்று மனம் வருந்திக் கூறி விட்டு, அங்கிருந்து அகன்றான். இந்த பிரஹஸ்பதி அன்றோ, வேதவிற்பன்னன் ஆவான் ! 1429

ஆயிரம் கண்களுடைய இந்திரன் தன் குருவான பிரஹஸ்பதி சென்றதை அறிந்து அரசிருப்பிலிருந்து எழுந்து சென்றான். வேதங்களில் வல்ல பிரஹஸ்பதி மாயையால் தானும் மறைந்தார். 1430

எள்ளினன் குரவனை இகல் அழிந்திடும்
அள்இலைத் தருநிழல் அமர்விண் வேந்து எனா
வெள்ளிதன் அருள்பெறு வெய்ய தானவர்
ஒள்அழல் வாள்அமர் உடற்றி னார்அரோ. 1431

இந்திரன் உடைந்துபோய் ஏழ்இ ரும்பொழில்
தந்தவன் அடிமலர் தாழ்ந்து நிற்றலும்
அந்தணன் அருள்பெறாது அடைந்தது இத்திறம்
வந்ததுஎன் செருக்குஎன வழங்கல் மேயினான். 1432

அலர்கதி ரருள்சுதன் விசுவ ரூபனே
நிலவுஉமிழ் கவிகையாய் நினக்கு நேரிலா
குலமறை தெரிக்கும் ஓர் குரவன் ஆம் எனின்
இலகுவாள் அமர்விறல் எய்தும் என்றனன். 1433

விழுப்புகழ் இந்திரன் விரிஞ்சன் நாடு ஒரீஇ
அழல்கதிர் மைந்தனை அடைந்து பன்முறை
வழுத்தினன் அதிதியான் வந்துற் றேன்அருள்
கொழித்திடு குரவன் ஆக என்று கூறுவான். 1434

இளையவர் ஆயினும் இனிய கல்விமிக்கு
உளர்எனின் மூப்பினர்க்கு உரித்து இறைஞ்சுதல்
தளைஅவிழ் தார்இமை யோர்கள் தம்மொடும்
வளர்புகழ் மறைவலோய் வணங்கு வேன் என்றான். 1435

மகபதி சொற்றலும் செல்வம் வந்துறின்
அகம்மிக மகிழுப அசடர் ஆகலின்
தகவுஇலை எனக்கு இஃது எனினும் சாற்றிய
நிகர்அறும் உனது உரை நீக்க வல்லனோ. 1436

என உரை பற்பல இயம்பி இன்னன
துனியறு கதிரவற் குஉதித்த தொல்புகழ்த்
தனிமறை தேர்ந்தவன் சார்ந்து வைகினன்
குனிசிலை வானவர் குரவன் ஆகவே. 1437

சுக்கிராச்சாரியார் அருளைப் பெற்ற அசுரர்கள் இதனை அறிந்தனர். கற்பக மர நிழலில் அமர்ந்த இந்திரன், தன் குருநாதனை இகழ்ந்தானே! இதனால் தேவாசுரப் பகைமை தொலைந்து விடுமோ!' என்று எண்ணிய அவர்கள், தேவர்களுடன் போர் செய்தனர். 1431

போருக்கு ஆற்றாத இந்திரன் மனம் உடைந்தான். உலகத்தைத் தனக்கு அளித்த பிரமதேவன் திருவடிகளில் விழுந்து வணங்கினான். "பிரஹஸ்பதியின் அருள் பெறாத காரணத்தாலேயே உனக்குச் செருக்கு ஏற்பட்டது. இந்திரனே!" என்று பிரமன் கூறினான். 1432

பிரமன் இந்திரனை நோக்கி, "ஒளி உடைய துவஷ்டாவின் மகனான விச்வரூபனே உனக்குக் குரு ஆவான். நிலாப் போலும் வெண்மையான கொற்றக் குடை உடைய இந்திரனே! விசுவரூபன் உனக்கு குரு ஆனால், போரில் உனக்கு வெற்றி கிடைக்கும்" என்று கூறினான். 1433

புகழுடைய இந்திரன் பிரமதேவனிடம் விடை பெற்ற பின்னர், ஒளி உடைய துவஷ்டாவின் மகனான விச்வரூபனை அடைந்தான். "நான் விருந்தாளியாக உம்முன்னே வந்துள்ளேன். என்னை நீங்கள் ஏற்று என் குரு ஆக வேண்டும்" என்று வேண்டினான். 1434

"இனிய கல்வி மிக உடையோர். ஆனால், அவர் இளையவர் ஆயினும் முதியவர்கள். அவர்களைப் பணிதல் உரியதே ஆகும். புகழ் வளர்ந்த வேத வல்லுனரே! மாலை அணிந்த தேவர்களுடன் நான் உம்மை வணங்கக் கடவேன்" என்று இந்திரன் விசுவரூபனிடம் கூறினான். 1435

இதனைக் கேட்ட விசுவரூபனிடம், "செல்வம் வந்ததும் மனத்தில் மகிழ்ச்சி அடைந்து செருக்கடைதல் அரசர் இயல்பே. அது போல் நான் இருத்தல் ஆகாது. தேவகுரு ஆகும் தகுதி எனக்கில்லை என்றாலும் உமது வேண்டுகோளை மறுக்கவும் இயலவில்லை" என்று பதில் கூறினான். 1436

மேற்கண்டவாறு அடக்கமுடன் பேசிய விசுவரூபன் இந்திரன் வேண்டுகோளை ஏற்றான். வெறுப்பில்லாத துவஷ்டாவுக்குப் புதல்வனான விசுவரூபன் வேதத்தில் வல்லவனாய், வில்லேந்திய இந்திரனுக்கும் தேவர்களுக்கும் குரு ஆனான். 1437

போக்குஅறு பொன்னுலகு அளிக்கும் புங்கவன்
ஆக்கிய குரவன்ஆங்கு அறத்தின் ஆழியான்
காக்களன் றுஉரைத்தசொல் கவயம் தாங்கினன்
தாக்கினன் அவுணரைச் சமரின் வென்றனன். 1438

மழைஉறழ் வண்கையாய் எனலும் மன்னனும்
விழைமக பதிக்குவண் விசுவ ரூபன்முன்
கழறுநா ராயண கவயம் சொல்முறை
மொழிதிஎன் றுஉரைப்பமெய்ம் முனிவன் கூறுவான். 1439

4. நாராயண கவசம்

அரும்புனல் படிந்து புனிதமுற்று அங்க
நியாசம் ஆங்கு அடவுடன் இயற்றி
திருந்திய மறைசொல் கரநியா சமும்தான்
செய்ம்முறை திருத்தகப் புரிந்து
வரம்தரு மாயன் மலர்ப்பதத் துணையை
மனத்துஇடை மருவுற கருதி
புரந்தரன் தனக்கு விச்சுவ ரூபன்
புகலும்மால் கவயத்தைப் புகல்வாம். 1440

மலர்ந்தசெங் கமல மலர்மகள் மறுஆர்
மார்வமும் வாளிகே டகம்வாள்
இலங்குஎழில் ஆழி வளைகதை பாசம்
இருஞ்சிலை தரித்தஎண் கரமும்
நலம்தரு கலுழன் புயத்துஇனி துஉறைந்த
நளினமென் பாதமும் ஆக
வலம்தர முன்வந்து எங்கும்எப் பொழுதும்
மாயவன் கருணையின் காக்க. 1441

புகழ்பெரு மீன்உரு எடுத்த புங்கவன்
அகம்மகிழ் தந்துநீர் அடைந்து காக்கஇச்
சகம்மிசை வாமனன் சார்ந்து காக்கஎர்
மிகுநிலம் அளந்தமால் விசும்பில் காக்கவே. 1442

குற்றமில்லாத தேவருலகைக் காக்கும் இந்திரனுக்கு அவன் குருவாகிய விசுவரூபன் 'நாராயண கவசம்' என்னும் தோத்திரமந்திரத்தை உபதேசித்தான். 'அறக்கடலான நாராயணன் நம்மைக் காக்க' என்னும் அதனை ஜபித்த இந்திரன் போரில் அசுரர்களை வென்றான். 1438

"மேகம் போல் கொடையில் சிறந்த மன்னனே! விசுவ ரூபன் இந்திரனுக்குக் குருவான விதத்தை எடுத்துக் கூறினேன்" என்று சுகமுனிவர் பரீட்சித்திடம் கூறினார். அதனைக் கேட்ட பரீட்சித்து முனிவரை நோக்கி, "அந்த நாராயண கவசம் பற்றி அடியேனுக்கு எடுத்துக் கூறுக" என்று வேண்டியதும் சுகமுனிவர் மேலே தொடர்ந்தார். 1439

4. நாராயண கவசம்

இந்திரனுக்கு விச்வரூபன் உபதேசம் செய்த நாராயண கவசத்தைப் பற்றிக் கூறுவோம்.

விச்வரூபன் முறைப்படி நீராடித் தூய்மையுடன் அங்கன்யாசம், கரன்யாசம் ஆகிய இரண்டையும் செய்தான். பிறகு வரங்களை அருள்கிற திருமால் திருவடிகளை மனத்திலே நன்றாகத் தியானம் செய்த பின்னர் 'நாராயண கவசம்' என்னும் தோத்திர மந்திரத்தைக் கூறினான். 1440

மாயவன் ஆகிய திருமால், மலர்ந்த தாமரையில் தங்கும் திருமகளைத் தன் மார்பில் கொண்டவன். அம்பு, கேடகம், நாந்தகவாள், ஒளி வீசும் சுதர்சனச் சக்கரம், பாஞ்சசன்னியச் சங்கு, கதை, சார்ங்கவில் ஆகியவற்றைத் தாங்கிய கரங்களுடன் வந்து நின்று எம்மைக் காப்பாற்றுவானாக. நன்மை செய்யும் கருடன் தோள்கள் மீதேறி வந்து, தன் திருப்பாதங்களைக் காட்டி எம்மைக் காப்பானாக. 1441

புகழ் பரவும்படி மச்சாவதாரம் எடுத்து நீரில் தங்கி, உலகங்களைக் காத்த திருமால் எம்மைக் காப்பானாக. வாமனனாய் வந்த பெருமான் காப்பானாக. உலகளந்த திருமால் ஆகாயத்தில் நின்று எம்மைக் காப்பானாக. 1442

பன்னிய வரைமுதல் பலஅ ரண்களில்
துன்னுவெம் சமத்திடை தோன்றல் உற்றுமுன்
மன்னுவெம் கனகனை மாய்த்த மைந்து உடை
நன்னலம் சேர்நட மடங்கல் காக்கவே. 1443

வெற்றிஆண் கேழலாய் விளங்கு மேலவன்
பெற்றிடு வழிதொறும் பெரிது காக்கவே
நல்தவ நரன்சொல்நா ராய ணன்நணி
உற்றவர் பற்றுஎலாம் ஒழித்து காக்கவே. 1444

தசரதன் மதலையாம் இராமன் தன் துணை
இசைதரு இளவலோடு இனிது இயைந்துஇரும்
திசைதொறும் திசைதொறும் செப்பும் கால்எலாம்
விசயம்வந் துஉறநனி விரைந்து காக்கவே. 1445

கழைதிகழ் கார்வரைக் கவினும் சாரலின்
மழைதவழ் குவட்டின்மீ மருவு போழ்துஎலாம்
பழமறை மொழிதரு பரசு ராமன்உள்
விழைவொடு குறைவுஅற விரைந்து காக்கவே. 1446

சிந்தையுள் மகிழ்தத்தாத் திரையர் தீங்குஅற
மந்திரம் நவில்வுழி வந்து காக்கவே
பந்தமில் இடபன்ஆம் பைந்து ழாய்முகில்
சந்ததம் குளிரில் தாபத்தில் காக்கவே. 1447

கருதரும் சீர்திகழ் கபிலன் அன்பொடும்
இருவினைக் கட்டுஅறுத்து இனிது காக்கவே
தரைபுகழ் மறைதெரி சுனற்கு மாரன்தான்
பொருமதன் தருதுயர் போக்கி காக்கவே. 1448

வெறுப்பொடு பகைக்குழு மிடையும் வெம்கொலை
மறத்தினில் பொலிதரு வழிகள் தோறும்வந்து
அறத்தினை நிறுவிய அயக்கி ரீவன்ஆம்
மறைப்பொருள் ஆயவன் வந்து காக்கவே. 1449

கொடிய இரணியனைக் கொன்ற பலம் பொருந்திய நரசிம்மப் பெருமான் நன்மைகளைத் தந்து காப்பானாக. மலைகளிலும் மதில் களைச் சுற்றியும் நடக்கும் கொடிய போரில் எங்கள் முன் தோன்றி, நாங்கள் வெற்றி பெறுமாறு அருள் செய்து எம்மைக் காப்பானாக. 1443

பெரிய வராஹ வடிவத்தில் தோன்றிய திருமால் நாங்கள் செல்லும் வழிகளில் எல்லாம் எம்முடன் நின்று காப்பாற்றட்டும். நாரநாராயணன் ஆகத் தோன்றிய திருமால், எங்கள் ஆசைகளை எல்லாம் நீக்கிக் காப்பாற்றுவானாக. 1444

தசரதன் புதல்வனாய்த் தோன்றிய இராமபிரான் தன் மனைவி சீதையுடனும், இசைந்த இளையவனான இலக்குவனொடும் எங்களைக் காப்பாற்றுவானாக. அழைக்கும் பொழுதெல்லாம், திசைகள் எங்கும் நாங்கள் வெற்றி அடையும்படி அருள் செய்து காப்பாற்றுவானாக. 1445

மூங்கில் வளர்ந்ததும் மேகம் தவழ்வதும் ஆகிய மலைப் பக்கங்களிலே சிகரங்களிலே நாங்கள் தங்கும் பொழுதெல்லாம் வேதம் வல்ல பரசுராமனாக அவதரித்த திருமால் எங்களைக் காப்பானாக. 1446

மந்திரங்களை நாங்கள் உச்சரிக்கும் பொழுதெல்லாம் சிந்தை மகிழும் தத்தாத்திரேயர் எங்கள் தீமைகளைப் போக்கிக் காப்பாற்றுவானாக. குளிர் காலத்திலும் கொடிய வெப்ப காலத்திலும் ரிஷபதேவராகத் தோன்றிய திருத்துழாய்த் திருமால் காப்பாற்றுவானாக. 1447

கபிலதேவராகத் தோன்றிய திருமால் எங்கள் இருவினைகளைப் போக்கி, நாங்கள் பந்தம் அறும்படி காப்பாற்றுவானாக. உலகம் புகழுமாறு விளங்கிய சனத்குமாரன், மன்மதனிடமிருந்து எங்களைக் காப்பானாக. 1448

தர்மத்தை நிலை நாட்டிய ஹயக்ரீவ மூர்த்தியாகிய திருமால், மிகுந்த வெறுப்புடன் எங்களைத் தாக்கும் பகைவரிடமிருந்து காப்பாற்றுக. கொடிய கொலைகள் நிகழும் பாவ மார்க்கத்திலிருந்து எங்களைக் காப்பாற்றுக. 1449

கார்அதிர் கடல் எனக் கவின்செய் வண்ணனை
பாரத சமர்த்தலை பரவ வென்றிசெய்
சாரதி தனைத்தொழும் சமயத்து இன்அருள்
நாரத முனிவரன் நயந்து காக்கவே. 1450

கொழும்துளவு அணிந்தபைங் கூர்மம் ஆயமால்
அழுந்தவெம் நரகுஉறாது அருளின் காக்கவே
வழங்குதன் வந்திரி ஆய மாயவன்
விழைந்தனன் ஆதியில் விரைந்து காக்கவே. 1451

போற்றுசீர் வேள்விஅம் புருடன் போந்துஎனை
கூற்றுஅடாது அன்புளம் கொண்டு காக்கவே
ஏற்றநல் பலம்முனம் ஏயும் ராமன்வெம்
சீற்றம்வந் துழிநனி சிறந்து காக்கவே. 1452

விடல்அரு நான்மறை வியாதன் என்பவன்
ஒடிவுஅறு விஞ்சைமிக் குஉதவிக் காக்கவே
படிமிசை அறம்தர பௌத்தன் ஆகும்மால்
கொடியவர் மதம்குறு காது காக்கவே. 1453

பரிஉரு எடுத்துஅறம் பரிக்கும் பச்சைமால்
உரைகலித் தீமைவந் துஉறாது காக்கவே
வருபகல் அறுவகை ஆக்கி முந்துகூறு
அருளொடு கேசவன் அடைந்து காக்கவே. 1454

வலம்செய இரண்டுஎன வகுத்த கூற்றில்ஆன்
குலம்புரந்து அளித்தகோ விந்தன் காக்கவே
பலம்தர மூன்று எனப் பகுத்த கூற்றினில்
நலஞ்செய்நா ராயணன் நயந்து காக்கவே. 1455

பொருஇலா நான்கு எனப் புகன்ற கூற்றினில்
பருதிநேர் சக்கர பாணி காக்கவே
அரியசீர் ஐந்து என அறைந்த கூற்றினில்
வரும்மது சூதனன் மகிழ்ந்து காக்கவே. 1456

இடிபோல் முழங்கும் கடல் நிறத்தைக் கொண்ட திருமாலாகிய கண்ணனைப் பாரதப் போரில் அர்ச்சுனன் வழிபட்டு நின்றான். தேரோட்டி ஆக நின்ற அப்பெருமான் அவனுக்கு வெற்றி அளித்தான். அந்தக் கண்ணபெருமான் நமக்கு நாரதர் வடிவில் நின்று நம்மைக் காப்பாற்றட்டும். 1450

திருத்துழாய்க் கொழுந்துகள் சூடிய திருமாலே கூர்மாவதாரம் எடுத்தார். அப்பெருமான் நாங்கள் கொடிய நரகத்தில் ஆழ்ந்து அழியாமல் காப்பாற்றட்டும். ஆதிகாலத்தில் தன்வந்திரியாக அவதாரம் செய்த திருமால், விரைந்து வந்து எங்களைக் காப்பாற்றட்டும். 1451

யாக புருஷன் ஆன திருமால் என் மீது அன்பு கொண்டு யமனிடமிருந்து என்னைக் காப்பாற்றுவானாக. பலராமனாகத் தோன்றிய எம் பெருமான் கோபத்திலிருந்து என்னை மீட்டுக் காக்கட்டும். 1452

நான்கு வேதங்களை முறைப்படுத்துவதற்காக வியாச பகவானாக அவதரித்த திருமால் குறையாத பல வித்தைகளை எமக்குக் கற்பித்துக் காப்பாற்றுவானாக. உயிர்க்கருணை ஆகிய அறம்நிலை பெறச் செய்வதற்காக, பௌத்தனாக அவதாரம் செய்த திருமால், கொடியவர்களான அகங்காரம் மமகாரம் வராமல் எம்மைக் காக்க. 1453

தருமத்தைக் காப்பதற்காகக் கல்கி அவதாரம் எடுக்கப் போகும் கரிய நிறத் திருமால் கொடிய கலிபுருஷனனின் தீமைகள் எம்மை அணுகாத படி காப்பாற்றுவானாக. பகற் பொழுதை ஆறு பகுதிகளாகக் கொள்ளுங்கால் அதன் முதற்பகுதியில் கேசவனான எம்பெருமான் எம்மைக் காப்பாற்றுக. 1454

பகற்பொழுதின் இரண்டாவது பகுதியில் எம்முடன் நின்று கோகுலத்தைக் காத்த கோவிந்தன் காப்பாற்றுவானாக. மூன்றாவது பகற்பொழுதில் நாராயணன் காப்பானாக. 1455

பகற்பொழுதின் நான்காவது பகுதியில் சூரியனை ஒத்த சுதர்சனச் சக்கரத்தை ஏந்திய பெருமான் காப்பானாக. ஐந்தாவது பகுதியில் மதுசூதனன் மகிழ்ச்சியுடன் காப்பானாக. 1456

புரைதப ஆறுஎனப் புகன்ற கூற்றினில்
உரைதரு மாதவன் உவந்து காக்கவே
இரசனி முகத்தினில் இந்தி யங்களுக்கு
அரசன் என்று உரைக்கும் மால் அடைந்து காக்கவே. 1457

பன்னுமுச் சகம்தரு பற்ப நாபியான்
துன்னிய நிசிநடு சூழ்ந்து காக்கவே
உன்னுறும் அபரமா நிசியில் ஒண்புகழ்
மன்னிய திருமறு மார்பன் காக்கவே. 1458

களிகொள்சீர் வைகறைக் கலந்து வண்புகழ்
வளர்சநார்த் தனன்உளம் மகிழ்ந்து காக்கவே
விளையும்நற் சந்திகள் தோறும் மிக்குவந்து
அளிசெய்தா மோதரன் அடைந்து காக்கவே. 1459

கற்றையம் கதிர்அழல் கடவுள் காட்டகம்
முற்றும்வெவ் அரில்களை முருக்கு மாறுபோல்
அற்றம் இல்அயிற்படை அரசுஎன ஆழி தான்
உற்றபல் பகைதுமித் துவந்து காக்கவே. 1460

ஆடக மணித்தொடி அமலன் அங்கைசேர்
கேடகம் சமர்க்குஎதிர் கெழுமி னோர்விழி
மாடகம் மறைப்பமாற் றலரை மாய்த்துஇரும்
கூடுஅகத் துஉறைந்தகூர் வாளும் காக்கவே. 1461

கொடியன பூதம்வெம் கூளியே முதல்
இடிநிகர் தெவ்வினை இரிய நூறிநுண்
பொடி எனப் பிதிர்த்துநம் புனிதன் பூங்கைசேர்
தடிஒரு குறைவுஅறச் சார்ந்து காக்கவே. 1462

சூதுசெய் பகைக்குழு துணுக்கம் எய்திஇப்
பூதலத்து இரிதர வெருட்டிப் பூவுறை
மாதுஉளம் விரும்புகார் வண்ணன் வாயில்வைத்து
ஊதுவெண் சங்கம்உள் உவந்து காக்கவே. 1463

குற்றமற்ற பகலின் ஆறாவது பகுதியில், பெருமை மிகுந்த மாதவன் உவந்து நம்மைக் காப்பானாக. பிரதோஷ காலமான இரவின் முதற் பகுதியில், இந்திரியங்களுக்கு அரசன் ஆன இருடீகேசன் நம்மைக் காப்பானாக. 1457

இரவின் நடுநிசியில் மூவுலகங்களையும் காப்பாற்றும் பத்மநாபன் காப்பானாக. நள்ளிரவின் பிற்பகுதியில் ஸ்ரீவத்ஸன் ஆகிய திருமால் காப்பானாக. 1458

வைகறைப் பொழுதில் ஜனார்த்தனன் நம்மைக் காப்பாற்றுவானாக. காலையும் மாலையும் சந்தியா வேளைகளில் தாமோதரன் காப்பானாக. 1459

காட்டிலுள்ள புதர்களை அக்னிதேவன் கொளுத்துவது போல, கூர்மையான ஆயுதங்களுக்கெல்லாம் அரசன் போன்ற சக்கராயுதம் பகைவர்களை நாசம் செய்து எம்மைக் காப்பாற்றட்டும். 1460

பொன் ஆபரணம் அணிந்த திருமாலின் திருக்கையில் உள்ள கேடயம், போர் செய்ய வந்த பகைவரவர்களின் கண்களை மறைத்து எம்மைக் காப்பாற்றட்டும். உறையுள் தங்கி உள்ள திருமாலின் வாளாயுதம் எம்மைக் காக்க. 1461

புனிதனான திருமாலின் பூப் போன்ற கையில் உள்ள கதை ஆகிய தடி, கொடிய பூதங்களையும் கூளி முதலிய பேய்களையும் இடியைப் போலத் தாக்கிப் பொடி செய்து அழித்து எம்மைக் காக்கட்டும். 1462

மலர்மகளான லக்ஷ்மி தேவி விரும்பும் மேகநிறத் திருமால் தம் வாயில் வைத்து ஊதும் வெண் சங்காகிய பாஞ்சசன்யம், சூது செய்யும் பகைவர் கூட்டம் நடுங்கி உலகெங்கும் ஓடிப் போகச் செய்து, எம்மை அவர்களிடமிருந்து காப்பாற்றட்டும். 1463

பங்கயச் செங்க ணானை பரிக்கும்வெம் பறவை வேந்து
பொங்கும்இன் அருளின் வந்துஎப் பொழுதினும் உவந்து காக்க
தங்குஅகம் புறம்பு திக்கு சாற்றிய விதிக்கு மேல்கீழ்
எங்கும்எப் பொழுதும் வந்துற்று எறுழ்நர மடங்கல் காக்க. 1464

மாயவன் நாம ரூபம் வாகனம் வாளி ஆதி
ஆயஐம் படைகள் சேனைக்கு அணிதிகழ் தலைவன் என்னும்
தூயவன் பிராணன் புந்தி சொல்மனம் ஆக்கை யோடு
மேயஇந் தியங்கள் தம்மை விருப்பொடு மிடைந்து காக்க. 1465

என்றுஅரி உருவம் ஆகி இலகும்இக் கவயம் தன்னை
வென்றிசெய் அமரர் வேந்தே விருப்பொடு தாங்கு வாயேல்
வன்திறல் பகைஞர் தம்மை வல்லையின் வேறி என்னா
ஒன்றுவிச் சுவரூ பன்தான் உரைத்தனன் உவந்து மாதோ. 1466

தழைந்தசீர் விண்டு ராத! சாற்றும்இக் கவயம் தாங்கி
மொழிந்திடு கவுசிகப் பேர் முதுமறை யோன்முன் கான்போய்
விழைந்தயோ கத்தின் ஆக்கை விடுத்தனன் வீடு சேர்ந்தான்
கழிந்தஅவ் யாக்கை என்பைக் கடந்தனன்ஆகி வான்மேல். 1467

செஞ்சிலை நுதலா ரோடு
சித்திர ரதன்என்று ஓதும்
விஞ்சையன் போக லாலே
வீழ்ந்தனன் தரையில் வீழ்ந்து
வஞ்சம்இல்தவம்செய் வால
கில்லியர் மாற்றம் தன்னால்
எஞ்சும்அவ் யாக்கை என்பை
இருநதி மடுத்துப் போனான். 1468

இணையில்இக் கவயம் தாங்கும்
இருந்தவன் யாக்கை என்பை
அணிதிகழ் வானின் மேலும்
கடப்புஅரி தாயது என்னின்
மணிநிற வண்ணத்து அம்மான்
வடிவமாம் கவயம் பெற்றோர்
தணிவுஅறு பெருமை எம்மால்
சாற்றுதற்கு எளிதுஒன்று அன்றுஆல். 1469

தாமரைக் கண்ணனான திருமாலின் வாகன மாகிய கருடன் அருளுடன் வந்து எப்பொழுதும் உவப்புடன் எம்மைக் காப்பாற்றட்டும். வலிமை பெற்ற நரசிம்ம மூர்த்தி அகத்தும் புறத்தும் கோணத் திசைகள் எட்டும், மேலும், கீழும், எங்கும், எப்பொழுதும் வந்து எம்மைக் காக்கட்டும். 1464

மாயனான திருமாலின் நாமம், வடிவம், வாகனம், அம்பு முதலிய ஐம்படைகள், சேனைத் தலைவரான தூயவர் விஷ்வக்சேனர் ஆகியோர் யாவரும் எங்களுடைய மூச்சுக் காற்று, புத்தி, சொல், மனம், உடம்பு, ஐம்புலன்கள் ஆகியவற்றை விருப்பமுடன் காப்பாற்றட்டும். 1465

"இந்த நாராயண கவசம் என்பது திருமால் வடிவமாகவே அமைந்தது. தேவர் தலைவனான இந்திரனே! இதனை நீ மனத்துடன் ஏற்றுக் கூறுவாயேல், வலிய பகைவர்களை வென்று விடுவாய்" என்று விச்வரூபன் கூறினான். 1466

சுகமுனி பரீட்சித்தை நோக்கி, "சீர்மை உடைய விஷ்ணுநாதனே! இக் கவசத்தைக் கூறிக் கௌசிகன் என்னும் வேதியன் வனத்தில் யோகாப் பியாசம் செய்து வீடு அடைந்தான். அவன் உடம்பு எலும்புடன் கீழே கிடந்தது. 1467

இவ்வாறு தரையிற் கிடந்த கௌசிகன் எலும்புக் கூட்டுக்கு நேர்மேலே ஆகாயத்தில் சித்திரரதன் என்னும் வித்யாதரன் தன் மனைவியரோடு செல்லும்படி ஆயிற்று. இவ்வெலும்பின் சக்தியாலே அவன் விண்ணில் பயணம் செய்ய முடியாமல் தரையில் இறங்கும்படி ஆயிற்று. இதனைக் கண்ட வாலகில்லியர் அந்த வித்தியாதரனிடம் அவ்வெலும்பை சரஸ்வதி நதியில் போடுமாறு பணித்தனர். அவனும் அவ்வாறே அதனை நதியில் போட்டான். 1468

"நாராயண கவசத்தைத் தாங்கிய கௌசிகன் உடம்பே இத்தனை சக்தி பெற்றிருந்தது என்றால், மணிநிற வடிவம் கொண்ட திருமால் கவசத்தைத் தாங்குபவர் எவ்வளவு பேறு பெறுவார்கள்! அதன் பெருமை எம்மால் விவரிக்க இயலாதது" என்று சுகர் கூறினார். 1469

இனையநற் கவயம் கேட்போர்
இயம்புவோர் யாவ ரேனும்
வினைசெய்வெம் பிணியின் ஒன்றார்
வேண்டிய பெறுப என்றும்
குனிதிரைக் கடல்சூழ் பார்மேல்
கொடும்பகை இலராய்க் கங்கைப்
புனல்வழி பொலங்க ழல்தாள்
புனிதனைப் பொருந்து வார்ஆல். 1470

குரவனை வணங்கி விண்ணோர்
குழுவொடு குலிசத்து அண்ணல்
உரைசெயும் கவயம் தாங்கி
உறுபகை கடந்து வானத்து
அரசுசெய்து இருந்தான் என்ன
அருந்தவச் சுகன்என்று ஓதும்
பொருஅரும் புகழின் மிக்கான்
புகன்றனன் மீட்டும் சொல்லும். 1471

5. விச்சுவரூபனையும் விருத்திரனையும் கொல்லுதல்

திசைபுகழ் மன்னபுத் தேளிர் இங்ஙனம்
நசைஉறு குரவன்ஆம் நாம வேதியன்
அசுரர்தம் மருமகன் ஆக லான்அவர்
இசையுறக் கரந்துஅவி ஈந்து வைகினான். 1472

விறல்உடை இந்திரன் வேள்வி ஆற்றுழி
மறைநவில் வேள்விநல் அவிம றைத்துமற்று
அறைகழல் அவுணர்தேத்து அளிப்ப நோக்கினன்
பொறைஇலன் குரவன்மேல் புழுங்கி வெட்டினான். 1473

நஞ்சுவாய் வழிபட நாகம் போலும் என
வெஞ்சினம் தலைக்கொளீஇ வேந்தன் வெட்டலும்
செஞ்சுடர் வழங்கிய செம்மல் முத்தலை
அஞ்சிறைப் பறவையாய் அற்று வீழ்ந்தவே. 1474

இந்த நாராயண கவசத்தைக் கேட்போர், கூறுவோர் யாவரும் கொடிய வினைப் பயனின்று மீள்வார்கள். கடல் சூழ்ந்த இவ்வுலகில், பகை இல்லாதவராய் அவர்கள் வாழ்ந்து, கங்கை பிறந்த திருமாலின் பாதங்களை முடிவில் அடைவார்கள். 1470

இந்திரன் நாராயண கவசத்தால் தேவர்களுடன் இனிதாகப் பகை இன்றி வாழ்ந்தான். அசுரர்களை வென்று தேவலோகத்தை ஆட்சி செய்தான். 1471

மேற்கண்டவாறு புகழ் மிகுந்த சுகமுனிவர் பரீட்சித்திடம் கூறினார். மீளவும் கதையை அவர் தொடர்ந்தார்.

5. விச்வரூபனையும் விருத்திரனையும் கொல்லுதல்

சுகமுனிவர் பரீட்சித்திடம், "திக்குகளில் புகழ் பெற்ற மன்னனே! கேட்பாயாக" என்று மேல் கதை கூறலானார்.

புகழுடைய விசுவரூபன் அசுரரின் மருமகன் ஆதலால், தான் தேவகுருவாய் இருந்தும், வேள்வியில் அவிஉணவை மறைவாக வஞ்சித்து அசுரர்களுக்குக் கொடுத்தான். 1472

இந்திரன் வேள்வி செய்தபொழுது, வேதத்தில் கூறப்பட்டபடி அதன் நல்ல அவிர்ப்பாகத்தை எடுத்து விசுவரூபன் அசுரர்க்குக் கொடுத்தான். இதனைக் கண்ட இந்திரன் சினங்கொண்டு அவனை வெட்டினான். 1473

நஞ்சைக் கக்கும் நாகம் போன்ற இந்திரன் சினத்துடன் விசுவரூபன் தலையை வெட்டியதும், ஒளிக் கதிருடைய துவஷ்டாவின் மகனான விசுவரூபனின் மூன்று தலைகளும் சிறகுடைய பறவைகளாக விழுந்தன. 1474

வைத்துறு சோமமும் மதுவும் அன்னமும்
முத்தகை வாயினின் முறையின் மாந்துவான்
அத்தலை கபிஞ்சலம் கலவிங் கம்மணித்
தித்திரி யாகவும் சேணிற் போயவால். 1475

மலைத்தவாள் இந்திரன் மறைவல் லாளனை
கொலைத்தொழில் புரிந்தஅக் கொடிய பாவம் வந்து
அலைத்திட அஞ்சலி யான கையொடு
நிலத்தினை அளந்ததாள் நினைத்து நீத்தனன். 1476

மற்றுஅது மண்ணிடை உவரும் வார்திரை
எற்றுநீர் யாற்றிடை நுரையும் மின்றளிர்
உற்றமா மரத்தினில் பிசினும் மொள்ளொளிப்
பொற்றொடி மாதர்பால் பூப்பும் ஆயதே. 1477

கருவுறு மகளிர்தம் கணவ சேரவும்
வருகுழி பூமியின் மல்கி தூரவும்
தருமிசைக் குறைக்கினும் தளிர்க்க வும்புனல்
பெருகவும் அவன்வரம் பெட்பின் ஈந்தனன். 1478

சுந்தர முடிச்சுர பதிதன் தோன்றலை
கந்தரம் தடிந்திடல் காதல் தாதை கேட்டு
இந்திர சத்துரு எழுந்து கொல்கஎன்
மந்திர நவின்றுநெய் வழங்கி னான்அழல். 1479

துய்யதா ரணிதுவட் டாஎ னும்பெயர்ச்
செய்யவெங் கதிரினால் சீற்றம் மீக்கொளா
நெய்பொழி நீடுஅழல் நின்று தோன்றினன்
வெய்யதோர் விடம் என விருத்தி ராசுரன். 1480

எல்கடை எழுசெவ்வான் என்னும் குஞ்சியான்
சொல்கடை புக்கநற் சுடர்செய் கண்ணினான்
பல்கடை வாய்இதழ் தின்னும் பண்பினான்
வில்கிடை நாள்தொறும் வீங்கு மெய்யினான். 1481

சோமம் அருந்திய தலை கபிஞ்சலப் பறவை ஆகவும், மது அருந்திய தலை கலவிங்கப் பறவையாகவும், அன்னம் உண்ட தலை தித்திரிப் பறவையாகவும் தூரத்தே பறந்து போயின. 1475

வேதம் வல்ல அந்தணன் ஆன விச்வரூபனைக் கொலை செய்த கொடிய பாவம் இந்திரனைப் பற்றியது. அதனால் அவன் வருந்தி உலகளந்த திருமால் பாதத்தில் பணிந்து வணங்கினான். பெருமான் அருளால் அப்பாவம் அவனை விட்டகன்றது. 1476

இந்திரன் செய்த அப்பாவமே பூவுலகில் உவர் மண்ணாகவும், அலை கொழிக்கும் ஆற்றில் நுரை ஆகவும், மரங்களில் பிசினாகவும், ஒளி கூடிய அழகிய பெண்களுடைய மாத விடாயாகவும் வடிவம் கொண்டது. 1477

இவற்றை மாற்றுவதற்கான வரங்களை இந்திரன் தந்தான். அதன்படி, மாதவிடாய் பெறும் பெண்கள் கணவர்களைக் கூடினால் கருப்பம் அடைகிறார்கள். பூமியில் பள்ளங்கள் மேடாக நிறைகின்றன. மரங்களை வெட்டினால் அவை துளிர்க்கின்றன. நுரையால் நதி நீர் பெருகுகிறது. 1478

அழகிய கிரீடம் அணிந்த இந்திரன் தன் புதல்வன் தலையை வெட்டியதை அறிந்த தந்தையான துவஷ்டா, இந்திரனைக் கொல்ல விரும்பி வேள்வி செய்தான். அதில் 'இந்திர சத்துருவே எழுந்து வா!' என்று கூறி, மந்திரத்தாலே, நெய் வார்த்து ஓமம் செய்தான். 1479

ஒளி மிகுந்த சூரியனான துவஷ்டா சீற்றத்துடன் நெய் வார்த்து ஓமம் செய்யவும், அந்த வேள்வித் தீயிலிருந்து கொடிய விஷம் போல விருத்திராசுரன் வெளி வந்தான். 1480

பகல் முடிவாகிய மாலைப் பொழுதில் தோன்றும் செவ்வானம் போன்ற சிவந்த தலைமுடியை உடையவன்; சொற்களுக்கு அப்பாற்பட்ட ஒளி மிகுந்த கண்களைப் பெற்றான்; உதடுகளைக் கடிக்கிற அளவு வெளித்தெரியும் பற்களைக் கொண்டவன்; வில் அளவு வளர்வது போல உடம்பு பருக்கும் தன்மையன்; இவ்வளவு சிறப்புகளுடைய விருத்திராசுரன் வெளிப்பட்டான். 1481

பல்கதிர்க் குழவிவெம் பருதி காண்டலும்
வல்இருள் உடைதல்போல் வானு ளோர்எலாம்
ஒல்லையின் உடைதர உருத்துள ழுந்தனன்
மல்லல்அம் பொருப்புஎன மருளும் தோற்றத்தான். 1482

வெஞ்சின உருமூ என வேலை வாய்எழு
நஞ்சுஎன நடந்தஅந் நாம வேலினாற்கு
அஞ்சினன் இந்திரன் அலங்கல் ஆழியான்
கஞ்சநாண் மலரடி கண்ணுற்று ஏத்தினான். 1483

தளிர்க்கும்நல் அருளுடைத் ததீசி என்புஒளி
கிளைக்கும்வச் சிரப்படை ஆக்கிக் கேடுஅற
விளைத்தனை வெஞ்சமர் வெல்க என்றனன்
அளித்துஅழித் துஉலகு எலாம் ஆக்கும் அண்ணலே. 1484

சூட்டுவாள் அரவணைத் துயிலும் தொன்முதல்
தாள்துணை தொழுதுஉயர் ததீசி பால்உறா
வேட்டது நிகழ்த்தினன் விரைசெய் கற்பகக்
காட்டகம் காக்கும்அக் காவல் மன்னனே. 1485

ஆரழல் பட்டுமண் ஆகும் என்புமற்று
ஓர்பொருட் டாகவின் உலகு காவல்செய்
வேரியம் தாரினான் விழையப் பெற்றது
சீரிதுஎன் றுளம்மகிழ் சிறந்திட் டான்அரோ. 1486

நேயஎன்பு இந்திர! நீ கொள் வாய்என
தாயினும் அன்புறு ததீசி என்பவன்
ஏயவெம் கானலில்நீடு நீர்எனும்
காயம்விட்டு அரிகழல் கலந்து மேயினான். 1487

மன்பெரும் சிறப்பினான் மாலை வெண்குடை
மின்பொழி மணிமுடி வேந்தன் நல்குஎனா
என்பும் ஆங்கு அளித்தனன் இருந்த வத்தினோன்
அன்பினர் யாதுமற்று அருள்க லாததே. 1488

ஒளி வீசும் கதிர்களுடைய சூரியனைக் கண்டதும் இருள் அஞ்சி ஓடுவது போல, தேவர்கள் அனைவரும் பயந்து ஓடும்படி விருத்திராசுரன், மல்யுத்தம் செய்யத் தக்க தோள்களுடன் எழுந்தான். 1482

சீறி எழும் இடியைப் போலவும் கடலில் புறப்பட்ட நஞ்சு போலவும் விளங்கிய விருத்திராசுரன் வேலேந்தி வந்ததைக் கண்ட இந்திரன் அவனுக்கு அஞ்சினான். வனமாலையையும் சக்கரத்தையும் தரித்த திருமால் திருவடித் தாமரைகளில் இந்திரன் பணிந்து வேண்டினான். 1483

தன் அடிகளில் விழுந்த இந்திரனிடம், உலகங்களைக் காத்து, அழித்து ஆக்கும் இறைவனான திருமால், "நீ அருள் செய்யும் இயல்புடைய ததீசி என்றும் முனிவனை வேண்டி, அவன் எலும்பையே வச்சிராயுதமாக மாற்றிக் கொண்டு விருத்திராசுரனுடன் போர் செய்து வெற்றி பெறுவாய்" என்று அருளினார். 1484

படங்களுடைய ஆதிசேஷன் மீது பள்ளி கொள்ளும் முதல்வன் ஆன திருமாலை இந்திரன் தொழுது விடை பெற்றான். பின்னர், கற்பகச் சோலை உள்ள தேவருலகைக் காக்கும் அத்தேவேந்திரன், ததீசி முனிவரிடம் சென்று அவர் முதுகெலும்பை யாசித்து நின்றான். 1485

இந்திரன் யாசித்ததைக் கேட்ட ததீசி முனிவர், நம் உடல் எலும்போ இறந்த பிறகு நெருப்பில் பொசுங்கி போகும். இதனால் பயன் என்? தேவருலகைக் காக்கும் இந்திரனே இதனை விரும்புகிறான். இதை விடச் சீரியது வேறெது?' என்று மகிழ்ந்தார். 1486

தாயை விடவும் அன்பு காட்டும் இயல்புடைய ததீசி முனிவர், அன்புடைய 'இந்திரனே! நீ என் முதுகெலும்பை எடுத்துக் கொள்' என்றார். கானல் நீர் போன்ற தன் உடம்பைக் கீழே விட்டு விட்டு அவர் திருமால் திருவடி அடைந்து முக்தி எய்தினார். 1487

வெண்கொற்றக் குடையும் மணி முடியும் பெற்ற சிறப்புடைய இந்திரன் யாசித்ததற்காக, அன்புடனே ததீசி முனிவர் தன் உடல் எலும்பையே ஈந்தார். இதிலிருந்து அன்புடையவர்கள் எதனையும் ஈந்து மகிழ்வர் என்பது தெளிவாகிறதன்றோ! 1488

வெற்புஉகப் பணைத்ததோள் வேந்தன் மேதகு
கற்பகக் கத்திகைக் கடவுள் தச்சனால்
எல்பழுத்து ஒழுகுவெள் என்பு முன்புற
கொல்பழுத்து ஒழுகுவெம் குலிசம் ஆக்கினான். 1489

உவவு வெண்மதியின் உருவு கொண்டுதிகழ்
ஒருத னிக்குடை நிழற்றவெண்
கவரி கால்அசைய வெள்ளி யம்கிரி
கடுக்கும் மால்களி றுஉகைத்து எழா
தவழ்மதுத் தெரியல் மார்பன் வெந்திறல்
தழைத்த வச்சிரம் எடுத்துவாள்
அவுணர் போர்வலம் மடங்க நின்றுஅமரர்
ஆட வெய்யசம ராடினான். 1490

கருத்த ழிந்துஅரி னோடு கின்றசுடர்
காலும் வேல்அவுணர் தம்முகம்
உருத்து நோக்கிஉடல் கொண்டு நீவிர்நனி
ஓடி னாலும்உடல் போதல்மெய்
திருத்து போரிடைமெய் விடுகில் விண்ணடைதல்
திண்ணம் என்றுபல செப்பியே
விருத்தி ராசுரன் நிறுத்தி இந்திரன்
வெருக்கொள் வெவ்வுரை விளம்புமால். 1491

குரவன் ஆகும் மறை யோனை அன்று உடல்
குறைத்து வெய்யபழி கொண்டஉன்
வரவு காணின்நனி தீமை மன்னும் உயிர்
மாய்வை இங்ஙன் உயிர் மாயும்முன்
அரிது பெற்றஒரு குலிசம் விட்டு அதுவும்
அடல்அ ழிந்திடுதல் அறி எனா
உரைசெய்து அம்புவிஅ ளந்த மால்பதம்
உளத்தின் உன்னினன் உணர்த்துவான். 1492

அருந்த வன்செவி அறைந்தி டும்கதை
அகந்தை சிந்தையின் ஒழிந்திட
வரம்த ரும்திரு முகுந்த உந்தியின்
மலர்ந்த பங்கயம் மணந்துபொன்
இருந்த பைந்துளவு அணிந்த மார்பக
எனும்சொல் நாமம் உள்இயைந்துநா
பொருந்த என்று உரை நவின்று எழுந்து உடல்
புரந்த ரன்எதிர் நடந்தனன். 1493

மலை போன்ற தோள்கள் பெற்ற இந்திரன் கற்பகமாலை அணிந்த தேவ தச்சன் ஆன விசுவகர்மாவிடம் சென்றான். ஒளி வீசும் ததீசி முனிவரின் எலும்பை, உலையில் இட்ட ஒளி வீசும் வஜ்ராயுதமாக விசுவ கர்மா ஆக்கிக் கொடுத்தான். 1489

சந்திர வட்டக் குடைக்கீழ் நின்று தேவலோகத்தை ஆளும் இந்திரன் வெள்ளி மலையை ஒத்த ஐராவதம் என்னும் யானை மேலே ஏறி, இருபுறமும் கவரி வீசப் பெறப் போருக்குப் புறப்பட்டான். தேன் துளிர்க்கும் மலர் மாலை அணிந்த அவன் தன் வஜ்ராயுதத்தைத் தூக்கிக் கொண்டு, வாளால் வீசி, அசுரர்களுடன் போர் செய்தான். 1490

போர்க்களம் விட்டு ஓடிய அசுரர்களிடம் விருத்திராசுரன் பின்வருமாறு பேசினான். "அசுரர்களே! நீங்கள் போரை விட்டு ஓடினாலும் உங்கள் உடல்கள் அழியவே செய்யும். போரில் மடிந்தால் வீரசுவர்க்கம் அடைவீர்கள்" இவ்வாறு கூறியபின் அவன் இந்திரனிடம் பேசினான். 1491

"இந்திரனே! உன் குருவான விச்வரூபனைக் கொன்று கொடிய பழி ஏற்றுள்ளாய். உன் வரவால் எங்கும் தீமை நிலைக்கும். என்னிடம் போரில் உயிர் விடுவாய். உன் வஜ்ராயுதமும் தன் வலிமை இழந்து விடும்" என்றான். இதனைக் கேட்ட இந்திரன் திருமால் திருவடிகளைத் தியானித்து அவனுக்கு அறிவுறுத்தினான். 1492

கௌசிகன் வரலாறு மூலம் விச்வரூபன் தெரிவித்ததை இந்திரன் நினைவு கூர்ந்து விருத்திராசுரனுக்கு அறிவுறுத்தினான். "அசுரனே! நீ சிந்தையில் அகந்தையை ஒழித்து விடு. 'வரந்தரும் முகுந்தா! கொப்பூழ்த் தாமரை உடைய பெருமானே! திருத்துழாய் மலர் மார்பா!' என்று திருமாலின் திருநாமங்களை நாவால் கூறு" என்றான். அசுரன் கேட்காததால், இந்திரன் அவனுடன் போரைத் தொடர்ந்தான். 1493

கடல்ள னகடல் கலக்க வெம்பிஎழு
காள கூடம்என மன்றல்நாள்
மடல்அ விழ்த்துஅளி மிழற்று தார்அமரர்
மருக வெண்பிறை மருட்டுகோட்டு
அடல்வி ளைத்தஅயி ராவ தப்பகடு
அதிர்ந்தி டகதைகொடு எற்றிடா
உடல்சி னத்துஅவுணன் ஆடல் வெங்களம்
உழக்கி னான்வளை முழக்கினான். 1494

அச்சம் உற்றுஅமரர் பாற வெண்திரைஅ
டங்க உண்டுஎழும் மடங்கல் போல்
நச்சுஎ யிற்றுரவு போல்வெ குண்டுஎதிர்
நடந்து வேழநுதல் எற்றலும்
பச்சி ரத்தம் உமிழ் கின்ற வெய்யகதை
பாரில் வீழஅழல் காலும் ஓர்
வச்சி ரப்படையின் மண்டு போர்அவன்
வலக்க ரம்துணிய வெட்டினான். 1495

பொருகை நன்றுஎன வியந்து செங்கண்அழல்
பொழிய வெம்கதை எடுத்துமேல்
வருகை கண்டுஅமரர் ஓட வச்சிரம்
மணிக்கை நின்றுவிழ எற்றிடா
முருகை உண்டுஅளி அலம்பும் மென்முகை
முறுக்குஅ விழ்ந்ததொடை மார்பினான்
ஒருகை கொண்டுகளி மதம் எடுத்து ஒழுகும்
ஓடை மாஎன உடற்றினான். 1496

வச்சி ரப்படை நிலத்தின் வீழ்வுறலும்
வாச வன்படை எடுத்திலான்
கச்சை அம்களிநல் யானை நின்றுஎதிர்
கடாவு கின்றிலன் இருத்தலால்
இச்செ ருக்குஅற உவந்தது என்படை
எடுத்தி என்றுதிறல் அவுணர்கோன்
பச்சை மால்மறையின் உச்சி வைத்தஅடி
பரவி நின்றுஇஃது பகருவான். 1497

கடலும் கடலும் கலந்தது போலப் போர் நடக்கையில், விருத்திராசுரன் காளகூட நஞ்சு போலச் சினம் கொண்டு களத்தில் இறங்கினான். சங்கை ஊதி இந்திரனை போருக்கழைத்தான். மடல் திறந்த பூக்களால் ஆன மாலை அணிந்த இந்திரன் மேலே சாடி, அவன் வாகனமான ஐராவதம் என்னும் யானை அதிரும்படி அசுரன் தன் கதையாலே அதை அடித்தான். 1494

தேவர்கள் அஞ்சி ஓடினார்கள். ஊழிக் காலத் தீயைப் போலவும் நஞ்சுடைய நாகம் போலவும் சீறிய விருத்திராசுரன் ஐராவதயானையின் நெற்றியில் அடித்தான். அதனைக் கண்ட இந்திரன் தன் வஜ்ராயுதத்தால் அசுரனின் வலது கையை வெட்டி வீழ்த்தினான். 1495

"நீ போர் புரியும் முறை மிக நன்றாயிருக்கிறது" என்று ஏளனம பேசிய அசுரன் தன் மறுகரத்தில் கதையைத் தூக்கியவாறு இந்திரனைத் தாக்க வந்தான். இந்திரனின் வஜ்ராயுதம் உடனே கீழே விழுந்தது. தேன் சொட்ட வண்டு அமரும் பூமாலை சூடிய அசுரன் தன் ஒரு கையுடன் போரிட வந்தது, மதத்தைப் பெருக்கிக் கொண்டு வரும் துதிக்கை உடைய யானை போல் காட்சி தந்தது. 1496

தன் வஜ்ராயுதம் தரையில் விழுந்ததும் இந்திரன் போரிடுவதை நிறுத்திக் கொண்டான். ஐராவத யானை மீது ஏறி வரவும் இல்லை. அதனைச் செலுத்தாமல் கர்வம் அடங்கி நின்றது ஏனோ என்று ஐயம் உற்ற அசுரர் தலைவனான விருத்திரன், திருமால் திருப்பாதங்களை மனத்தில் தியானித்துப் பின்வருமாறு பேசினான். 1497

வெற்றி உற்றிடினும் வீரம் அற்று ஒழிய
வெய்ய தோல்விநனி மேவினும்
கற்ற மேலவர் மகிழ்ச்சி யோடுஉறு
கலக்கம் ஓர் சிறிது காண்கலார்
கொற்ற மாயவன் அளித்த மாயைசெய்
குணங்கள் என்பர்உல கோர்கள்தாம்
பற்றி நின்றசெயல் ஒன்ற னால்மரப்
பாவை பெற்றசெயல் போலுமே. 1498

நாக மீதுநட நவிலும் மாயன் அருள்
நண்ணு வோர்கள்சம மாகவே
சோக மோடுநலம் நாடு வார்கள்எனில்
சொல்லும் மாயன்அருள் அன்பனே
மாக நாடுடைய மான வேலஅவ
மானம் என்று மனம் நாணல்என்
போக என்றுரைசெய் ஆறு உணர்ந்து உடல்
புழுங்கி னான்அவி விழுங்கினான். 1499

வாள்வி ரிந்துஒழுகு வச்சி ரப்படை
எடுத்து மன்னுதிறல் அவுணர்கோன்
தோளி னோடுதொடி சேர் இடக்கையும் ஓர்
துண்டு பட்டுவிழ வெட்டியே
காள மேகம்ஒரு வெள்ளி யம்கிரி
கலந்து தாமரை மலர்ந்த போல்
தாள்உ லாவுகர வெள்ளை மாவின்மிசை
தங்கு வான்அமர் தொடங்கினான். 1500

தருக்கும் வெஞ்சமர் உழந்த வாளவுணர்
தலைஅ ழிந்திட விளைத்தபோர்ச்
செருக்கும் விண்ணவர் செருக்க ளத்தில்எதிர்
செயலும் நோக்கியிமை தீதர
கருக்கும் வெம்கனல் கடைக்க ணின்றுஒழுகு
கால வேல்அவுணன் உலகுஎலாம்
வெருக்கொ ளும்படி எடுத்து வேழமொடு
வென்றி வேந்தனை விழுங்கினான். 1501

"மேன்மை உடையவர்கள் போரில் வென்றாலும் மகிழாமல் தோற்றாலும் கலங்காமல் நடுநிலையாகவே இருப்பார்கள். பெருந்தலைவனான திருமால் ஏற்படுத்திய மாயையின் குணங்களே இவை. உலகோர்கள் பற்றி நிற்கும் செயல்கள் எல்லாம் மரப்பாவை செய்யும் செயல்கள் போலவே ஆகும். மாயையே ஆட்டும் கயிறாக உள்ளது. 1498

அன்பனே! வேல் ஏந்திய இந்திரனே! காளிங்க நாகம் மீது நடனம் ஆடிய கண்ண பெருமான் அருள் பெற்றோர்கள், சோகத்தையும் மகிழ்ச்சியையும் ஒன்றாகவே கொள்வார்கள். ஆகையால் தேவராஜனே! நீ அவமானம் அடைந்ததாக வெட்கப் பட வேண்டாம். போகலாம்". 1499

இப்படி விருத்திரன் பேசியதைக் கேட்ட இந்திரன் மனம் புழுங்கினான்.

ஒளி மிகுந்த வஜ்ராயுதத்தைக் கையில் தூக்கிய படி இந்திரன் விருத்திராசுரனின் இடக் கரத்தையும் வெட்டி வீழ்த்தினான். மேகம் போன்ற இந்திரன் வெள்ளி மலை போன்ற ஐராவதத்தின் மேலே அமர்ந்து தன் தாள்களாகிய தாமரை மலர்ந்திடப், போரை மறுபடியும் தொடங்கினான். 1500

இறுமாப்புடன் இந்திரன் போரில் அசுரர்கள் தலைகளை வெட்டி வீழ்த்தினான். தேவர்கள் செருக்கைக் கண்ட அசுரர்கள் கொதித்து எழுந்து எதிர்த்தனர். இவற்றைக் கண்ட விருத்திரன் சினம் கொண்டு, தீப் பறக்க விழித்தான். உலகமே அஞ்சும்படி. உடனே அவன், ஐராவதத்துடன் அதில் அமர்ந்த இந்திரனை வாயால் விழுங்கினான். 1501

கிளர்ந்த செம்பொன்முடி அண்ட கோளகை கிழித்தி டத்திசை புயங்களால்
அளந்த வெந்திறல் விருத்தி ராசுரன் அகட்டின் ஓர்புடை படைக்கையால்
பிளந்து எழுந்தனன் இரட்டை வெண்பிறை பிறங்கு கோட்டுமத மாவொடும்
விளைந்த தேறல்பொழி கற்ப கத்தொடை மிலைந்த கொற்றவய வேந்தனே.
1502

விருத்தி ராசுரன் வெந்தலை துணிஎன விளம்பி
மருத்த ழைந்ததார் வாசவன் வச்சிரம் விடுத்தான்
உருத்து அவன்தலை ஒருபரு வத்தினில் அறுப்ப
திருத்து ழாய்முகில் பதத்தினில் காந்தியாய்ச் சேர்ந்தான். 1503

உலகு ளோரெலாம் காண்குற அவுணர்கோன் ஒளியாய்
இலகு மால்பதம் இயைதலும் இமையவர் முதலோர்
அலகி லாஇடர் போயது என்று அலர்மழை பொழிந்தார்
மலர்செய் பூந்தொடை வாசவன் மகிழ்ந்திலன் மாதோ. 1504

6. விருத்திரனைக் கொன்ற பழி நீங்கப் பெறல்

என்று கூறலும் யாவரும் மகிழ்ந்து இனிதுஇருப்ப
வென்றி சேர்தவ விறல்படை இந்திரன் மகிழாது
அன்று வைகியது என்கொல்என்று அரசர்கோன் வினாவ
நன்று நன்றுநின் வினாஎன நல்தவன் நவில்வான். 1505

விறல்மி குந்துஎழு விருத்தி ராசுரன் தனை வீட்டி
அறம்வ ளர்ந்திட அருளுதி அரசவென் றுஉரைக்கும்
நிறைபெ ருந்தவ முனிவர்சொல் கேட்டலும் நிணம்ஆர்
கறைஉ றும்படை ஆயிரம் கண்ணவன் கழறும். 1506

முன்னம் ஓர் மறை யோன்தனை முனிந்துமாய்த் தமையால்
துன்னும் வெம்பழி தொடர்தர நடந்துஉளை வுஉற்றேன்
இன்னம் வெம்பழி ஈட்டுதற்கு இசைகிலேன் என்ன
பன்னும் நான்மறை அந்தணர் பழுதுஅற பகர்வார். 1507

தன்னை விழுங்கிய விருத்திராசுரனின் அடிவயிற்றைத் தன் வேலால் பிளந்து கிழித்து அதிலிருந்து இந்திரன் வெளி வந்தான். தேன் பொழியும் கற்பகப் பூமாலை அணிந்த தேவேந்திரன்! வெண்பிறைகள் போன்ற கொம்புகளை உடைய ஐராவதத்துடனேயே அசுரன் வயிற்றிலிருந்து வெளி வந்தான். 1502

வெளி வந்த இந்திரன் தன் வஜ்ராயுதத்தை நோக்கி, 'விருத்திரனின் கொடிய தலையை வெட்டு'என ஆணை இட்டு விடுத்தான். அப்படியே வஜ்ராயுதத்தால் அசுரன் தலை வெட்டப் பட்டது. ஆயினும், அவ்வசுரன், ஒளி மயமாய்த் திருத்துழாய் மாலை சூடிய திருமால் திருவடிகளை அடைந்தான். 1503

உலகத்தவர் காணும்படி, விருத்திராசுரன், ஒளி வடிவில் திருமால் திருவடி அடைந்தான். தேவர்கள் முதலானோர், 'எல்லை அற்ற துன்பம் இனி அகன்றது, என மகிழ்ந்து பூமாலை பொழிந்தனர். ஆனாலும், பூமாலை அணிந்த தேவேந்திரன் மட்டும் மகிழ்ச்சி அடையவில்லை. 1504

6. விருத்திரனைக் கொன்ற பழி நீங்கப் பெறல்

மேற்கண்டபடி விருத்திராசுரன் கதையைச் சுகமுனிவர் கூறியதும் பரீட்சித்து, "முனிவர் பெருமானே! தேவர்கள் மகிழ்ந்தனர் என்றும் இந்திரன் மகிழவில்லை என்றும் கூறினீர். ஏன் இந்திரன் மகிழ்ச்சி அடையவில்லை?" என்று கேட்டான். 'மன்னனே! உன் வினா நன்று. இதோ அதைக் கூறுகிறேன்' என்று பேசலுற்றார். 1505

நிறைந்த தவமுடைய தேவர்கள் இந்திரனை அணுகி, "வலிமை மிகுந்த விருத்திராசுரனைக் கொன்று தர்மம் தழைக்கச் செய்ய வேண்டும்" என்று வேண்டினார்கள். இரத்தக் கறை படிந்த வேல் ஏந்திய இந்திரன் பதில் கூறினான். 1506

"முன்பே நான் அந்தணனான விச்வரூபனைக் கொன்ற பழி அடைந்து மனம் உளைகிறேன். இன்னம் பழி ஏற்க இசையேன்" என்று இந்திரன் கூறியதும் வேதம் வல்ல தேவர்கள் பதில் கூறினார்கள். 1507

மிக்க பாதகம் இயற்றினும் விறல்பரி வேள்வி
கைக்க டாசலத் தினுக்குஅருள் கண்ணன்மேல் அன்பால்
தக்க நான்மறை யின்வழி ஆற்றிடின் தவிரும்
இக்கொ டுந்தொழி லால்பழி தீர்ப்பது இங்கு அரிதோ. 1508

எனஉ ரைத்திடும் முனிவர் சொற்கு இயைந்தனன் ஆகி
வனைபொ லம்கழல் வாசவன் அவுணன்ன மாய்த்தான்
துனியு றும்பழி பூரியர் தோகையின் உருவாய்
தனிதொ டர்ந்தது நில்லுநில் எனும் உரை சாற்றி. 1509

சார்ந்து வெம்பழி தொடர்வுறத் தனித்தனி ஓடி
ஆர்ந்த நீர்உறும் மானத வாவியம் புயத்தின்
பூந்தண் நாளமுள் ஒளித்தனன் பொன்னுலகு அளிப்பான்
வேந்த! ஆயிரம் பருவமும் வெளியுறாது அன்றே. 1510

அந்த ஆயிரம் பருவமும் அமரர்நாடு அளித்து
வெம்தி றல்படை நகுடன்என் றுஉரைக்குறும் வேந்தன்
இந்தி ராணிபால் காமமுற்று எழுந்துஎழு முனிவர்
தந்த சாபத்தால் மாசுண மாய்த்தரை வீழ்ந்தான். 1511

அன்ன காலையின் அரும்பழி அடாதுமால் அடியை
உன்னி மானத வாவயில் ஒளித்தனன் உறையும்
பொன்னின் வார்கழல் இந்திரன் தனைப்புகுந்து அழைத்து
மன்னு சீர்ப்பரி மகம்புரி வித்தனர் மறையோர். 1512

கையும் வையகம் அளந்த தாளும்இரு
கண்ணும் மென்முறுவல் வதனமும்
செய்ய பங்கயம் நிகர்ப்பு றும்கரிய
செம்ம லைப்பரவி அமரர்கோன்
கொய்உ ளைப்புரவி வேள்வி ஆற்றிமறை
கூறும் வேள்வியின் உதித்தஅம்
மையல் அம்களிறு பொருவு வானைஅமர்
மாய்த்த வெம்பழி அகற்றினான். 1513

"மிகுந்த பாதகங்கள் செய்தாலும் அப் பழிதீர, அசுவமேத யாகம் செய்தால் யானைக்கு அருளிய திருமால் அப் பாவம் தொலைய, கிருபை செய்வான். கொடுந்தொழிலுக்கும் பிராயச் சித்தம் அவ்வேள்வியே என்றார்கள்". 1508

இவ்வாறு தேவர்கள் கூறியதற்கு இசைந்த தேவேந்திரன், விருத்திராசுரனைக் கொன்றான். ஆனால் அந்தப் பழியோ, அவனை ஒரு சண்டாளப் பெண்ணின் வடிவில், பின்தொடர்ந்து 'நில்!நில்!" என்று கூறித் துன்புறுத்தியது. 1509

இவ்வாறு இந்திரனைச் சார்ந்த கொடிய பழி தொடரவும், அவன் அதற்கு ஆற்றாது ஓடி, மானசவாவிக்குச் சென்று அங்குள்ள தாமரைத் தண்டிற்குள் ஒளிந்தபடி ஆயிரம் வருஷங்கள் மறைந்திருந்தான். 1510

அந்த ஆயிரம் வருஷங்களிலும், நகுஷன் தேவருலகிற்கு அரசனாகி ஆண்டான். ஆனால், வலிமை பெற்ற அந்த நகுஷன் தவறான முறையில் இந்திராணியைக் காமுற்றான். ஆகவே ஸப்தரிஷிகள் அவன் கொடிய மலைப் பாம்பாகும்படி சபித்தனர். அச்சாபத்தால் அவன் தேவலோகத்திலிருந்து விழுந்து பூமியில் மலைப்பாம்பானான். 1511

மானச வாவியில் ஒளிந்து வாழ்ந்த தேவேந்திரன், தன் பழியைப் போக்கத் திருமால் திருவடிகளைத் தியானித்து வழிபட்டான். தேவர்கள், அவனிடம் சென்று அழைத்து வந்து, அவன் மூலம் அசுவமேத யாகத்தைச் செய்வித்தனர். 1512

தேவர்கள் அரசனான இந்திரன் திருமாலை வழிபட்டு அசுவமேத யாகம் செய்தான். தாமரையை ஒத்த திருக்கரங்களும் உலகளந்த திருவடிகளும், கமலம் போன்ற கண்களும் புன்முறுவலும் உடைய கரிய திருமால், இந்திரன் செய்த வேள்வியில் தோன்றி, அவன் பாவத்தைப் போக்கினார். வேள்வியில் தோன்றிய விருத்திராசுரனைக் கொன்ற இந்திரனின் பழியும் நீங்கிற்று. 1513

என்ற லோடும்இகல் மன்னர் மன்னவன்
இறைஞ்சி மாமுனிவ! எங்ஙன் ஓர்
குன்றில் வீழ்அசனி யேறு போலஅளி
கோடி மூசிஇசை பாடநாள்
மன்றல்நாறு தொடை மார்பி னான்எறியும்
வச்சி ரப்படையின் மாயும்அவ்
வென்றி வாள்அவுணன் மெய்உ ணர்ந்தது
விளம்புக என்னமுனி விள்ளுவான். 1514

7. சித்திரகேதுவின் கதை

பொங்கு செங்கதிர் போல்தனது ஆழிஅம்
மங்குல் தோய்வட மேரு வலம்கொள
அங்கண் ஞாலம் அளித்தனன் ஆய்கதிர்த்
திங்கள் வெண்குடைச் சித்திர கேதுவே. 1515

உள்ளம் இன்புற்று ஒருபதி னாயிரம்
கள்செய் கோதையர் காமர் இளநலம்
விள்ளல் இன்றி நுகர்ந்து மழலைவாய்ப்
பிள்ளை இன்றி பெரிதுஅஞர் மேயினான். 1516

அன்ன ஊர்தி உயிர்த்தருள் அங்கிரா
என்னை துன்புறல் என்று அடைந்து ஓதலும்
மின்னும் நக்கு விளங்குவை வேல்படை
மன்னர் மன்னன் மனத்துஅஞர் கூறுவான். 1517

தாக முற்றுநீர் பெற்றிலர் தம்அணிப்
போகம் உற்றிலர் போல்மொழி தேனொடு
பாகு பெற்ற ஓர் பாலனை பெற்றிலேன்
ஓகை உற்றிலென் ஒண்நிதி யால் என்றான். 1518

தோற்றும் மைந்தன் துயர்உறல் ஈங்கு எனா
ஆற்றி வேள்வி அவிஅவன் நல்கலும்
மாற்ற ரும்சிறப்பு எய்திய மன்னவன்
கோல்தொ டிக்குக் குழவி பிறந்தது ஆல். 1519

இவ்வாறு இந்திரன் தன் பழி நீங்கப் பெற்றதைச் சுகமுனிவர் பரீட்சித்திடம் கூறினார். மன்னர்களுக்கெல்லாம் மன்னன் ஆன பரீட்சித்து, "முனிவரே! மலை போன்ற விருத்திராசுரன் மேல் இடி போன்ற வஜ்ராயுதத்தை வீசி இந்திரன் கொன்றதை தேவரீர் கூற அறிந்தேன். ஆயின் அந்த விருத்திராசுரன் மெய்ஞானம் பெற்று உய்வடைந்தது எவ்வாறு? கூறி அருள வேண்டும்" என்று கேட்டான். 1514

7. சித்திரகேதுவின் கதை

செங்கதிர் ஒளி வீசும் சூரியன் தன் ஒற்றைச் சக்கரத்துடன் மேகம் தவழும் வடமேருவை வலம் கொள்ளும் அகன்ற இந்த உலகத்தைச் சித்திரகேது என்னும் அரசன் தன் ஆணைச் சக்கரத்தைச் செலுத்தி வெண் கொற்றக் குடைக் கீழ் ஆண்டான். 1515

இந்தப் பேரரசன் பதினாயிரம் இள நங்கையர்களை மணந்து தடையற்ற இன்பம் அனுபவித்து, உள்ளம் மகிழ்ந்து வாழ்ந்தான். என்றாலும் மழலை பேசும் குழந்தைச் செல்வமில்லாமல் துன்புற்றான். 1516

அன்ன வாகனப் பிரான் பிரமனின் புதல்வனான அங்கீரச முனிவர் சித்திர கேதுவிடம் வந்த பொழுது, "உனக்கு என்ன துன்பம் உள்ளது!" என்று கேட்டார். மின்னல் வெட்டும் ஒளி வேல் ஏந்திய மன்னன் தன் மனத்துயரத்தை அவரிடம் கூறினான். 1517

"தாகம் அடைந்தவன் தண்ணீர் பெறாது போல உள்ளேன். அணிகலன்கள் பெற்றும் அவற்றை அணியாதவர் போல, மனைவியாருடன் நான் வாழ்ந்தும், தேன் போல் இனிய மழலை பேசும் குழந்தைகளைப் பெறும் பாக்கியம் இல்லாதவனாக உள்ளேன்" என்று சித்திரகேது ஆங்கிரசரிடம் கூறினான். 1518

ஆங்கிரசர், "மன்னா! வருந்தாதே! உனக்கு மைந்தன் பிறப்பான்" என்று கூறினார். அவர் வேள்வி செய்து அவி உணவைக் கொடுத்தார். அதன் பயனாய் மன்னனின் மனைவிக்குக் குழந்தை பிறந்தது. 1519

கூறும் ஏர்செய் குழவி பிறத்தலும்
வீறு சேர்நிதி மின்பொழி பூண்துகில்
ஆறு கோடியர் அந்தணர்க்கு ஈந்தனன்
மாறு இலாத மணிமுடி மன்னனே. 1520

குழவி ஈன்ற குறுநகைச் செய்யவாய்
மழலை மென்மொழி மாதொடு மானவேல்
உழவன் இன்புற் றுஉறைந்தனன் ஏனையோர்
அழல்உ யிர்த்து உளத்து ஆற்றலர் ஆயினார். 1521

அஞ்சொல் அன்னை அகல மலர்விழி
துஞ்சு கின்ற சுடர்த்தொடித் தோன்றலை
நஞ்சம் ஊட்டினர் வீட்டினர் நஞ்சுதோய்
வெஞ்சி னக்கொலை வேல்அன்ன கண்ணினார். 1522

பெற்ற தாய்எழில் பிள்ளை முலைஉண
உற்று நீகொணர் வாய்என ஓடினள்
இற்ற ஆவி மகவுகண்டு ஏங்கினள்
சொற்ற னள்வந்து அழுது ஓர் தொழுத்தையே. 1523

ஆவி மைந்தற்கு அகன்றதுஅந் தோஎன
தூவி மஞ்ஞையின் தொக்கனர் மாதரார்
காவி உண்கண் கலுழ்தரக் காலவேல்
கோவும் நெஞ்சம் குலைந்துஅழு தான்அரோ. 1524

கரிப்ப தாகினிக் காவலர் தாள்தொழ
பரிப்பது ஆர்இனிப் பாரகம் பாலகன்
மரிப்ப விள்ளும் மலரின் மழலைவாய்
சிரிப்பும் எங்ஙனம் சேர்ந்து இங்கு ஒளித்ததே. 1525

இங்கு இ ராதுஎவண் ஏகினன் சேய்என
மங்கை மாரொடு மன்னவன் மாழ்கலும்
பொங்குஇராகயாழ்ப் புங்கவ னோடுபோந்து
அங்கி ராஎனும் அந்தணன் ஓதுவான். 1526

தந்தை யென்றும் தனயர்கள் என்றும்நல்
சிந்தை அன்பொடு சேர்தலும் தீர்தலும்
நந்து றும்திரு நல்நதி மேல்உற
வந்த நீரும் மணலும் நிகர்க்கும் ஆல். 1527

குழந்தை பிறந்ததும், மாறுபாடில்லாத மன்னன் சித்திரகேது ஆறுகோடி அந்தணருக்குச் செல்வத்தையும், ஒளி வீசும் ஆபரணங்களையும் ஆடைகளையும் தானம் செய்தான். 1520

வேலையே உழவுகோலாய்க் கொண்ட மன்னன் சித்திரகேது குழந்தையைப் பெற்ற இனிய செவ்வாயுடைய தன் மனைவியுடன் இன்பம் அடைந்தான். ஆனால், அவனுடைய மற்றைய மனைவிமார்கள் பொறுக்க முடியாதவராய் நெருப்பைப் போல் பெருமூச்சு விட்டுத் துயரம் அடைந்தனர். 1521

நஞ்சு தோய்ந்த வேல் போன்ற கண்களைப் பெற்ற அந்த மற்றைய மனைவிமார்கள், குழந்தையின் தாய் அகன்ற பொழுது, தூங்கும் குழந்தைக்கு நஞ்சூட்டிக் கொன்றனர். 1522

குழந்தையின் தாய் அதற்குப் பாலூட்டத் தன் வேலைக்காரியைக் குழந்தையைக் கொண்டு வருமாறு கூறினாள். சென்ற வேலைக்காரி குழந்தை இறந்து கிடந்ததை, அழுதபடி வந்து தெரிவித்தாள். 1523

தூவி உடைய மயில் போன்ற அத்தாய், தன் குழந்தையின் ஆவி அகன்றதே என்று அரற்றி அழுதாள். காவி போன்ற அவள் கண்களிலிருந்து கண்ணீர் உகுவதைக் கண்ட மன்னனும் அழுதான். 1524

“யானைப் படை உடைய அரசர்கள் ஆட்சியை எனக்குப் பிறகு இனி யார் பெறுவார்! என் வாரிசான பாலகனை இழந்தேனே! பூப் போன்ற அப்பாலகனின் சிரிப்பை இனி எங்கே பார்ப்பேன்? 1525

என் புதல்வன் இங்கில்லாமல் எங்கே போனானோ? ஐயோ! என் செய்வேன் !" என்று மன்னன் தன் மனைவியுடன் அழுது புலம்பினான். அச்சமயம், யாழ்முனியான நாரதனுடன் ஆங்கிரச முனிவர் அங்கே வந்தார். அவர் கூறியதாவது : 1526

"தந்தை என்றும் மகன் என்றும் அன்புடன் பாசம் கொள்வது நிலை இல்லாதது. ஆற்று நீருக்கும் அது ஓடும் மணற்படுகைக்கும் உள்ள சம்பந்தம் நிலை அற்றது போலவே, இவ்வுறவு முறை ஆகும். 1527

ஒன்றி னால்படைத்து ஒன்றின்அளித்து அதை
துன்றும் ஒன்றின் தொலைத்திடும் ஆழியான்
வென்றி சேர்விளை யாட்டு எனும் மாயைதான்
இன்று நீஇதற்கு என்கொல் இரங்கலே. 1528

மைந்தர் இன்மையின் மாழ்கினை மைந்தனால்
சிந்தை மீதுறும் தீங்குநுன் காதலால்
புந்தி யில்பொருந் தாதுஇவ் வுரைஎன
முந்தை நாள்மொழிந் தேன்நில மன்னனே. 1529

கனவைப் போலவும் கானலின் நீருடன்
தனிசெய் இந்திர சாலத்தைப் போலவும்
மனனில் கற்பனை யான்வரும் யாக்கையை
வினையின் கட்டுஅற மெய்எனல் பாலதோ. 1530

சேய்அரும்பொருள் செல்வம் இவை என
நேயம் வைக்கின் நிகரில் வெருதரும்
ஆயும் கால்இவ் விருப்பறுத்து ஆழிசேர்
மாயன் தாளின் மனம் வைத்தி மன்னனே. 1531

மூல மாமுதல் தேவர் கடக்கிலாக்
காலம் யாவர் கடக்கவல் லார்என
சீல நன்மொழி பற்பல செப்பவும்
மாலை வெண்குடை மன்னன் மயங்கினான். 1532

ஆய காலை அருளுடை நாரதன்
போய ஆவி அழைத்துப் புவியரசு
ஏயு மாறுஉட லெய்துதி தந்தையும்
தாயு மாழ்கித் தளர்ந்தனர் என்றனன். 1533

மைப்புயலை கிழித்துஎழு நுண் மின்னுப்போல் மாய்பிறவி
உப்புறுவெண் திரைப்பரவை உறுமணலிற் பலவாம்ஆல்
எப்பிறப்பில் தந்தைதாய் இன்று இரங்கி அழுகின்றார்
செப்புதியால் மறைவல்லோய் தெள்ளிதின்யான் அறிந்திலனே. 1534

திருமால் செய்யும் விளையாட்டே மாயை எனப்படும். அந்த இறைவன் ஓர் உருவில் படைக்கிறான்; மற்றொரு உருவில் அழிக்கிறான். ஓர் உருவில் காப்பாற்றுகிறான். அவன் திருவிளையாடலை அறிய இயலாது. இன்று உன் குழந்தை இறந்ததற்கு ஏன் இவ்வாறு துயர் உறுகிறாய்? 1528

மைந்தனே! குழந்தை இல்லாத பொழுது இல்லையே என்று துன்புற்றாய். ஆசைக்கு ஆட்பட்டு வருந்தாதே என்று முன்பேயே நான் உன்னிடம் உரைத்தேன். மைந்தன் உண்டானால் தீமை வரும் என்றும் கூறினேன். இப்பொழுது மைந்தனை இழந்து துன்புறுகிறாய். ஆசை வயப்பட்ட உனக்கு நான் கூறும் அறிவுரை பொருந்தாது. 1529

இந்த உடம்பு என்பதே வெறும் மாயை ஆகும். கனவு, கானல் நீர், இந்திரஜாலம் ஆகியவை போன்ற மனதின் கற்பனையே அது. கர்மங்களின் பந்தம் உண்மை என்று சொல்லத்தக்கதா? 1530

குழந்தைகள், செல்வம் ஆகியவற்றில் அன்பும் பற்றும் வைத்தால், அச்சம் உண்டாக்கித் துன்பமே விளையும். ஆகவே ஆராய்ந்தால், இத்தகைய விருப்பங்களை அறுத்து, சக்கரக்கையன் ஆகிய திருமாலிடத்தே மனம் வைப்பதே சிறந்தது. 1531

மூலமாகிய முதல் தேவர்களாலும் காக்க இயலாத காலம் என்னும் தத்துவத்தை யாரால் தான் கடக்க இயலும்?" 1532

இவ்வாறு சீலமுள்ள நல்வார்த்தைகளை முனிவன் கூறி மன்னனுக்கு உபதேசம் செய்தான். மன்னன் மயங்கினான்.

அப்பொழுது அருளுடைய நாரதர், குழந்தையை விட்டுப் போன ஆவியை அழைத்துச் செத்த உடலுக்குள் போகுமாறு கேட்டார். 'தந்தையும் தாயும் வருந்துவதால், ஆவியே! நீ உடலுக்குள் போ!' என்றார் 1533

அவ்வாறு கூறிய நாரதரை நோக்கி, ஆவி பேசியது வருமாறு :-

"மை நிற மேகத்தைக் கிழித்து ஒளிரும் மின்னலைப் போல், இப்பிறவி ஆகும். இறப்பதற்கே ஆன இப்பிறவி என்பது உப்புக் கடலின் கரையில் உள்ள மணல் பரப்புப் போல் கணக்கற்றது. முனிவரே! நீர் கூறிய இந்தத் தந்தையும் தாயும் எப்பிறப்பில் அழுகின்றார். இதுவா முதல் அழுகை? தெளிவாக இது பற்றிக் கூறுக. 1534

தந்தை இவன் தநயன் இவன் எனச் சாற்றும் முறைதிறம்பி
வந்து உதிப்பார் பிறவிதொறும் வழங்குபணிப் பொருள் போன்றே
அந்தம்இலா ஆனந்த அறிவுஉருவாம் அச்சுதன்தாள்
நந்தல்இல தரம்எனவே நாடிஅறி யாதவர் ஆல். 1535

விட்ட உடல் இனிதுவந்து மேவகிலேன் யான்என்று
கட்டுரைசெய் துஉள் ஆவி கண் இறந்து நடந்திடலும்
பட்டநுதல் களியானைப் படைமன்னன் படும்துயர் தீர்ந்து
உள்தெளிவு வந்து எய்தி உரைத்தி அறன்எனத் தொழுதான். 1536

தொழுது உரைத்த வேந்தனுக்குத் துகள்தீர்நா ரதமுனிவன்
மழைநிகரும் திருமேனி வாசுதே வனைத் தொழுவல்
அழிவில்அறி வாய்நிறைந்த அநந்தனையான் தொழுவல் எனும்
விழுமியமந் திரம்ஒன்று விருப்புடன் அங்கு உரை செய்தான். 1537

மந்திரம் ஈது கூறின் மன்னவ வைகல் ஏழின்
வெம்திறல் அரவின் வேந்தின் விழிஅருள் பெறுதி என்னா
அந்தணன் அங்கி ராவோடு அருந்தொடை யாழின் வல்லோன்
பைந்துழாய்ப் பரமன் சீர்த்தி பாடினன் படர்ந்தான் மன்னோ. 1538

செஞ்சுடர்ப் பருதி அன்ன சித்திர கேது என்போன்
நெஞ்சுவந்து எழுநாள் காறும் நிகரில்அம் மறையை ஓதி
எஞ்சல்இல் மகதி நல்யாழ் இருந்தவன் உரைத்த வாறு
நஞ்சு உமிழ் பாந்தள் வேந்தை நலம்பெற கண்ணுற் றான்ஆல்.
1539

எண்ணுறும் யோகர் சித்தர் இருந்தவர் இமையோர் சூழ
நண்ணிய அநந்தன் நீல நல்துகில் மருங்கும் கோல
வெண்நிற உருவும் தாளும் மேதகு கருணை வெள்ளக்
கண்ணும்அங்கு அரசன் கண்டு களித்தனன் பரவல் உற்றான்.
1540

அளவுஇலா அண்டம் எல்லாம் அணுஎனத் தாங்கி என்றும்
விளைதரும் அளவை என்றும் விளம்புபேர் அநந்தன் ஆகி
களைகணாய் ஒளியாய்ச் சித்தாய் கருதுமுத் தொழிலும் செய்தே
தளர்வுஇல் ஆ னந்த மான தற்பரா போற்றி போற்றி. 1541

தந்தை இவன், பிள்ளை இவன் எனக் கூறப்படும் முறைகள் மறு பிறவியில் மாறும். பிறவி தோறும் மாறி மாறி வந்து உதிப்பார்கள். ஆபரணப்பொன், பல்வேறு அணிகலன்களாக மாறுவது போல, இப்பிறவி மாறுபாடு அடைகிறது. முடிவில்லாத ஆனந்த அறிவு வடிவான அச்சுதன் திருமாலே அழிவற்றவன் என்பதை அறியாதவரே பிறவி எடுக்கின்றனர். 1535

ஆகவே விட்ட உடலை, இனி நான் பொருந்த மாட்டேன்" என்று குழந்தையிலிருந்து பிரிந்த ஆவி புகன்றது. இவ்வாறு பேசிய ஆவி கண்பார்வைக்குப் படாமலே மறைந்தது. இதனை உணர்ந்த யானை போன்ற மன்னன் சித்திரகேது தெளிவு பெற்றான். 'நாரத முனியே! எனக்குத் தர்மத்தைக் கூறும்' என்று முனிவரைத் தொழுதான். 1536

இவ்வாறு மன்னன் தொழுததும் குற்றமற்ற நாரதர், "மழை நிறப் பெருமான் வாசுதேவனை நீ வணங்கு. அழிவற்ற ஞான வடிவமுடைய அனந்தனை நீ வணங்கு" என்று நமஸ்காரம் செய்யும் மந்திரத்தை அவனுக்கு உபதேசித்தார். 1537

"மன்னா ! இந்த நமஸ்கார மந்திரத்தை ஏழு நாள்கள் நீ ஜபம் செய்தால், ஆதிசேஷன் அருள் பெறுவாய்" என்று கூறிய நாரதர் திருத்துழாய் சூடிய திருமால் பெருமைகளைப் பாடியபடி அகன்றார். ஆங்கிரச முனிவரும் சென்றார். 1538

சிவந்த ஒளி வீசும் சூரியன் போன்ற சித்திரகேது ஏழு நாள்கள், நிகரற்ற அந்த வேத மந்திரத்தை ஓதினான். மகதி யாழ் ஏந்திய நாரத முனிவர் உரைத்தபடியே முடிவில், நஞ்சுமிழும் நாகங்களின் வேந்தனாகிய ஆதிசேஷன் தோன்றினான். 1539

தியானம் செய்யும் யோகிகள், தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் புடை சூழ, ஆதிசேஷனாகிய அனந்தன், நீல ஆசை புனைந்தவனாய், வெள்ளை நிறத்துடன் தோன்றினான். மன்னன் சித்திரகேது, ஆதிசேஷன் திருவடிகளையும் கருணை வடிவையும் கண்டு களித்துத் தோத்தரித்தான். 1540

"அளவற்ற அண்டங்கள் எல்லாவற்றையும் அணுவாகத் தாங்குபவனே! எப்பொழுதும் மேன்மேலும் வளர்பவனே! அனந்தன் என்பவனே; எல்லாவற்றுக்கும் ஆதாரம் ஆனவனே! ஒளியே! ஞானமயமானவனே! ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் ஆற்றுபவனே! தற்பரனே! போற்றி! போற்றி! 1541

பல்பல அண்டம் யாவும் பவளவாய் வைத்து நுங்கும்
தொல்பழ மறைகள் தம்மில் துணியும்மெய்ப் பொருளா நின்ற
அல்கல் இல்ஆயி ரம்தோள் அரும்பெறல் அடிகள் மேவி
புல்கிநீள் விழிஉ றங்க பொலியணை யாவாய் போற்றி. 1542

அத்தன்மால் அயனே ஆய
ஆயிரம் தலையோய் போற்றி
தத்துவம் பலவாய் ஒன்றாய்
தயங்குவோய் போற்றி என்ன
வித்தியா தரர்கட்கு எல்லாம்
வேந்துஎன உறைதி என்று
முத்தியில் புகுத்தும் உண்மை
மொழியும்நன் குஉணர்த்தி னான்ஆல். 1543

செப்பும்அவ் அனந்தன் தாளை சித்திர கேது வாழ்த்தி
ஒப்பில்விம் சையர்தம் வேந்தாய் ஒளிகஞுன் மானம் ஊர்ந்து
துப்பு உறழ் கனிவாய் மாதர் தோள்நலம் இனிது மாந்தி
மைப்புயல் தவழும் வெள்ளி மலையகம் காவல் பூண்டான். 1544

அவிழ்பொலம் கடுக்கை வேணி
அரன்அந்தண் சனகன்ஆதி
தவமுது முனிவர் கேட்ப
தத்துவம் உரைத்தல் நோக்கி
கவிர்இதழ் மயிலை யாரும்
காண ஓர் மருங்கு வைத்து
நவில்வது எஞ் ஞானம் என்ன
நகைத்து உரை யாடி னான்ஆல். 1545

நகைத்து உரை யாடல் நோக்கி நாமவேல் அவுணன் ஆக என்று
அகத்துறு வெகுளி பொங்கி அம்பிகை சபிக்க அன்னோன்
பகைத்தலால் வந்த என்றும் பற்றினால் வந்த என்றும்
சுகத்தொடு துக்கம் எண்ணார் துகள்இலார் என்று சொல்வான். 1546

பவளம் போன்ற வாயில் பற்பல அண்டங்களை விழுங்கும் மூர்த்தியே! பழைய வேதங்கள் யாவும் விவரிக்கும் சத்தியப் பொருளான திருமாலுக்கு யோக நித்திரை செய்ய அருமையான படுக்கையாய்ப் பணி செய்பவனே! ஆயிரம் தோள்கள் பெற்ற அத்திருமால் தழுவுதற்குரியவனே! போற்றி! போற்றி ! 1542

சிவனாய்த் திருமாலாய்ப் பிரமனாய் உள்ளவனே! ஆயிரம் தலைகள் பெற்றவனே! பலவாயும் ஒன்றாயும் உள்ள தத்துவப் பொருளே! போற்றி! போற்றி" ! இவ்வாறு சித்திரகேது தோத்திரம் செய்தான். ஆதிசேடன் அவனுக்கு அருள் செய்து, "மன்னவனே! நீ இனிமேல் வித்தியாதரர்களுக்கு எல்லாம் அரசனாக விளங்குவாய்" என்று வரம் தந்தான் முக்தி பெறும் தத்துவ ஞானத்தையும் அவனுக்கு அளித்தான். 1543

இவ்வாறு ஆசி வழங்கிய ஆதிசேடன் திருவடிகளைச் சித்திரகேது வாழ்த்தினான். ஒப்பற்ற வித்தியாதரர்களின் அரசனாக விமானம் ஊர்ந்தான். பவளம் ஒத்த பெண்களுடன் இல்லற இன்பம் விழைந்தான். மைநிறமுடைய மேகம் தவழும் வெள்ளி மலையைக் காத்தான். 1544

இவ்வாறு வாழ்ந்து வருங்கால், சித்திரகேது சிவபிரானைக் கண்டான். கொன்றைப் பூவைச் சடையில் சூடிய சிவன், சனகாதி முனிவர்களுக்குத் தத்துவம் உபதேசித்துக் கொண்டிருப்பதைச் சித்திரகேது கண்டான். அவன், சிவனை நோக்கி, "மயிலை ஒத்த உமாதேவியை உடலின் ஒரு பகுதியில் கொண்டுள்ள நீர், என்ன ஞானம் உபதேசிக்கிறீர்?" என்று கேலி செய்தான். 1545

இவ்வாறு சித்திரகேது கேலி செய்ததும், அம்பிகையான பார்வதி, சினம் கொண்டு, 'நீ அசுரனாகப் போவாய்' என்று சாபம் இட்டாள். சாபத்தை ஏற்ற சித்திரகேது "சுகதுக்கம் பகைத்தலால் வந்தன என்றும் பற்றினால் வந்தன என்றும் குற்றமற்றவர் எண்ணார்" என்று கூறினான். 1546

அன்னைநீ சபித்தல் என்றதன்
அருவினைத் தொடர்ச்சி அன்றோ
மன்னிய இன்ப துன்பம்
மாயையின் புணர்ச்சி ஆமே
தன்னைநன் குஉணர்ந்து பார்க்கின்
சார்வதோர் வினையும் உண்டோ
பன்னுதி எனதாள் வீழ்ந்து
பரவினன் போயி னான்ஆல். 1547

வித்தியா தரர்கட்கு எல்லாம்
வேந்தனாய் விளங்கும் வைவேல்
சித்திர கேது என்பான்
செப்பினன் சேறல் காணா
பைத்தபாம்பு அணியும் முக்கண்
பரமனே முதலி னோர்கள்
முத்தன்ஓர் அகந்தை இல்லான்
எனமொழிந்து இறும்பூ துஉற்றார். 1548

அறம்தரும் இமய வல்லி
அவ்வழி சபித்தல் பற்றி
பிறந்தனன் அவுணன் ஆக
பிறந்துமுற் பிறப்பின் ஞானம்
மறம்கனிந்து ஒழுகும் வெவ்வாய்
வச்சிரப் படையின் வேந்தன்
எறிந்துழி அழிவில் வீட்டின்
எய்தினன் இனிதின் மாதோ. 1549

இக்கதை இயம்பி னோரும்
இனிதுஎன வியந்து ளோரும்
மிக்கபே ரன்பு சான்று
மேதக வரைந்துளோரும்
துக்கம் ஒன்று இன்றிப் பார்மேல்
சுகம்பல துய்த்த பின்னர்
புக்கவர் மீள்க லாத
பொருஇல்வீடு எய்து வார்ஆல். 1550

"தாயே! நீ என்னைச் சபித்ததும் கூட என் பழவினையின் தொடர்ச்சி அன்றோ! இன்பம், துன்பம் இரண்டும் மாயையால் உண்டாவதே ஆகும். ஆத்மாவை நன்கு உணர்ந்து கொண்டால் வினை என்று ஒன்று சார்பாகாது." என்று கூறிச் சித்திரகேது பார்வதியின் திருவடி வணங்கிச் சென்றான். 1547

வித்தியாதரர்களுக்கெல்லாம் அரசனாக விளங்கிய வேல் ஏந்திய சித்திரகேது இவ்வாறு பேசிப் போனதைச் சிவன் பார்த்தான். பாம்பைச் சூடிய மூன்று கண்களைப் பெற்ற அப்பெருமான், 'இவன் அகந்தை நீக்கிய முக்தனோ?' என்று ஆச்சரியத்துடன் கூறினார். 1548

தர்மத்தைக் காக்கும் இமய வல்லியான பார்வதியின் சாபத்தாலே, சித்திரகேது, விருத்திராசுரனாகப் பிறந்தான். வீரத்துடன் இந்திரன் வஜ்ராயுதத்தை அவன் மீது எறிந்த பொழுது முற்பிறப்பின் ஞானம் ஏற்பட்டது. அதனால் அந்த அசுரன் வீடு பேறு பெற்றான். 1549

இந்தக் கதையைக் கூறுவோரும் இனிமை என வியந்து கேட்போரும், மிகுந்த பேரன்புடன் எழுதுபவர்களும் துக்கம் இல்லாமல் உலகில் சுகங்களை அனுபவித்த பின்னர், ஒப்பற்ற வீடு பேறு அடைவார்கள். 1550

8. மருத்துக்கள் பிறப்பு

மன்னவ! அதிதிதன் மைந்தர் தங்களில்
உன்னிய சிலர்மர புஉரைசெய் தாம்முறை
இன்னம் மற்று ஏனையோர் மரபும் இங்ஙனம்
பன்னுதும் எனமுனி பகர்தல் மேயினான். 1551

அதிதிசேய் என்ன முன்னம் அறைந்தநல் சவிதா என்போன்
விதிஉறு மும்மை யாய வியாகிரு தியையும் நல்ல
கதிதரு கின்ற சாவித் திரியையும் கருதி நான்கு
முதுமறை மொழியும் சோம முதல்மகங் களையும் ஈன்றான்.
1552

பகன்எனும் பெயரோன் அன்பால் பகர்ஒரு பிணாவி னோடு
மகிமன்ஆ தியரை ஈன்றான் மலிபுகழ்த் தாதா என்போன்
குகுமுதல் ஆய நால்பூங் கோதையர் தமைம ணந்தான்
அகமகிழ் விதாதா என்போன் அக்கினி முதலோர்ப் பெற்றான்.
1553

மித்திரன் வருணன் என்போன் விளங்குஇரு வோரும் முன்னர்
ஒத்து எழுந்து ஓங்கு கொங்கை உருப்பசி பொருட்டி னாலே
வைத்ததோர் கும்பம் தன்னில் வசிட்டனை மலயத்து உற்ற
முத்தமிழ் முனிஎன் பானை மூவுலகு ஏத்த ஈன்றார். 1554

வருணன்என் றுஉரைப்போன் மீட்டும் வரிமுலைச் சரிடி யின்பால்
பிருகுவான் மீகி ஈன்றான் பேசுமித் திரன்உள் அன்பால்
கருதுசீர் அரிட்ட னோடு கழறுபிப் பலனை ஈன்றான்
பொருஅரு விண்ணின் வேந்தன் புலோமசை நலம்துய்த் தான்ஆல்.
1555

வயம்கெழு குலிசத்து அண்ணல் மருவுஅயி ராணி பெற்றாள்
சயந்தனே முதலா மூன்று தநயரை கீர்த்தி மாது
புயங்களில் தழுவும் வண்ணம் பொருந்து விக்கிரமன் என்னும்
நயம்செய்வா மனன்தன் வெற்றி நவிற்றுதும் பின்னர் மாதோ.
1556

8. மருத்துக்கள் பிறப்பு

சுகமுனிவர் பரீட்சித்தை நோக்கி, "மன்னனே! இதுவரை அதிதியின் மைந்தர்களான விவஸ்வான் முதலியோர்களின் மரபு பற்றிக் கூறினேன். மேலே மற்றையோர் மரபு பற்றியும் கூறுகிறேன்" என்றார். 1551

அதிதியின் புதல்வன் என்று முன்பு கூறப்பட்ட சவிதா என்பவன் மூன்று பிரிவுகளாகிய வியாஹிருதி மந்திரத்தையும் நற்கதி காட்டும் சாவித்திரியையும் தந்தான். நான்கு வேதங்கள் கூறும் சோமம், பசு, அக்னிஹோத்திரம், சாதுர்மாஸ்யம் எனப்படும் யாகங்களின் அதி தேவதைகளையும் ஈன்றான். 1552

பகன் என்பவன் பிணாவுடன் மகிமன் முதலியோரைப் பெற்றான். புகழ் மிகுந்த தாதா என்பவன் குரு முதலாய நான்கு பெண்களை மணந்தான். உள்ளம் மகிழ்ந்த விதாதா என்பவன் அக்னி முதலியோரைப் பெற்றான். 1553

மித்திரனும் வருணனும் ஓங்கிய முலை களுடைய உருப்பசி மூலம் குடத்தில் வசிட்டனையும், இவ்விருவரும் மூவுலகும் புகழும்படியான பெருமை பெற்றவர்கள் ஆவர். பொதிகையில் வாழ்ந்த முத்தமிழ் முனியான அகத்தியனையும் பெற்றார்கள். 1554

வருணன், சர்ஷணி மூலம் பிருகுவையும் வான்மீகியையும் பெற்றான். மித்திரன் அரிஷ்டனுடன் பிப்பலனைப் பெற்றான். ஒப்பற்ற தேவர்களின் அரசனான இந்திரன் புலோமசை ஆன இந்திராணியை மணந்து உடலின்பம் பெற்றான். 1555

வஜ்ராயுதம் ஏந்திய இந்திரன் இந்திராணியின் மூலம் சயந்தன் முதலான மூன்று பிள்ளைகளைப் பெற்றான். புகழ் என்னும் வெற்றி மகளின தோள்களை தழுவிய திரிவிக்கிரமன், வாமனன் ஆகியோரின் சிறப்புக்களைப் பின்னர் கூறுவோம். 1556

திருந்துஇழை சுமந்து செம்மாந்து
எழுந்துறப் பணைத்த கொங்கை
கருங்குழல் திதியாம் மங்கை
காசிபன் அகலம் புல்லி
இருந்திறல் இரணி யன்சீர்
இயைந்தபொற் கண்ணன் என்னும்
பொரும்திறல் இருவர் ஆய
பொறைஉயிர்த் தனள்ம கிழ்ந்தே. 1557

தரைபுகழ் பிரக லாதன் தயங்குஎழில் அநுக லாதன்
அரிதுஉணர் சங்க லாதன் அணிதிகழ் கலாதன் என்ன
உரைதரு புதல்வ ரோடும் ஒருமகள் தன்னை ஈன்றான்
இரணியன் என்ன யாரும் ஏத்துவாள் அவுணன் மாதோ. 1558

சமர்பழுத்து ஒழுகு வேலான்
தனயள்சிங் கிகை என்று ஓதும்
கமழ்மதுச் சொரிகார்க் கூந்தல்
காரிகை உயிர்த்த மைந்தன்
அமுதுணவு அளிக்கும் அந்நாள்
அமலன்ஆங் குஉணர்ந்து எருக்க
இமையவர் குழாத்து வைகும்
இராகு என் பெயரோன் மாதோ. 1559

செருக்கு உறு சங்க லாதன்
சேயிழை கதியைச் சேர்ந்து
தருக்குறு படையான் பஞ்ச
சனனைத்தந் தான்க லாதன்
மருக்கமழ் சந்த வெற்பின்
மாதவன் அதிதி யாகி
முருக்குவா தாபி யோடு
மொழியும்இல் வலனைப் பெற்றான். 1560

பூதரம் பொருவு தோளான் புலவரை அமரின் வென்ற
கோதைவேல் அவுணன் என்ன குலவுசீர் அநுக லாதன்
மேதியின் உருக்கொள் வான்சீர் விளங்குபாட் களன்என்று ஓதும்
தீதுஉலாம் குணத்தின் மிக்கோர்ச் சிறுவராம் எனப்பெற் றான்ஆல்.
1561

ஆபரணங்கள் அணியப் பெற்றதும் செம்மாந்து ஓங்கி எழுந்ததுமான முலைகள் பெற்ற ‘திதி’ என்னும் மங்கை, காசியபன் என்னும் முனிவரை மணந்தாள். முனிவரை வலுக்கட்டாயமாக மார்புடன் தழுவிய ‘திதி’ வலிமை பெற்ற இரணியனையும் இரணியாக்கனையும் பெற்று மகிழ்ந்தாள். 1557

இரணியன் என்னும் அசுரன் பெற்ற பிள்ளைகள் பிரஹலாதன், அனுகலாதன், சங்கலாதன், கலாதன் ஆகிய நால்வர் ஆவர். இவர்களுடன் ஒரு பெண்ணையும் அவ்வசுரன் பெற்றான். 1558

வேலாயுதம் ஏந்திப் போர் செய்வதில் கை தேர்ந்த இரணியன் பெற்ற பெண் சிங்கிகை என்பவள் ஆவாள்.மணம் வீசுவதும் மதுச் சொரிவதும் ஆகிய பூக்களைக் கூந்தலில் சூடிய அந்நங்கைக்கு இராகு புதல்வனாகப் பிறந்தான். திருமால் பாற்கடல் அமுதத்தைத் தேவர்க்கு அளித்த பொழுது வெட்டப்பட்டுத் தேவர்கள் கூட்டத்துள் சேர்ந்தவன் இவனே ஆவான். 1559

செருக்குடைய சங்கலாதன் கதி என்னும் மங்கையை மணந்து, மிடுக்குடைய பஞ்சசனனைப் பெற்றான். கலாதன் பெற்ற பிள்ளைகளே வாதாபியும் இல்வலனும் ஆவர். இவர்கள் இருவரும் மணம் வீசும் சந்தன மரங்கள் நிறைந்த பொதிகை மலை முனிவர் அகத்தியருக்கு விருந்தினராகி மறைந்தவர்கள். 1560

அநுகலாதன் என்பவன், மலைகளையும் மோதும் தோள்களுடன் தேவரை வென்ற இரணியனைப் போல் வலிமை பெற்றிருந்தான். அவன் பெற்ற பிள்ளைகள் மகிஷனும் பாஷ்களனும் ஆவர். தீமைக்குணங்கள் மிகுதியாகப் பெற்றவர்கள் இவ்விரு புதல்வர்களும் ஆவர். 1561

பெற்றசீர்ப் பிரக லாதன்
பெட்டுஉளம் இனிதின் ஈன்றான்
வெற்றிசேர் குடுமி வைவேல்
விரோசனன் தன்னை அன்னோன்
உற்றமா வலிஎன் பானை
உலகுளோர் ஏத்த ஈன்றான்
மற்றுஅவன் வயங்கொள் வாணா
சுரன்தனை வழங்கி னான்ஆல். 1562

பின்னரும் திதிஎன்று ஓதும்
பிறைநுதல் குமுதச் செவ்வாய்
கன்னலில் கனிந்த சொல்லாள்
காசிபன் அகலம் புல்லி
மன்னும்ஏழ் ஏழ் என்று ஓதும்
மருத்துவர் தம்மை ஈன்றாள்
அன்னவர் அமரர் கோனொடு
அமரராய் அமர்வார் மன்னோ. 1563

என்றலும் திதிமுன் பெற்ற இயல்நல மருத்துஎன் போர்கள்
குன்றுஎறி குலிச னோடு குலவிவீற்றிருந்தது என்கொல்
மன்றநீ உரைத்தி என்று மானவேல் அரசு கேட்ப
துன்றுடற் பகைசெற் றோங்கு சுகமுனி உரைக்க லுற்றான். 1564

வரம்பெறு மைந்தர் தம்மை வாசவற் காகப் பெம்மான்
உரம்சிதைத் துஉயிரை நீப்ப ஒண்ணுதல் திதியுள் மாழ்கிப்
புரந்தரன் தன்னைக் கொல்லும் புதல்வனைப் பெறுதல் வேண்டி
இருந்தவன் மகிழும் வண்ணம் ஏவல்செய்து இனிதின் நின்றாள்.
1565

காசிபன் உளம்உ வப்ப
கருதினள் ஏவல் செய்தும்
பூசல்அம் குடுமி வைவேல்
புரைவிழிக் கடைநோக் குஉற்றும்
நேசநல் நிலவு கால
நின்றனள் நகைத்தும் அந்த
ஆசிலா தவனை அன்னாள்
தன்வய மாக்கி னாள்ஆல். 1566

இரணியன் மகனான பிரஹலாதன் விரும்பிப் பெற்ற புதல்வன் விரோசனன் ஆவான். வெற்றி கொடுக்கும் வேல் ஏந்திய விரோசனன் உலகத்தோர் புகழும் படியாக மஹாபலியைப் புதல்வனாகப் பெற்றான். அந்த மஹா பலியின் மைந்தனே வாணாசுரன் எனப்படுவான். 1562

திதி என்னும் மங்கை பிறை போன்ற புருவங் களையும், குமுதம் போன்ற சிவந்த வாயும் கரும்பினும் இனிய பேச்சும் உடையவள். அவள் காசியபனை மறுபடியும் தழுவி நாற்பத்தொன்பது மருத்துக்களைப் பெற்றாள். அவர்கள் தேவர் தலைவனான இந்திரனுடன் தேவர்கள் கூட்டத்தில் சேர்க்கப்பட்டனர். 1563

மேற்கண்டவாறு மருத்துக்கள் பிறப்பைச் சுகமுனி கூறியதும், பரீட்சித்து அவரிடம் வினவினான். "திதி பெற்ற பிள்ளைகளான மருத்துக்கள் வஜ்ராயுதம் தரித்த இந்திரனுடன் இணைந்தது எவ்வாறு!' என்று கேட்டான். உடற்பகைகளை வென்ற ஞானியான சுகர் பின்வருமாறு பதில் கூறினார். 1564

வரம் பெற்ற தன் மைந்தர்களான இரணியனும் இரணியாக்கனும் இந்திரனுக்காகத் திருமாலால் கொல்லப் பட்டனர் என்பதை எண்ணித் திதி மனம் வருந்தினாள். அதனால் அந்த இந்திரனைக் கொல்வதற்கு புதல்வனைப் பெற வேண்டும் என்று ஆசையுற்று, அவள் தன் கணவன் காசியபன் மனம் மகிழும் வண்ணம் பணிவிடை செய்து வந்தாள். 1565

அவள் காசியபன் உள்ளம் உவக்கும்படி பணிவிடைகள் செய்தாள். வேலாயுதம் போன்ற தன் அழகிய கண்களால் முனிவனைக் கவர்ந்தாள். நிலாப்போலக் குளிர்ந்த புன்முறுவலால் குற்றமற்ற அம்முனிவனைத் தன் வயம் ஆக்கினாள். 1566

மாதவன் மகிழ்ச்சி கூர்ந்து மனையவள் வதனம் நோக்கி
பேதைநீ விழைந்தது என்கொல் பெறுதிஎன் றுஉரைத்த லோடும்
ஓதுவா சவனை காதும் ஒருமகவு அளித்தி என்று
தாதுறு குழலாள் மங்கை சாற்றினள் கொடுஞ்சொல் அன்றே. 1567

அவ்வுரை கேட்ட லோடும் அரும்பெறல் புதல்வற் கொல்லும்
வெவ்வரம் அளிப்பர் கொல்லோ விருப்பினொடு உயிர்த்து ளோரும்
நவ்வியின் விழிக்கும் நங்காய் நயந்தது நன்று நன்று என்று
எவ்வம்இல் புகழ்சால் ஒப்பில்இரும்தவன் உளத்து இயம்பும். 1568

மடந்தையர் வதனம் நல்ல
மதிஎன மாற்றம் வானோர்
கடைந்தவான் அமுதம் என்ன
கவினும்என் றாலும் உள்ளம்
விடம்கொடு புரிந்த வாள்போல்
வெங்கொலை விரும்பும் அந்த
அடங்கலா மனம்செல் வண்ணம்
ஆர்அறிந்து அறைய கிற்பார். 1569

புல்லுறு கொழுந னேநன்
புதல்வரே யேனும் அன்பால்
சொல்லும் ஓர் அகட்டில் தோன்றும்
துணைவரே யேனும் மாதர்
கொல்லுவர் சினந்தா ராயின்
கூசலர் சிறிதும் என்னா
அல்லல்உற்று அழுங்கி அன்னாட்கு
ஒருவரம் அளிக்கல் உற்றான். 1570

அரிவைநீ முனிவு நீங்குற்று
அகாலநித் திரையும் விட்டு
புரைதபப் புனிதை யாகி
புகழ்புஞ்ச வனம் என்று ஓதும்
விரதம்நன்கு இயற்றின் உள்ளம்
விழைமக வுஉயிர்த்தி என்னா
ஒருவரம் அளித்தான் அன்னாள்
உவந்தனள் கருக்கொண் டாளால். 1571

தவம் நிறைந்த காசியபன் தன் மனைவி திதியை நோக்கி, "பெண்ணே! நீ விரும்புவது யாது?" என்று கேட்டார். அவள் முனிவரிடம், "இந்திரனைக் கொல்வதற் கேற்றபடி ஒரு புதல்வனை நான் பெறுமாறு நீங்கள் அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டினாள். பூமாலை சூடிய கூந்தலுடைய திதி இக்கொடுஞ்சொல்லை உரைத்தாள். 1567

இதனைக் கேட்ட குற்றமற்ற முனிவன் ஆன காசியபன் அதீதிமூலம் பெற்ற பிள்ளையைக் கொல்ல வரம் அளிக்கவோ? மான்போலும் கண்ணழகுடைய இப்பெண் வேண்டிய வரம் விந்தையாக உள்ளதே! நன்று! நன்று!, என்று தன் மனத்துள்ளே எண்ணினான். 1568

"பெண்களின் முகங்கள் சந்திரனைப் போலவும் அமுதம் போலவும் அழகாகவே தோன்றும். ஆனால் அவர்கள் நெஞ்சமோ நஞ்சு தோய்ந்த வாளைப் போல் கொடிய கொலையையே விரும்புகிறதே! அடங்காதபடி அவர்கள் மனம் செல்லும் பாதையை யார் அறிவார்? 1569

பெண்கள் சினத்துக்கு ஆட்பட்டால் செய்வது அறியார்கள். தழுவிக் கொள்ளும் கணவராயினும் புதல்வர் ஆயினும், தன்னுடன் ஒரே வயிற்றில் உதித்த சகோதரர்கள் ஆயினும் வேண்டாதவர்கள் ஆனால், அவர்களைக் கொல்லப் பெண்கள் கூசமாட்டார்கள்." 1570

இவ்வாறு மனத்தில் எண்ணிக் கவலை கொண்ட காசியபன் திதிக்கு ஒரு வரம் அளித்தான்.

"பெண்ணே! நீ கோபத்தைத் தள்ளி விட்டு அகாலத்தில் தூங்கும் பழக்கத்தையும் நீத்து விடு. குற்றமற்ற தூய மனத்துடன் 'பும்சவனம்' என்று சொல்லப் படுகிற விரதத்தை மேற்கொண்டால், நீ விரும்புகிறபடி பிள்ளை பெறுவாய்" என்று ஒரு வரத்தைக் காசியபன் அவளுக்கு அளித்தான். அதன்படியே செய்து அவளும் கருவுற்றாள். 1571

கொண்டநல் விரதத் தோடு
குலவுதன் மனத்துள் கொள்ளா
அண்டர்கோன் அடைந்துஅன் னாளுக்கு
அரும்பெறல் ஏவல் செய்தே
எண்தரும் கருப்பம் கொல்வான்
இயைந்தனன் விலங்கு மாய்ப்ப
விண்தொடு கானம் நண்ணி
வேட்டுவன் இருத்தல் போன்றே. 1572

புனிதம் நீங்கி அப் பூவை பொருந்துதல்
மனனில் தாடி மருவினன் காண்கிலன்
நனிக லங்கி இருந்துழி நங்கை தான்
தனிது இன்றனள் சார்ந்துஎழு மாலைவாய். 1573

பாத பங்கயம் மேல்பனி நீர் பெய்யாது
ஓது மாலை உறங்கும்அன் னாள்வயிற்று
ஏதம் நீங்கிய இந்திரன் மாயையால்
சோதி வச்சிரத் தோடும் துவன்றினான். 1574

வயிற்றின் உற்று வளரும் வயாவினை
செயிர்ப்பின் ஏழுகூ றாக சிதைத்தவை
உயிர்ப்பு விட்டழ ஒவ்வொரு கூற்றையும்
வியப்பின் ஏழுகூ றாகவும் வெட்டினான். 1575

ஆங்கு மாயன் அருளினில் வீந்திடாது
ஏங்கி ஏங்கி அழுதுஇவ ண்ணெங்களை
நீங்கி முன்னவ நீதெறல் என்என
வாங்கு வார்சிலை யான்புறன் வந்தனன். 1576

அரச நின்னை அறவாழி அந்தணன்
கருவிற் காத்தது போலஅக் காரிகை
விரத முற்றுஅவன் மெல்லடி போற்றலால்
மருவு மைந்தர்மா யாவகை காத்தனன். 1577

உருத்து வாசவன் உற்று அவன் எற்றுழிக்
கருத்து அழிந்துஅழ லால்அக் கருவினர்
மருத்தெ னும்பெயர் மன்னினர் தாய்வயிறு
இருத்தல் விட்டெழுந் தார்புறன் எய்தினார். 1578

பும்ஸவன விரதத்தைத் திதி மேற் கொண்ட பொழுது, இந்திரன் அவளுக்கு ஏவல் செய்ய வந்தான். அவளுக்குப் பணிவிடை செய்யும் பொழுதே, அவள் கொண்ட கருப்பத்தைக் கொன்று விடவேண்டும் என்று திட்டம் தீட்டிய அவன், விலங்கைக் கொல்ல வேடன் சமயம் பார்த்திருத்தல் போலக் காத்திருந்தான். 1572

அந்நங்கையான திதி விரதத்தில் புனிதத் தன்மை நீங்கும் சமயத்தை எதிர்பார்த்திருந்த இந்திரன் அவளிடம் அசுத்தத்தைக் காண முடியவில்லை. இவ்வாறு இந்திரன் எதிர்பார்த்திருக்கையில், ஒரு நாள் திதி, மாலைப் பொழுதில் தூங்கினாள். 1573

அவள் தன் காலைத் தண்ணீர் பெய்து, கழுவாமல் இருந்தாள். மேலும் மாலைப் பொழுதில் உறங்கினாள். அந்நேரமே தக்க தருணம் என்று இந்திரன் தன் மாயாசக்தியால் வஜ்ராயுதம் ஏந்தியபடி அவளை நெருங்கினான். 1574

திதியை நெருங்கிய இந்திரன் கோபத்துடன் தன் வாளால், அவள் வயிற்றில் தங்கிய கர்ப்பத்தை ஏழு கூறுகளாக வெட்டினான். அப்பொழுது ஒவ்வொரு கூறும் சுவாசம் விட்டு அழவும் ஒவ்வொன்றையும் ஏழு கூறுகளாக மறுபடியும் வெட்டினான். 1575

ஆனால் திருமால் அருளால் அக்கூறுகள் அழியாமல் உயிருடனேயே இருந்தன. இந்திரனை நோக்கி, "முன்னவனே! நீ எங்களைக் கொல்வது ஏனோ?" என்று கேட்டன. உடனே இந்திரன் திதியின் வயிற்றிலிருந்து வெளியே வந்தான். அவைகள் காக்கப்பட்டன. 1576

இவ்வாறு மருத்துக்கள் பிழைத்த விதத்தைக் கூறிய சுகமுனிவர், பரீட்சித்திடம் அரசே! உன்னை எப்படித் திருமாலின் சுதர்சனம் கருப்பையிற் காத்ததோ அதே போல, திதியின் குழந்தைகள் இறவாதபடி திருமால் காப்பாற்றினான் 'என்று விளக்கினான். 1577

இந்திரன் திதியின் கர்ப்பத்தைச் சிதைக்க முயன்ற பொழுது அக்கருவில் இருந்தவர் அழுதனர். அப்பொழுது இந்திரன் அவர்களை 'அழாதீர்!' என்று கூறியதால், அவர்கள் பிறந்த பின் மருத்துக்கள் என்னும் பெயர் பெற்றனர். "மா, ருத" என்னும் வடமொழி 'அழாதே' என்னும் பொருள் கொண்டது. 1578

தளர்ந்த நுண்ணிடைத் தையல் திதிதுயில்
தெளிந்து நோக்கி ஈது என் என செப்பலும்
விளைந்த வண்ணம் விளம்பிவின் ஏகினான்
வளைந்த வார்சிலை வாசவ ன்என்பவே. 1579

விண்ணின் வேந்தன் விரும்புஇளை யோர்என
மண்ணி னின்றுவா னேகி மருத்துவர்
உண்ணு சோம முடையநல் உம்பராய்
நண்ணி னார்என நல்தவன் கூறினான். 1580

9. புஞ்சவன விரதம்

கஞ்சன்வழி வந்துதிகழ் காசிபன் மனைக்கு
புஞ்சவனம் என்றுபுகல் கின்றவிர தம்தான்
எஞ்சல்அற இன்றுஉரைசெய் என்று அரசு இயம்ப
மஞ்சுஅனைய மாயன்அருள் மன்னும் முனி பன்னும். 1581

வந்துமகிழ் செய்யும்ஒரு மார்கழி மதிக்கண்
சந்திரன் வளர்ந்துஎழில் தயங்கவரு பக்கம்
முந்திஉறு நல்திதி முதல்புனிதம் ஆகி
அந்தமிலன் ஆகுபர மாத்துமனை ஏத்தி. 1582

ஓர்பருவம் முற்றும் ஒழி யாதுஉவகை யோடு
கார்நிற முகுந்தன்உரு வைக்கருதி அன்பால்
ஏர்செய் உப சாரம்எண் இரண்டையும் இயற்றி
சீர்தரும் ஈராறுமதி தீரவரும் நாளின். 1583

பாலி னோடுஅம் அடிசிலை பன்னிரண்டு என்னும்
சீல ஆவுதி அரிதிரு மந்திரம் செப்பி
கோல ஆரழற் பெய்துபின் குலமறை யவர்க்கு
வேலை சூழ்புவி வியப்புற விருப்புணவு அருத்தி. 1584

அருந்தும் அந்தணர் ஆசிநன்கு அறைந்ததன் பின்னர்
பொருந்தும் ஆவுதிச் சேடம்நற் புதல்வரைப் பெறநீர்
இருந்து அருந்துதிர் என்றுதம் பதிதர நுகர்ந்தோர்
மருந்து எனும்மொழி மைந்தரை பெறுகுவர் மாதோ. 1585

தூக்கம் நீங்கியதும் நுண்ணிடை பெற்ற 'திதி' எழுந்து 'இது என்ன நிகழ்ந்தது?' என்று வினவினாள். தான் செய்த செயலை இந்திரன் அவளிடம் கூறிவிட்டு வானில் போனான். 1579

இந்திரனுக்கு இந்த விதம் தாங்கள் இளையவர்கள் ஆகியதால் அந்த மருத்துக்கள், பூமியிலிருந்து வானுலகு சென்றனர். சோமபானம் பருகும் தேவர்களாய் அம்மருத்துக்களும் ஆனார்கள். 1580

மேற்கண்டவாறு மருத்துக்கள் தோன்றிய வரலாற்றை சுக முனிவர் பரீட்சித்துக்குக் கூறினார்.

9. புஞ்சவன விரதம்

பரீட்சித்து சுகமுனிவரை நோக்கிக் கூறியதாவது :- "தாமரையில் உதித்த பிரமதேவன் வழி வந்த காசியபன் தன் மனைவிக்குக் கூறிய பும்ஸவனம் என்னும் விரதத்தைப் பற்றிக் கூறுவீர்களாக" மேகநிறத் திருமால் அருள் பெற்ற சுகமுனி இவ்விரதம் பற்றிக் கூறியது வருமாறு : 1581

மார்கழி மாதத்தில் சுக்லபக்ஷத்தில் பிரதமை அன்று இந்தப் பும்ஸவனம் என்னும் விரதம் தொடங்கப்பட வேண்டும். முடிவற்ற பரம் பொருளான திருமாலைத் தியானித்து இதனைத் தொடங்க வேண்டும். 1582

ஒரு வருஷம் முழுவதும் இடைவிடாமல் மேகநிற முகுந்தன் உருவை மனத்தில் தியானம் செய்து, பதினாறு வகையான உபசாரங்களுடன் இந்தப் பூஜை ஆகிய விரதத்தைச் செய்ய வேண்டும். பன்னிரண்டாவது மாதக் கடைசியில் இதைப் பூர்த்தி செய்ய வேண்டும். 1583

ஓமகுண்டத்தில், பால் சாதத்தைப் பன்னிரண்டு ஆஹுதி ஸ்ரீமந் நாராயண மந்திரத்தால் செய்ய வேண்டும். பிறகு வேதத்தில் சிறந்த அந்தணர்களுக்கு அமுது பரிமாறி உபசரிக்க வேண்டும். 1584

அந்தணர்கள் உணவருந்திய பின் ஆசிகள் வழங்குவர். அதன் பின்னர் ஆஹுதியின் மீதத்தைத் தம்பதிகளுக்கு வழங்க வேண்டும். "புதல்வரைப் பெறுவதற்கு இந்த ஆஹுதி மீதத்தை உண்ணுங்கள்" என்று கொடுக்க வேண்டும். அதனால் அமுத மொழி பேசும் குழந்தையை அவர்கள் பெறுவார்கள். 1585

இன்ன நல்விர தத்தினை கன்னியர் இழைக்கின்
பன்னும் இன்எழில் கொழுநனை மணப்பரால் பார்மேல்
மன்னி வைகிடாது இறந்திடும் மகப்பெறும் மடவார்
உன்னி நின்றுஇயற் றிடின்இற வாமகவு உயிர்ப்பார். 1586

கழறும் இவ்விர தத்தினை கலன்கழி மகளிர்
தழையும் அன்பொடு இங்கு இயற்றிடின் மறுமையில் சாற்றும்
எழில்வி ளங்கிய கொழுநனை எய்திஇன் புறுவார்
விழைவொடு ஈங்குஇது கேட்டனர் வேண்டிய பெறுப. 1587

என்று வேந்தனுக்கு இயம்பினன் சுகமுனி என்ன
ஒன்று மாமறைச் செல்வருக்கு உரைத்தனன் மீட்டும்
மன்ற லார்தொடை மன்னனுக்கு அன்னவன் வழங்கல்
துன்று மாதவச் சூதமா முனிவரன் சொல்லும். 1588

ஆறாம் கந்தம் முற்றிற்று

இப்படிச் சொல்லப்பட்ட பும்ஸவன விரதத்தைக் கன்னியர்கள் செய்தால் அழகிய கணவர்களைப் பெறுவார்கள். பிறந்த குழந்தைகள் தங்காமல் இழக்கும் தாய்மார்கள் இவ்விரதத்தைச் செய்தால் அவர்க்குப் பிறக்கும் குழந்தைகள் இறவாமல் வாழப் பெறுவர். 1586

அணிகலன்கள் அணிந்து கொள்ள முடியாத கைம்பெண்கள் இவ்விரதத்தினை மேற்கொண்டால், மறுமையில் அழகிய கணவர்களை அடைந்து இல்லற இன்பம் பெறுவார்கள். விருப்பத்துடன் இந்த விரதம் பற்றிய விவரம் கேட்பவர்கள் தாங்கள் வேண்டுவனவற்றை அடைவார்கள். 1587

“இவ்வாறு ‘பும்ஸவனம்’ என்னும் விரதத்தின் சிறப்புக்களை சுகமுனிவர் பரீட்சித்து மன்னனுக்கு எடுத்துரைத்தார்” என்று சூதமாமுனிவன் நைமிசாரணிய முனிவர்களிடம் கூறினார். சுகர் பரீட்சித்திடம் மேலும் கூறிய கதையைச் சூதர் தொடர்ந்தார். 1588

ஆறாம் கந்தம் முற்றிற்று

உங்களின் குறிப்புக்காக